மேல்நாட்டு அரசியல் கோட்பாடுகள்

[பிளாட்டோ முதல் கி.பி. 15 ஆம் நூற்றாண்டு வரை]

WESTERN POLITICAL THOUGHT

[From Plato to 15th Century A.D.]

பா. சூரியநாராயணன்

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

First Edition — February, 1976

T.N.T.B.S. (C.P.). No. 677

© Government of Tamilnadu

WESTERN POLITICAL THOUGHT

(From Plato to Fifteenth Century A.D.)

P. Surianarayanan

Price Rs. 5-40

Published by the Tamilnadu Textbook Society under the Centrally Sponsored Scheme of Production of books and literature in regional languages at the University level, of the Government of India in the Ministry of Education and Social Welfare (Department of Culture), New Delhi.

Printed out of the Paper allotted by the Government of India.

Printed by

SAKTHI PRESS

No. 6, Arunachala Achari Street,

Madras-600005.

பதிப்புரை

'மேல்நாட்டு அரசியல் கோட்பாடுகள்' (பிளேட்டோ முதல் கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டுவரை) என்ற இந் நூல் தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் 677ஆவது வெளியீடாகும். கல்லூரித் தமிழ்க் குழுவின் சார்பில் வெளியான 35 நூல்களையும் சேர்த்து இதுவரை 712 நூல்கள் வெளிவந்துள்ளன. இந்நூல் மைய அரசு, கல்வி, சமூக நல அமைச்சகத்தின் 'மாநில மொழியில் பல்கலைக்கழக நூல்கள் வெளியிடும் திட்டத்'தின்கீழ் வெளியிடப்படுகிறது.

மேலாண்மை இயக்குநர்

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்.

பொருளடக்கம்

முதல் பாகம்

பண்டைய அரசியல் கோட்பாடுகள்

இயல் பக்கம்

1. **தோற்றுவாய்** ... 1

சில அடிப்படையான கருத்துகள்—கிரேக்க அரசியல் கருத்துகளுக்குப் பின்னணியாக அமைந்த சில சமுதாய, அரசியல் நிலைகள்.

2. **பிளேட்டோ (கி.மு. 427—கி.மு. 347)** ... 17

பிளேட்டோவின் வாழ்க்கை வரலாறு—பிளேட்டோவின் சிந்தனையில் காணப்படும் சில இயல்புகள்—'ரிபப்ளிக்' நூலில் கூறப்படும் கோட்பாடுகள்—'ஸ்டேட்ஸ்மன்' நூலில் கூறப்படும் கோட்பாடுகள்—'லாஸ்' என்ற நூலில் கூறப்படும் கோட்பாடுகள்—பிளேட்டோவின் கோட்பாடுகளைப்பற்றிய மதிப்பீடு.

3. **அரிஸ்ட்டாட்டில் (கி.மு. 384—கி.மு. 322)** ... 49

அரிஸ்ட்டாட்டிலின் வாழ்க்கை வரலாறு—அரசியல் நூலின் சிறப்பு — அரசு, குடும்பம் முதலிய அமைப்புகளின் இயல்புகள்—குடி ஆள் என்பது பற்றிய கோட்பாடு—அடிமை நிலைமை—சில பொருளாதாரக் கோட்பாடுகள்—பொதுவுடைமை—அரசியலமைப்பின் இலக்கணமும், இறைமை அதிகாரமும்—சட்டத்தின் தலைமை—அரசியலமைப்பு வகைகள்—அரசியலமைப்பு வகைகளை ஆராய்தல்—

இயல் பக்கம்

இலட்சிய அரசின் இயல்புகள்—அரசின் குறிக்கோள்—குறிக்கோளுக்கு ஏற்ற இலட்சிய அரசு—புரட்சிகளைப்பற்றிய கோட்பாடுகள்—புரட்சிக்குள்ளாகும் அரசாங்க வகைகளும் புரட்சிக் கெதிரான பாதுகாப்புகளும் — அரிஸ்ட்டாட்டிலைப் பற்றிய மதிப்பீடு.

4. பிற்காலக் கிரேக்கச் சிந்தனையாளர்கள்—எப்பிக்யூரஸ் (கி.மு. 341—கி.மு. 270) ... 84

அலக்சாண்டருக்குப் பிற்காலத்தில் தோன்றிய மாறுதல்கள்—எப்பிக்யூரசின் கருத்துக்கு அடிப்படை—எப்பிக்யூரசின் கோட்பாடுகள்—நாகரிக வளர்ச்சி, அரசின் தோற்றத்தைப் பற்றிய கோட்பாடு—தன்னலன்—சட்டம், நீதி என்பவைபற்றிய கோட்பாடு—அரசாங்கத்தில் பங்கு, அரசாங்கத்துக்குக் கட்டுப்படுதல்பற்றிய கோட்பாடு—எப்பிக்யூரசின் கோட்பாடுகளைப்பற்றிய மதிப்பீடு.

5. ஸ்டாயிக் கோட்பாடு—சீனோ, கிரிசிப்பஸ், பனேஷியஸ் 91

தோற்றுவாய்—சீனோ—கிரிசிப்பஸ்—பனேஷியஸ்—ஸ்டாயிக்கோட்பாடுகள்—இயற்கை—நல்லொழுக்கப் பண்பு—சமத்துவக் கோட்பாடு—கிரிசிப்பசின் கோட்பாடுகள்—தந்நிறைவு பெறுதல்—மனிதரும், சமுதாய வாழ்வும்—உலக அரசு — இயற்கையின் சட்டம் — சமுதாய வேறுபாடுகள் — சமத்துவக் கோட்பாடு—நாடுகளின் சட்டமும், இயற்கையின் சட்டமும்—பொதுச் சட்டம்—பனேஷியசின் கோட்பாடுகள்—ஒழுக்கப் பண்பு—பொதுநல நோக்கு—மக்கட்பற்றும் இரக்கமும்—நீதியும் சட்டமும்—ஸ்டாயிசிசத்தின் மதிப்பீடு.

6. கிரேக்க ஸ்டாயிக் கோட்பாடுகளும், ரோமானியச் சட்ட முறைகளும் இக்காலக் குடி ஆள் உரிமைக்கோட்பாடு வளர்வதற்குச் செய்த உதவி ... 101

தற்காலக் குடி ஆள் உரிமைக் கோட்பாடு-ரோமானியர் வகுத்த நாடுகளின் சட்டம் — கிரேக்க

இயல் பக்கம்

ஸ்டாயிக் கருத்துகள் ரோமானியச் சட்டத்தில் சேர்தலும், இயற்கையின் சட்டம் தோன்றுதலும்—இயற்கையின் சட்டம் தோற்றுவித்த சில நற் பயன்கள்.

7. பாலிபியஸ் (Polybius) (கி.மு. 204—122) ... 106

பாலிபியஸ் வாழ்ந்த காலச் சூழ்நிலைகள்—ரோமானியக் குடியரசின் அரசாங்க அமைப்பு—பாலிபியஸ் கூறிய கோட்பாடுகள்—கலப்பு அரசியலமைப்புக் கோட்பாடு-தடைச் சமன் கோட்பாடு-பாலிபியசின் கோட்பாடுகளைப்பற்றிய மதிப்பீடு.

8. சிசரோ (Cicero) (கி.மு. 106—கி.மு. 43) ... 116

சிசரோவின் வாழ்க்கை வரலாறும், அவர் வாழ்ந்த காலச் சூழ்நிலைகளும்—சிசரோவின் கோட்பாடுகளுக்கு ஆதாரமான ஸ்டாயிக் கருத்துகள்—சிசரோவின் கோட்பாடுகள்—அரசின் தோற்றம்—முழுமையான அரசியல் அமைப்பு—இயற்கையின் சட்டம்—சமத்துவக் கோட்பாடு—அரசின் இயல்பு—அரசின் பயன்—அரசாங்க அதிகாரத்தின் தோற்றம்—அரசியலதிகாரமும் சட்டமும்—சிசரோவின் கோட்பாடுகள்பற்றிய மதிப்பீடு.

9. ரோமானியச் சட்ட அறிஞர்கள் (Roman Lawyers) ... 125

தோற்றுவாய்—ரோமானியச் சட்ட அறிஞர்கள்—ரோமானியச் சட்டத்தின் வளர்ச்சி; ஜஸ்ட்டினியன் வகுத்த மூவகைச் சட்டங்கள்—ரோமானியச் சட்ட அறிஞர்கள் தொகுத்த மூவகைச் சட்டங்கள்—ரோமானியச் சட்டத்தின் ஆதாரமாக அமைந்துள்ள சில ஸ்டாயிக் கருத்துகள்—மனிதச் சமத்துவமும் அடிமைகள் ஒழிப்பும்—நியாயம் என்பதே நாட்டின் சட்டத்துக்கு மேலானது—அரசாங்க அதிகாரம் மக்களிடமிருந்து பெறப்படுவது—சட்டமும் சுதந்திரமும் முரண்பட்டவை அல்ல—

இயல் பக்கம்

இரண்டாம் பாகம்

இடைக்கால அரசியல் கோட்பாடுகள்

10. கிறிஸ்தவச் திருச்சபை நிறுவியோரின் அரசியல் கோட்பாடுகள் ... 135

தோற்றுவாய்—இடைக்கால வரலாற்றின் சில இயல்புகள்—இயேசு கிறிஸ்துவும், அவருடைய சீடர்களும், சில கிறிஸ்தவப் பெரியோர்களும் அருளிய சில கோட்பாடுகள்—போப் நிறுவனத்தின் தோற்றம்—இடைக்காலப் பேரரசின் தோற்றம்—அம்புரோஸ் கூறிய கோட்பாடுகள்—செயின்ட் அகஸ்டின்—செயின்ட் கிரகரி.

11. சமய நிறுவன ஆதிக்க காலத்தில் தோன்றிய கோட்பாடுகள் ... 156

பேரரசர்களுடைய அரசியல் அதிகாரத்துக்கும், போப்புகளுடைய சமய அதிகாரத்துக்கும் இடையே எழுந்த போராட்டம்—போப்—பேரரசர் போராட்டத்தில் காணப்பட்ட சில பிரச்சினைகள்—இருவகை அதிகாரக் கோட்பாடும் குருமார் அதிகாரமே உயர்ந்தது என்ற கோட்பாடும்—அரசரின் தலைமை அதிகாரக் கோட்பாடு—செயின்ட் பெர்னர்ட்டின் கோட்பாடுகள் — சாலிஸ்பரியைச் சேர்ந்த ஜான் கூறிய கோட்பாடுகள்.

12. செயின்ட் தாமஸ் அக்வினஸ் (1227—1274) ... 177

தோற்றுவாய்—சட்டம்பற்றிய கோட்பாடு—நீதி—அரசியல் அதிகாரத்தின் தன்மையும் வடிவங்களும்—அரசாங்கத்தின் கடமைகள்—உலகியல் அதிகாரத்துக்கும், ஆன்மிக அதிகாரத்துக்கும் இடையே உள்ள தொடர்பு.

13. டான்ட்டே அலிகியரி (1265—1321) ... 187

டான்ட்டேயின் காலத்தில் போப்பின் தலைமை அதிகாரத்துக்குச் சார்பாகவும், எதிராகவும்

இயல் பக்கம்

இருந்த கோட்பாடுகள்—போப்பின் அதிகாரத்துக்கு எதிரான புதிய கோட்பாடுகள்—பாரிசைச் சேர்ந்த ஜான் என்பவரும், பீட்டர் டுபாய் என்பவரும் கூறிய கோட்பாடுகள்—டான்ட்டேயின் கோட்பாடுகள்.

14. **பாடுவா நகரத்தைச் சேர்ந்த மார்சிலியோ** ... 199

மார்சிலியோ சிந்தித்த சூழ்நிலைகள்—மார்சிலியே கூறிய கோட்பாடுகள்.

15. **ஆக்காம் நகரத்தைச் சேர்ந்த வில்லியம்** ... 208

தோற்றுவாய் — அவருடைய கோட்பாடுகள்—இறைமையதிகாரம்—பிரதிநிதித்துவ அரசாங்கக் கோட்பாடு—முடிவுரை.

மேற்கோள் நூற்பட்டியல் ... 219

கலைச்சொற்கள் ... 220

முதல் பாகம்

பண்டைய அரசியல் கோட்பாடுகள்

இயல் ஒன்று

தோற்றுவாய்

பிரிவு 1 : சில அடிப்படையான கருத்துகள்

இந் நிலவுலகில் பல்வேறு பகுதிகளிலும் வாழும் மக்களைச் சற்று நாம் உற்று நோக்குவோமேயானால், அவர்களுடைய இயல்புகளைப்பற்றி நமக்குச் சில கருத்துகள் தெரியவருகின்றன; எம் மனிதரும் தனித்து வாழாமல் தம் இனத்தாரோடு கூடி ஒரு கூட்டமாக அல்லது சமுதாயமாக வாழும் இயல்பை உடையவர். ஒவ்வொருவரும் தமது வாழ்வின் தேவைகளுக்காக மற்றவரோடு கூடியே வாழவேண்டிய கட்டுப்பாட்டிலிருக்கிறார். சமுதாயமாக அல்லது கூட்டமாகக் கூடிவாழும் மனித இயல்பை (gregarious or social nature of man) ஓர் ஆதாரமாகச் சுட்டிக்காட்டி, அதன் மீது அரசியல் நூலை ஓர் அறிவியல் நூலாக (Science of Politics) வகுத்த முதல் ஆசிரியர் அரிஸ்ட்டாட்டில் (கி.மு. 384-கி.மு. 322) என்ற கிரேக்க ஆசிரியர் ஆவார்.

நாம் இக்காலத்தில் சமுதாய வாழ்க்கைக்காகக் கொண்டுள்ள அமைப்பு (organisation) நாடு அல்லது அரசு (State) என்ற அமைப்பு ஆகும். அரசு என்பதை ஒரு வகையான சமுதாய (அல்லது சமூக) அமைப்பு (social organisation) என்று அரசியல் நூலோர் குறிப்பிடுவர்.

மேலும் அரசு என்பதனை ஒட்டி வேறு சில அமைப்புகளும், கருத்துகளும் நமக்கு மனித சமுதாய வாழ்க்கையிலிருந்து தெரியவருகின்றன. அவற்றுட் சில: அரசாங்கம் (Government), சட்டம் (Law), நீதி (Justice), உரிமை (Liberty), அரசியலமைப்புக்கு உட்பட்ட அரசாங்கம் (Constitutional Government) முதலியவை ஆகும். இந்த அமைப்புகளுக்கெல்லாம் இக்

காலத்தில் வழங்கப்படும் இலக்கணங்களும் (definitions), பொருள் களும் (meanings) பத்தொன்பதாம் நூற்றுண்டில்தான் வரை யறுக்கப்பட்டன. எடுத்துக்காட்டாக, 'அரசாங்கம்' என்னும் அமைப்புக்குப் பின்வருமாறு இலக்கணம் வகுக்கப்படுகிறது.

> 'ஓர் அரசினுடைய (அல்லது அரசியல் சமுதாயத்தி னுடைய, அல்லது அதிலுள்ள மக்களுடைய) நோக்கங் களுக்கு (சட்டங்களின் வாயிலாக) வடிவம் கொடுத்து, அவற்றை (நிருவாகத் துறையின் மூலமாக) விதியாக வெளிப்படுத்தி அல்லது நடைமுறைக்குக் கொண்டு வந்து (நீதித் துறையின் மூலமாக) யாவரும் ஏற்று நடக்கும்படி செய்வதற்கு உரிய நிறுவனம் (agency) அல்லது இயந்திரம் (machinery) எதுவோ, அதுவே அரசாங்கம் ஆகும்.'

ஆகவே அரசு (State), அரசாங்கம் (Government) ஆகிய இரண்டும் ஒன்றல்ல, வெவ்வேறுனவை என்பது பெறப்படுகிறது.

> சட்டம் (Law) என்பதற்கு, 'நீதி அல்லது முறை (justice) வழங்குவதற்காக, அரசினுல் ஏற்றுக்கொள்ளப் பட்டு, நடைமுறையில் கையாளப்படுகிற கொள்கை களின் தொகுதியே (body of principles) சட்டம் ஆகும்' என்ற இலக்கணம் சால்மண்ட் (Salmond) என்னும் ஆசிரியரால் வகுக்கப்படுகிறது.

முறை அல்லது நீதி என்ற சொல்லின் நேர் ஆங்கிலச் சொல் லாகிய (justice) என்பதன் வேர் 'ius' என்ற இலத்தீன் சொல் ஆகும்; இதன் பொருள் நாம் இப்பொழுது குறிப்பிடும் உரிமை (right or liberty) என்பதனேடு ஒட்டியதாகும்.

> 'எவருடைய தூண்டுதலும் இல்லாமல் மக்கள் தாமாகவே செயல்படுவதற்கு எந்த ஆற்றல்களை (powers) அல்லது அதிகாரங்களைப் பெற்றிருக்கிருர்களோ, அவ்வாற்றல் களுக்கு அல்லது அதிகாரங்களுக்கு, நாட்டுச் சட்டத்தின் பாதுகாப்பும், அரசாங்க அதிகாரத்தின் (authority) ஆதரவும் இருக்குமானுல், அவ்வதிகாரங்கள் அல்லது ஆற்றல்கள் உரிமை எனவும், முறைமை எனவும், நீதி எனவும் வழங்கப்படும்.' [1]

[1] G. H. சபைன் (Sabine) எழுதிய 'A History of Political Theory' என்ற நூலின் 55 ஆம் பக்கம்.

இத்தகைய பொருளில் நீதி அல்லது முறை செயல்படும்போது அமைதியும் ஒழுங்கும் தோன்றுகின்றன.

முறை என்பதனோடு ஒட்டிய கருத்தே உரிமை (right or liberty) என்னும் கருத்து ஆகும். இதற்கு,

> 'மக்கள் யாவரும் தத்தம் ஆற்றல்களை முழுமையாக வளர்த்துக் கொண்டு வாழ்வதற்கு வாய்ப்பளிக்கும் சூழ் நிலைகளைக் கவனமாக நிலைநிறுத்துவதுதான் உரிமை அல்லது சுதந்திரம் ஆகும்' என்று ஹெச். ஜே. லாஸ்க்கி என்ற இக்கால அரசியல் ஆசிரியர் இலக்கணம் கூறுகிறார்.[1]

முறை, உரிமை முதலியவற்றோடு தொடர்புடைய கருத்தே அரசியல் அமைப்புக்கு உட்பட்ட அரசாங்கம் (constitutional government) என்பதாகும். 'நாட்டின் அடிப்படைச் சட்ட மாகிய அரசியல் சட்டத்தின் விதிகளுக்கு முரணுகை இல்லாமல், அவற்றுக்கு உட்பட்டே அரசாங்க அதிகாரங்கள் செயல்படுத்தப் படுமாயின், அப்போது அவ்வரசாங்கத்தை அரசியலமைப்புக்கு உட்பட்ட அரசாங்கம்' என்று கூறுகிறோம்.

மேற்கூறிய அமைப்புகளும் கருத்துகளும் மனிதனுடைய சமுதாய இயல்பிலிருந்தே தோன்றியுள்ளன. மனிதர் கூட்ட மாக அமைந்து வாழாமல் தனித்து வாழ்வாரானால், அப்போது அவருக்கு உரிமை, நீதி, சட்டம், அரசியலமைப்புக்கு உட்பட்ட அரசாங்கம் முதலியவை தேவைப்படமாட்டா. எனவேதான் மேற்கூறிய அமைப்புகளையும் கருத்துகளையும் எடுத்துக்கூறும் அரசியல் நூலும் (Politics) ஒரு சமுதாய அறிவியல் நூல் (A social science) எனப்படுகிறது.

இத்தகைய சமுதாய இயல்புக்கும், அதனை ஆதாரமாகக் கொண்டு எழுந்த அமைப்புகளுக்கும் கருத்துகளுக்கும் பத்தொன்பதாம் நூற்றாண்டில்தான் இலக்கணங்கள் திட்டவட்ட மாக வகுக்கப்பட்டபோதிலும், இவற்றையெல்லாம் முதன் முதலில் ஆராய்ச்சி செய்து, இலக்கணங்கள் வகுத்து, மேலை நாட்டினருக்கு (ஐரோப்பியருக்கு) எடுத்துக் கூறியவர்கள் பண்டைக் காலத்தில் (ஏறக்குறைய இன்றைக்கு இரண்டா யிரத்தைந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர்) கிரேக்க நாட்டில் வாழ்ந்த சாக்ரட்டீஸ், பிளேட்டோ, அரிஸ்ட்டாட்டில், எப்பிக்யூரஸ், சீனோ முதலிய சிந்தனையாளர்கள் ஆவர்.

[1] H. J. Laski—A Grammar of Politics.

பிரிவு 2 : கிரேக்க அரசியற் கருத்துகளுக்குப் பின்னணியாக அமைந்த சில சமுதாய, அரசியல் நிலைகள்

இக்காலத்தில் கிரேக்கம் (Greece) எனவும், பண்டைக் காலத்தில் ஹெலாஸ்[1] எனவும் வழங்கப்படும் நாடு தென் கிழக்கு ஐரோப்பாவில் மத்தியதரைக்கடலின் கிழக்குப் பகுதியிலுள்ள ஒரு தீபகற்பம் ஆகும். அது நெருங்கிய பல மலைத் தொடர்களும், பல ஆழ்ந்த வளைகுடாக்களும், சில சிறு தீவுகளும் உடையது. மலைத்தொடர்களும் நேராக அமையாமல் ஒழுங்கற்ற பல்வேறு வடிவங்களில் அமைந்திருப்பதால், நாற்புறமும் மலைத்தொடர்களால் சூழப்பட்ட சமவெளிகள் பல அத் தீபகற்பத்தில் தோன்றியுள்ளன. இத்தகைய நில அமைப்பு, கிரேக்கருடைய சமுதாய அமைப்பான நகரரசு (City State or Polis) தோன்றுவதற்கும், ஒவ்வொரு நகரரசும் மற்றவற்றோடு இணையாமல் தனியான அரசியலமைப்பில் இயங்கும் விருப்பத்தை வளர்ப்பதற்கும், பொதுவாகக் கிரேக்கர்களிடையே சுதந்திர மனப்பான்மையை மிகுதியாக வளர்ப்பதற்கும் துணை செய்தது. இந் நிலப்பகுதியில் ஏறக்குறைய கி.மு. 2000-ல் கிரேக்கர்கள் பல பிரிவுகளாக வந்து குடியேறித் தனித்தனியான ஆட்சி முறைகளை உடைய கிராமங்களில் வாழ்ந்தனர். கிரேக்கர்கள், ஆரிய அல்லது இந்தோ - ஐரோப்பிய - இனத்தின் ஒரு பிரிவினர் ஆவர். எனவே, இவர்கள் ஆரியரின் மற்றப் பிரிவினரான ரோமானியர் (Romans), பண்டைய ஜெர்மானியர், பண்டையப் பாரசீகர், வேதகால இந்தியாவிலிருந்த ஆரியர் ஆகிய மக்களோடு இனம், மொழி, சமுதாய அமைப்பு, சமயம் முதலியவற்றில் ஒப்புமையும் தொடர்பும் உடையவர்கள்.

(அ) நகரரசு என்ற சமுதாய அமைப்பு

இக் காலத்தில் நாம் வாழும் அரசில் அல்லது நாட்டில் நகரம் - (city) என்ற அமைப்பு, அதன் ஒரு கூறாக அமைந்துள்ளது; நகரம்

[1] கிரேக்கர்கள் தங்களை ஹெலனியர் (Hellenes) என்று கூறிக் கொண்டனர்; கிரேக்கர் என்ற பெயர் பிற்காலத்தில் இத்தாலியரால் இம் மக்களுக்குக் கொடுக்கப்பட்டது. கிரேக்கருடைய புராணக்கதை கூறுவதாவது: ஹெலன் என்ற கடவுள், சீயஸ் (Zeus) என்ற தலைமைக்கடவுளின் மகன்; ஹெலனுக்கு அயோலஸ், சூதஸ், டோரஸ் என மூன்று மக்கள் இருந்தனர்; இவருள் சூதசுக்கு அயோன் என்றும், அகேயஸ் என்றும் இரு மகன்கள் இருந்தனர். இவ்விருவருடைய பின்வழியினரே இயோலியர், டோரியர், அயோனியர் என்னும் மக்கள் கூட்டத்தாராவர். கிரேக்கப் புலவராகிய ஹோமர் (Homer) (இவர் கி. மு. 850ஐ ஒட்டி மேற்காசியக் கரையை அடுத்த குன்றுகள் நிறைந்த சிறு தீவில்–சீயஸ்–வாழ்ந்தவர்) குறிப்பிடும் அகேயர் என்ற புதிய கிரேக்கக் கூட்டத்தார் கி.மு. 1400-ல் ஹெலனியரை வென்று, அயோனியப் பிரிவினரோடும் டோரியரோடும் கலந்தனர். ஆதென்ஸ் நகரரசில் வாழ்ந்த கிரேக்கர் அயோனியரோடு கலந்த அகேய மக்கள் ஆவர். (J. B. பியூரியின் கிரேக்க வரலாறு.)

ஒரு தனிச் சுதந்திர நாடாக இல்லை. ஆனால், பண்டையக் கிரேக்க நாட்டில் நகரம் என்ற அமைப்பே ஒரு தனி நாடாக அமைந்து இருந்தது; ஆகையால் பண்டையக் கிரேக்க நகரரசு (City State அல்லது Polis) என்ற சமுதாய அமைப்புக்கும், இக்காலத்தில் உள்ள நாட்டு அரசு (Country - State) என்ற மிகப் பரந்த சமுதாய அமைப்புக்கும் உள்ள வேற்றுமைகள் நமக்குத் தெரிய வருகின்றன. அவையாவன :

(1) நகரரசு பரப்பளவிலும் மக்கள் தொகையிலும் தற்கால நாட்டு அரசைவிட மிகவும் சிறியது. பண்டைய கிரேக்கத்தில் சிறப்பாக விளங்கிய **ஆதென்ஸ்** (Athens) நகரரசின் பரப்பளவு ஏறக்குறைய 850 சதுர மைல்கள்தாம்; கி.மு. ஐந்தாம் நூற்றாண்டில் அந்நகரரசில் குடிமக்களாக இருந்தவர்கள் (அதாவது, அடிமைகள், பொருளாதார உரிமைகளை மட்டும் உடையவர்கள், பெண்கள் ஆகியோர் நீங்கலாக) எண்ணிக்கை 135,000தான். இக்கால நாட்டு அரசுகளோ பரப்பளவிலும், குடி மக்கள் தொகையிலும் பண்டைய நகரரசுகளைவிடப் பலமடங்கு பெரியவை என்பது சொல்லாமலே விளங்கும்.

(2) பண்டைய நகரரசில் வாழ்ந்த மக்களுடைய குண நலனும் தன்மையும் இக்கால நாட்டு அரசு மக்களுடைய தன்மையும் வேறுபட்டவை; நகரரசின் குடிமக்கள் இனத்தில் ஒரே இயல்பினர் (homogeneous); அதாவது அவர்கள் யாவரும் கிரேக்கர் என்ற மக்கள் இனத்தைச் சேர்ந்தவர்; அங்கு வாழ்ந்த மற்றையோரெல்லாம் இன அடிப்படையில் வேறு பட்டவராகையால், அவர்களுக்குக் குடிமக்களுடைய எல்லா உரிமைகளும் கொடுக்கப்படவில்லை. எடுத்துக்காட்டாக ஸ்பார்ட்டா (Sparta) நகரரசு தோன்றுவதற்கு முன்னர், அது தோன்றிய லக்கோனியா என்ற இடத்தில் வாழ்ந்த கிரேக்க இனத்தைச் சாராத பூர்விக மக்களெல்லாம், தங்களுடைய விளை நிலங்கள் ஸ்பார்ட்டாவை நிறுவிய கிரேக்கப் பிரிவினராகிய டோரியர் (Dorians) என்ற கூட்டத்தாரால் பறிமுதல் செய்யப்பட்டு, **ஹீலாட்டுகள்** (Helots) எனும் அடிமைகளாகத் தாழ்த்தப் பட்டனர். இதே போல ஆதென்சிலும், மற்றெல்லா நகரரசு களிலும் இருந்த கிரேக்கரல்லாத மக்கள் உரிமைகளை இழந்த அடிமைகள் வகுப்பாகத்தான் இருந்தனர். ஆதென்சில் இருந்த அடிமைகள் சில உரிமைகளுடனும், நல்ல முறையிலும் நடத்தப் பட்டனர்; ஆயினும் அவர்கள் அடிமைகளே ஆவர். எனவே தான் கி.மு. ஐந்தாம் நூற்றாண்டில் ஆதென்சில் இருந்த நேர் முகக் குடியாட்சி முறையைப்பற்றிப் பதினெட்டாம் நூற்றாண்டில்

இருந்த ஃபிரஞ்சு அரசியல் சிந்தனையாளர் ரூஸ்ஸோ (Rousseau) 'அஃது அடிமைகளை வைத்திருந்த பிரபுக்கள் ஆட்சி' (slave-owning aristocracy) என்று குறிப்பிட்டார். இக்கால நாட்டு அரசு முறையிலோ, அதில் வாழும் எல்லா மக்களும் இனத்தில் ஒரே இயல்பினரல்லரென்பதும், பல்வேறு இனத்தவரென்பதும், அடிமைகள் என்ற வகுப்பு இல்லை என்பதும் தெளிவு.

(3) நகரரசு அரசாங்கத்தினுடைய **அதிகார வரம்பும்** இக்கால நாட்டு அரசின் அரசாங்க அதிகார வரம்பினின்றும் (The Sphere of State authority or Activity) வேறுபட்டது. இக்காலத்தில் பொதுவாக அரசு என்பதற்கும் அரசாங்கம் என்பதற்கும், அரசுக்கும், சமுதாயத்திற்கும் வேறுபாடுகள் உணரப்பட்டுப் பொதுவாக அரசாங்க அதிகாரத்துக்கும், குடிமக்களுடைய உரிமைகளுக்கும் இடையே ஓர் எல்லை அல்லது வரம்பு வகுக்கப்பட்டு, ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. அரசாங்கம் குடிமக்களுடைய தனி வாழ்வு பற்றிய அல்லது சொந்த உரிமைகளில் (private rights) (அதாவது கல்வி பெறுதல், தொழிலைத் தேர்ந்தெடுத்தல், மணம் செய்தல், சமய நெறிகளைப் பின்பற்றுதல் முதலியவற்றுள்) தலையிடுவதில்லை ; தன் கருத்துகளைப் புகுத்துவதுமில்லை; அரசில் பங்கு எடுத்துக்கொள்ளும் பொது வாழ்வு உரிமைகளைக் (Public rights) கையாளுமாறு குடிமக்களை அரசாங்கம் கட்டாயப்படுத்துவதுமில்லை; ஆனால், பண்டையக் கிரேக்க நகரரசிலிருந்த நிலைமையோ வேறு. அங்கு அரசு, சமுதாயம், அரசாங்கம் ஆகியவையெல்லாம் ஒன்றுதான்; அவற்றுக்கிடையே வேறுபாடு இல்லை. (இதற்குக் காரணங்கள் நகரரசின் பரப்பளவு சுருங்கியும், அதில் குடிமக்கள் வகுப்பு என்பதாக இன அடிப்படையில் ஒரு தனி வகுப்பு இருந்ததும்தான்.) எனவே, தனி வாழ்வு உரிமைகள், பொது வாழ்வு உரிமைகள் என்ற பாகுபாடும் இல்லை.[1] நகரரசே (Polis அல்லது City – State) சமுதாயமாகவும், அரசாகவும், அரசாங்கமாகவும் இருந்தது; அதுவே மக்களுக்கு

[1] சாதாரணமாக ஒவ்வொரு நகரரசிலும் இருந்த குடி ஆள் (citizen), நாட்டின் படை வீரராகவும், நாட்டின் நீதிபதியாகவும், மக்கள்மன்ற உறுப்பினராகவும் இருந்து பணி ஆற்றினர். தனிவாழ்வு உரிமைகளுக்கும், பொதுவாழ்வு உரிமைகளுக்கும் வேறுபாடு இல்லை என்பதை ஆதென்ஸ் நகரரசு மக்களின் உரிமைகளிலிருந்து தெரிந்து கொள்ளலாம். அதீனிய அரசாங்கம் ஒப்புக் கொண்டுள்ள கடவுளர்களை மட்டுமே ஒவ்வோர் அதீனியக் குடி ஆள் ஒப்புக்கொண்டு, அக்கடவுளரின் திருவிழாக்களில் பங்கு கொள்ளவும், தனது பெயரைக் குடிகள் பட்டியலில் சேர்க்கவும், திருவுளச் சீட்டின்படி (lot) பொது ஊணில் (common meal) சேர்தற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டால் சேரவும் வேண்டும். சட்டப்படி குடி ஆள் எவரும் தனிவாழ்வு மேற்கொள்ளாமல், திருமணம் செய்தல் வேண்டும்; வெளியூர்ப் பயணத்துக்காக மூன்று மாற்றுடைகள் மட்டுமே எடுத்துப் போகலாம். விவகாரங்களை நடுவராக இருந்து தீர்த்தல் வேண்டும்; அரசாங்கம் விதிக்கும் வரிகளைக் கொடுத்தும், ஏதாவதொரு படைப்பிரிவில் சேர்ந்தும் பணி செய்ய வேண்டும்.

'அரசாகவும், கல்விக் கூடமாகவும், சமய நிலையமாகவும்' இருந்த தனுல் அதனுடைய அரசாங்க அதிகாரத்துக்கு வரம்பே கிடையாது. அரசாங்கமே தன் மக்கள் பின்பற்றவேண்டிய சமயக் கோட்பாடுகளையும், சட்டங்களையும், ஒழுக்க நெறிகளையும், நுண் கலைகளையும், இலக்கிய நூல்களையும், அறிவியல்களையும் வகுத்தது. இத்தகைய அரசாங்க அதிகாரம் வரம்பற்ற, சர்வாதிகாரம் (totalitarianism) என்றிருந்தாலும், குடிமக்கள் யாவரும் இதில் (அரசாங்கத்தில்) பங்கு கொண்டு, அதனுடைய சட்டதிட்டங்களுக்குக் கீழ்ப்படிந்ததனுல், அரசாங்கத்தின் வரம்பற்ற அதிகாரமும் மக்கள் தாமாகவே ஏற்றுக்கொண்ட அதிகாரமாக இருந்தது. எனவே பண்டைய நகரரசு அரசாங்கத்துக்கு மக்கள் வாழ்க்கையின் எல்லாத் துறைகளையும் கட்டுப்படுத்தக்கூடிய வரம்பற்ற அதிகாரம் (all inclusive sphere of State authority) இருந்ததென்றும், மாருக, இக்கால நாட்டு அரசில், தாராளக் குடியாட்சி அரசு என்ற கோட்பாட்டின்படி அரசாங்க அதிகாரம் வரம்புக்கு உட்பட்டது என்றும் அறிகிறோம்.

குடிகளுடைய சொத்தாகிய நிலங்களெல்லாம், நகரரசில் உரிமையற்று வாழ்ந்த அடிமைகளால் பயிரிடப்பட்டன. எனவே, வாழ்க்கைக்கு வேண்டிய தொழில் செய்யவேண்டிய கட்டாயம் குடிமக்கள் வகுப்பாருக்கு இல்லை; ஆகையால் அரசியல், கலைகள் முதலிய பல்வேறு துறைகளிலும் நேரடியாக ஈடுபடுவதற்குப் போதிய ஒய்வு (leisure) அவர்களுக்கு நிறைய இருந்தது. ஆகையால், ஆதென்ஸ் நகரரசில் குடிமக்கள், முடியாட்சி (monarchy), உயர்குடிப்பிறந்தோராட்சி (aristocracy), செல்வச் சிறுகுடியினர் ஆட்சி (oligarchy), அரசியலமைப்பின் மூலமாக அல்லாமல் வன்செயலின் மூலமாக அரசாங்கத்தைக் கைப்பற்றிய ஒற்றை மனிதனுடைய வரம்பற்ற அதிகாரமுடைய ஆட்சி (tyranni), குடியாட்சி (democracy) முதலிய ஆட்சி வகைகளையெல்லாம் கி.மு. ஏழாம் நூற்றுண்டிலிருந்து கி.மு. ஐந்தாம் நூற்றுண்டுவரை நடத்திப்பார்த்தனர். பிளேட்டோ சிந்தித்த காலமாகிய கி.மு. ஐந்தாம் நூற்றுண்டின் பிற்பகுதியில் கிரேக்கத்தில் நிலவிய சமுதாயச் சூழ்நிலைகளுக்கு மேலேகூறிய ஆதென்ஸ் நகரரசின் 3 இயல்புகளும் எடுத்துக்காட்டுகளாகும்.

கிரேக்கருடைய பண்டையச் சமுதாய அமைப்பான நகரரசின் இயல்புகளை நாம் பார்ப்பதோடு, அவ்வமைப்பு தோன்றிய வகையையும் அறிவது, கிரேக்கருடைய அரசியற் சிந்தனையை அறியவும் உதவி செய்யும். கிரேக்கர் பண்டைய ரோமானியர், ஜெர்மானியர், இந்திய வேதகால ஆரியர் ஆகியோரைப் போலத்

தந்தைவழிச் சமுதாய முறையைக் (patriarchal system of social organisation) உடையவர்கள்; ஒவ்வொரு குடி ஆளும், தமக்கு மற்ருெரு குடி ஆளோடு உள்ள உறவையும், சொத்துக் களிலும் அதிகாரத்திலும் தமக்கு உள்ள உரிமையையும் தம் தந்தையின் மூலமாகவே நிறுவினர். நகரரசின் தோற்றுவாயாக இருந்த கிராமச் சமுதாயமும் அதிலுள்ள மக்களுடைய உறவின் அடிப்படையிலேயே அமைந்திருந்தது; பல குடும்பங்கள் ஒரே மூதாதையிடமிருந்து கிளைத்தவை ஆதலின் அவை மட்டும் ஒரு தனி ஆட்சி உடைய (சுதந்திரமான) கிராமமாக ஆயின. கிராமச் சமுதாயத்தின் மூலக் கூறு குடும்பம் (தந்தை வழி அமைந்தது) ஆகும்; ஒரே மூதாதையிடமிருந்து தோன்றி ஒரு கிராமமாக அமைந்த குடும்பங்கள் ஒரு **குடும்பத் தொகுதி** (அல்லது கிளான்—Clan) என்று அழைக்கப்பட்டன. இதேபோல ஒரு சமவெளியில் பல கிராமங்கள் தோன்றி, அவற்றுக்கெல்லாம் ஒரே மூதாதையின் மூலமாக உறவு முறை இருக்குமானல், அந்தக் கிராமச் சமுதாயங்களுக்கு **உறவுக் குழு** (அல்லது டிரைப்—Tribe, அல்லது பைலே—Phyle) என்று பெயர். பல குடும்பங்கள் ஒரு பொதுவான சமய வழிபாட்டு முறையைப் பின்பற்றிஞல் அந்தக் குடும்பங்களுக்குச் **சகோதரக் குழு** (phratry or brotherhood) என்று பெயர். எனவே, நகரரசு என்ற சமுதாய அமைப்பானது, உறவுடைய பல குடும்பங்கள் ஒரு குடும்பத் தொகுதி ஆகவும், பல குடும்பத் தொகுதிகள் உறவுக் குழு அல்லது டிரைப் ஆகவும், பல உறவுக் குழுக்கள் ஒரே அரசாங் கத்தின் கீழே ஒன்று சேர்வதன் காரணமாகவும் தோன்றிற்று. இந்தக் கருத்தை வெளியிட்டவர் அரிஸ்ட்டாட்டில். தந்தை வழிக் குடும்பத்தின் பெரிய வடிவமே நகரரசு ஆகும்.

ஆதென்ஸ் நகரரசு தோன்றிய அட்டிக்கா (Attica) என்று அழைக்கப்படும் சமவெளி கிரேக்கத் தீபகற்பத்தின் கிழக்குப் பகுதியில் இருந்தது; இதில் குடியேறிய அயோனிய, அகேயப் பிரிவினராகிய கிரேக்கக் குடும்பங்கள் பல கிராமச் சமுதாயங் களாக அமைந்திருந்தன. அவை நான்கு உறவுக் குழுக் களாகப் பிரிந்திருந்தன. ஒவ்வோர் உறவுக் குழுவும் அததற்கு உரிய கடவுள் முறையை ஒட்டி அமைக்கப்பட்டது; ஒவ்வோர் உறவுக்குழுவும் மூன்று சகோதரக் குழுக்களாகப் பிரிக்கப் பட்டது; எனவே பன்னிரண்டு சகோதரக் குழுக்கள் அட்டிக் காவில் இருந்தன. அதிலிருந்த ஒவ்வொரு குடும்பத் தொகுதி யிலும் பல குடும்பங்கள் இருந்தன. அவை ஒரே மூதாதையிட மிருந்து தோன்றியவை. இம் மூதாதையையே அவனுடைய வழி வந்த குடும்பத்தாரனைவரும் வழிபட்டனர். எல்லாக் குடும்பத்

தொகுதிகளும் சீயஸ் (Zeus), அப்போலோ (Apollo) என்ற கடவுளரை வழிபட்டனர். ஒவ்வொரு குடும்பத் தொகுதிக்கும் தனியான ஆட்சி முறையும் அலுவலரும் உண்டு. ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு தலைவரும் ஆலோசனைச் சபையும் உண்டு. கிராமத்திலுள்ள பல குடும்பங்களில் எந்தக் குடும்பம், எல்லாக் குடும்பங்களின் மூதாதைக்கு நெருங்கிய உறவோடு இருந்ததோ, அந்தக் குடும்பத்தின் தலைவரே கிராமத்தின் தலைவராக இருந்தார்; மற்றக் குடும்பங்களின் தலைவர்கள் ஆலோசனைச் சபையின் உறுப்பினர்கள் ஆவர். முதலில் தனித்தனியாக இருந்த கிராமச் சமுதாயங்கள் (1) தங்களுடைய சுதந்திரத்தைப் பிறருடைய படையெடுப்பினின்றும் பாதுகாத்துக்கொள்ளவும், (2) வாழ்க்கைக்குத் தேவையான பொருள்களை வாங்கவும் விற்கவும், (3) தங்களுக்கெல்லாம் பொதுவான மூதாதையை வழிபடவும் ஒரு பொது அரசாங்கத்தை அமைத்துக்கொண்டபோது நகரரசு (Polis or City State) தோன்றிற்று. இவ்வாறு அட்டிக்காவில் கடலுக்கருகிலுள்ள செபீசஸ் சமவெளியில் கி.மு. பத்தாம் நூற்றுண்டில் ஆதென்ஸ் நகரரசு தோன்றிற்று. அதனை ஆண்ட அரசர்கள் செக்ரோப்ஸ், எரக்தியஸ், பான்டியன், ஈஜியஸ் ஆகியோர் ஆவர். அதில் முதலில் வாழ்ந்த கிரேக்கர் தாம் வழிபட்ட பொசைடன் என்ற கடவுளுக்குச் சமவெளியின் நடுவிலுள்ள ஒரு குன்றின்மீது ஒரு கோவில் கட்டியிருந்தனர்; பின்னர் மற்றக் கிரேக்கர் குடியேறித் தாங்கள் வழிபட்ட அதீனு (Athena) என்ற பெண் கடவுளின் வழிபாட்டைப் புகுத்தினர். குன்றின்மீதுள்ள கோவில் அதீனுவின் வசமாயிற்று. குன்றைச் சுற்றியிருந்த கிராமத்தவரெல்லாம் அதீனியர் எனப்பட்டனர். மேற்கூறிய 3 காரணங்களுக்காக இந்தக் கிராமங்களெல்லாம் தம் விருப்பத்தின் பேரிலேயே ஆதென்ஸ் நகரரசாக இணைந்தன. (இந்த நகரரசைத் தோற்றுவித்தவர் **தீசியஸ்** என்ற அரசர் ஆவார்.) இந்த நகரரசின் அரசாங்கம் இருந்த இடம் அதீனுவின் கோவிலுக்கருகிலேயே குன்றை ஒட்டி ஒரு கோட்டைக்குள் இருந்தது; குன்றும் கோட்டையும் அக்ரபோலிஸ் என்று அழைக்கப்பட்டன.

(ஆ) அரசியல் நிலைகள்

ஆதென்சைப் போலவே ஸ்பார்ட்டா என்ற நகரரசும் டோரியப் பிரிவைச் சேர்ந்த கிரேக்கர்கள் வாழ்ந்த பல சுதந்திரக் கிராமங்கள் ஒன்றுக இணைந்ததன் மூலமாகத் தோன்றிற்று; ஆனல், இங்கு இணைப்பு வலுக்கட்டாயத்தின்மேல் ஏற்பட்டது. ஸ்பார்ட்டாவில் நில அடிமைகள் அல்லது ஹீலாட்டுகள் (Helots) என்ற வகுப்

பினரும், பெரியோகி (Perioki) என்ற நடுவகுப்பாரும், ஸ்பார்ஷியேட் (Spartiates) என்ற குடிமக்கள் வகுப்பாரும் இருந்தனர். ஹீலாட்டுகள் சமுதாய, பொருளாதார, அரசியல் உரிமைகள் அற்றவர்; குடிமக்கள் வகுப்பாருக்கு உழுது பயிரிட்டுத் தொண்டு செய்தனர். பெரியோகி என்ற இரண்டாம் வகுப்பார் தொழில், வாணிபம் முதலியவற்றைச் செய்து, அரசில் பங்கு எதுவும் இல்லாமல், சமுதாய உரிமைகளை மட்டும் பெற்று வாழ்ந்தனர். ஸ்பார்ஷியேட்டுகளே முழுமையான குடிமக்களாகக் கருதப்பட்டு, அரசியலில் பங்கு பெற்று, விளைநிலங்களின் உரிமையாளராகவும் இருந்தனர். இவர்கள் வாணிபம் செய்தல் கூடாது. இவ் வகுப்பைச் சேர்ந்த ஆண்களும் பெண்களும் ஏழாவது வயதிலிருந்தே ஸ்பார்ட்டாவின் அரசாங்கத்தால் இராணுவப் பயிற்சி கொடுக்கப்பட்டு, கரடு முரடான வாழ்க்கையில் ஈடுபடுத்தப்பட்டனர்.[1] ஆண்கள் முப்பது வயதுக்குப்பின் அரசியல் உரிமைகள் பெற்று, அரசாங்கத்தால் நடத்தப்பட்ட உணவு விடுதியில் (public mess) உறுப்பினராகச் சேர்க்கப்பட்டனர். உணவு விடுதிக்கு அவர்கள் காலம் தவறாமல் கட்டணம் (பொருள் வடிவில்) செலுத்துதல் வேண்டும். அவர்கள் திருமணம் செய்து கொண்டாலும், சில குறிப்பிட்ட கால வரம்புகளில்தான் மனைவியரோடு இல்லறம் நடத்தலாம். பொருளாதார ஏற்றத்தாழ்வுகளும் ஆடம்பர வாழ்க்கையும் நீக்கப்பட்டன. அவர்களுடைய மன வளர்ச்சிக்கு ஏற்ற அளவு கல்விப் பயிற்சியோ சுதந்திரமோ அவர்களுக்கு அளிக்கப்படாமல், அவர்களுக்கு உடல் வளர்ச்சி ஏற்படுமாறு போர்ப் பயிற்சி மட்டுமே கொடுக்கப் பட்டதால், ஸ்பார்ட்டாவைக் கிரீசின் இராணுவப் பயிற்சிக் கல்லூரி (Military School of Hellas) எனவும், இதற்கு மாறாக அதீனியர்களுக்கு மனவளர்ச்சிக்கு ஏற்ற சுதந்திரம் இருந்ததனாலும், அதன் காரணமாகப் பல அருங்கலைகளும், அறிவியல்களும் அந் நகரரசில் தோன்றி, மற்ற கிரேக்க நகரரசுகளுக்குப் பரவியதாலும் ஆதென்சைப் பண்டையக் கிரீசின் மன அல்லது அறிவு வளர்ச்சிக் கல்லூரி (Intellectual School of Hellas) எனவும் கிரேக்க வரலாற்றாசிரியர் கூறுவர். ஸ்பார்ட்டாவில் இருந்த சமுதாய அமைப்பு, கட்டாய இராணுவப் பயிற்சி முறை, பொதுவுடைமை வாழ்க்கை முறை முதலியவைகளையெல்லாம் தம்

[1] குழந்தை பிறந்ததும், அரசாங்க மருத்துவர்கள் வந்து அதனைப் பார்வையிட்டு அது வலிய இராணுவப் பயிற்சிக்குத் தகுதி உடையது என்று அவர்களுக்குப்பட்டால், அதனை ஏழு வயது வரை அரசாங்க ஆணைகளுக்கு ஏற்ப வளர்த்து வருமாறு பெற்றோரிடம் திருப்பிக் கொடுத்துவிடுவர். தகுதி அற்றதாக அவர்கள் எண்ணினால், அக்குழந்தையை டைஜீட்டஸ் என்ற மலை உச்சிக்கு எடுத்துச் சென்று, அங்கு இருக்கும் கழுகுகளால் உண்ணப்படுமாறு போட்டுவிடுவர். திடமான குழந்தையையும் ஏழுவயதில் அரசாங்கத்திடம் ஒப்படைக்கவேண்டும். விவரங்களை Woodhouse எழுதிய 'History of Greece' என்ற நூலில் காணலாம்.

மனத்தில் நன்கு பதியவைத்தே பிளேட்டோ தாம் எழுதிய முதலாவது அரசியல் நூலில்—**'குடியரசு'** அல்லது **ரிபப்ளிக்** (Republic) — தம் அரசியல் கருத்துகளை வகுத்தார்.

ஸ்பார்ட்டா நகரரசில் இரண்டு அரசர்கள் இருந்தனர்; இவர்களுக்கு அதிகாரம் இல்லை. நிலப் பிரபுக்களின் குடும்பங்களிலிருந்து, மக்கள் மன்றத்தால், வாழ்நாள் முழுமைக்கும் உரத்தகுரல் தேர்வுமுறையின் மூலமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட 28 உறுப்பினர் அடங்கிய ஓர் ஆலோசனை மன்றமும் (Gerousia அல்லது Senate) இருந்தது. 30 வயதுடைய எல்லாச் சாதாரண ஸ்பார்ஷியேட் வகுப்பைச் சேர்ந்த ஆண்களும்[1] அடங்கிய ஒரு மக்கள் மன்றம் (அப்பெல்லா - Apella) இருந்தது; இம் மன்றமே மேல்சபையின் 28 உறுப்பினரையும், ஆண்டுதோறும் 5 நீதிபதிகளையும் (Ephors) தேர்ந்தெடுத்தது. அளவில் சிறியதாகவும், நாட்டின் எல்லாச் செல்வ மூலாதாரங்களையும் தம்மிடமே வைத்துக்கொண்டும் இருந்த செல்வர்களால் நடத்தப்பட்ட ஆட்சியாக ஸ்பார்ட்டாவின் ஆட்சி இருந்ததனால், **அது செல்வச் சிறுகுடியினர் ஆட்சியே** (Oligarchy) ஆகும்.

ஆதென்சில் முடியாட்சி, உயர்குடிப் பிரபுக்கள் ஆட்சி, செல்வராட்சி, சட்டத்துக்குப் புறம்பான ஒற்றை மனிதர் ஆட்சி முதலியவை கி.மு. ஏழாம் நூற்றுண்டிலிருந்து ஒன்றன்பின் ஒன்ருக நிறுவப்பட்டு, நீக்கப்பட்டுக் கடைசியில் நேர்முகக் குடியாட்சி முறை (Direct Democracy) கி.மு. ஐந்தாம் நூற்றுண்டில் நிறுவப்பட்டது. அதீனியக் குடியாட்சி முறை உயரிய நிலையிலிருந்த காலம் அதன் குடியாட்சித் தலைவராக **பெரிக்ளீஸ்** (Pericles) என்பவர் விளங்கிய காலம் ஆகும். (ஏறக்குறைய கி.மு. 500—கி.மு. 421). அப்போது ஆதென்சில் இருந்த குடியாட்சி அரசாங்க நிறுவனங்கள் **எக்ளிசியா** எனப்பட்ட (Ecclescia) **மக்கள் மன்றம், ஐந்நூற்றுவர் மன்றம்** (Council of Five Hundred or Boule), 6000 குடிமக்கள் அடங்கிய மக்கள் **சான்றுளர் நீதிமன்றம்** (Popular jury court or Heliaea) முதலியவை ஆகும். ஆண்டுதோறும் திருவுளச் சீட்டு முறையின் மூலம் (selection by lot) குடிமக்கள் பட்டியலில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட அலுவலர்கள், (அரசாங்கக் கணக்குத் தணிக்கையாளர்கள், நிதி அலுவலர், சாலைக் கண்காணிப்பாளர், நிறை, படித் தணிக்கையாளர், சிறைக்கூட

[1] எந்தக் கிரேக்க நகரரசிலும் பெண்களுக்கு—அவர்கள் குடிமக்கள் வகுப்பினராக இருந்தாலும்—அரசியலுரிமைகள் இல்லை.

அலுவலர், சமய அலுவலர், கல்வி அலுவலர், துறைமுக அலுவலர் இருந்தனர். திருவுளச் சீட்டுத் தேர்வு முறையின் மூலமாக அலுவலுக்கு வரும் நாணயமும் நீதியும் இல்லாதவர், அதிகாரத்தைத் தவருகக் கையாண்டு நாட்டிற்குக் கேடு விளைக்கா வண்ணம் தடுப்பதற்காகப் பல காப்புகள் இருந்தன. எக்ளிசியாவில் 18 வயதுக்கு மேற்பட்ட எல்லா ஆண்களும் (தேர்வு முறை இல்லாமலே) உறுப்பினராக இருந்து, தமது முன்னர் ஐந்நூற்றுவர் மன்றத்தால் வைக்கப்பட்ட எல்லா விஷயங்களிலும் முடிவான தீர்மானங்களைச் செய்தனர். இதுவே நாட்டின் தலைமையான அதிகாரத்தைப் பெற்றிருந்தது. பியூல் (boule) என்ற ஐந்நூற்றுவர் மன்றம், அன்ருட ஆட்சியைத் தனது ஐந்நூறு உறுப்பினர்களின் மூலமாக, முறை வைத்து (by turn), குறுகிய காலப்பணி என்ற விதிப்படி (short period of office), திருவுளச் சீட்டுத் தேர்வு முறையைப் பின்பற்றிச் செய்தது. எனவே, ஆதென்சில் இருந்த ஒவ்வொரு குடி ஆளும் தம் வாழ்நாளில் ஏதேனும் ஒரே முறையாயினும் ஓர் அரசாங்க அலுவலைப் பெற வாய்ப்பு இருந்தது. இதைக் கவனித்துத்தான், 'கிரேக்கர் சமுதாயச் செயல்களில் (அரசியலில்) பங்கு கொள்ளு பவர்; அவ்வாறு பங்கு கொள்ளாதவர் ஒன்று கடவுளாக இருத்தல் வேண்டும், அல்லது காட்டில் வாழும் விலங்காக இருத்தல் வேண்டும்,' என்று அரிஸ்ட்டாட்டில் கருதினுர். மக்கள் நீதிமன்றத்திலிருந்த 6000 நீதிபதிகளும் ஆண்டுதோறும் திருவுளச்சீட்டு முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டனர். அரசாங்க அலுவலருக்கு ஊதியமும் வழங்கப்பட்டது. இத்தகைய அதீனிய ஆட்சிமுறை ஸ்பார்ட்டாவினுடையதைப் போலல்லாமல் குடியாட்சியாக இருந்தது.

இக் குடியாட்சி முறையும், கி.மு. ஐந்தாம் நூற்ருண்டில் ஆதென்சுக்கும், ஸ்பார்ட்டாவிற்கும், அவற்றின் கூட்டாளிகளுக்குமிடையே மூன்று தடவைகள் நடைபெற்ற பெலோப் பொனீஷியப் போர்களின் இறுதியில் ஆதென்ஸ் ஸ்பார்ட்டா வினல் தோற்கடிக்கப்பட்டு, பேரரசை (Empire) இழந்த நிலையில், பெரும் சோதனைக்குள்ளாயிற்று. இச் சூழ்நிலையில்தான் சாக்ரட்டீஸ், பிளேட்டோ முதலிய சிந்தனையாளர் வாழ்ந்தனர். பாரசீகப் போர்கள் தொடங்கிய கி.மு. 490ஆம் ஆண்டு முதல் பெலோப் பொனீஷியப் போர்கள் முடிவடைந்த கி.மு. 404ஆம் ஆண்டு வரை கிரேக்கத்தில் நடைபெற்ற பல முக்கிய அரசியல் நிகழ்ச்சிகளும், கருத்துகளும் பாரசீகருடைய எதேச்சாதிகார ஆட்சிமுறையும், அதீனியப் பேரரசின் தோற்றமும், வீழ்ச்சியும், ஸ்பார்ட்டாவின் செல்வச் சிறு குடியாட்சிக்கும் அதீனியக் குடியாட்சிக்கும் இடையே

எழுந்த முரண்பாடுகளும் போட்டிகளும் ஆகிய இவை எல்லாம் அரசியல் சிந்தனையாளர்களால் ஆராயப்பட்டன.

(இ) சாக்ரட்டீசைப்பற்றிய சிறு குறிப்பு

பிளேட்டோவுக்கு ஆசிரியராகவும் முன்னோடியாகவும் இருந்து, ஐரோப்பியருடைய சிந்தனை வளர்ச்சிக்கு ஒரு தொடக்கத்தையும் வகுத்துக் கொடுத்த சிந்தனையாளர் சாக்ரட்டீஸ் (Socrates) ஆவார். இவர் ஏறக்குறைய கி. மு. 469-லிருந்து கி.மு. 399ஆம் ஆண்டுவரை ஆதென்ஸ் நகரரசில் வாழ்ந்தார். இவருடைய தகப்பனாராகிய சோப்ரோனிஸ்க்கஸ் ஒரு சிற்பத் தொழிலாளி; தாய் பிள்ளைப்பேறு மருத்துவம் செய்யும் பெண்மணி. சாக்ரட்டீசின் காலத்தில் பொது விவகாரங்களை விவாதித்த பலர் இருந்தனர். இவர்கள் மற்றவர்களுக்கு வாதிடும் பேச்சுத் திறனையும் (rhetoric), திறனாய்வு முறையையும் கற்றுக்கொடுத்தனர். இவர்களே, சோபிஸ்ட்டுகள் (Sophists) எனப்பட்ட மெய்யறிவாளர்கள் (philosophers). ஆயினும் இவர்கள் எதிலும் உண்மையை ஆராய்ந்து நிறுவாமல், தமது கருத்தினையே வாதிட்டு நிறுவும் திறனுடையவர்களாகையினால், இவர்கள் உண்மையில் மெய்யறிவாளர்கள் ஆகார். சாக்ரட்டீசும் தொடக்கத்தில் ஒரு சோபிஸ்ட்டுதான்; எனினும் அவர் மற்றவர்களிடமிருந்து வேறுபட்டவர்;[1] இவர் காரண–காரியக் கோட்பாட்டை, அல்லது பகுத்தறிவுக் கோட்பாட்டைப் பின்பற்றியவர். கி. மு. 404-ல் ஆதென்ஸ் நகரரசு ஸ்பார்ட்டாவினால் தோற்கடிக்கப்பட்டுப் பேரரசை இழந்தது; ஸ்பார்ட்டாவின் அரசியல் செல்வாக்கு மற்றக் கிரேக்க நகரரசுகளிடையே வளர்ந்தது. இந்நிலையில் பெரும்பாலான அதீனியக் குடிகளுக்குத் தமது நகரரசின் சமயநெறிகளிலும், குடியாட்சி அமைப்பிலும் நம்பிக்கை குறைந்தது. இந்நிலையில் அதீனியச் சோபிஸ்டுகள், யாவருக்கும் பொருந்தும் உண்மை (universal truth), நீதி (justice), சரியான வழி (right) முதலியவற்றை ஆராய்ந்தனர். இந்தப் பேச்சுக்கலை ஆசிரியர்கள் கூறிய கருத்துகளின் சாரம் வருமாறு[2] :

> யாவருக்கும் பொருந்தும் உண்மை, நீதி என்பவை இல்லை.
>
> ஒவ்வொருவரும் தத்தம் கருத்துகளுக்கும் விருப்பங்களுக்கும் ஏற்ப எதனையும் சீர்தூக்கிப் பார்க்கும் தகுதி உடை

[1] ஏனைய சோபிஸ்ட்டுகள் லியான்ட்டினி நகரரசைச் சேர்ந்த கார்ஜியஸ்; அப்டீராவைச் சேர்ந்த புரோட்டகோரஸ், ஈலிஸைச் சேர்ந்த ஹிப்பியஸ், சியாஸைச் சேர்ந்த புரோட்டிக்கஸ், யூசிப்பிடிஸ் முதலியோர் ஆவர். விவரங்களை J. B. Bury எழுதிய கிரேக்க வரலாற்றில் காணலாம்.

[2] மேற்கோள்—R. G. Ghettell எழுதிய 'History of Political Thought'.

யவர். ஒழுக்க விதிகள் நாட்டுக்கு நாடு வேறுபடுகின்றன. மனிதர் சமுதாய வாழ்வு வாழும் இயல்பினர் அல்லர்; அவர்கள் தன்னலம் மிக்கவர்; வலிமையிலும் வேறுபாடு உடையவர். எனவே அரசியலதிகாரம் என்பது மெலியோரை அடக்குவதற்காக வலியோர் தமக்குள் செய்து கொள்ளும் ஒப்பந்தத்தினின்றும், அல்லது வலியோரிட மிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டு மெலியவர் ஒன்று சேருவதினின்றும், அதாவது ஒரு சமுதாய ஒப்பந்தத்தினின்றும் (Social Contract) தோன்று கிறது. தனியார் நலன் என்ற அடிப்படையில் அரசு அமைந்துள்ளது. தனியார் சுதந்திரக் கொள்கையையும் (Individualism) அரசு ஆதாரமாக உடையது. ஒழுக்கத் துக்கும் (morality) சட்டத்துக்கும் (Law) வேறுபாடு இருக்கிறது. மனிதனே எல்லாவற்றையும் மதிப்பிடக்கூடிய நீதிபதி. உண்மை என்பது சில நோக்கங்களில் அல்லது முழுமையான நோக்கங்களில் காணப்படுவது அன்று; உண்மையைப்பற்றி ஒவ்வொரு மனிதரும் கொண்டிருக் கும் கருத்திலும் உண்மை இருக்கிறது.

சாக்ரட்டீஸ் மேற்கூறிய சோஃபிஸ்டுகளின் கருத்துகளில் சில வற்றை ஒத்துக் கொண்டார்; சரியான முறை அல்லது வழி என் பதைப் பற்றிய கருத்துகளெல்லாம் தனிமனிதர் ஒவ்வொருவரு டைய அறிவினுல் ஆராயப்படுதல் வேண்டும்; அவை சமய அடிப் படையையோ மரபு வழக்கங்களையோ சார்ந்திருக்கவில்லை — இக் கருத்தைச் சாக்ரட்டீஸ் ஏற்றுக்கொண்டார்; மற்றவற்றை ஒத்துக் கொள்ளவில்லை. மேலும், சாக்ரட்டீஸின் கருத்துகளைக் கீழ் வரு மாறு சுருக்கிக் கூறலாம்:

(a) சாக்ரட்டீஸின் கருத்துகள் அவர் கையாண்ட **இரண்டு முறைகளினுல்** (methods) விளக்கப்படுகின்றன; இரண்டு முறைகள் : (1) **இலக்கணம் வகுத்தல்** அல்லது வரையறை செய்தல் (Definition); (2) **வினு விடை முறை** (question and answer or discussion). உண்மையைஅறிவதற்கு ஓர்அளவுகோல் வேண்டும். தவறுதலுக்குக் காரணங்கள் விளக்கப்படவேண்டும். நாம் ஒன்றை, இதுதான் சரி, அல்லது உண்மை என்று தீர்மானிக்கும்போது, இரண்டு கருத்து களை ஒப்பிடுகிருேம். அவ்விரு கருத்துகளும் தெளிவாகவும், ஒன் றுக்கொன்று வேறுபட்டும் இருத்தல் வேண்டும். வரையறுக்கப்படாத தெளிவில்லாத கருத்துகளை ஒப்பிடுதலால்தான் தவறுகள் தோன்று

கின்றன. எனவே, உண்மையை அறிவதற்கு எதற்கும் இலக்கணம் அல்லது வரையறை வகுக்கப்படுதல் முக்கியம்.

சாக்ரட்டீசின் கருத்துகளைப் போலவே மேற்கூறிய இரண்டு முறைகளும் முக்கியமானவை.

(b) **பயன்வழிக் கோட்பாடு** (Utilitarianism): மேற்கூறிய முறைகளை அவர் ஒழுக்க இயலில் (Ethics) கையாண்டு, மனித வாழ்வின் நாட்டங்கள், அதன் சிக்கல்கள் ஆகியவற்றை ஆராய்ந்தார். இதன் விளைவாக அவர் ஒழுக்க இயலில் பயன்வழிக் கோட்பாட்டை நிறுவினார். 'நல்லது' அல்லது 'நன்மை' என்பது பயனுடையது (The good is useful); நற்பண்பே இன்பம் ஆகும் (virtue is happiness); நற்பண்பு என்பதே அறிவு ஆகும் (virtue is knowledge). எவரும் தமது விருப்பத்தின் பேரிலேயே தவற்றைச்செய்யார். அவர், அறியாமையின் காரணமாகவே அவ்வாறு தவறு செய்கிறார். எவ்வாறெனில் தம் சொந்த இன்பத்தை விரும்பாத மனிதர் எவரும் இல்லை.

(c) **அரசு**: அரசு என்பது மக்களுடைய தேவைகளின் பொருட்டுத் தோன்றிய விரும்பத்தக்க ஒரு நிறுவனம். மனிதன் சமுதாய வாழ்வை விரும்பும் இயல்பை உடையவன். அரசாங்கச் சட்டங்கள் அறிவின் அடிப்படையில் அமைந்திருந்தால், அவை எல்லோரையும் கட்டுப்படுத்தும். நீதியைப் பற்றிய கருத்துகள் ஒவ்வொருவருடைய அறிவினாலும் ஆராயப்படுதல் வேண்டும். சரியானவை எனவும், நீதியானவை எனவும் கொள்ளப்படும் செயல்கள், கருத்துகள் ஆகியவற்றின் அடிப்படைக் கொள்கைகளை நாம் கண்டுகொள்ள இயலும். அரசியல் அமைப்பைப் பற்றிய கல்விப் பயிற்சி யாவருக்கும் இருத்தல் வேண்டும். அரசு அறிவுடைய குழுவினருடைய ஆட்சியில் இருத்தல் வேண்டும். மனிதர் சமமானவர் என்ற அடிப்படையில் அலுவலர்களைத் திருவுளச் சீட்டு முறையின் மூலமாக (selection by lot) அமர்த்தும் அதீனியக் குடியாட்சி முறை கண்டனத்துக்கு உரியது.

(d) **நீதி** : நீதி என்பது என்ன என்பதைப்பற்றி, சாக்ரட்டீஸ் தம் மாணவர்களோடு உரையாடும்போது, அவர் காலத்திய அதீனிய மக்களுடைய தவறான கருத்துகளையும் செயல்களையும் கண்டனம் செய்து மறுத்துரைக்கின்றார். **'ஒவ்வொருவரும் தமது அறிவாற்றல் மூலம் சுதந்திரமாகச் சிந்தித்து நீதி என்பதைக் கண்டு கொள்ள இயலும்'** என்று அவர் கருதினார். இவ்வாறு அவர் தம் மாணவர்களின் அறிவாற்றலைத் தூண்டிவிட்டார்; தவறான, பொய்யான கருத்துகளை அவர் மறுத்தார்.

(e) வினா-விடை அல்லது திறனாய்வு முறையை அவர் கையாண்டு, தம் காலத்திய அதீனியர்களுடைய **கடவுட் கொள்கையையும்,** சமயச் செயல்களையும் அவர் ஆராய்ந்து, அவை உள்ளீடு இல்லாதவை எனக் காட்டினார். எனவேதான், 'அவர் சமுதாய ஒழுங்கை அழிக்க வல்ல கருத்துகளைப் பரப்பினார்; நாட்டினால் ஒப்புக்கொள்ளப்பட்ட கடவுள்களை அவர் நம்பாமல், புதிய கடவுள்களைப் புகுத்தினார்; எனவே, சமயப்பற்று இல்லாமை என்ற குற்றத்தைச் செய்தவராவார். மேலும் அவர் இளைஞர்களுக்கு இத்தகைய தவறான கருத்துகளைக் கற்றுக் கொடுத்த குற்றவாளியும் ஆவார்,' என்று அனித்தஸ், திரேசிபுலஸ் முதலிய அதீனியர்களுடைய குற்றச்சாட்டுகளுக்கு ஆளானார்; நஞ்சு ஊட்டப்பட்டுக் கொலைத்தண்டனை கொடுக்கப்பட்டார். இத் தண்டனையை அவர் ஏற்றுக் கொண்டதன் மூலம் 'சுயசிந்தனை' என்ற கோட்பாடு நிலைபெற்றது என்பதை உலகம் அறியும். சாக்ரட்டீசின் மீது சாட்டப்பட்ட குற்றங்களுக்கு அவர் கூறிய விடை என்ன என்பதை நாம் கிரேக்க வரலாற்றிலிருந்து அறியக் கூடவில்லை. ஆயினும், அவருடைய மாணவராகிய பிளேட்டோ தம் ஆசிரியரைக் குற்றமற்றவரெனக் காட்டுவதற்காக எழுதிய 'சாக்ரட்டீசின் விளக்கம்' (Apology of Socrates) என்ற நூலில் இருந்து, சாக்ரட்டீஸ் என்ன விடை கூறியிருப்பாரென்று நாம் ஊகிக்கலாம்.[1] அவர் தம் ஆசிரியர்மீது நடத்தப்பட்ட விசாரணையையும் அவருடைய இறப்பையும் தாம் எழுதிய **யூதிப்ரோ** (Euthyphro), **அப்பாலஜியா** (Apologia), **கிரிட்டோ** (Crito), **பீடோ** (Phaedo) முதலிய நூற்பகுதிகளில் விரித்துரைக்கிறார்.

சுருங்கக் கூறின், சாக்ரட்டீசின் இலக்கண, வினா-விடை ஆய்வு முறைகளும், 'அறிவுடையோரே ஆளுதல் வேண்டும்' என்ற கருத்தும், பயன்வழிக்கோட்பாடும், 'அறிவுடைமையே பண்பும் இன்பமும் ஆகும்' என்ற கருத்தும், பிளேட்டோவுக்கும் அவருக்குப் பின்வந்த சிந்தனையாளர்களுக்கும் சில கோட்பாடுகளை வகுப்பதில் பேருதவியாக இருந்தன என்று கூறலாம்.

பிளேட்டோவின் காலத்தில் ஆதென்ஸ், ஸ்பார்ட்டா முதலிய நகரரசுகளைத் தவிர காரிந்த், தீப்ஸ், மெகாரா, ஆர்காஸ் முதலிய நகரரசுகளும் இருந்தன.

[1] சாக்ரட்டீசின் சமயக் கருத்தைப்பற்றி நாம் கிரேக்க வரலாற்றிலிருந்து அறிவது யாதெனில், "சமயப்பற்று இல்லாத (அனக்ஸகோரஸ்) சில தத்துவ ஆசிரியர்களைப் போல, சாக்ரட்டீசும் வைதிகச் சமய நெறியைச் சேர்ந்தவரல்லர்; ஆயினும், அவர் புதிய வழி எதுவும் காணவில்லை. ஒரு கடவுள் உண்டு என அவர் நம்பினாரென்பதிலும் ஐயமில்லை. ஆயினும், அவர் தெய்விகக் கொள்கையின் இயல்பைப் பற்றித் திட்டவட்டமாக அறியாதவர் (agnostic); ஆன்மாவின் அழியா நிலையைப் பற்றியும் அவர் இதே கருத்தைக் கொண்டிருந்தார்" என்பதாம். (J.B. Bury, 'A History of Greece').

இயல் இரண்டு

பிளேட்டோ

(கி.மு. 427 – கி.மு. 347)

பிரிவு 1 : பிளேட்டோவின் வாழ்க்கை வரலாறு

பிளேட்டோவின் பெற்றோர், இளமை வாழ்க்கை முதலிய வற்றைப் பற்றி யாதும் அறியக் கூடவில்லை. இவர் வாழ்ந்த காலம் கி.மு. 427ஆம் ஆண்டுக்கும் கி.மு. 37ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட எண்பது ஆண்டுக் காலமாகும்; இவர் அதீனியச் சுய சிந்தனையாளராகிய சாக்ரட்டீசின் நெருங்கிய மாணவரா வார். இவர் **'குடியரசு' ரிபப்ளிக்** (Republic) அல்லது இலட்சிய அரசு (Ideal State), என்ற நூலையும் **'அரசியலறிஞர்' 'ஸ்டேட் ஸ்மன்'** (Statesman) என்ற நூலையும், **'சட்டங்கள்' 'லாஸ்'** (Laws) என்ற நூலையும் இயற்றினர். இம்மூன்று நூல்களும், அவருடைய அரசியல் கோட்பாடுகளின் வளர்ச்சியின் மூன்று நிலைகளைக் காட்டுகின்றன என்று கூறலாம். இவர் தமது முதலாவது நூலில், 'அரசியலறிவு அல்லது மெய்யுணர்வு பெற்றவரே அரசராதல் வேண்டும்' (Philosophers should become kings) என்று கூறியுள்ள கருத்தைச் செயல்படுத்துவதற்கு ஒரு வாய்ப்பு அப்போது சிசிலித்தீவில் இருந்த சைரக்யூஸ் (Syracuse) என்ற கிரேக்க நகரரசில் தோன்றிற்று. அவ்வரசின் அமைச்ச ராகிய **டயன்** (Dion) என்பவர் பிளேட்டோவை அழைத்தார். எனவே பிளேட்டோ கி.மு. 388 ஆம் ஆண்டிற்கு முன்னதாக ஒரு முறையும், கி.மு. 388ஆம் ஆண்டில் ஒரு முறையும், அவ்வாண் டிற்குப் பின்னர் ஒரு முறையும் ஆக மூன்று முறைகள் சைரக் யூஸ் நகரரசுக்கு வந்து இருந்தார். அதனுடைய அரசரான இரண்டாம் டயனீஷியசுக்கு (Dionysius II) அவர் கோண கணிதம் (Geometry) கற்றுக் கொடுத்தார். ஆயினும் அவர் கருதிய தத்துவப் பயிற்சியை டயனீஷியஸ் ஏற்றுக்கொள்ளு

வதற்குச் சூழ்நிலைகள் ஒத்துவரவில்லை எனவே பிளேட்டோ ஆதென்சுக்குத் திரும்பிவந்து, அங்குத் தம் மாணவர்களை, 'கலைக்கழகம்' (அகாடமி) (Academy) என்ற குழுவாக அமைத்துக் கற்றுக் கொடுத்தார். அவருடைய மிகநெருங்கிய மாணவர் களுள் ஒருவரே அரிஸ்ட்டாட்டில் ஆவார்.

பிளேட்டோவின் காலத்தில் இருந்த சமுதாய, அரசியற் சூழ்நிலைகள் முன்பே கூறப்பட்டன. முதலில் நல்லவகையில் செயலாற்றிய அதீனியக் குடியாட்சி அரசாங்கம், பின்னர் உணர்ச்சி வசப்பட்டுப் பல தவறுகளைச் செய்து ஸ்பார்ட்டாவினால் தோற்கடிக்கப்பட்டுச் சிறுமை எய்திற்று. எனவே ஸ்பார்ட்டாவில் காணப்பட்ட சமுதாய அமைப்பு, கட்டாய இராணுவப் பயிற்சி முறை ஆகியவற்றை மனத்தில் வைத்து பிளேட்டோ சில அரசியற் கருத்துகளைத் தமது முதலாவது நூலாகிய 'குடியரசு' (ரிபப்ளிக்) என்பதில் வரைந்தார். ஆயினும் இத்தகைய கருத்துகள் தமது சைரக்யூஸ் பயணத்துக்குப் பின்னர் மனித இயல்புக்கு முழுவதும் ஒத்துவரமாட்டா என்று அவர் உணர்ந்து, தாராள, முற்போக்குக் கருத்துகள் தோன்றுவதற்கு இடமளித்த அதீனியக் குடியாட்சி முறையிலுள்ள சில நல்ல இயல்புகளை ஒப்புக் கொண்டு, 'ஸ்டேட்ஸ்மன்', 'அரசியலறிஞர்' 'லாஸ்' 'சட்டங்கள் ஆகிய நூல்களில், தாம் 'ரிபப்ளிக்' என்ற நூலில் சொன்ன சில கருத்துகளை மாற்றி எழுதி அமைத்தார்.

பிரிவு 2: பிளேட்டோவின் சிந்தனையில் காணப்படும் சில இயல்புகள்

பிளேட்டோவின் சிந்தனைக்கு ஆதாரமாக அமைந்தவை அவருடைய ஆசிரியராகிய சாக்ரட்டீசின் கோட்பாடுகளே என்று முன்பு கூறப்பட்டது.[1] 'அறிவுடையோரே ஆளுதல் வேண்டும்,' என்ற கோட்பாடும், 'அறிவுடைமையே பண்பும் இன்பமும் ஆகும்,' என்ற கோட்பாடும் பிளேட்டோவினிடத்தில் வெகு ஆழமாகப் பதிந்திருந்தன; எனவே, அவர் 'மனித மனம் மிக உயர்வான அல்லது தலைமையான இயல்பைப் பெறக் கூடியது' என்று உறுதியாக நம்பி, மனத்தில் அறிவை வளர்த்துப் பின் மனித இயல்பைச் சீர்திருத்தம் செய்தல் வேண்டும் என்று விரும்பினார். எனவே சிறந்த அறிவு, மனித வாழ்க்கை சீர் திருத்தம் பெறுவதற்கு ஒரு வழிகாட்டியாக இருத்தல் வேண்டுமே தவிர, அஃது அதனைப் பெறுபவருடைய அதிகாரத்தையும், செல்

[1] இயல் 1, பிரிவு 2, (d)

வத்தையும் பெருக்கிக்கொள்ளுவதற்கு ஒரு கருவியாக இருக்க லாகாது என்று அவர் கருதினர். எனவே அவருடைய சிந்தனை கடந்தகாலக் கிரேக்க வரலாற்றில் காணப்பட்ட அரசியல் நிகழ்ச்சிகளையும் நிலைகளையும் ஆய்வுசெய்து காரணங்களை விளக்கிக் கூறும் போக்கில் சென்றது; எதிர்காலத்தில் அமையப் போகும் நிகழ்ச்சிகளைப்பற்றி அவருடைய சிந்தனை ஊகம் செய் வதாக அமையவில்லை.

பிளேட்டோவின் சிந்தனையில் அரசியலைப் பற்றிய கருத் துகள் மட்டுமே காணப்படுகின்றன என்று கூறமுடியாது; அவருடைய சிந்தனையின் போக்கு மனித ஒழுக்க இயலையும் (Ethics), புலன்கடந்த நுண்ணறிவு இயலையும் (Metaphysics) நிறுவுவதையே நோக்கமாகக் கொண்டது. இந்த நோக்கத் துக்குத் தடையாக இருக்கும் சிக்கல்களை அவர் ஆராயும்போது தான் அரசியலைப் பற்றி ஆய்வுசெய்து சில கோட்பாடுகளை வகுக்கிருர். இத்தகைய அவருடைய சிந்தனையின் இயல்பை, அவருடைய முதலாவது நூலாகிய 'ரிபப்ளிக்' என்ற நூலின் கடைசிப்பிரிவு காட்டுகிறது.[1] அறிவுக் கோட்பாட்டைத்தத்துவக் கலை ஆகவும் (Metaphysics or Philosophy), ஒழுக்கக் கோட்பாட்டை ஒழுக்க இயலாகவும் பிளேட்டோ வகுத்தார். ஒரு பொருளினுடைய அல்லது அமைப்பினுடைய இலக்கணம் வகுத்தல் என்பது, அப்பொருளை அல்லது அமைப்பை (phenomenon), நாம் கண் முதலிய பொறிகள்வாயிலாகக் கண்ட அளவிலே, அதனிடத்தே நிலையில்லாமல், (transient) தற்செயலாகக் காணப்படுகிற இயல்புகளை எடுத்துக்கூறுவது அன்று; இவற்றை விடுத்து, அப் பொருளினுடைய நிலையான, முக்கியமான (essential quality) இயல்பைக் குறிப்பிடுவதுதான் சரியான இலக்கணம் வகுத்தல் ஆகும். எனவே உண்மையான அறிவு என்பது (knowledge), ஏதேனும் ஒன்றைப்பற்றிய, பார்த்த மாத்திரத்தில் தோன்றும் பொதுப்படையான கருத்தாக இல்லாமல், அதனுடைய நிலையான இயல்பை ஆய்வதனுல் தோன்றும் அறிவு ஆகும். இதுவே தத்துவம் அல்லது மெய்யறிவு (philosophy) ஆகும். என்வே ஒரு குறிப்பிட்ட அரசாங்கக் கோட்பாட்டை ஆய்வது அரசியல் ஆகாது; பொதுவாக அரசாங்கக் கோட்பாடுகளின் சிறந்த இயல்புகளை அறிந்துகொள்ளுவதே அரசியலைப்பற்றிய அறிவு ஆகும்.[2] பண்பு என்பதைப்பற்றிய முடிவான கருத்தை அறிவதே உண்மையான அறிவு ஆகும். 'முழுமையான, சரி

[1] விவரங்களை, இதே இயலில் பிரிவு 3, நூல் Xஇல் காண்க.

[2] இந்தக் கருத்தை ஆசிரியர் W. A. டன்னிங்க் தமது History of Political Theories என்ற நூலில் ஓர் எடுத்துக் காட்டின் மூலம் விளக்குகிருர்.

யான, உண்மை அறிவைப் பெற்றுக்கொள்வதே பண்புடைமை' (Virtue is knowledge) என்ற சாக்ரட்டீசின் கருத்தே பிளேட்டோவின் சிந்தனையின் மையக் கருத்து ஆகும்.

> 'ஆளுதல் அல்லது அரசாங்கம் நடத்துவது என்பது பிழையற உணர்ந்த அறிவுடைமை ஒன்றையே சார்ந்து இருக்கும் தொழில் ஆகும்; ஒவ்வொருவரும் தத்தம் தேவைகளை மற்றவர்களுடைய ஆற்றல்களின் மூலமாக ஒருவருக்கொருவர் நிறைவு செய்துகொள்ளுதலே சமுதாயம் ஆகும். இவை இரண்டும் பிளேட்டோவின் மையக் கருத்துகள் ஆகும்.' (G.H. சபைன்)[1]

இத்தகைய முழுமையான அறிவைப் பெறுவது பெரும்பாலானவருக்கு இயலாதாகையால், மனிதருடைய இயல்பான மூவகை ஆற்றல்களை (அறிவாற்றல், உணர்ச்சி ஆற்றல், புலன் ஆற்றல்)[2] ஆராய்ந்து, மூவகை ஆற்றல்களுமடங்கிய உளவியலை-(Psychology) ஆதாரமாக வைத்து, பிளேட்டோ சில செயற் பண்புகள் அடங்கிய முறை ஒன்றை (practical ethic) வகுத்தார். 'நீதி' (Justice) என்பது இம்மூவகை இயல்புகளையும் உடைய மனித சமுதாயத்தில் யாவரிடையேயும் நல்ல இணக்கத்தையும் (Harmony), நடத்தையில் பொதுவான ஒரு நல்ல ஒழுங்கையும் (Discipline) ஏற்படுத்தும் பண்பு ஆகும். நன்மை (good) என்பதைப்பற்றிய உண்மையான அல்லது சரியான கருத்தே, நிலையான மாற்றப்பட இயலாத ஒழுக்க விதிகளை ஏற்படுத்துகிறது. சரியானது என்பதும், நன்மையானது என்பதும் ஒன்றே. இத்தகைய பிளேட்டோவின் சிந்தனை அரசியலைமட்டும் குறிப்பிடுவதாக அமையாமல், மெய்யறிவு, ஒழுக்க இயல், உளவியல் ஆகியவற்றையும் சார்ந்து இருக்கிறது.

பிளேட்டோவின் சிந்தனை அவருடைய வயது முதிர்ந்த பருவத்தில் சில மாறுதல்களைக் காட்டுகிறது. அவர் 'ரிபப்ளிக்' என்ற தமது முதலாவது நூலை எழுதும்போதுதான் அவருடைய இளமைக்காலம் நிறைவுபெற்றிருந்தது. எனவே அப்போது அவருடைய சிந்தனை, வாழ்க்கை நடைமுறையில் தோயாத இலட்சியங்களைமட்டும் எடுத்துக்காட்டிற்று. லாஸ் என்ற

1 G. H. Sabine—A History of Political Theory—பக்கம் 42.

2 அறிவாற்றல் (intellectual power) மனிதனுக்கே உரிய சிறந்த இயல்பு; அதற்கு அடுத்த கீழ்நிலையில், அதற்கு அடங்கிய அல்லது கட்டுப்பட்ட இயல்பே வீரமான உணர்ச்சி (courage) ஆகும்; அறிவாற்றலுக்குக் கட்டுப்பட்ட இரண்டாவது ஆற்றல் பசி என்ற புலன் ஆற்றல் ஆகும். இது நிறைவு அல்லது கட்டுப்பாடு பெறுதற்குரிய புலனாற்றல் (Temperance) ஆகும். (Republic)

நூலை அவர் எழுதியபோது, வாழ்க்கை அநுபவமும், வயது முதிர்ச்சியும் அவர் பெற்றிருந்தாராகையால், அவர் தம் இலட்சியங்களை மாற்ருமல், அவற்றை அடையும் கோட்பாடுகளை வாழ்க்கை நடைமுறைக்கு ஏற்ப மாற்றி அமைத்தார்.

பிளேட்டோ மேற்கூறிய மூன்று நூல்களைத் தவிர, யூதிப்ரோ (Euthyphro), அப்பாலஜியா (Apologia), கிரிட்டோ (Crito), பீடோ (Phaedo), ஆகிய சிறுநூல்களையும் எழுதியுள்ளார். இவற்றில் அவர் தம் ஆசிரியராகிய சாக்ரட்டீசின்மீது நடத்தப்பட்ட நீதி விசாரணையையும், அவருடைய இறப்பையும் விளக்கமாகக் கூறுகிருர்.[1]

பிரிவு 3 : 'ரிபப்ளிக்' (Republic) அல்லது 'இலட்சிய அரசு' என்ற நூலில் கூறப்படும் கோட்பாடுகள்

பிளேட்டோவின் முதல் நூலாகிய 'ரிபப்ளிக்' என்பதில், 'நீதி (Justice) என்ருல் என்ன ?' என்ற வினுவிற்கு விடைகாணும் வகையில் சாக்ரட்டீசுக்கும், அவருடைய மாணவர்களாகிய கிளாக்கன், அடிமான்ட்டஸ், போலிமார்க்கஸ், செபாலஸ், திரேசிமாக்கஸ், கிளேட்டோபன் ஆகியோருக்கும் இடையே நடைபெற்ற ஒரு கற்பனையான உரையாடலின் மூலமாக ஆராய்ச்சி நடைபெறுகிறது. 'நீதி என்ருலென்ன' என்ற கருத்தை விளக்கும்போதுதான் சிறந்த இலட்சிய அரசின் இயல்புகள் விளக்கப்படுகின்றன. இவ்வாறு நீதி என்பதனைப் பிளேட்டோ ஆராயும்போது, நீதி காணப்படுவது இலட்சிய அரசில்தான் என்று வலியுறுத்துகிருர்.

இந்நூல் 10 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது ; ஒவ்வொரு பிரிவிலும் பிளேட்டோ கூறும் கோட்பாடுகளைச் சுருங்கக் கூறுவோம்.[1]

(a) நூல் I: அரசியற் கலை தோன்றுவதற்குக் காரணம் நீதியைக் காண்பதே அரசாங்கத்தின் நோக்கம்

கிரீசிலுள்ள பல அரசுகளில் (அவர் காலத்தில்) நடைமுறையில் இருக்கும் அரசாங்க அமைப்புகளெல்லாம் குறை

1 பிளேட்டோவின் மூலநூலைக் கிரேக்க மொழியிலிருந்து ஆங்கிலத்துக்கு B. ஜோவட் என்ற ஆசிரியர் மொழிபெயர்த்துள்ளார். இங்குக் கொடுக்கப்படும் கோட்பாடுகளும், மொழிபெயர்ப்புகளும், மேற்படி ஆசிரியருடைய நூலிலிருந்தே எடுக்கப்பட்டுள்ளன.

பாடுகளை உடையவை ; அவைகள் குடிமக்களுக்குத் தீமை விளைவிக்கின்றன. ஏதேனும் ஒரு நல்லூழ் காரணமாகவோ, அற்புதம் காரணமாகவோதான் அவைகள் சீர்திருத்தம் பெறும். தனி ஆளுக்கும் சமுதாயத்துக்கும் நன்மை அளிக்கத்தக்க உண்மையான மெய்யறிவைப்பெற்ற ஆட்சியாளர் இருந்தால்தான் மனித இனம் உய்வுபெறும்.

உண்மை பேசுதலும், ஒவ்வொருவரும் தாம் செலுத்தவேண்டிய கடமைகளைச் செலுத்துவதும் மட்டும் நீதி ஆகா. அதிகாரம் உடையவருடைய நலன்கள் மட்டும் நீதி ஆகமாட்டா. நண்பர்களுக்கு நன்மைசெய்தலும், பகைவர்களுக்குத் தீமைசெய்தலும் நீதி ஆகா.

ஆட்சியாளருடைய (அல்லது அரசாங்கத்தின்) நோக்கம் குடிமக்களெல்லாருக்கும் நன்மையும், இன்பமும் கிடைக்குமாறு செய்வதுதான்.

> 'ஓர் ஆட்சியாளருடைய ஆட்சிச் செயலெல்லாம், அது ஒரு நாட்டினளவில் செய்யப்பட்டாலும் சரி, அல்லது சொந்த வாழ்வில் செய்யப்பட்டாலும் சரி, தம்முடைய குடிகளுடைய, அல்லது தம்மைச் சார்ந்து இருப்பவர்களுடைய நலனையே நிறைவேற்றக் கூடிய செயல்களாக இருக்க முடியும்.' **(Book I, 345)**

> 'திரேசிமாக்கஸ், எந்தத் தொழிலாளியும், அல்லது அரசாங்கமும் தன்னுடைய நலனுக்காகப் பாடுபடவில்லை என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. நான் முன்பு கூறி வந்துள்ளதைப் போல எந்தத் தொழிலாளியும் அல்லது அரசாங்கமும், தன்னைச் சார்ந்துள்ள, தன்னிலும் வலிமை குறைந்த மக்களுடைய நலன்களிலேயே கவனம் செலுத்திவருகின்றனரென்பது தெளிவு. எனவே எவரும் அதிகாரம் செலுத்த விருப்பம் உடையவரல்லர் ; ஏனென்றால் தீமையை நீக்கும் சீர்திருத்தம் எதுவும் தமக்கு நலன்விளைவிக்காதபோது அத்தகைய சீர்திருத்தம் செய்வதற்கு எந்த ஆட்சியாளரும் விரும்பமாட்டார்.' **(Book I, 346)**

> 'உண்மையான ஆட்சியாளரென்பவரும், தம் குடிகளுடைய நலனையன்றி, தமது நலனைமட்டும் கருதிச் செயல்படும் இயல்பினராக இருக்கமாட்டார்.' (Book I, 347).

நூல் Iஇல் நீதி என்றுலென்ன என்று ஆராயப்பட்டாலும், அதற்கு விடை நூல் IVஇல் கூறப்படுகிறது. நீதியை ஆதாரமாகக் கொண்டுதான் அரசாங்கமும், சமுதாயமும் இருக்க முடியும்; எனவே சமுதாய நலனுக்குகந்த நீதியை ஆதாரமாக உடைய அரசியல் இன்றியமையாததாகிறது. எனவே அரசியலுக்கான காரணம் நீதியை ஆய்வுசெய்து காணுவதில் இருக்கிறது.

(b) நூல் II: அரசின் தோற்றத்திற்குக் காரணம்

நீதி என்பது ஒரு தனிமனிதருக்குரிய பண்பாகவும், ஓர் அரசுக்குரிய பண்பாகவும் இருக்கிறது. தனிமனிதரைவிட அரசு பெரியதாகையால், அதனுடைய தோற்றத்தையும், வளர்ச்சியையும் நாம் ஆராய்ந்தால், நீதியும், அநீதியும் அதில் எவ்வாறு இருக்கின்றன என்று தெரியவரும்.

மனிதருடைய தேவைகள் பலவகையானவை; இவற்றுள் இன்றியமையாத தேவைகள் உண்ண உணவு, உறைவதற்கு வீடு, உடுத்துவதற்கு ஆடை முதலியவை ஆகும். நாட்டின் நில எல்லைகள் பாதுகாப்பாக இருக்கும்பொருட்டுப் போர்ப்பயிற்சி மிக்க காவலர்களும் தேவைப்படுகின்றனர். இவ்வாறு மக்களுடைய இன்றியமையாத தேவைகளை நிறைவுசெய்யும் பல தொழிலாளரும் வாழும் இலட்சிய அரசில்தான் நீதியும், மகிழ்ச்சியும் இருக்கும். தேவைகளுக்குக் கூடுதலான ஆடம்பர வாழ்வை மேற்கொள்ளும் அரசிலே (luxurious state), ஆடம்பரப் பொருள்களும், அவற்றைச் செய்யும் தொழிலாளரும் – நுண்கலைவாணர்கள், வேடர்கள், நடிகர், கவிஞர், இசைவாணர்கள், நாட்டியக்காரர், ஒப்பந்தக் காரர், பணியாட்கள், சிறு ஆசிரியர்கள், குழந்தைகளைப் பாலூட்டி வளர்க்கும் செவிலியர், பெண்களுக்குத் தாதியர், நாவிதர், இனிப்புப் பண்டம் செய்பவர், பன்றி மேய்ப்பவர் என இத்தகையோர்— பெருகிவிடுவர். இலட்சிய அரசில் இன்றியமையாத பொருள்களைச் செய்யும் தொழிலாளரைத் தவிர், மேற்படி தொழிலாளருக்கு இடம் இல்லை. ஆடம்பர அரசு பொருள்சேர்க்கவும், தன் எல்லைகளை அயலரசுகளின் நில எல்லைகளை மதிக்காத அளவுக்கு விரிவாக்கவும் முற்படும்; அப்போது போர்கள் எழும்.

ஒரு தொழிலைமட்டிலுமே இளைஞருக்குக் கற்றுக் கொடுக்க வேண்டுமே தவிர, பல தொழிலையும் அவர் பயிலுதல்கூடாது.

நாட்டைக் காப்பவருக்கு மெய்யறிவும், வீர உணர்வும், வலிமையும் ஏற்படத்தக்க வகையில் கல்விப் பயிற்சிமுறை இருத்தல் வேண்டும்.

இலட்சிய அரசிலுள்ள குடிமக்களிடம் நற்பண்புகள் வளரத் தக்க வகையில் அவர்களுக்கு அளிக்கப்படும் கல்விப் பயிற்சிமுறை அமைந்திருக்கும். முதலில் அவர்களுக்கு இசையும், உடற் பயிற்சியும், அளிக்கப்படும். தீய செயல்களைச் செய்யும் கடவுளர் களைப்- புகழ்ந்துபேசும் கதைகள், காப்பியங்கள், கவிதைகள் முதலியவற்றை, எதனையும் பற்றிக் கொள்ளக்கூடிய இளகியமனப் பக்குவநிலை உடைய இளைஞர்களுக்குக் கற்றுக் கொடுத்தல் தவறு. 'கடவுள் நன்மைகளெல்லாவற்றுக்குமே தோற்றுவாய்; தீமைகளை உருவாக்குபவர் அல்லர்' என்ற உண்மையான கருத்தைக் கூறும் பகுதிகளே ஹோமர், ஹீசியட் போன்ற புலவர்களுடைய படைப்பு களிலிருந்து கற்றுக் கொடுக்கப்படுதல் வேண்டும்; மற்றத் தீய பண்புகளை அழகாகக் கூறும் பொய்யுரைகளும், உவமைப் பகுதி களும் நீக்கப்படுதல் வேண்டும்.

நூல் III: இலட்சிய அரசில் ஆளுவதற்குரிய இளைஞர்களுக்கான கல்வித் திட்டம்

இலட்சிய அரசில் ஆளும் பொறுப்பை ஏற்றுக் கொண்டுள்ள வர்கள் **காவலர்கள் (guardians)** எனப்படுவர். நாட்டை அதனுடைய வெளிப்புறப் பகைவர்களிடமிருந்து காப்பாற்றி உள்நாட்டில் குடிகளிடையே அமைதியையும் நல்லுறவையும் ஏற்படுத்தும் பொறுப்புகளைச் செய்பவரே காவலர் ஆவர். நாட்டிலுள்ள மூவகை வகுப்பாருள் (தொழிலாளர், போர்வீரர், காவலர்) காவலர் வகுப் பினரே உயர்நிலையிலுள்ளவர்.

காவலராதற்குரிய பயிற்சிபெறும்பொருட்டுக், குடிமக்களிட மிருந்து சில தகுதிகளை உடையவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். அத்தகுதிகள் பின்வருமாறு: நாட்டிற்கு நலன் விளைவிக்கத் தக்க வைகளையே நாட்டின் நலனுக்காகவே செய்யக் கூடிய மன வளர்ச்சியும், தீயவைகளை ஒதுக்கும் இயல்பும், இன்பநாட்டத்தின் காரணமாகவோ, அச்சத்தின் காரணமாகவோ அவர்கள் தமது நல்ல நோக்கத்தினின்றும் வழுவிவிடாத மன உறுதியும், உடைய வர்களாக இருத்தல் வேண்டும். இவ்வாறு மன உறுதியுடன் இருக்கின்றனரா என்று அவர்களைப் பல வசிய முறைகளின்மூலம் (enchantments) தேர்ந்துகொள்ளுதல் வேண்டும்.

இத்தகுதிகளை உடையவர்கள் காவலராகவும், போர்வீரர் களாகவும் பயிற்சிபெறுவதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டபின், அவர் களுக்கு நல்ல பண்புகளும், அறிவும் கிடைக்கத்தக்க ஏற்ற,

கல்விப்பயிற்சி அளிக்கப்படுதல் வேண்டும். காவலரும் போர்வீரரும் வாழ்வில் எந்தப் பேர் இடர்ப்பாட்டையும் மன உறுதியுடன் தாங்கிக் கொள்ளக் கூடியவராக இருத்தல் வேண்டுமாதலால், அச்சம், கோழைத்தனம் முதலிய இயல்புகளைத் தோற்றுவிக்கக் கூடிய கடவுளர்களுடைய துன்பங்கள், அழுகை முதலியவைகளைக் கற்க லாகாது ; பெருஞ் சிரிப்பை அடக்கி, புலன் உணர்வுகளைக் கட்டுப்படுத்தி, எந்நிலையிலும் உண்மையை உணரவும் அதை ஏற்றுக்கொண்டு அதற்கு மதிப்புக் கொடுக்கவும் கூடிய பயிற்சி யைப் பெறுதல் வேண்டும். உண்மைபோற்றும் இயல்பும் எதிலும் ஒரு நிறைவு பெற்ற கட்டுப்பாடான இயல்பும் (temperate) உடைய வராக இளைஞர்கள் இருப்பதற்குப் பயிற்சிபெறுதல் வேண்டும். பொது நன்மையின்பொருட்டு அவர்கள் நாட்டின் பகைவரிடத் திலிருந்தும், தம் நாட்டு மக்களிடமிருந்தும் உண்மையை வெளிப் படுத்தாமல் மறைப்பதற்குப் பயிலுதல் வேண்டும்.[1] தனிமனிதர் தம்முள் ஒருவருக்கொருவர் செயலாற்றும்போது பொய் யுரைத்தல் பெருங்குற்றம் ஆகும். கல்விபெறும் மாணவர் தம்ஆசிரியரிடம் தனது அறியாமையை ஒளிக்காமல் எடுத்துக்கூறி அறிவுபெறுதலை விடுத்துப் பொய்யுரைத்தலும்; சிகிச்சை பெறு தற்கு மருத்துவரை அணுகும் நோயாளி மருத்துவரிடம் தமது உடல் நோயினைக் கூறுது பொய்யுரைப்பதும் குற்றங்களேயாம். பயிற்சிபெறும் காவலரும் வீரரும் பணம்பெறும் விருப்பம் இன்றி, மனத்திட்பம், கட்டுப்பாடு, புனிதமானவற்றை மதித்தல், சுதந்திரம் முதலிய பண்புகளை உடையவராகக் காப்பியங்களிற் கூறப்படும் பாத்திரங்களைக் (characters) கற்று அவர்களைப் போல வாழ்வதற்குப் பயிலுதல் வேண்டும் ; வலியற்ற, அறியாமையான, தீய இயல்பு களும், பெண்ணியல்புகளும் பொருந்திய காப்பியப் பாத்திரங்களைப் பார்த்து இளைஞர் பயலுதல் கூடாது. நல்லவர்களையே பார்த்துப் பயிலுதல் வேண்டும் ; நற்பண்பினைப் பார்த்துப் பயிலுதல் வேண்டும். இவற்றைக் கூறும் இலக்கியங்கள் எளிய நடையில் இருத்தல் வேண்டும். அற்பத்தனம், மதிக்காத இயல்பு, கொடுஞ்சினம் முதலிய தீய இயல்புகளைப் பார்த்துப் பயிலுதல் (imitate) கூடாது. சிறுமை யையும், கடுமையையும் நீக்கி, அருளும், அழகும் உடையவராகக் குடிமக்கள் ஆகவேண்டுமாகையால், இவற்றை ஊட்டும் இலக்கி யங்களை எழுதுமாறு இலட்சிய அரசில் கவிஞர்கள் (poets) தூண்டப் படுதல் வேண்டும். அதன் கலைஞர்களெல்லாருமே அருளும் அழகும் பெருகத்தக்க ஓவியம், சிற்பம், இசை, இலக்கியங்களையே ஆக்க வேண்டும். காவலருக்கு உடற்பயிற்சியும், இசைப் பயிற்சியும்

[1] இக்கருத்தை ஆதாரமாக வைத்தே மக்கியவெல்லி பிற்காலத்தில் தமது 'பிரின்ஸ்' (Prince) என்ற நூலில் வெற்றியான ஆட்சியாளருக்குரிய பண்புகளைக் கூறினர்.

அளிக்கப்படுதல் வேண்டும். இசையின் நோக்கமும் அழகுணர்வையும் பண்பையும் வளர்ப்பதாக இருத்தல் வேண்டும். புலன்வழி இன்ப உணர்வையும், மயக்கம் அல்லது போதைதரும் பழக்கமும் பயிலுதல் கூடாது.

இலட்சிய அரசில் ஒவ்வொருவரும் தத்தம் தொழிலைச் செய்தல் வேண்டும். காவலர் நீதிபதிகளாக அலுவல் செய்பவராதலால் அவர்கள் மனித இயல்பை அறிந்தவராகவும், நற்பண்பு எது என்றும், தீயபண்பு எது என்றும் அறிந்தவராகவும் இருத்தல் வேண்டும். தங்களுடைய ஆன்மா உடல் ஆகிய இரண்டையும் பேணுபவராக அவர்கள் இருத்தல் வேண்டும்.

ஆளும் காவலரும், போர்வீரரும், தமது இன்றியமையாத தேவைக்கும் கூடுதலாகத் தமக்கெனச் சொந்த உடைமை எதுவும் வைத்துக்கொள்ளுதல் கூடாது; தமக்கெனச் சொந்த வீடு வைத்துக் கொள்ளுதல் கூடாது; தமது தொழிலுக்காக ஒரு குறிப்பிட்ட ஊதியத்தைக் குடிகளிடமிருந்து பெறுதற்கு அவர்கள் இசைய வேண்டும்; அவ்வூதியமும் அவர்களுடைய ஓராண்டு வாழ்க்கைக்குப் போதிய பொருளைப் பெறுமளவுக்குத்தான் இருத்தல் வேண்டும்; ஆண்டு தோறும் இவ்வாறு பெறுதல் வேண்டும்.

நூல் IV: நீதி சமுதாய இணக்கத்தில் காணப்படுகிறது

மக்களிடத்தில் சாதாரணமாக நால்வகைப் பண்புகள் காணப் படுகின்றன. அவையாவன :—

(1) அறிவைப் பெறும்பண்பு (virtue of knowledge) ;

(2) உண்ணல் முதலிய தொழில்களால் பசி முதலிய தேவைகள் நிறைவுசெய்யப்பட்டுக் கட்டுப்பாடு பெறும்பண்பு (virtue of temperance) ;

(3) வீர அல்லது ஊக்கப் பண்பு (virtue of courage) ;

(4) நீதியான பண்பு (virtue of justice).

இந்த நான்கு பண்புகளில் எது ஒருவரிடத்து மிகுதியாகக் காணப்படுகிறதோ, அதற்கேற்ற தொழிலை அவர் செய்வதுதான் நீதி ஆகும். இந்நான்கு பண்புகளுக்கும் உரிய தொழில்களை (மெய்யறிவாளர் அல்லது தத்துவ ஆசிரியர், பயிரிடுதல், போர்வீரர், நீதிபதி ஆகியோருடைய தொழில்களை) ஒருவரே செய்தாலும், ஒரு பண்பிற்குரிய தொழிலைச் செய்பவர் மற்றொரு பண்பிற்குரிய

தொழிலைச் செய்தாலும் நீதி அழிகிறது. ஆகையால் இலட்சிய அரசிலே வணிகர் அல்லது வேளாண்மை செய்பவர், போர்வீரர், நீதிபதிகள் அல்லது காவலர் (judges or guardians) ஆகியோர் தத்தமக்குரிய பொறுப்புகளை நிறைவேற்றும்போது, அவர்களிடையே நல்லுறவு அல்லது நல்லிணக்கம் (harmony) ஏற்பட்டு நீதி தோன்றுகிறது.

> 'தோல் வேலையோ, வணிகமோ செய்வதற்கு இயற்கையில் தகுதி பெற்றிருக்கும் ஒருவர், தமக்கு இருக்கக் கூடிய செல்வ வலியினாலோ, தம்மைச் சார்ந்தவர்களுடைய ஆதரவினாலோ போர் வீரருக்குரிய தொழிலைச் செய்யவும், போர்வீரர் வகுப்பில் தாம் சேரவும் வலிய முயற்சி செய்வாரேயானால், அல்லது போர் வீரர்கள், சட்டம் இயற்றுதற்கும், காவலர் அலுவலைச் செய்வதற்கும் தகுதி பெறாமலிருக்கும் போது, இத்தகையோருடைய வகுப்பில் சேருவாரானால், இத்தகைய மாறுபட்டநிலை, அரசுக்கு அழிவைத் தரும்.'[1]

ஒவ்வொரு தனி ஆளிடமும் அறிவுப்பண்பும், சில உணர்ச்சிகளை (பசி முதலியன) நிறைவுசெய்து கட்டுப்படுத்தும் பண்பும் இருக்கின்றன. சிலரிடம் வீரப் பண்பு மிகுதியாகவும், சிலரிடம் அறிவுப் பண்பு மிகுதியாகவும் காணப்படுகின்றன. நிறைவு பெறும் உணர்ச்சிப் பண்பு யாவரிடத்தும் காணப்படுதலால், இதுவே வலியோர், மெலியோர், இடைத்தர நிலையினர் ஆகியோரிடையே நல்லுறவை ஏற்படுத்துகிறது.

நாடு முழுவதும் இன்பமுற வேண்டுமாதலால், காவலர்களும், அவர்களுக்குத் துணையாக இருப்பவர்களும் தத்தமக்குரிய அலுவல்களைச் செய்தல் வேண்டும். இவ்வாறு இருந்தால் ஒரு சீரிய ஒழுங்கிலே அரசுமுறை வளரும். ஒவ்வொரு வகுப்பினரும் இயற்கை தங்களுக்கு விதித்துள்ள இன்ப வாழ்வின் பங்கைப் பெறுவர்.

> 'அளவு கடந்த செல்வநிலையும், வறுமையும் மனிதப் பண்பை அழித்துவிடுகின்றன. செல்வம் ஆடம்பரப் போக்கையும், சோம்பலையும் வளர்க்கிறது ; வறுமையோ சிறுமையையும், கயமையையும் வளர்க்கிறது; இரண்டும் நிறைவற்ற மனப்பான்மையை வளர்க்கின்றன.'[2]

[1] The Republic, Book IV.

[2] " "

ஒவ்வொரு குடி ஆளும் எத்தொழிலைச் செய்தற்குத் தகுதி உடையவரோ, அத்தொழில் தரத்தில் அவர் இருக்குமாறு செய்தல் வேண்டும்.

நூல் V : மெய்யறிவாளருடைய ஆட்சியே இலட்சிய அரசில் இருக்கும் – இலட்சிய அரசில் காவலர், போர்வீரர் ஆகியோர் வகுப்பில் சொத்து, பெண்கள், குழந்தைகள் முதலியவற்றில் பொதுவுடைமை

இலட்சிய அரசில் மக்களுடைய வாழ்வுக்கான உணவு, உடை, வீடு முதலிய தேவைகளை நிறைவுசெய்கின்ற தொழிலாளர் வகுப்பு ஒன்று (workers), அத்தகைய தொழிலாளர்களையும், நாட்டின் எல்லைகளையும் பாதுகாக்கும் போர்வீரர் வகுப்பு ஒன்று (class of warriors), சமுதாயத்தின் பொதுநலனை ஒழுங்குபடுத்துவதற்கு ஆலோசகர்களும், நீதிபதிகளும் அடங்கிய காவலர் வகுப்பு ஒன்று (class of guardians) ஆகிய மூன்று வகுப்புகள் இருக்கின்றன. காவலர் ஆண்டிலும், அறிவிலும் முதிர்ச்சி பெற்றவராக இருப்பர். இவர்கள் போர்வீரர் வகுப்பிலிருந்தே தேர்ந்தெடுக்கப்படுவர். காவலருக்குரிய தகுதியை ஒருவர் உடையவரா என்று தீர்மானிப்பதற்கு ஆட்சியிலிருக்கும் காவலரே தகுதி உடையவர். நாட்டின் விவகாரங்களை ஒழுங்குசெய்வதற்கு வேண்டிய **சமயோசித அதிகாரம் (Direction)** வரம்பற்ற அளவில் காவலரிடமே இருக்கும்.

மெய்யறிவை அல்லது ஞானத்தைப் பெற்றவர்களே காவலர்களாக இருக்க இயலும். இவ்வாறு ஞானம் பெற்றவர்கள் எண்ணிக்கையில் குறைவாகவே இருப்பர். எனவே **இலட்சிய அரசிலுள்ள அரசாங்க அமைப்பு, மெய்யறிவைப் பெற்ற உயர்குடியினர் ஆட்சி (aristocracy) ஆகும்.**[1]

> ‘மெய்யறிவாளர்களே (அல்லது தத்துவ ஞானிகளே) ஆளுவோராக அல்லது அரசர்களாக ஆகாவிட்டால், அல்லது இப்போது அரசர்களாகவும், ஆளுபவராகவும் இருப்பவர்கள் உண்மையான ஞானம் அல்லது அறிவு நிரம்பப்

[1] பிறப்பினால் உயர்குடியினராக இருப்பவர் (பிரபுக்கள்) நடத்தும் ஆட்சி உயர்குடிப்பிறந்தோர் ஆட்சி (aristocracy) எனப்படும். பிளேட்டோ கூறும் உயர்குடியினர் ஆட்சி என்பதில் ஆளுவோராக இருப்பவர் மெய்யறிவினால் உயர்குடியினராக மதிக்கப்படுபவரேயன்றி, பிறப்பினால் உயர்ந்த குடியினரல்லர்; பிளேட்டோ இத்தகைய உயர்குடியினர் ஆளும் ஆட்சிவகையையே சிறந்ததாகக் கருதுகிறார். அறிவு வளர்ச்சி பெறாத ஒற்றை மனிதராட்சியையோ, அறிவு வளர்ச்சி பெறாத மக்கள் நடத்தும் குடியாட்சியையோ (Democracy) பிளேட்டோ ஆதரிக்கவில்லை. அவருக்கு இதன் மீது இருந்த வெறுப்புக்குக் காரணம், அவருடைய ஆசிரியராகிய சாக்ரட்டீசை அதீனியக் குடியாட்சி அரசாங்கம் கொன்றதே ஆகும்.

பெற்றவர்களாக இல்லாவிட்டால், அதாவது அரசியல் அதிகாரமும், மெய்யறிவும் ஒருவரிடத்தில் இணையாவிட்டால், சாதாரண மக்களுள் இந்த இரண்டில் ஒன்றைவிட்டு, மற்றொன்றை மட்டிலுமே உடையவர்கள் அரசியலதிகாரத்திலிருந்து ஒதுக்கப்படாத வரையிலே — அரசுகளுக்கு வரக்கூடிய துன்பங்களுக்கு முடிவே இல்லை என்றும், மனித இனத்தின் துன்பங்களுக்கே ஒருமுடிவு வராது என்றும் நான் உறுதியாக நம்புகிறேன்; இவ்வாறான நல்ல இணைப்பு (அரசியலதிகாரத்துக்கும், மெய்யறிவுக்கும் இடையே) தோன்றுதவரையில், நாம் இதுவரை கோட்பாடாக வகுத்த இலட்சிய நாடு அல்லது அரசு நடைமுறையில் தோன்றாது.'

(சாக்ரட்டீஸ் கிளாக்கனுக்கு உரைத்தது. The Republic, Book V - 473.)

இலட்சிய அரசில் சமுதாயத்தில் உள்ள எல்லாரும் வாழ்வின் இன்ப, துன்பங்களைப் பகிர்ந்துகொள்ளுவர்; அவ்வாறு இருந்தால் தான் அதில் ஒற்றுமையும் நல்லிணக்கமும் நீடித்து இருக்கும். யாவரும் ஒரு குடும்பமாக இருப்பர்; இவ்வாறு ஒரே குடும்பமாக இருந்து, இன்ப துன்பங்களைப் பகிர்ந்துகொண்டு, ஒற்றுமையோடு இருத்தல் வேண்டுமானால், இலட்சிய அரசில் காவலர் வகுப்பையும், போர்வீரர் வகுப்பையும் பொறுத்தவரையில், அவ்வகுப்பினர் எதனையும்-உடைமைகள், பெண்கள், குழந்தைகள் ஆகியவர்களை-தம்முடையதென உரிமையோடு வைத்துக்கொள்ளாமல் உடைமைகள், பெண்கள், குழந்தைகள் முதலியவற்றைச் சமுதாயம் முழுவதற்கும் பொதுவுடைமையாகவே ஆக்குதல் வேண்டும்.

பிளேட்டோ கூறும் பொதுவுடைமைக் கருத்து

காவலர், போர்வீரர் பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்படும் ஆண்களோடு வாழ்வதற்கு, மேற்படி பயிற்சிகளைப்பெறத் தகுதி அல்லது இயல்பு உடைய பெண்களை இலட்சிய அரசாங்கம் ஏற்பாடு செய்யும். தனியார் குடும்ப உறவு முறைகளும், சொத்து உரிமைகளும் சமுதாயத்தில் பிளவுகள் தோன்றுவதற்குக் காரணமாக இருப்பதால், ஆளும் பொறுப்பில் உள்ள இவ்விரண்டு வகுப்பாரைப் பொறுத்தவரையில் சொத்தும், குடும்பவாழ்க்கையும் தனியார் உரிமைகளாகக் கருதப்படாமல் பொதுவுடைமைகளாக அமைந்திருக்கும். குழந்தைகள் பெற்றோரையோ, பெற்றோர் தம் குழந்தைகளையோ இனங்கண்டு கொள்ளாதவாறு குழந்தைகளின் வளர்ப்பு அரசாங்கத்தின் கட்டுப்

பாட்டிலும், ஆண், பெண் உறவு அவருடைய தனிப்பட்ட உணர்வின் காரணமாக ஏற்படாமல், அது நீதிசெலுத்தும் காவலருடைய முழுமையான கட்டுப்பாட்டு அதிகாரத்திலும் அமைக்கப்படும். எல்லா நற்பண்புகளையும் உடைய குழந்தைகளைப் பெறுதற்குத் தகுதி உள்ள ஆண்களையும் பெண்களையும் பெற்ருேராக அரசாங்கம் தேர்ந்தெடுக்கும். இவ்வகையாகப் பிறக்கும் குழந்தைகளுக்கு அறிவு வளர்ச்சி ஏற்படும்வகையில் கல்விப் பயிற்சியை அரசாங்கம் அளிக்கும்.[1]

மனிதனுடைய உடம்பில் ஏதேனுமோர் உறுப்புக்கு ஏற்படும் இன்ப, துன்ப உணர்வை உடம்பு முழுவதும் பெறுவதுபோல இலட்சிய அரசில் வாழும் எவரும் அடையும் இன்ப, துன்ப உணர்வுகளை அதிலுள்ளவர் அனைவரும் பெறுதல் வேண்டுமானுல், அதற்குரிய ஒற்றுமை உணர்வு மேற்படி பொதுவுடைமை அமைப்பின் மூலமே தோன்றும். அரசு (State) என்ற சமுதாய அமைப்பும் உடம்பைப் போலவே ஓர் உயிர்ப்பொருள்தான் (a living organism).

குறிப்பு :- பிளேட்டோ இவ்வாறு மனித உடம்போடு அரசை ஒப்பிட்டுக் கூறும் உவமையே பதினெட்டு, பத்தொன்பதாம் நூற்ருண்டுகளில் அரசின் உடல் ஒப்புமைக் கோட்பாட்டை (Organic Theory of the State) J. K. பிளண்ட்ச்லி, ஹெகல் என்ற ஜெர்மன் ஆசிரியர்களும், ரூஸ்ஸோ என்ற பிரஞ்சு ஆசிரியரும், ஹெர்பர்ட் ஸ்பென்சர், மக்கக்னி, T.H. கிரீன் முதலிய ஆங்கில ஆசிரியர்களும் வேறு சிலரும் வகுப்பதற்கு ஆதாரமாக அமைந்தது.

மெய்யறிவாளர்களே முழுமையான அறிவை (absolute knowledge) உடையவர்கள். மற்றவர்கள் அபிப்பிராயமே, அல்லது எண்ணமே (opinion) உடையவர்கள்.

நூல் VI : மெய்யறிவாளருடைய இயல்புகள்

மெய்யறிவாளர்கள் ஆளுவாராயின் அவர்களே எதிலும் முழு உண்மையையும், அழகையும் அறிந்து மறுமையைப்பற்றிச் சரியாக உணர்ந்து சரியான சட்டங்களை இயற்றுவர்.

> ‘எவரொருவருடைய நாட்டமெல்லாம் எந்த வடிவத்திலாயினும் அறிவைத் தேடுவதற்காக முயலுகிறதோ, அவர்

[1] இத்தகைய பொதுவுடைமைக் கருத்தைத் தமது மூன்ருவது நூலில் பிளேட்டோ முற்றிலும் மாற்றி எழுதினர்.

ஒரு போலியான அறிவாளராக இல்லாமல், உண்மையான அறிவாளராக இருப்பாரானல், அவர் தமது ஆன்ம இன்பத்தில் தோய்ந்திருப்பார்; தமது உடல் இன்பத்தை உணர மாட்டார். அவர் தாராளமான இயல்புடையவராகவும், மாறுபட்ட பண்புகள் இல்லாதவராகவும், பேராசையோ, இழிந்த தன்மையோ, தற்பெருமையோ, கோழைத்தனமோ இன்றியும், உணர்வாற்றலும் **(assimilation),** நினைவாற்றலும் உடையவராக இருத்தல் வேண்டும்.' **(Book VI).**

போலி அறிவாளரான சோபிஸ்ட்டுகள் மக்களுடைய விருப்பங்களுக்கும், சுவை உணர்வுகளுக்கும் ஏற்பக் கருத்துகளைக் கூறுவார்களே தவிர, உண்மையை ஆராய்ந்து கூறமாட்டார். முழு உண்மையை அறிந்த மெய்யறிவாளர்களோ, உலகவர் பலரும் அறிய மறுக்கின்ற ஞானத்தை ஒப்புக் கொண்டவர்களாதலினல், அவர்களை உலகத்தவர் வெறுக்கின்றனர். எந்த அரசும் சரியான உண்மை அறிவைப் (அல்லது ஞானத்தை) பெற்றுக்கொள்ளுவதற்குத் தன்னைத் தகுதி ஆக்கிக்கொள்ளவில்லை.

ஞானத்தைப் பெறும்முயற்சியில் அரசுகளெல்லாம் ஈடுபடுதல் வேண்டும். அதன்பொருட்டு இளம் வயதில் மக்களுக்கு உடல்நலம் பேணும் பயிற்சியும், அறிவு வளரும் பருவத்தில் ஆன்மாவுக்குப் பயிற்சியும் அளித்தல் வேண்டும். ஆன்மாவுக்குப் பயிற்சியாவது, முழு உண்மையே அல்லது ஞானமே, நீதியானது, அழகுள்ளது, மனநிறைவைத் தருவது என்று அறியலாம். இத்தகைய உண்மையறிவு மாற்றப்பட முடியாத ஒரு கொள்கை ஆகும். இத்தகையோர் ஆளுவாரானல், மக்களுடைய இயல்பு ஒத்துவருமளவுக்கு இவர்கள் நாட்டைத் தெய்வ உலகத்துக்கு ஒப்ப ஆக்குவர்.

காவலராக இருந்து ஆளும்பொறுப்பை ஏற்கக் கூடிய ஞானிகள் நன்மையானது எதுவோ அதனை மிக வருந்தியேனும் கற்று உணர்தல் வேண்டும்; நன்மையானதே உயர்வான அறிவு ஆகும்; ஆதலால் இதனை அறிவதில் ஏற்படும் இடுக்கண்களைக் காவலர் நிலைக்குப் பயிற்சிபெறுவோர் ஏற்று, முயற்சிசெய்தல் வேண்டும். பலரும் இன்பம்தருவது எதுவோ அதுவே நன்மையானது என்றெண்ணுகிறார்கள்; **ஆனல் நன்மை என்பது அறிவே அல்லது ஞானமே என்று மனித மனம் தெளிவாகக் காட்டுகிறது.**

மனித ஆன்மா (soul) நமது உடம்பிலுள்ள கண்ணைப் போன்றது. கண் ஒரு பொருளைப் பார்ப்பதற்கு, ஒளி வேண்டி

யிருக்கிறதைப் போல, ஆன்மா உண்மையை அறிதற்கு மனத்தின் துணைவேண்டும். எனவே நன்மையைப்பற்றிய அறிவு நமக்கு இன்றியமையாதது; அதனுடைய உதவியினுல்தான் நாம் உண்மைப் பொருளை அறிய இயலும்.

இவ்வாறு உண்மையை உணர்ந்தோரே மெய்யறிவாளர்கள், அல்லது ஞானிகளாவர்; இவர்களே நன்மையானது எது என்றும் அறிந்தவர்கள். இரண்டாம் நிலையில் இருப்பவர்கள் நன்மையானதே உண்மையும் ஆகும் என ஓரளவு அறிந்தவர்கள். மூன்றும் நிலையிலிருப்பவர்கள் நன்மையானது எது என்று பிறர் கூறுவதை நம்பி, அதைப்பற்றி அபிப்பிராயம் அல்லது எண்ணம் (opinion) மட்டும் வைத்திருப்பவர்கள். நான்காம் நிலையிலுள்ளவர்கள் உண்மையையும், நன்மையையும் அறியாத நிலையிலுள்ளவர்கள்,

நூல் VII: காவலருக்கு அளிக்கப்பட வேண்டிய கல்வி

இலட்சிய அரசில் ஆளுபவராக இருப்பவர்கள் ஆட்சி அதிகாரத்தில் பற்றுவைக்கக் கூடாது; அவ்வாறு இருந்தால் அவர்களுக்குப் போட்டியாக அதனை மற்றவரும் விரும்புவர்; பூசல் உண்டாகும். அரசைப் பற்றி நன்கு அறிந்தவரும், ஆட்சித் துறை அல்லாத வேறு துறையில் வாழ்வை உடையவரும் காவலராக இருக்கும்படி வற்புறுத்தப்படுதல் வேண்டும்.

ஆண், பெண் இருபாலாருக்கும் முதலில் தேவையான உடற் பயிற்சி அளிக்கப்படுதல் வேண்டும். இருபதாம் ஆண்டில் அறிவியற் கலைகளை உணரத்தக்க பயிற்சி அளிக்கப்படுதல் வேண்டும்; முப்பதாம் ஆண்டில் தருக்கவாத இயலில் (Dialecties) பயிற்சி அளிக்கப் படுதல் வேண்டும்; முப்பதாம் ஆண்டிலிருந்து முப்பத்தைந்து வரை மெய்யறிவுக் கல்வி அல்லது தத்துவக்கலை (phliosophy) அளிக்கப்படுதல் வேண்டும். முப்பத்தைந்திலிருந்து ஐம்பதுக் குள்ளாகப் பொதுப்பணியிலீடுபடுதல் வேண்டும்; அதன் பின்னரும் அவர்கள் நலன் பயப்பது எது என்று சிந்தித்துக்கொண்டே இருக்க வேண்டும்; அவ்வப்போது அரசியலிலும் பங்கு ஏற்க வேண்டும்.

இசை, உடற்பயிற்சி, தத்துவம் ஆகிய மூன்றும் முக்கிய மானவை.

கணிதம் காவலருக்கு நன்கு கற்றுக் கொடுக்கப்படுதல் வேண்டும். போர்ச்சூழ்ச்சி முறைகளுக்குக் கணித அறிவு இன்றி யமையாதது. அவ்வறிவு ஆய்வு மனப்பான்மையை வளர்க்கிறது. புலன் ஆற்றலால் (power of the senses) ஒரு விஷயத்தைத் தீர்மா

னிப்பது என்பது எப்போதும் இயலாது ; சிலவற்றை ஆய்வுசெய்தல் வேண்டா; அவற்றைப் புலன்கள் சரியாக அறிந்துகொள்ளும்; சில வற்றை அறிவின் துணைகொண்டுதான் தெரிந்துகொள்ளமுடியும். கண்ணுக்குப் புலனுவதும், அறிவுக்குமட்டுமே புலனுவதும் வெவ்வேறானவை. படையை நடத்தும் தளபதிக்குக் கணித அறிவு மிகவும் முக்கியமானது; அதேபோல, நாட்டில் வெகுவான மாறு தல்கள் நடைபெறுங் காலத்தில், உண்மையானதும், நிலையானதும், எது என்று அறிந்து, மெய்யறிவுபெற்ற ஆட்சியாளர் செயல்படு வதற்கும் கணித அறிவு மிகவும் இன்றியமையாதது. கோண கணிதம் (geometry) எதனையும் பிழையற அறிந்துகொள்ளும் பயிற்சியை அளிக்கிறது ; நிலையான கருத்தை அறியவும் மாறு தலுக்கு உட்படும் நிலையில்லாத கருத்தை அபிப்பிராயங்களைப் பாகுபாடு செய்து புறக்கணிக்கவும் கோண கணிதப் பயிற்சி உதவும். வானநூற் பயிற்சியும் அளிக்கப்படுதல் வேண்டும்.

தருக்கவாத இயல் (dialectics) பயிற்சி கற்றுக்கொடுக்கப் படுதல் வேண்டும். புலன்களின் உதவி இன்றி, அறிவு ஒன்றின் உதவியை மட்டும் கொண்டு ஒருவர் முழு நலன் (absolute good) எது என்று அறிந்து கொள்ளுவாராயின் அவர், அறிவு உலகத் தையே அடைந்தவராவார். இத்தகைய அறிவு வளர்ச்சியே ஆன்மா வுக்கு இன்பம் தருவது.

தருக்கவாத இயலை ஒருவர் கற்பதற்குமுன் சில அறிவியற் கலைகளை அறிந்துகொண்டால்தான் தருக்கவாத இயலின்மூலம் பயனுள்ள ஆய்வு கைகூடும். இந்த இயலைக் கற்பவருக்கு (1) எதனையும் அறிந்து கொள்ளும் கூரிய அறிவு, (2) நினைவாற்றல், (3) திண்ணிய ஒழுக்கம், (4) ஒரு தொழிலீடுபாடு, (5) உண்மை அறியும் வேட்கை, (6) ஒழுக்கப் பண்புகள் ஆகியவை இருத்தல் வேண்டும்.

நூல் VIII : முக்கியமான அரசியலமைப்பு வகைகள்

பிளேட்டோ தனது இலட்சிய அரசின் இயல்புகளை மனத்தில் வைத்துக்கொண்டே, தம் காலத்தில் கிரீசில் நடைமுறையில் இருந்துவந்த அரசாங்க வகைகளை (forms of government) மதிப் பிட்டுக் கூறுகிறுர்.

அரசுகளும், அரசியலமைப்பு வகைகளும் மனிதப் பண்பு வகைகளைப் பொறுத்தே அமைகின்றன.

உயர்குடியாளர் ஆட்சியின் தனித் தன்மையாவது அதில் மெய்யறிவுடைய ஞானிகளே ஆட்சி செய்வர் என்பதாம். ஞானிகள் நல்லியல்புகளெல்லாம் உடைய முழுப் பண்பாளர் ஆவர். ஏனையோர் ஓரளவே பண்புடையவர்; பிற்கூறப்பட்டவர் ஆளுதற்குத் தகுதி உடையவராகார்; போர் நடத்துதல், போர்ச் சூழ்வினைசெய்தல் முதலியவைவயே செய்தற்கு உரியர். **ஆளுவோரிடையே எந்தப் பண்பு தலைமையாக விளங்குகிறதோ, அந்தப் பண்பிற்கேற்பவே, அதை அடிப்படையாக வைத்தே ஆட்சி வகையும் அமையும்.**

முதன்முதலில் அறிவாளர் கையில் இருந்த ஆட்சி, சிறிது சிறிதாக அறிவுக் குறைவுடையவர்களுடைய கையில் வரவும் பல் வேறு கீழ்த்தர அரசாங்க வகைகள் தோன்றின.

முதன்முதலில் இருந்தது மிகச் சிறந்த வகையான அரசாங்கமாகிய மெய்யறிவாளர் ஆட்சி. இதில் ஆட்சி அதிகாரமானது காவலர்களாகப் (guardians) பணியாற்றிய மெய்யறிவாளர்களிடமே இருந்தது. மெய்யறிவாளர்கள் (philosophers) ஆளும் போது, அவர்கள் அதிகாரத்தை நீதி அல்லது முறைமை (Justice) என்ற நோக்கத்தை நிலைநிறுத்தும் பொருட்டே கையாண்டனர்.[1] இதுவே இலட்சிய அரசில் காணப்படும் உயர்தரமான மெய்யறிவாளர்களுடைய ஆட்சி ஆகும். பின்னர் அறிவு வளர்ச்சியில் தாழ்ந்த அல்லது அடுத்த இரண்டாவது நிலையில் உள்ள வீரர்கள் கையில் ஆட்சி அதிகாரம் வந்தது. வீரர்களாட்சியே (டிமாக்ரசி) (Timocracy) எனப்படும்.[2] வீரர்கள் அதிகாரத்தைக் கையாளும் போது, நீதியை நிலைநிறுத்துவதை முக்கிய நோக்கமாகக் கொள்ளாமல், தங்களுக்குப் புகழ் அல்லது மதிப்பு (honour) வருவதை நோக்கமாகக் கொண்டே அதிகாரத்தைக் கையாண்டனர். வீரர்களாட்சி மெய்யறிவாளர்களுடைய ஆட்சியினின்றும் பெருமளவில் வேறுபடாமல் இருந்தது. மூன்றாவது தாழ்ந்த ஆட்சி வகையே செல்வச் சிறுகுடியினர் ஆட்சி (oligarchy) ஆகும். இவ்வாட்சி வகை தனியார் சொத்துரிமை முறையினின்றும் தோன்றுகிறது. இதில் சொத்துத் தகுதியை ஆதாரமாகக் கொண்டு அரசியலதிகாரம் செலுத்தப்படுகிறது. உடைமைகளைப் பெற்றுள்ள ஒரு சிறிய வகுப்பார், உடைமையே இல்லாத வறியவர்கள் நிறைந்த

[1] இங்கு *நீதி* என்பதற்கு பிளேட்டோ முன்பு குறிப்பிடும் பொருளையே கொள்ளுதல்வேண்டும்.

[2] பிளேட்டோ இங்குக் குறிப்பிடும் வீரர்களாட்சி அவருடைய காலத்தில் ஸ்பார்ட்டாவில் காணப்பட்ட ஆட்சியை ஒத்தது. (Timocracy) என்ற சொல்லுக்குச் செல்வர் ஆட்சி என்றும் பொருள் கூறுவர்.

பெரிய வகுப்பினரை ஆளும்வகையே செல்வச் சிறுகுடியினர் ஆட்சி ஆகும். இவ்வாட்சி வகையில் உள்ள குறைகள் பின்வருமாறு ;

(1) இதில் ஆளுபவர், ஆளுதற்கு மற்றவர்களைவிடக் கூடுதல் தகுதிஉடையவரென்ற காரணத்துக்காகத் தேர்ந்தெடுக்கப்படாமல், அவர் சொத்து உடையவர் என்ற காரணத்துக்காகவே தேர்ந் தெடுக்கப்பட்டிருப்பதால், இது திறம் மிக்க ஆட்சி அன்று.

(2) இவ்வாட்சி நடைபெறும் அரசு பார்வைக்கு ஒரேஅரசாகத் தோன்றினும், உண்மையில் எண்ணிக்கையில் பெரிய வறியவர் நிறைந்த அரசும், எண்ணிக்கையில் சிறிய செல்வர்களடங்கிய அரசும் ஆக இரண்டு அரசுகளுள்ள அரசே ஆகும்; இதில் யாவருக்கும் மனநிறைவோ, ஒற்றுமையோ இருக்க இயலாது.

(3) இவ்வாறு இரண்டாகப் பிளவுபட்டுள்ள நாட்டில், ஆட்சி யாளர் போர்களைத் திறமையாக நடத்தக்கூடிய தகுதிபெற்றிருக்க மாட்டார்; செல்வர் செல்வம் சேர்க்கும் விருப்பத்தின் காரணமாகப் போர்ச் செயல்களில் கலந்துகொள்ளமாட்டார்; வரிகளையும் அரசாங்கத்துக்குச் செலுத்த விரும்பமாட்டார். இதனால் அரசு நிதிவளமும், படைவலியும் குறைந்துஇருக்கும்.

(4) இவ்வாட்சியில் ஒருவர் ஒரு தொழிலைச் செய்தல் என்ற இலட்சிய அரசின் கோட்பாடு கைவிடப்பட்டு, ஒருவரே உழவு, வாணிபம், போர் முதலிய பல தொழில்களையும் செய்வார்; இதனால் குழப்பம் ஏற்படும். இவ்வாட்சியின் நோக்கமெல்லாம் ஆளுவோரின் தன்னலமே தவிர வேறு எதுவும் அன்று. ஆட்சி வரிசையில் நான்காவது தாழ்ந்த வகையே குடியாட்சி (Democracy) ஆகும். செல்வச் சிறுகுடியினருடைய ஆட்சியிலிருந்த நிலைமையை இவ்வாட்சியினர் மாற்றி, மக்களுடைய சுதந்திரம் அல்லது உரிமையைக் (freedom or liberty) காப்பாற்றும் பொருட்டு அதைக் குழப்பம் விளைவிக்கும் அளவுக்குக் கொண்டு போய்விடுகின்றனர்.

குடியாட்சியின் குறிப்பிடத்தக்க இயல்பு அல்லது தன்மை சுதந்திரம் அல்லது உரிமை என்பதால், இவ்வாட்சியினரிடம் எல்லா வகையான, பலதரப்பட்ட பண்புகளும் (அல்லது இயல்பு களும்) காணப்படுகின்றன. சட்டம் புறக்கணிக்கப்படுகின்றது; அரசியலமைப்பே முற்றிலும் பிரிக்கப்பட்டுப் போகிறது. எனவே '(இக்குடியாட்சி உடைய) அரசே மற்றெல்லா அரசு வகை களுள்ளும் மிகவும் அழகானதைப்போலக் காணப்படுகிறது;

பல்வேறு பூவேலைகள் வைத்துப் பின்னப்பட்ட ஓர் ஆடைபோல இவ்வாட்சியிலுள்ள நாடு காட்சி அளிக்கிறது.'[1] "இவ்வாட்சியில் எல்லா ஒழுங்குக்குரிய கோட்பாடுகளும், உயர்தரப் பண்பியல்களும் அழிவுக்குள்ளாகின்றன.' 'குடியாட்சி என்பது, பல்வேறு (பண்பு) வகைகளும், குழப்பமும் நிறைந்த, சமத்துவம் உடையவருக்கும், சமத்துவமில்லாதவருக்கும் இடையே ஒரு வகையான சமத்துவத்தை அளிக்கின்ற, ஒரு கவர்ச்சிமிக்க அரசாங்க வகை ஆகும்.'[2] இவ்வாட்சியில் மனிதனுடைய தீய பண்புகளெல்லாம் சுதந்திரம் அல்லது உரிமை என்ற கோட்பாட்டில் தடையின்றி வளர்த்துவிடப்படுகின்றன. ஒரே மனிதரிடம் ஒரு சிறந்த பண்பு வளர்தல் என்ற நிலை மாறிப்போய்ப் பலவகைப்பட்ட பண்புகளோடு வாழும் மக்களுடைய இயல்புகள் காணப்படுகின்றன.

வரம்பற்ற சுதந்திரம் குழப்பத்தில்தான் முடிவடைகிறது. எனவே ஆட்சி வரிசையில் எல்லாவற்றுக்கும் மிகத் தாழ்ந்த நிலையில் இருப்பதுதான் **டிரனி** (tyranny) எனப்படும் **சர்வாதிகாரம்** அல்லது **எதேச்சாதிகாரம்** ஆகும்.

> 'எதுவுமே ஓர் வரம்புக்கு உட்படாமல், அதை மீறிக் கூடுதலாக வளர்ந்துவிட்டால், அதுவே தனக்கு நேர் எதிரான (அழிவைத் தரவல்ல) போக்கைத் (reaction) தோற்றுவிக்கும். இந்த விதியானது கால நிலைகளுக்கும், பயிரியல் வகைகளுக்கும், விலங்கியல் வகைகளுக்கும் மட்டுமல்லாது, அரசாங்க வகைகளைப் பொறுத்த வரையில் அவைகளுக்கும் முற்றிலும் பொருந்தும் உண்மை ஆகும்.'[3]

ஆதலால் குடியாட்சி அரசாங்கத்தில் காணப்படும் வரம்பு மீறிய உரிமை உணர்ச்சியே அல்லது சுதந்திர வளர்ச்சியே, அதற்கு நேர் மாறான குழப்ப நிலையையும், சுதந்திரத்தை மதிக்காத ஒற்றை மனிதரின் சர்வாதிகார ஆட்சியையும் தோற்றுவிக்கிறது.

> 'தனிமனிதரிடத்திலாயினும், நாடுகளிடத்திலாயினும், வரம்புக்குக் கட்டுப்படாத உரிமை அல்லது சுதந்திரம் என்பது அடிமை நிலைக்குத்தான் கொண்டுபோய் விடுகிறது.'[4]

1 நூல் VIII இல் உள்ள ஒரு பகுதியின் மொழிபெயர்ப்பு.
2 ,, ,, ,, ,,
3 ,, ,, ,, ,, 564—Book VIII
4 நூல் VIII இல் ஒரு தொடரின் மொழி பெயர்ப்பு.

குடியாட்சியில் எண்ணிக்கையில் செல்வர்களைவிடப் பெரிய அளவில் (1) சோம்பேறிகள், (2) இவர்களுக்கு உணவளிக்கும் செல்வர்கள், உழைப்பாளிகள் ஆக மூன்று வகுப்பார் இருக்கின்றனர். குழப்ப நிலையில் 'ஆட்சியைக் கைப்பற்றிய சர்வாதிகாரி, சாதாரண மக்களிடத்தில் தொடக்கத்தில் அன்புகாட்டி, அவர்களுக்கு நிலப்பங்கீடு செய்து, கடன்களைத் தள்ளுபடி செய்து, தம் புறப்பகைவர்களோடு உடன்படிக்கை செய்து, தமது நிலையைப் பாதுகாப்பாக வைத்துக்கொண்டு, பெரும்பான்மை ஆதரவோடு தமக்கு வேண்டாத உள்நாட்டுப் பகைவர்மீது பொய்க்குற்றம் சாட்டி, நீதிவிசாரணை செய்து, ஒழித்துவிட்டுத் தமது தலைமையை மக்கள் எப்போதும் சார்ந்திருக்கும் பொருட்டு எப்போதும் போர் முதலிய ஏதேனுமொரு கெடுபிடி நிலையைத் தூண்டிக் கொண்டே இருப்பார். பெரும் வரிச் சுமைகளின் மூலம் குடிகளை வறியவராக்கி, தம் ஆதரவாளர்களிடையேயும் மிக்க வீரமும், ஊக்கமும் உடையவரை அவர் ஒழித்து விடுவார். தமக்கு எதிராகக் கலகம் செய்யும் மக்களைத் தாம் அவர்களுடைய ஆதரவின் மூலம் ஆட்சிக்கு வந்ததையும் எண்ணுமல், மதிக்காமல், அடக்கி, ஒடுக்குவார். சர்வாதிகார ஆட்சியின் நோக்கம் நீதி என்பதே அன்று; ஆட்சியாளரின் நோக்கமே ஆகும். 'இவ்வாறு சுதந்திரம் என்பது ஒழுங்குக்கும், அறிவுக்கும் கட்டுப்படாமல்போய் வெறுக்கத் தக்க கொடிய அடிமைத் தனத்தைத் தோற்றுவிக்கிறது.'[1]

நூல் IX: சர்வாதிகார ஆட்சியாளரின் நோக்கம், தன்னலம்

குடியாட்சியிலிருந்து தோன்றிய சர்வாதிகார ஆட்சியில், ஆளுபவரின் நோக்கம் ஞானம் பெறுதல் என்பது அன்று. தமது நலன் ஒன்றே ஆகும். சர்வாதிகாரி மக்களிடையே காணப்படும் பிளவுகளையெல்லாம் தமது நோக்கத்திற்காகப் பயன்படுத்திக் கொண்டு மக்களையெல்லாம் தமக்குக் கட்டுப்பட்டவர்களாக ஆக்குகிறுர்.

எதேச்சாதிகார அல்லது சர்வாதிகார ஆட்சி என்பதற்குப் பண்டையக் கிரேக்க மக்கள் கொடுத்த பொருள், 'மக்களுடைய இயல்பான சுதந்திர உணர்வை மதித்து அவர்களுடைய ஆதரவின்மீது ஆட்சியை அமைக்காமல், வன்முறையைக் கையாண்டு நடைபெறும் ஒற்றை மனிதன் ஆட்சி' என்பதுதான். **'Tyranny'** என்ற சொல்லால் குறிப்பிடப்படும் இத்தகைய ஒற்றை மனித

[1] நூல் VIII இன் ஒரு தொடரின் மொழி பெயர்ப்பு.

ருடைய சர்வாதிகார ஆட்சிக்குக் 'கொடுங்கோலாட்சி' என்ற பொருள் இல்லை.[1] அவர் தம் நலத்தின் பொருட்டுத் தம் பணியாட்களையும், அடிமைகளையும் புகழ்ந்து பேசுவார்; அவர் பேராசையும், அச்ச உணர்வும் மிக உடையவர்; செயலற்ற நோயாளியைப் போல அவர் தம் நலனுக்காக அடிமைத் தனத்தை வளர்ப்பார். ஞானிகளாட்சியில் காணப்பட்ட நீதியின் மீதுள்ள விருப்பமும், வீரர்களாட்சியில் காணப்பட்ட புகழ் விருப்பமும் மறைந்து, தமது நலனே சர்வாதிகாரியின் ஆட்சியில் இருக்கும்.

இதுவரை கூறப்பட்டுள்ள இலட்சிய அரசின் இயல்புகளெல்லாம் கருத்தளவில்தான் காணப்படுகின்றன என்று கூறப்பட்ட போதிலும், அதனுடைய நல்ல இயல்புகளை — நீதியை நிறுவுதல் என்ற நோக்கத்தை—ஏற்று, எந்த ஆட்சியாளரும் தமது அரசாங் கத்தைச் சீர்த்திருத்தலாம்.

நூல் X: நீதியோடு பொருந்திய வாழ்வின் இன்றியமையாமை

எவரொருவரையும் உண்மையைவிடக் கூடுதலாக மதிப்பிடுதல் கூடாது. உண்மையை உணர்வதனுலும், அதனை ஆதாரமாகக் கொண்டே வாழ்வதனுலும் தான் எவரும் உயர்ந்தவராகிருர்; எனவே உண்மையினும் உயர்ந்தவர் இல்லை. கவிஞர்கள் எல்லாரும், ஓவியர் ஒரு பொருளைப் பார்த்து அதைப் போல ஓவியம் வரைவது போலச் சில பண்புகளைப் பார்த்து, அவற்றைப் போலக் கவிதை எழுதுகிருர்களே தவிர, புதிய, உண்மையைக் காணும் பண்புகளைப் படைப்பதில்லை. ஒன்றைப்போல மற்ருென்றை அமைப்பது சிறந்த தாகாது; போலியாக அமைப்பதும் ஒரு கலையே ஆயினும், முழு

[1] கிரேக்க வரலாற்றில் கூறப்படுகின்ற சர்வாதிகார ஆட்சியாளர் பலருடைய சில செயல்களை நாம் காணும்போது இப்பொருள் தெளிவாக விளங்குகிறது. மெகாரா என்ற நகரரசின் சர்வாதிகாரியான தியாஜெனிஸ், சேமோஸ் அரசின் சர்வாதிகாரி பாலிக்ரேட்டஸ், மைலீட்டஸ் அரசின் சர்வாதிகாரி திரேசிபுலஸ், காரிந்த் அரசின் சர்வாதிகாரி பெரியாண்டா, ஆதென்ஸின் சர்வாதிகாரி பிசிஸ்ட்ரேட்டஸ், மைட் டிலீன் சர்வாதிகாரி பிட்டாக்கஸ் ஆகியோரெல்லாம், ஆட்சியில் தங்களுக்கெதிராகக் காணப்பட்டவர்களையெல்லாம் கொடுமைப்படுத்தி ஒழித்த போதிலும், சாதாரண மக்களுக்குப் பயனுள்ள செயல்களைச் செய்தனர்; வேளாண்மைக்கு ஆதரவு, தொழில் களுக்கு ஆதரவு, குடியேற்ற நாடுகளை நிறுவுதல்; வணிகத்தை ஆதரித்தல், கலைஞர்களை ஆதரித்தல் போன்ற செயல்களை அவர்கள் செய்தனர். இவ்வகையான நல்ல செயல் களைச் செய்தபோதிலும், அவர்களுடைய ஆட்சி மக்களுடைய சுதந்திரத்தை மதிக்காமல், அவர்களுடைய சட்டபூர்வமான ஆதரவைத்தேர்தல் முறையின் மூலமாகப் பெருமல், தங்களுடைய வன்முறையை ஆதாரமாகக் கொண்டு அமைந்திருந்ததாகை யால், ஆக்கச் செயல்கள் செய்த கிரேக்கச் சர்வாதிகாரிகளுடைய ஆட்சியும், சாதாரண கிரேக்க மக்களுடைய சுதந்திர உணர்வுக்குப் புறம்பான ஆட்சி வகையாகக் கருதப் பட்டு, வெறுக்கப்பட்டு, ஒதுக்கப்பட்டது. சுதந்திரக் கிரேக்க மக்களைப் போலவே பிளேட்டோவும் சர்வாதிகார ஆட்சிவகையை வெறுக்கத்தக்க மிகத் தாழ்ந்த ஆட்சிவகையாகக் கருதுகிருர். கிரேக்கச் சர்வாதிகாரிகளைப் பற்றிய விவரங்களை J. B. பியூரி, உட்ஹவுஸ் ஆகிய ஆசிரியர்களுடைய வரலாற்று நூல்களில் காணலாம்.

நலனும், உண்மையும் பெறுதற்குரிய பண்பை வளர்ப்பதே சிறந்த கலை ஆகும். எல்லாக் கவிஞர்களுமே ஒன்றைப் போல மற்றொன்றை அமைப்பவர்களே தவிர, மனித இனமானது முழு உண்மையையும் கண்டு இன்பம் பெறுவதற்கு உரிய கலைப்படைப்பு எதனையும் தோற்றுவித்துத் தொண்டாற்றவில்லை. எனவே கவிதைகளைப் படிப்பதில் கவனமாக இருக்க வேண்டும். மனித ஆன்மா அழி யாதது; அதற்கு இன்பம் அளிப்பது முழு உண்மையே தவிர, உண்மையைப் போன்ற படைப்பு அன்று. முழு உண்மையே நம்மைக் காக்கவும், சீர்திருத்தவும் செய்கிறது; தீயது நம்மைக் கெடுத்து விடுகிறது. ஆன்மாவை அழிப்பவை நீதியற்ற தன்மை, நிறைவின்மை, அச்சம், அறியாமை என்பவை. நீதியாக வாழ்ந்த வருக்கும், அவ்வாறின்றி வாழ்ந்தவருக்கும், இறப்புக்குப் பின்னர் மறுவாழ்வின் கூலி உண்டு. ஒவ்வொருவரும் இம்மையில் மற்ற வருக்குச் செய்யும் தீவினைக்குப் பத்துமடங்கு அதன் பயனும், நல்வினைக்கும் பத்துமடங்கு நற்பயனும் கொடுக்கப் பெறுவார். மறு உலகத்தில் எவரும் தாம் இவ்வுலக வாழ்வில் செய்த வினைப் பயனின் விதியை ஒட்டியே வாழவேண்டுமே தவிர, தம் விருப்பம் போல் வாழ இயலாது. மறு உலக வாழ்வில் நமக்கு அளிக்கப்படும் தண்டனைகளும், வெகுமதிகளும் நமது இவ்வுலக வாழ்வின் செயல்களைப் பொறுத்தே அமைகின்றன. எனவே நாம் இவ்வுலக வாழ்வில் நன்மைக்கும், தீமைக்கும் உள்ள வேறுபாட்டை நன்றாக உணர்ந்து, நல்ல வாழ்க்கையைத் தேர்ந்தெடுத்து வாழ்தல் வேண்டும். பண்புடைமையே சிறந்த வாழ்க்கையாதலால், அதனை இவ்வாழ்வில் மேற்கொண்டு, உண்மையையும், நீதியையும் பின் பற்றுதல் வேண்டும். நன்மைக்கோ, தீமைக்கோ பொறுப்பு மனித ரையே சாரும்; கடவுளைச் சாராது; ஏனெனில் இந்த இரண்டில் எதையும் மனிதர் தேர்ந்தெடுப்பது அவருடைய சுய விருப்பத்தைப் பொறுத்தது.

குறிப்பு :- பிளேட்டோ மனிதனுக்கு ஆன்மா உண்டு என்றும்; அது அழியாதது என்றும்; கடவுள் உண்டு என்றும்; இறப்புக்குப் பிந்திய மறு உலக வாழ்க்கை மனிதருக்கு உண்டு என்றும்; மனிதர் இம்மையில் செய்யும் நல்வினை, தீவினைகளுக்குரிய பயன்களை மறுமையில் அடைவர் என்றும் கொள்கைகளைக் கூறு வதால், இவற்றில் அவர் நம்பிக்கைகொண்டிருந்தார் என்பதில் ஐயம் இல்லை. மறுமையில் மனிதர் தமது இம்மை வினைகளுக்கேற்ற பயன்களைப் பெறுகின்றன ரென்பதை அவர், இந்நூலில் (Book X) விளக்கும் போது 'ஏர்' என்னும் பெயருடைய ஒருவர் மறு உலகத்துக்குப் போய்வந்து கூறுவதாக விளக்குகிறார்.

பிரிவு 4 : 'ஸ்டேட்ஸ்மன்' (Statesman) அல்லது 'அரசியலறிஞர்' என்ற நூலில் கூறப்படும் கோட்பாடுகள்

இதுவரை 'ரிபப்ளிக்' என்ற நூலில் பிளேட்டோ கூறிய அரசியல் கோட்பாடுகளின் சாரத்தைக் கண்டோம். இங்கு அவர் தமது இரண்டாவது நூலாகிய 'ஸ்டேட்ஸ்மன்' என்ற நூலில் கூறிய கோட்பாடுகளைக் காண்போம்.

•

அரசியலறிஞர்களுடைய கடமைகள்

இலட்சிய ஆட்சியாளருடைய நிலையான இயல்பு (அதாவது மாருத இயல்பு) ஞானியின் அல்லது அறிவாளியின் இயல்பை - அதாவது முழு உண்மையையும், பண்பையும் அறிந்து - பெற்றிருப்பதுதான். இந்த இயல்பை அளவுகோலாக அல்லது குறிக்கோளாக வைத்து, கல்விமுறையாகவும், பண்பை வளர்க்கும் பயிற்சியாகவும் கொள்ளுதல் வேண்டும். இலட்சிய ஆட்சியாளரும் குடிமக்கள் பண்பின் இலட்சிய நிலைகளுக்கு உயரும்படியாக அவர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டும். நாட்டின் தலைமையான அதிகாரம் அரசியலில் முழு உண்மையும் அறிந்த அறிஞரிடமே இருக்க வேண்டும்; அது படைவீரர், நிதித்துறை அலுவல் செய்பவர், சட்டங்களுக்கேற்ப நீதி வழங்கும் அலுவலைச் செய்பவர் ஆகியோரிடத்து இருக்கக் கூடாது. சட்டத்தின் உதவியை வைத்தோ, அது இல்லாமலோ, மக்களுடைய ஒப்புதலின் பேரிலோ, ஒப்புதல் இல்லாமலோ, மக்களைப் பாதுகாப்பது எவ்வாறு என்று கூறுவதே அரசியல் அறிவு ஆகும். எனவே பிளேட்டோ இந்த நூலில், தாம் ரிபப்ளிக் என்ற நூலில் கூறியதினின்றும் சிறிது விலகி, அரசுக்குச் சட்டம் ஓரளவு இன்றியமையாதது என்று ஒப்புக்கொள்கிருர்.

ஒரு நோயாளிக்குச் சிகிச்சை செய்யும் மருத்துவர் நோயாளியின் விருப்பத்தை ஒட்டியோ, அதற்கு மாருகவோ, மருத்துவ நூலின் உதவியை வைத்துக் கொண்டோ, அதன் உதவி இல்லாமலோ, சிகிச்சை செய்யவேண்டுமென்று இல்லை; அவர் கையாளும் மருத்துவக் கோட்பாடுகள் உயர்தரமானவையாக இருக்கவேண்டுமென்பதுதான் முக்கியம். இதேபோல நாட்டை ஆளுவோர் எண்ணிக்கையில் சிறியவராகவோ, பெரியவராகவோ வறியவராகவோ செல்வராகவோ, இருத்தல் வேண்டுமென்றும்; ஆளுவோர், மக்களுடைய ஒப்புதலின் பேரிலோ அது இல்லாமலோ சட்டங்களைச் செயல் படுத்துதல் வேண்டுமென்றும் நாம் எண்ணுதல் கூடாது; ஆளுவோர் இலட்சிய ஆட்சிக்குரிய அறிவும், பண்பும் உடையவ

ராகப் பயிற்சி பெற்றுள்ளவராக இருத்தல் வேண்டுமென்றுதான் கருத வேண்டும்.

மெய்யறிவாளர்களுடைய சமயோசித அறிவே (discretion) நல்ல ஆட்சிக்குப் பொறுப்பாக அமையும். கடந்த காலத்தில் தோன்றிய முறையற்ற, மாற்ற இயலாத வழக்கங்களை மாற்றி, மக்களுக்கு நலன் அளிப்பது ஆட்சியிலிருக்கும் அறிவாளருடைய சமயோசித அறிவு ஆகும். எனவே நலன் விளைக்கும் அறிவாளருடைய சமயோசித அறிவுக்கு நெகிழ்ச்சியற்ற சட்டங்களைக் கொண்டு வரம்பு ஏற்படுத்துவது சரி அன்று. ஆயினும் எல்லாம்வல்ல அறிஞர் ஆட்சியாளராகக் கிடைப்பது அரிதாகையால், சட்டம் இன்றியமையாததாகிறது; அதுவே செயலுக்கேற்ற அறிவையும் காட்டுகிறது. மக்களுடைய எழுதப்பட்ட சட்டங்களிலும், சமுதாயப் பழக்கங்களிலும் காணப்படுகின்ற மெய்யான அரசியலறிவு எந்தத் தனி மனிதரிடமும் இல்லை; அவற்றினின்றும் சிறிதும் விலகாமல் அரசியலறிஞர்கள் பணியாற்றுதல் வேண்டும்.

ஆட்சி வகைகள்

சட்ட வரம்பை ஆதாரமாக வைத்துக் கொண்டு பிளேட்டோ பின் வருமாறு அரசாங்க வகைகளை வகைப்படுத்திக் கூறுகிறார்.

சட்ட வரம்புக்கு உட்பட்ட
ஒற்றை மனிதராட்சி, முடியாட்சி (Monarchy),
சிலருடைய ஆட்சி, உயர்குடியினராட்சி (Aristocracy),
பலருடைய ஆட்சி, குடியாட்சி (Democracy),
சட்ட வரம்பை மீறிய ஒற்றை மனிதராட்சி (tyranny), சர்வாதிகாரம்.
சிலருடைய ஆட்சி செல்வச் சிறுகுடியினராட்சி (oligarchy),
யாவருடைய ஆட்சி குடிமக்கள் ஆட்சி (Democracy-molerule).
இவற்றுள் எதுவும் மிகச்சிறந்ததாகாது.

பிரிவு 5 : 'லாஸ்' (Laws) – 'சட்டங்கள்' என்ற நூலில் கூறப்படும் கோட்பாடுகள்

'ரிபப்ளிக்' என்ற நூலில் இலட்சிய அரசு என்ற இலட்சிய அளவில் அமைந்த அரசின் (ideal state) இயல்புகளைப் பிளேட்டோ வகுத்தார்; அதில் நடைமுறை அரசாங்கங்களை ஆய்ந்து மதிப்பீடு செய்யவில்லை; 'ஸ்டேட்ஸ்மன்' என்ற நூலில் நடைமுறை அரசாங்கத்தின் (actual government) சிறப்பியல்புகள் சிலவற்றை ஆய்வு

செய்தார். 'சட்டங்கள்' என்ற தமது மூன்ருவது நூலில் பிளேட்டோ தமது இலட்சியப் பார்வையை விடுத்துக் குறைபாடு உடைய மக்களிடையே நல்ல முறையில் செயல்படத்தக்க ஓர் அரசுமுறையை வகுக்க முயன்ருர். சட்ட, அரசியலமைப்பு வகைகளிலே சில வரம்புகள் அமைக்கப்படுதல் அரசுகளின் நலனுக்கு உகந்ததே என்று அவர் ஒத்துக்கொண்டார். ('ரிபப்ளிக்கில், பிளேட்டோ, இவற்றை இலட்சிய அரசுக்கு முரணுனவை என்று கருதி, ஒப்புக்கொள்ளவில்லை). மக்களுக்குப் பயனளிக்க வல்ல சிறந்த சட்டத் தொகுப்பு ஏற்படுத்தப் படவேண்டும். ஆயினும் 'ரிபப்ளிக்' நூலில் அவர் தாம் கூறிய 'அறிவாளர்களே ஆளுதல் வேண்டும்' என்ற குறிக்கோளை மாற்றிக் கொள்ளாமல், அதனை அடையும் நெறிகளையும், கோட்பாடுகளையும் மாற்றி அமைக்கிருர்.

'ரிபப்ளிக்' நூலில் கூறிய பொதுவுடைமைக் கருத்தை மாற்றுதல்

'சிறந்த அறிவும், பண்பும் உடைய மக்களைப் பெறுவதே குடும்ப வாழ்வின் நோக்கம்' என்று பிளேட்டோ தமது முதல் நூலில் கூறிய கருத்தை மையமாக வைத்து, இதன் பொருட்டுத் திருமணமுறையும் (marriage), தனிக்குடும்ப வாழ்க்கை முறையும் (family life) தேவை என்று மூன்ரும் நூலில் ஒப்புக் கொள்கிருர். திருமணமுறையில் ஒன்றுக் கொன்று நிறைவு செய்து கொள்ளக் கூடிய பண்பியல்கள் உள்ள ஆண்களையும், பெண்களையும் திருமணம் செய்யும்படியாக அரசாங்கம் தூண்டவேண்டுமென்றும்; அப்போதுதான் நீதியான மனப்பான்மையுள்ள குழந்தைகள் பிறக்குமென்றும், மணவாழ்வு தொடங்கிய 10 ஆண்டுக் காலத்துக்கு இளந்தம்பதிகளை மிகவும் கவனமாகக் கண்காணிப்பதற்குப், பெண்களடங்கிய ஒரு பாதுகாப்பு மன்றம் இருக்க வேண்டுமென்றும், இந்த மன்றம் வீட்டுவாழ்வின் அன்ருட முறைகளின் செயல்களையெல்லாம் மேற்பார்வை செய்து, ஒழுங்குபடுத்துதல் வேண்டுமென்றும் பிளேட்டோ கூறுகிருர்.

கல்விபுகட்டுதலை நீதிபதிகளின் முக்கிய வேலையாக, பிளேட்டோ தமது முதலாம் நூலில் கூறினுர்; மூன்ரும் நூலில், ஒரு குறிப்பிட்ட கல்வி முறையை அரசாங்கம் எல்லா இளைஞர் மீதும் கடுமையாகப் புகுத்துதல் வேண்டுமென்றும், மக்களுடைய அறிவியல் வளர்ச்சியும், கலை வளர்ச்சியும் அரசாங்கத்தின் முழுமையான தணிக்கைக் கட்டுப் பாட்டில் (censorship) தான் இருத்தல் வேண்டுமென்றும் பிளேட்டோ கூறுகிருர்.

இதே போலவே 'ரிபப்ளிக்' நூலில் தனியார் சொத்து உரிமையை மறுத்துப் பொதுவுடைமைக் கோட்பாட்டை எடுத்துக்

கூறிய பிளேட்டோ, தமது மூன்ரும் நூலில் பொதுவுடைமை செயல்முறைக்கு ஒத்து வராது என்ற முடிவுக்குவந்து, தனியார் சொத்து உரிமைக் கொள்கையை ஒப்புக் கொள்ளுகிருர். ஆயினும் சமமாகப் பிரித்தளிக்கப்படாத சொத்துரிமையினுல் விளேயும் தீமைகளினின்றும் நாட்டைப் பாதுகாப்பதற்காகச் சில தற் காப்புகள் இருக்க வேண்டும் என்று கூறுகிருர். அரசியலில் எழும் பூசல்களுக்கெல்லாம் அடிப்படை, பொருளாதார முறையில் காணப்படுகிறது; அமைதியான அரசில் தீவிரமான வறுமையோ, தீவிரமான செல்வ நிலேயோ இருக்க இயலாது; எனவே பொருள் உடைமைகளேச் சமமாக ஆக்கும் பொருட்டுச் சட்டங்கள் இயற்றப் படவேண்டும். நாட்டின் விளேநிலங்கள் குடிமக்கள் ஒவ்வொரு வருக்கும் சமமான பங்குகளில் கிடைப்பதற்கு வகைசெய்ய வேண்டும்; வேறுவழியில் செல்வம் சிலர்வசம் திரண்டுவிடாமல் இருப்பதற்காக, குடிமக்கள் வணிகச் செயல்களிலீடுபடாமல் தடுக்கப்படுதல் வேண்டும். எனவே அந்நியச் செலாவணிக்குத் தேவைப்படும் தங்கம், வெள்ளி முதலிய உலோகங்கள் அரசாங்கக் கருவூலத்தில் மட்டுமே சேகரித்து வைக்கப்படுதல் வேண்டும்; சாதாரண மக்களிடம் அவை சேகரிக்கப்படுதல் கூடாது. இவ்வாறு சட்டங்கள் செய்யப்பட்டாலும், சொத்து உடைமையில் சமத்துவம் ஏற்படாது; **தவிர்க்க இயலாத அளவில் சமம் இல்லாத சொத்து உடைமை தோன்றும்; அப்போது அதை ஆதாரமாகக் கொண்டு அரசாங்கம் அமைக்கப்படுதல் வேண்டும்.**[1] **அரசாங்க அலுவல்க ளெல்லாம் சொத்துத் தகுதியின் அடிப்படையில் பிரித்தளிக்கப் படுதல் வேண்டும்.** நான்கு வகுப்பார்களாகச் சொத்து உடை யவர்கள் பிரிக்கப்படுதல் வேண்டும். முதல் வகுப்பார் அரசாங்கத் தாரால் பாதுகாப்பாகச் சமபங்கீட்டு முறையின் மூலம் நிலம் கொடுக்கப்பட்ட உடைமையாளர். இதிலுள்ள ஒருவருடைய பங்கு நிலத்தின் மதிப்பைப்போல இரண்டு மடங்கு சொத்து உடையவர் இரண்டாம் வகுப்பிலும், மூன்று மடங்கு சொத்து உடையவர் மூன்ரும் வகுப்பிலும், நான்கு மடங்கு சொத்து உடையவர் நான்காம் வகுப்பிலும் இருத்தல் வேண்டும். நான்கு மடங்குக்கும் கூடுதல் மதிப்புள்ள சொத்து உடையவரிடமிருந்து அச்சொத்து அரசாங்கத்தால் விசாரணேயின்றியே பறிமுதல் செய்யப்படுதல் வேண்டும்.

1 பிளேட்டோ இங்குக் குறிப்பிடும் சொத்துத்தகுதியை ஆதாரமாக உடைய அரசாங்க முறை, ஆதென்சில் கி.மு. 594-கி.மு. 591இல் சோலன் (solon) என்ற அறிஞரால் கொண்டுவரப்பட்ட குடியாட்சி அரசாங்க அமைப்பை (சொத்தை ஆதார மாக உடையது) ஒட்டியதே ஆகும். சோலன் நிறுவிய முறையும் குறைபாடு உடையதே.

அரசாங்கத்துக்கும் குடிகளுக்கும் இடையே இருக்கவேண்டிய நல்லுறவு

முடியாட்சிக்கும், குடியாட்சிக்கும் இடைப்பட்ட ஓர் ஆட்சி வகையைக் காணுதல் வேண்டும். இவை இரண்டும் ஒன்றுக் கொன்று முரணான அதிகாரம் (power), சுதந்திரம் (liberty) ஆகிய இருகோட்பாடுகளின் மீது அமைந்துள்ளன. இவற்றுள் ஏதேனும் ஒன்று வரம்புமீறிய நிலையில் செயல்படுமானால் அரசுக்குத் தீமை விளையும். அதிகார அடிப்படையில் அமைந்த பாரசீக அரசாங்கம் அழிந்ததற்குக் காரணம் கைரஸ் (Cyrus), டேரியஸ் (Darius) போன்ற வலிமிக்க பாரசீகப் பேரரசர்கள் தங்களுடைய மக்களுக்கு நல்ல கல்விப்பயிற்சி அளிக்காதது ஆகும். சுதந்திரக் கோட்பாட்டின் அடிப்படையில் அமைந்த அதீனியக் குடியாட்சி அரசாங்கம் வீழ்ந்ததற்குக் காரணம், மக்களுடைய அறிவுப் பண்புகளைக் கெடுக்கக்கூடிய புதிய எண்ணங்களை, அதீனிய இசை, நாடக அரங்குகளினின்றும் ஒழிப்பதற்கு அதீனியக் குடியாட்சி அரசாங்கம் தவறியதே ஆகும். எனவே தீவிர நிலையில், வரம்பு மீறி அதிகாரமோ, சுதந்திரமோ செயல்படுவதைத் தடுக்கவல்லது நடுத்தரமான போக்கு (moderation) ஆகும். இப்போக்கில் அரசாங்கம் செயல்பட்டால், அரசாங்கத்துக்கும் குடிகளுக்கும் இடையே பகை நீங்கி, நல்லுறவு ஏற்படும். இந்த நட்புறவுக் கோட்பாடு இருதரப்புக்கும் இடையே இருப்பதுதான் அரசியலில் மிகவும் முக்கியம் ஆகும். எனவே **'அரசாங்கம் என்பது மக்களுடைய விருப்பத்தின் மீது அமைந்த சட்டத்தின் ஆட்சியாக இருக்க வேண்டுமேயன்றி, வலுக்கட்டாய முறையின்மீது அமைந்த ஆட்சியாக இருத்தலாகாது'** என்ற கோட்பாடு தோன்றுகிறது. நல்லுறவு ஏற்படவேண்டுமானால் முடியாட்சி அரசாங்கத்தில், அதிகாரக் கோட்பாடு வரம்புமீறிச் செயல்படாதவாறு சட்டத்தின் தடைகளுக்கு உட்பட்டிருக்குமாறு அமைக்கப்படுதல் வேண்டும். இவ்வாறு பிளேட்டோவின் காலத்தில் செயல்பட்ட முடியாட்சி அரசாங்கம் ஸ்பார்ட்டா ஒன்றுதான். அங்கு அரசர்களுடைய அதிகாரங்கள் செனட் என்ற முதியோர் மன்றத்தின் தடை அதிகாரத்தினாலும், ஏபர்ஸ் என்ற மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நீதிபதிகளின் தடை அதிகாரத்தினாலும் கட்டுப்பாட்டில் வைக்கப் பட்டுள்ளன. இதேபோல் குடியாட்சியில் மக்கள் சுதந்திரம் கட்டற்ற, வரம்பில்லாப் போக்கில் (licence) நுழைந்து அழிந்து விடாதபடி தடுக்கப்படுதல் வேண்டும். இளைஞர்களின் விளையாட்டு முறைகளில் புதுமைகள் தோன்றி, அதன் மூலமாக அரசியலில் அழிவைத் தரும் தீவிர நிலைகள் தோன்றாமல் தடுக்கும்பொருட்டு, விளையாட்டு முறைகளும் கண்காணிக்கப்படுதல் வேண்டும்.

சமத்துவம் என்ற கோட்பாடும் (equality) பிழையில்லாமல் யாவராலும் விளங்கிக் கொள்ளப்படுதல் வேண்டும். குடியாட்சி அரசாங்கத்தின் ஆதாரமாக இருக்கும் இக்கோட்பாடும் **முழுமை யான அல்லது வரம்பற்ற சமத்துவம் (absolute equality,) விகித அளவிலான சமத்துவம்** (proportionate equality) என இருவகைப் படும். முழுமையான சமத்துவம் இருக்கும் போது, ஒவ்வொரு குடி ஆளுக்கும் எந்த அரசாங்கப் பணியைச் செய்வதற்கும் மற்றெவ ருக்குமுள்ள உரிமை இருக்கும். ஒவ்வொருவருடைய தகுதிக்கும் ஏற்ற அளவில் அரசாங்கப் பணியைச் செய்வதற்கு இருக்கும் உரிமையே விகித அளவிலான சமத்துவம் ஆகும். அதீனியக் குடியாட்சி அரசாங்கப் பணிகளுக்குத் திருவுளச் சீட்டுத்தேர்வு முறையின்மூலம் (choice by lot) ஆட்களை அமர்த்தியது முழுமை யான சமத்துவம் ஆகும். எனவே விகித அளவிலான சமத்துவ முறை ஏற்படுவதற்கு, திருவுளச் சீட்டு முறையோடுகூடத் தேர்தல் முறையையும் (election) சேர்த்துக் கையாளுதல் வேண்டும்.

பிளேட்டோ வகுக்கும் (நடைமுறைக்கேற்ற) ஆட்சி அமைப்பு

பிளேட்டோ வகுக்கும் ஆட்சி அமைப்பிலே பின்வரும் பகுதிகள் இருக்கின்றன: (1) 37 பேர் கொண்ட சட்டங்களின் காவலர்கள் (guardians of the laws); (2) படை அலுவலர்கள்; (3) 360 உறுப்பினர் கொண்ட ஆலோசனை மன்றம்; (4) குடிமக்கள் யாவரையும் உறுப்பினராக உடைய மக்கள் மன்றம்; (5) மக்கள் அடங்கிய நீதிமன்றம், அதற்கு உரிய செயல்முறை விதிகள், மேல் முறையீட்டுக்கான வழிகள்; (6) சட்டங்களைத் திருத்தம் செய்வதற் காக ஒரு மன்றம். சட்டங்களின் காவலர்கள், படையில் அலுவல் செய்யும் குடிமக்களால் 3 நிலைகளில் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். காவலர்கள் 50 ஆண்டுகள், அல்லது அதற்கு மேலும் வயது உடையவர்களாக இருத்தல் வேண்டும்; இவர்கள் 70 வயது அடைந்ததும் பதவியிலிருந்து விலகவேண்டும். நாட்டு அரசாங்கம் முழுவதையும் இவர்கள் கண்காணித்து, ஆலோசனை வழங்கு வார்கள். இராணுவ அலுவலுக்குத் தக்கவர்கள் பரிந்துரை செய்யப்படும் போது (recommend) அவர்களை இக்காவலர்கள் தேர்ந்தெடுக்கின்றனர். 360 உறுப்பினரை உடைய மன்றத்தைத் திருவுளச் சீட்டுமுறையும், தேர்தலும் கலந்த ஒரு முறையின் மூலம் அமைத்தல் வேண்டும். இது மக்கள் மன்றத்தின் முடிவான தீர்மானத்துக்கு வைக்கப்படும் எந்த விஷயத்தையும் முன்னதாக ஆய்வு செய்கிறது. நீதி வழங்கும் பணியில் எல்லாக் குடிமக் களுக்கும் பங்கு இருந்தபோதிலும், தேர்ந்தெடுக்கப்பட்ட நீதிபதிகளடங்கிய நீதிமன்றத்துக்கே தலைமையான நீதி அதிகாரம் இருக்கும். சட்டங்களைத் திருத்துவதற்கான தீர்மானங்களைச்

செய்யும் மன்றத்தில் சட்டத்தின் காவலர்களும், வயதில் முதிர்ந்த 10 உறுப்பினரும், பண்பில் உயர்ந்த சமயக் குருமாரும், கல்விப் பயிற்சி முறையை நடத்தும் நீதிபதிகளும், முதியோருக்குச் சமமான எண்ணிக்கையுள்ள இளைஞரும் இருக்கவேண்டும்; இது இரவில் கூடியிருந்து சட்டங்களை ஆய்வுசெய்யும்.

பிளேட்டோ கூறும் சட்டத் தொகுப்பு

வாழ்வின் எல்லாத் துறைகளையும்பற்றிய விதிகளடங்கிய சட்டத் தொகுப்பு ஒன்று எழுதப்படுதல் வேண்டும். இதில் குற்றங்களின் வகைகள், ஒப்பந்தங்களைப் பற்றிய சட்டவிதிகள், இறுதி விருப்பப் பத்திரம் (testament). வணிகம், சூனிய வித்தை, அடிமைகளை நடத்தும் முறை, புதையல்கள், ஈமச்சடங்குகள், வேளாண்மை, மணமுறிவு முதலியவைபற்றிய விதிகள் கூறப்பட வேண்டும். ஒவ்வொரு விதிக்கும் நியாயமும், காரணமும் அதில் எடுத்துக் காட்டப்படவேண்டும். இவ்வாறு இருந்தால் சட்ட விதிகளுக்குக் கட்டுப்படுமாறு மக்களைத் தூண்டவும், மீறுதலுக்குத் தண்டனைகளை அளிக்கவும் கூடும். சட்டங்களுக்கான விவரங் களெல்லாம் அநுபவம் மிக்க ஆட்சி அலுவலரால் வகுக்கப்பட வேண்டும். மேலும் எழுத்து வடிவத்தில் இல்லாத சட்டங்கள் எனப்படும் மக்களுடைய வழக்கங்களை எழுதப்பட்ட சட்டங்களால் மாற்ற இயலாது. எனவே இளைஞர்களுடைய கல்விப் பயிற்சியில் கவனம் செலுத்துதல் வேண்டும்.

பிரிவு 6 : பிளேட்டோவின் கோட்பாடுகளைப்பற்றிய மதிப்பீடு

மேலை நாட்டினருடைய முதலாவது அரசியற் சிந்தனையாள ராகிய பிளேட்டோ தம் கோட்பாடுகளை வரைந்த பின்னர் இன்று வரை இருபத்து நான்கு நூற்றாண்டுகள் கழிந்துவிட்டன. அவர் கூறிய சில வகைப் பொதுவுடைமைக் கருத்துகளும், அவருடைய அரசியல் கோட்பாடுகளுக்கெல்லாம் ஆதாரமாக அமைந்த கிரேக்க நகரரசு முறையும் கால மாறுதல்களில் நிலைத்து நிற்க இயலாமல் மறைந்து விட்டன. அவர் கிரேக்க அரசியல் நிறுவனங்களை ஆராயும்போது, அவர் சில கோட்பாடுகளை வகுத்தார். அவற்றில் ஏதேனும் குறைபாடு காணப்படுமாயின், அது அவர் காலத்திய நகரரசு முறையின் வாயிலாகவே விளக்கப்படுதல் வேண்டும். இந் நிலையில் 'அவர் வகுத்த கோட்பாடுகளெல்லாம் கிரேக்க நகரரசு என்ற வரம்புக்குள்தான் செயல்படக் கூடியவை.'[1] அவருடைய கருத்திலே, அரசாங்கம் என்பது உயர்தர அறிவும், தன் ஒழுங்கும் உடைய ஒருசிலருடைய கையில்தான் இருக்க வேண்டும். குடிமக்கள்

[1] W. A. Dunning.

வணிகத்திலோ, வேளாண்மையிலோ ஈடுபடாமல் இவற்றை அடிமைகளுக்கும், அயலவருக்கும் விட்டு விடவேண்டும். பெரும்பொருள் ஈட்டுவதோ, வல்லரசாக ஆக்குவதோ மக்களுக்கும், அரசாங்கத்துக்கும் ஏற்ற குறிக்கோள்களல்ல. அரசில் குடிகளின் எண்ணிக்கையே 5040க்கு மிகாமலும், குறையாமலும் இருக்கவேண்டும். இத்தகைய பிளேட்டோவின் கருத்துகளெல்லாம் ஏற்றுக்கொள்ளப் படவில்லை. வில்லியம் ஆர்ச்சிபால்ட் டன்னிங்க் என்ற ஆசிரியர் கூறுவதாவது :—

> 'கி.பி. பத்தொன்பதாம் நூற்றுண்டு வரையில் நகரரசுக்குரிய பிளேட்டோவின் போக்கை ஒட்டியே அரசியற் சிந்தனையாளர்கள் எண்ணினர். ஆனல் அப்போது மிகப் பெரிய எண்ணிக்கையில் குடிமக்கள் வாழும் நாட்டு அரசுகள் தோன்றவும், சிந்தனையாளர்கள் பிளேட்டோவின் நகரரசுப் போக்கை விடுத்து, அவருடைய கோட்பாடுகளைப் புதிய நாட்டு அரசுமுறைக்கு ஏற்ப ஏற்றுக் கொண்டனர்.'

இத்தகைய ஒரு சில குறைபாடுகள் பிளேட்டோவின் கோட்பாடுகளில் காணப்பட்டாலும், அவருடைய பெரும்பாலான கோட்பாடுகள் எக்காலத்துக்கும் யாவராலும் ஒப்புக்கொள்ளப் படுதற்குரிய உண்மைகளைக் காட்டுகின்றன.

(1) கிரேக்க நகரரசு என்ற அமைப்பைப் பின்னணியாக வைத்து அவர் சிந்தித்தாலும், அதில் இலட்சிய அரசுக்குரிய இயல்புகளடங்கிய கோட்பாடுகள் காணப்படுகின்றன. அவர் கூறும் இராணுவப் பயிற்சிமுறை, தனியார் சொத்துரிமை நீக்கம், ஒரு பெண்ணுக்குப் பல கணவர் முறை, வலியற்ற முடமான குழந்தைகளை அழிந்து போகும்படி விடுதல், தங்கம், வெள்ளி முதலியவற்றை விடுத்தல், வணிகம், வேளாண்மை முதலியவற்றைக் குடிமக்கள் வகுப்பிலிருந்து நீக்குதல் ஆகியவை எல்லாம் ஒப்புக் கொள்ளப் படவில்லை; அவரே அவற்றை மாற்றி எழுதினர். இலட்சிய அரசில் குடிகளுக்கு இருக்கவேண்டிய கல்வி அறிவுப் பயிற்சிக் கோட்பாடு எக்காலத்துக்கும் எந்த அரசாங்கத்தாலும் ஏற்றுக் கொள்ளத்தக்கதாகும். 'அறிவுடையோரே ஆளுதல் வேண்டும்; ஆட்சியின் நோக்கம் குடிகள் எல்லாருடைய நலனையும் காப்பதாக இருத்தல் வேண்டும்,' என்ற கருத்தே இலட்சிய அரசின் மையக்கருத்து ஆகும். 'எதுவுமே வரம்புமீறிய வளர்ச்சியின் காரணமாகத் தனக்கு நேர் எதிர்ப்பான போக்கைத் தோற்றுவிக்கும்,' என்ற விதியை வைத்து, அவர் அரசாங்க வகைகள் மாறுவதைக் குறிப்பிடுகிருர். இந்தக் கோட்பாடு இன்றும் காணப்படும் உண்மையே ஆகும்.

(2) சட்டத்தின் இன்றியமையாமையை ஒப்புக் கொண்ட பிளேட்டோ, சட்டத்தின் ஆட்சி என்ற இக்காலக் கோட்பாட்டுக்கும், குடியாட்சிக் கோட்பாட்டுக்கும் ஆதாரம் அமைத்துள்ளார். அரசாங்கம் மக்களின் மீது வலுக்கட்டாயத்தின் காரணமாக அமைந்திராமல், அவர்களுடைய ஒப்புதலைப் பெற்ற சட்டத்தின் ஆட்சியாக இருத்தல் வேண்டும் என்ற கோட்பாடு, இக்காலத்தவரால் ஏற்றுக்கொள்ளப் படத்தக்க குடியாட்சிக் கோட்பாடே ஆகும். இதுவே, 'அரசாங்கம் என்பது அரசருக்கும் குடிகளுக்கும் இடையே ஏற்பட்ட ஓர் ஒப்பந்தத்தின் மீது அமைந்துள்ளது,' எனப் பிற்காலத்தில் ஹாப்ஸ், லாக், ரூஸ்ஸோ போன்றோரால் வகுக்கப்பட்ட ஒப்பந்தக் கோட்பாட்டுக்கு **(Contract Theory)** ஆதாரம் ஆகும்.

(3) இதே போல் பிளேட்டோ கூறும் பல கருத்துகள் பிற்கால ஐரோப்பிய அரசியற் சிந்தனையாளருடைய கோட்பாடுகளுக்கு ஆதாரங்களாக அமைந்துள்ளன. பயன்வழிக்கோட்பாடு **(Utilitarian Theory)** என்று ஜான் ஸ்டுவர்ட் மில் என்ற சிந்தனையாளர் வகுத்த கோட்பாட்டிற்கு ஆதாரம் பிளேட்டோ கூறிய இலட்சிய அரசின் நோக்கமே ஆகும். பிளேட்டோ மனித உடம்போடு அரசை ஒப்பிட்டுக் கூறிய சில கருத்துகள், செயின்ட் தாமஸ் அக்வினஸ், ரூஸ்ஸோ, பிளான்ட்ச்லி, ஹெகல், ஹெர்பர்ட் ஸ்பென்சர், T.H. கிரீன் முதலிய சிந்தனையாளர்கள் பிற்காலத்தில் அரசின் உடல் ஒப்புமைக் கோட்பாட்டை **(Organic theory of the state)** வரைவதற்கு ஆதாரமாக அமைந்தன. காரல் மார்க்ஸ் பத்தொன்பதாம் நூற்றாண்டில் வரைந்த பொதுவுடைமைக் கோட்பாட்டிற்குப் பெருமளவு ஆதாரம் பிளேட்டோ வகுத்த பொதுவுடைமைக் கோட்பாடே ஆகும். மனித இயல்பை ஆராய்ந்து அவர் தமது இலட்சிய அரசிற்கான கோட்பாடுகளை முதலில் ('ரிபப்ளிக் எழுதிய காலத்தில்) வகுக்காவிட்டாலும், பின்னர் அவர் கூறும் ஆட்சி இயல்புபற்றிய கோட்பாடுகளெல்லாம் ஒப்புக் கொள்ளத் தக்க உண்மை பெற்றுள்ளன. அவர் தமது மூன்றுவது நூலில் செல்வர்களுடைய நலனையும், குடியாட்சியாளர்களுடைய நலனையும் இணக்கமாக அமைத்துச் சட்டங்களின் வாயிலாக நல்ல அரசின் இயல்புகளை வகுத்தார்; இதனைப் பின்பற்றியே அரிஸ்டாட்டில் தம் கோட்பாடுகளை வகுத்தார்.[1]

இவ்வாறு தமக்குப் பிற்பட்ட காலத்தவர் பலருடைய அரசியல் கோட்பாடுகளுக்கும் ஆதாரங்கள் பலவற்றைத் தம் கோட்பாடுகளில் அமைத்தவரென்று பிளேட்டோ ஒரு நிலையான இடத்தைப் பெறுகிருர்.

[1] G.H. சபைன் கூறும் கருத்து, (A History of Political Theory).

இயல் மூன்று

அரிஸ்ட்டாட்டில்

(கி.மு. 384—கி.மு. 322)

பிரிவு 1: அரிஸ்ட்டாட்டிலின் வாழ்க்கை வரலாறு

மேலைநாட்டு அரசியல் கோட்பாடுகளை வகுத்தவருள் பிளேட்டோவுக்கு அடுத்தநிலையில் உள்ளவரும், பிளேட்டோவினால் மிக்க அறிவாளியென்று பாராட்டப்பட்டவரும் ஆன அரிஸ்ட்டாட்டில், ஆதென்சுக் கருகிலுள்ள ஸ்ட்டஜைரா (Stagira) என்ற ஊரில் கி.மு. 384ஆம் ஆண்டில் பிறந்தார். அவருடைய தந்தை மாசிடோனியா நாட்டின் அரசரான இரண்டாம் அமின்ட்டாஸ் என்பவருடைய அரசவை மருத்துவராகப் பணிசெய்தார். அரிஸ்ட்டாட்டில் தமது பதினேழாவது வயதில் ஆதென்ஸ் நகரரசுக்கு வந்து, ஐசோக்ரேட்டஸ் என்ற ஆசிரியரிடத்தில் கல்விபயின்றார். பிளேட்டோ சிசிலித் தீவிலிருந்து ஆதென்சுக்குத் திரும்பிவந்ததும் கி.மு. 364-ஆம் ஆண்டில் அவரிடத்தில் அரிஸ்ட்டாட்டில் மாணவராகச் சேர்ந்து 17 ஆண்டுகள், அதாவது கி.மு. 347வரை பயின்றார். பிளேட்டோவின் மெய்யறிவு ஆற்றலினால்ஈர்க்கப்பட்ட இவர் கற்பனையாக ஆராயும் வாழ்க்கையே (life of speculation) முழு இன்பத்தையும் அளிக்கக் கூடியது என்று கருதினார். பிளேட்டோவின் மறைவுக்குப்பின் அரிஸ்ட்டாட்டில் சில காலம் ஏஜியன் கடலின் வடகிழக்குக் கரையிலுள்ள அஸ்ஸாஸ், மைற்றிலீன் முதலிய இடங்களில் வாழ்ந்தார். கி.மு. 342ஆம் ஆண்டில் அரிஸ்ட்டாட்டில் மாசிடோனிய நாட்டின் தலைநகரான **பெல்லா** (Pella) என்ற ஊருக்குப்போனார். அங்கு அவர் அந்நாட்டின் அரசரான இரண்டாம் பிலிப் என்பவரால், அவ்வரசருடைய மகனை அலக்சாண்டருக்கு ஆசிரியராக அமர்த்தப்பட்டார். நாகரிகமற்ற, முரட்டுப் பழக்க வழக்கங்களையுடைய மக்கள் வாழ்ந்தநாட்டின் அரசரான இரண்டாம் பிலிப்,

ஆதென்சின் ஆசிரியர்களேயும், அதீனியர்கள் கலே, இலக்கியம் முதலியவற்றில் அடைந்திருந்த முன்னேற்றத்தையும் மதித்துப் போற்றினர்; எனவே அவர் அரிஸ்ட்டாட்டிலேத் தம் மகனுக்கு ஆசிரியராக அமர்த்தினர். உலக நாகரிக வளர்ச்சியில் முன் னேற்றம் காணுவதற்கான தொண்டுகள்செய்த அரிஸ்ட்டாட்டி லுடன் அலக்சாண்டர் தொடர்புகொண்டது தற்செயலாக நடை பெற்ற ஒரு செயலே ஆகும். இலக்கியம், மொழி, உயிரியல், பயிரியல் முதலிய கலேகளே அரிஸ்ட்டாட்டில் அலக்சாண்டருக்குப் பன்னி ரண்டாண்டுகள் கற்றுக்கொடுத்தார். கி.மு. 335ஆம் ஆண்டில் அரிஸ்ட்டாட்டில் ஆதென்சுக்குத் திரும்பிவந்து **லீசியம்** (Lyceum) என்ற ஒரு கழகத்தை நிறுவினர். இதில் உள்ள தோட்டத்தில் இவர் தம்முடைய மாணவர்களுடன் நடந்துகொண்டே கற்பித்ததனுல் இவருடைய கல்விக் கழகத்தை நடமாடும் கழகம் (Peripatetic School) என்று குறிப்பிட்டனர்.[1] முற்பகலில் இவர் தம் மாணவர் களுக்குத் தத்துவப் பிரச்சினைகளே ஆய்வுசெய்து கற்றுக்கொடுத்தும், பிற்பகலில் சாதாரணப் பிரச்சினைகளேப்பற்றிப் பொதுமக்களுக்குச் சொற்பொழிவாற்றியும் வந்தார். இவ்வாறு இவர் தமது வாழ்நாளின் கடைசி 12 ஆண்டுகளேக் கழித்தபோதுதான், அவருடைய மாணவ ராகிய அலக்சாண்டர் கிரீஸ், ஆசியாமைனர், எகிப்து, சிரியா, பாரசீகம், ஆப்கானிஸ்தானம், நடு ஆசியா, வடமேற்கு இந்தியா ஆகிய நாடுகளேயெல்லாம் வென்று பேரரசராக வந்தார். அலக் சாண்டர் பாரசீகத்தை வென்றவுடன் ஏறக்குறைய ஒரு மில்லியன் டாலர் மதிப்புள்ள பொருளேத் தம்மாசிரியரான அரிஸ்ட்டாட்டிலுக்கு வெகுமதியாக வழங்கினர்; மேலும் அவர் தாம் வென்ற நாடுகளில் காணப்பட்டதும், கிரீசில் காணப்படாததுமான புதிய செடிவகை, புதிய விலங்குவகை ஆகியவற்றைத் தம்மாசிரியருக்கு, அவருடைய ஆய்வுக்குப் பயன்படுமாறு அனுப்பினர். அலக்சாண்டர் தமது 33வது வயதில் — கி.மு. 323இல் — காலமானர். அதற்கு அடுத்த ஆண்டில் அதாவது கி.மு. 322இல் — அரிஸ்ட்டாட்டில் யூபோயா நாட்டில் சால்சிஸ் என்ற ஊரில் இறந்தார். கிரேக்க மரபாகிய 'அஞ்சாத சுய சிந்தனே என்னும் இயல்பைக் காப்பாற்றியவர் அரிஸ்ட்டாட்டில்' (one who upheld the fine Greek tradition of fearless freedom of thought) என்று இவரைக் கிரேக்க வரலாற்று ஆசிரியர் J.B. பியூரி புகழ்ந்துரைக்கிருர்.

அரிஸ்ட்டாட்டில் எழுதிய நூல்களும் வகைகளும்

அரிஸ்ட்டாட்டில் எழுதி உலகத்துக்கு அளித்துள்ள நூல் களேயும், அவற்றின் வகைகளேயும் நாம் காணும்போது அவர் ஒரு பல்கலேப் புலவர் என்ற பட்டத்துக்கு முற்றிலும் தகுதியானவர்

[1] The New Ecuador Encyclopeadia

என்று எவரும் ஒப்புக்கொள்ளுவர். தொடக்கத்தில் இவர் பிளேட்டோவைப்போல ஒரு பொதுவான இலட்சியக் கருத்தை மையமாக வைத்துக்கொண்டு மனித வாழ்வின் சமுதாய, பொருளாதார, அரசாங்கத் துறைகளிலுள்ள செயல்முறைகளையும், நிறுவனங்களையும், கொள்கைகளையும் ஆராய்ந்தார். தொடக்கத்தில் இவ்வாறு கற்பனை ஆராய்ச்சியாக இவருடைய போக்கு இருந்தாலும் பின்னர் இவர் பல்வேறுமுறைகளை ஆராய, ஆராய அவை நடைமுறையில் எவ்வகையான காரண, காரியத் தொடர்பான விதிகளில் அமைந்துள்ளன என்று அறிகின்ற அறிவியல்முறையைக் (scientific method) கையாளலானுர். இவ்வாறு இவர் காரியத்திலிருந்து காரணத்தை அறியும் தருக்கமுறையை (inductive logic) நன்கு வகுத்துவைத்தார். இதன் விளைவாகப் பல்வேறுவகையான பல நூல்களை இவர் எழுதினுர்.

> ‘அரிஸ்ட்டாட்டிலின் மனவளர்ச்சி முதலில் பிளேட்டோவினுடைய கற்பனை ஆராய்ச்சியில் தொடங்கிப் பின்னர் அறிவியல் ஆராய்ச்சியில் முடிந்தது.’[1]

அவர் எழுதிய நூல்களின் வகைகளைப் பின்வருமாறு கூறலாம்:

தருக்கம் அல்லது அளவைநூல் (Logic).
ஒழுக்கவியல் (Ethics)
பேச்சுக்கலை (Rhetoric).
செய்யுள் இயல் (Poetics).
பௌதிகம் (Physics).
தத்துவம் அல்லது மெய்யறிவு (Metaphysics or Philosophy).
அரசியல் (Politics).
உளவியல் (Psychology).
விலங்குகளின் வரலாறு (History of Animals).
கால இயல் (Meteorology).[2]
அரசியலமைப்புகள் (The Consititutions).

இலக்கியத் திறனுய்வுமுறைக்கும் உரிய சில ஆதாரமான விதிகளையும் இவர் வகுத்துள்ளார். புதிய நாடுகள், புதிய மக்கள், அவர்களுடைய நாகரிகங்கள், புதிய எண்ணங்கள், புதிய பயிரினங்கள், புதிய விலங்கினங்கள் ஆகியவற்றை அறிவதனுல்

[1] G. H. Sabine, A History of Political Theory.

[2] The New Ecuador Encyclopeadia.

பயனுண்டு என்று இவர் கருதினர். 'அரசியலமைப்புகள்' எனப்படும் நூலில் இவர் தம் காலத்தில் காணப்பட்ட பல்வேறுவகையான 150க்கும் மேற்பட்ட அரசாங்க அமைப்புகளை ஆய்வுசெய்து வகைப் படுத்தியுள்ளார்.

அரிஸ்ட்டாட்டில் ஐரோப்பிய அருங்கலைகளுக்கு ஆற்றியுள்ள அரும்பணிகளைப்பற்றிக் கீழ்வருமாறு சுருக்கிக் கூறுவர் : [1]

(1) இயற்கைப் பொருள்களைப்பற்றிய அறிவியல் கலைகளை (natural sciences) முதன்முதலில் வகுத்தவர் அரிஸ்ட்டாட்டில்.

(2) மனித உறுப்பு அமைப்புகளின் தனிப்பட்ட இயல்புகளை ஆதாரமாக வைத்து, அவர் ஒழுக்க இயல், அரசியல் தத்துவத்தை வரைந்தார்.

(3) தருக்கநூலில், 'சிலாஜிஸம்' (Syllogistic) என்ற விவாத முறையை (அதாவது ஒரு பொதுக்கோட்பாட்டிலிருந்து ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சியைப்பற்றி முடிவுகூறும் முறையை) அரிஸ்ட்டாட்டில்தாம் முதன்முதலில் வகுத்தார்.

(4) எப்பொருளிலும், அதன் வடிவத்துக்கும் (form) உட்பொருளுக்கும் (matter அல்லது சாரத்துக்கும்) வேறுபாடு உண்டு என்று அவர் கூறினர்.

(5) உலகம் முதலிய அண்டகோளப் பொருள்களைப்பற்றிச் சிந்தித்து, அவர் கடவுள் ஒருவர் உண்டு என்ற உண்மையை நிறுவினர்.[2] அவர் கருத்தின் சுருக்கம் :-ஒவ்வொரு பொருளுக்கும் முடிவு அல்லது முடிவான காரணம் (finite cause) ஒன்று உண்டு; பல முடிவான காரணங்களையும், கடந்தநிலையில் முடிவு இல்லாத ஒன்று, ஒரு காரணப்பொருள் அல்லது கடவுள் உண்டு.

அரிஸ்ட்டாட்டிலின் தத்துவக் கோட்பாடுகளே பிற்காலத்தில் செயின்ட் தாமஸ் அவிக்னஸ், ஸ்பைனேசா, டெஸ்க்கார்ட்டஸ்

[1] The New Ecuador Encyclopaedia.

[2] அரிஸ்ட்டாட்டில் கிறிஸ்துவின் பிறப்புக்கு முற்பட்டகாலத்தில் வாழ்ந்தவராகையால், கிரேக்கர்களுடைய புராதனச் சமய நெறிகளைப் பின்பற்றியவர். கிறிஸ்தவ சமயநெறி ஐரேப்பாவில் பரவுவதற்குமுன்னர், அம்மக்களிடையே இருந்த நெறிகளெல்லாம் கிறிஸ்தவநெறிக்குப் புறம்பான சமயமெனப் (Pagan - பேகன்) பட்டன. அரிஸ்ட்டாட்டிலும் ஒரு பேகன் நெறியாளரேயானுலும் கடவுளுண்மையைப் பிற்காலத்தில் கிறிஸ்வ நெறியாளரும் வியக்கும்வண்ணம் தருக்கமுறையில் நிறுவியிருப்பது அறிந்து போற்றத்தக்கது.

பிரான்சிஸ் பேக்கன் (1561-1628), இம்மானுவல் கான்ட் முதலிய தத்துவ ஆசிரியர்கள் வகுத்த கோட்பாடுகளுக்கு ஆதாரமாக இருந்தன.[1]

இவர் பின்பற்றிய தருக்கமுறை 'ஒரே வகையான பல நிகழ்ச்சிகளிலிருந்து அவற்றுக்கு அடிப்படையான பொதுவிதியை வகுத்தல்' (Inductive method) எனப்படும்; இந்த முறையிலுள்ள 5 நிலைகள் பின்வருமாறு :

(1) ஒரே மாதிரியான இயல்புடைய நிகழ்ச்சிகளுக்கு அல்லது பொருள்களுக்குப் பொதுவான விதி அல்லது விதி அனுமானமாகக் கொள்ளப்படுதல்;

(2) இந்த அனுமானத்தின்பேரில் விரிவாகச் செய்திகளைச் சேகரித்தல்;

(3) செய்திகளைக் காரிய — காரணத் தொடர்புகளின் அடிப்படையில் வகைப்படுத்தல்;

(4) தொடர்புகளின் அடிப்படையில் பொதுவான விதிகள் வகுக்கப்படுதல்;

(5) இவ்விதிகள் செயல்படக்கூடுமாயின் நடக்கக்கூடிய செயல்கள் இவை என முன்னரே கூறுதல்.

அரிஸ்ட்டாட்டிலின் கோட்பாடுகள்

அரிஸ்ட்டாட்டில் தம் ஆசிரியராகிய பிளேட்டோவைப் போலவே தமது சுயசிந்தனை ஒன்றையே துணையாகக்கொண்டு, அரசியல், சமுதாயக் கேள்விகளை ஆய்வுசெய்யத் தொடங்கினுர். ஆனுல் இந்த முறையானது அவர் நடைமுறையில் செயல்பட்டுவந்த அரசியல், சமுதாய நிறுவனங்களையும், கருத்துகளையும் நேராகக் கண்டு ஆராய்ந்தறியவும், சில பொதுவிதிகளை வகுக்கவும்கூடிய அறிவியல் முறையில் அவரைக் கொண்டுபோய்விட்டது. பிளேட்டோ கற்பனையாக அணுகி இலட்சிய அரசின் இயல்புகளைக் கருத்துகளாகத் தொகுத்துக்கூற, அரிஸ்ட்டாட்டில் நடைமுறையில் செயல்பட்ட அரசியலமைப்புகளை ஆராய்ந்து இலட்சிய அரசினியல்புகள் எவ்வளவிற்கு அவற்றில் காணப்பட்டன என்று கூறினுர்.

1 கிறிஸ்தவ நெறியாளரான செயின்ட் தாமஸ் அக்வினுஸ் அரிஸ்ட்டாட்டிலின் தருக்கமுறையை முற்றிலும் ஏற்ற காரணத்தால், அவர் 'ஒரு கிறிஸ்தவ அரிஸ்ட்டாட்டில் (a Christian Aristotle)' என்று அழைக்கப்பட்டார்.

இவர் தம் காலத்தில் கிரீசிலும், கிரேக்கரல்லாத மற்ற நாடுகளிலும் நடைமுறையிலிருந்துவந்த 150க்கும் கூடுதலான அரசியலமைப்புவகைகள் (constitutions) எவ்வாறு செயல்பட்டன என்று ஆராய்ந்து எழுதினர்; இந்நூலில் இவர் ஆதென்ஸ் நகரரசின் அரசியலமைப்பைப்பற்றி எழுதியுள்ள செய்திகள்தாம் முழுமையாகக் கிடைத்துள்ளன; மற்ற அரசுகளைப்பற்றி முழு விவரங்கள் கிடைக்கவில்லை. எனவே இவருடைய அரசியல் கோட்பாடுகளைக் கூறும் இவருடைய நூல்களுள் ஒன்று '**அரசியலமைப்புகள்**' (Consitutions) என்பதாகும். இன்னொரு நூலில் இவருடைய அரசியல் கோட்பாடுகள் கூறப்படுகின்றன. அதுவே இவர் எழுதிய '**அரசியல்**' (The Politics) என்ற நூல் ஆகும். இந்த நூலில், அவர் தாம் கண்டு ஆராய்ந்த அரசியலமைப்புகளிலிருந்தும், வேறுவகையாகவும் சில பொதுவான கோட்பாடுகளை வகுத்தார். இவ்விரு நூல்களிலும் பல்வேறு அரசியல் கருத்துகளைப்பற்றி அரிஸ்ட்டாட்டில் வகுத்த கோட்பாடுகளைக் காண்போம்.

பிரிவு 2: அரசியல்நூலின் சிறப்பு

எல்லா மக்களுக்கும் நன்மைபயக்கும் பொதுவான கோட்பாட்டை வகுத்தல் இயலாது; யாவருக்கும் பொருந்தக்கூடிய, நலன் பயக்கும் ஒரு கோட்பாடு இல்லை. நலன்பயப்பது அல்லது நன்மை அளிப்பது என்றவகையில் தோன்றும் கோட்பாடுகள் சமுதாயத்துக்குச் சமுதாயம் வேறுபடுகின்றன. மனிதனுக்கு உயர்தர நன்மைதருவது எது என்று எடுத்துக்காட்டக்கூடியது அரசியல் நூல் ஒன்றே ஆகும்; எவ்வாறெனில், மனிதன் நலன்பெறுவது என்பது, அவனிடத்தில் இயற்கையிலேயே அடங்கியுள்ள மன, உடல் ஆற்றல்கள் எல்லாம் முழுமையான வளர்ச்சிபெற்றுச் செயல்படும் போதுதான் ஏற்படுகிறது; அவ்வாறு அவன் தன்னுடைய ஆற்றல்களை வளர்க்கவும், அவற்றைச் செயல்களில் ஈடுபடுத்தவும் வேண்டுமானல், அவன் தன்னேடொத்த மக்களுடன் வாழ்தல் வேண்டும்; இத்தகைய சமுதாய வாழ்க்கையும் **நகரரசு** என்ற சமுதாய அமைப்பில்தான் (polis) கைகூடும். எனவே தனி ஆளின் நலன் அல்லது நன்மைபயக்கும் வாழ்க்கை என்பது அரசின் நலன் அல்லது நன்மை என்பதனேடு இணைந்துள்ளது. இவ்வகையாகப் பார்க்கும்போது, அரசைப்பற்றிக் கூறுகின்ற அறிவியல்நூல் (Science), மனிதரை ஒரு தனி ஆளாகக் கருதி ஆய்வுசெய்தும், அரசாங்கத்தின் இயல்பைப்பற்றிக் கூறியும் சிறப்பாக உதவி செய்கிறது.

அரசின் இன்றியமையாமை என்ற கோட்பாடு

அரிஸ்ட்டாட்டில் தாம் எழுதிய '**அரசியல்**' (The Politics) என்ற நூலின் முதற்பிரிவில் அரசு, குடும்பம் (State, family) ஆகிய சமுதாய அமைப்புகளைப்பற்றிக் கோட்பாடுகள் சிலவற்றை வகுக்கிறார். அதிலேயே அரசின் தோற்றத்தைப்பற்றியும், அதன் இன்றியமையாமையை அல்லது தேவையைப்பற்றியும் கோட்பாடுகளை அவர் கூறுகிறார்.

அரசு என்பது (State) மனிதர்களடங்கிய கூட்டவகைகளில் எல்லாம் (human associations) மிக உயர்தரமான வடிவத்தில் அமைந்த மனிதக் கூட்டவகை ஆகும். குடி ஆட்கள் நிறைந்த தொகுதியே அரசு ஆகும்.[1]

கால அடிப்படையில் அரசு என்ற சமுதாய அமைப்பானது, குடும்பம், கிராமம் என்ற மற்ற மனிதக் கூட்டவகைகளுக்குப் பிற்பட்டே தோன்றிற்று என்றாலும், தத்துவவகையாகப் பார்க்கும்போது, அரசு என்பதற்குத்தான் முதல் இடம் இருக்கவேண்டும்.

குடும்பம் என்ற மனிதச் சமுதாயம் அல்லது குழு, மனித இனம் வளர்வதற்காக, தழைத்திருப்பதற்காக, ஓர் ஆணும் பெண்ணும் சேர்ந்துவாழும் காரணத்தினாலும், மனித வாழ்வுக்கு வேண்டிய பொருள் முதலிய் தேவைகளைப் பெறும்பொருட்டு ஆண்டான்—அடிமை என்றநிலையில் இருவர் ஒன்றுசேர்வதனாலும் தோன்றுகிறது. பல குடும்பங்கள் இவ்வாறு தத்தம் தேவைகளை நிறைவு செய்துகொள்ளும்பொருட்டு ஒன்றுசேர்வதனால், **கிராமம்** என்ற (village) சமுதாய அமைப்புத் தோன்றுகிறது. பல கிராமங்கள் ஒரே அரசாங்கத்தின்கீழே இணைந்துவருவதன் மூலமாகத் தன்னிறைவு பெறக்கூடிய அளவும், தன்மையும் உடைய ஓர் **அரசு** (State) தோன்றுகிறது. இவ்வாறு 'அரசு' என்ற மனிதச் சமுதாய அமைப்பானது, மனிதர்களுடைய இன்றியமையாத தேவைகளை நிறைவு செய்யவேண்டிய கட்டாயமான நிலைமையில் தோன்றி, மக்கள் முழுமையான நல்ல வாழ்க்கையை அடைதல் வேண்டுமென்ற நோக்கத்துக்காக நீடித்து இருந்துவருகிறது.'[2]

மேற்கூறிய கோட்பாட்டிலிருந்து அரசின் இன்றியமையாமை பற்றிய கோட்பாடு பெறப்படுகிறது. மனிதன், தனது நோக்கமாகிய

[1] குடி ஆள்'என்பதற்கு அரிஸ்ட்டாட்டில் வகுக்கும் இலக்கணமும் அடுத்துக் கூறப்படுகிறது.

[2] The Politics.

'முழுமையான நல்வாழ்வைப் பெறுதல்' 'என்பது அவன் அரசில் இருந்தால்தான் நிறைவேறும். இந்த நோக்கம் எல்லா மனித ரிடமும் இருக்கிறது; எனவே இந்த நோக்கம் நிறைவேறும் பொருட்டு மனிதர் அரசில் வாழும் இயல்போடு இருக்கின்றனர். ஆகையால் 'மனிதன் ஓர் அரசியல் தன்மையை (அதாவது அரசில் வாழும் தன்மை) உடைய ஒரு பிராணி ('a political animal') ஆவான்.' ஆகையால் 'தன்னைப்போல ஏனைய மனிதர்களோடு அரசில் வாழாதவர், அல்லது வாழ்வதற்குத் தேவை எதுவும் இல்லாதவர், ஒன்று விலங்கினத்தைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும்; அல்லது கடவுள் இனத்தைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும்.' [1]

அரிஸ்ட்டாட்டில் கூறும் அரசின் இன்றியமையாமைக் கோட் பாட்டைப்பற்றி அரசியல் ஆசிரியர் W.A. டன்னிங் என்பவர் கூறும் கருத்துப் பின்வருமாறு :—

> 'அரசு என்ற சமுதாய அமைப்பில் இல்லாமல், இயற்கை நிலை (State of Nature) என்ற ஒரு நிலைமையில் மனிதர் வாழ்ந்தனர், என்பதாகப் பிற்காலத்தில் (17, 18ஆம் நூற்றாண்டுகளில்) எழுந்த அரசியல் கோட்பாட்டுக்கு அரிஸ்ட்டாட்டிலின் கருத்தில் ஆதாரம் இல்லைஎன்பது தெளிவாக விளங்குகிறது.' [2]

பிரிவு 3: அரசு, குடும்பம் முதலிய அமைப்புகளின் இயல்புகள்

அரசில் அரசனால் செலுத்தப்படும் அதிகாரமானது, குடும்பத் தில் அதன் தலைவனாகிய தந்தையினால் செலுத்தப்படும் அதிகாரத்தி லிருந்து வழக்கத்தில் தோன்றியதாகும். இவ்வாறிருந்தாலும், அரசும், குடும்பமும் வெவ்வேறானவை.

குடும்பத்தில் அதன் தலைவன் தன் மனைவிக்குக் குடும்ப நலத்துக்காக ஆலோசகர் என்ற முறையில் அவள்மீதும், தனது நலனுக்காக அல்லாமல் குழந்தைகளின் நல்வளர்ச்சிக்காக அவர்கள்மீதும் ஓர் அரசனைப்போல அதிகாரம் செலுத்துகிறான். ஆயினும் அவன் அவர்கள்மீது வரம்பற்ற எதேச்சாதிகாரியாக அதிகாரம் செலுத்துவதில்லை. ஆனால் குடும்பத்தலைவன் அடிமைகள்

[1] The Politics.

[2] W.A. Dunning, A History of Political Theories, பக்கம் 56.

உள்ளிட்ட தன் உடமைகள்மீதோ தனது நலன் ஒன்றுக்காக மட்டுமே, முழு எதேச்சாதிகாரமும் செலுத்துகிறான். எனவே குடும்பத்தலைவன் குடும்பத்திலுள்ள அனைவர்மீதும் ஒரே வகையான அதிகாரம் செலுத்தவில்லை; அரசனோ நாட்டிலுள்ள குடிமக்கள் அனைவர்மீதும் ஒரே வகையான வேறுபாடில்லாத அதிகாரத்தைச் செலுத்துகிறான்.

குடும்பம் என்பது உலகவாழ்வின் தேவைகளுக்காகச் செயல்பட்டு இயங்குகிறது. அரசு என்ற அமைப்பானது மக்களுடைய ஒழுக்க, அறிவியல் தேவைகளை நிறைவுசெய்வதற்காக இருக்கிறது. அரசில் அரசனுடைய அதிகாரம் குடிமக்கள் யாவர் மீதும் ஒரேமாதிரியாக இருப்பதற்குக் காரணம், குடிகள் யாவரும் கிரேக்க இனத்தைச் சேர்ந்த சுதந்திர மக்களாகவும், குடும்பத்தில் தலைவனுடைய அதிகாரமும் ஒரேமாதிரியாக இல்லாததற்குக் காரணம், அதில் அறிவுவளர்ச்சிபெறாத மற்ற இன மக்கள் அடிமைநிலையில் இருப்பதும் (கிரேக்கக்) குழந்தைகள் மன, உடல் வளர்ச்சிபெறும்வரையில் தந்தையின் வரம்புடைய அதிகாரத்துக்குட்பட்டிருக்க வேண்டிய நிலைமையும் ஆகும்.[1]

பிரிவு 4: குடி ஆள் (Citizen) என்பதுபற்றிய கோட்பாடு

குடி ஆள் என்பவர் யார் என்றால், சட்டமன்ற உறுப்பினராகவோ, நீதிபதியாகவோ, அரசாங்கத்தில் பணிசெய்வதற்கு அரசியலுரிமைகளைப் பெற்றிருப்பவரே (Political rights) ஆவார். எனவே அரசியலுரிமைகளைப் பெற்றிருக்கும் மக்கள் நிறைந்த கூட்டமே அரசு ஆகும்.

இவ்வாறு அரசியலுரிமைகளைமட்டும் பெற்றுள்ளவரே குடி ஆட்களெனக் கருதுவது தற்காலக் கருத்து ஆகாது. குடி ஆள் என்பவருக்கு இக்காலக் கருத்தின்படி சில திட்டவட்டமான சமுதாய உரிமைகளும் (Civil rights), அரசியல் உரிமைகளும் இருத்தல்வேண்டும்.

சமுதாய உரிமைகளாவன:- உயிர்வாழும் உரிமை, வேலை செய்யும் உரிமை, ஆள்பாதுகாப்புச் சுதந்திரம் (personal safety and freedom), நற்பெயருடன் இருக்கும் உரிமை, சமய உரிமை,

[1] அரிஸ்டாட்டில், நகரரசு, கிரேக்க இனத்தின் உயர்வு, அடிமை நிலையின் இன்றியமையாமை ஆகியவற்றை ஆதாரமாக வைத்து வகுத்த கோட்பாடுகள் குறைபாடுடையவை; இவை காலப்போக்கில் மறைந்துவிட்டன; இது அரிஸ்டாட்டிலைப் பற்றிய மதிப்பீட்டில் குறிப்பிடப்படுகிறது.

கல்விபெறும் உரிமை, பேச்சுரிமை, கூட்டம்கூடும் உரிமை, கருத்துகளை நூல்வடிவில் வெளியிடும் உரிமை, கழகம் அமைக்கும் உரிமை; குடும்ப உரிமை, சொத்துரிமை, சமுதாய வாழ்வுக்கான வசதிகளைப்பெறும் உரிமை முதலியவைகள்.

அரசியல் உரிமைகளாவன:- தேர்தல்களில் வாக்களிக்கும் உரிமை, வேட்பாளராகப் போட்டியிடும் உரிமை, அவ்வப்போது தேர்தல்கள் நடத்தப்படுதற்கான உரிமை, தகுதிகள் உடையவருக்கு அரசாங்க அலுவல்களைப் பெற்றிருக்கும் உரிமை, அரசாங்கச் செயல்களைக் கண்டனம் செய்யும் உரிமை முதலியவை.

இக் காலத்தில் இத்தகைய உரிமைகளெல்லாம் ஒருவருடைய பிறந்த சாதி, ஊர் முதலியவற்றைப்பொறுத்து அமைந்திருக்க வில்லை. ஆனால் அரிஸ்ட்டாட்டில் குடிமை அல்லது குடி ஆள் என்பதைப்பற்றிக் கூறிய கோட்பாடு, அக்காலத்து எல்லா ஹெலனிய அல்லது கிரேக்க மக்களுடைய கருத்தைப்போலவே, நகரரசு என்ற சமுதாய அமைப்பையும், கிரேக்க இனம் என்ற உணர்வையும் ஆதாரமாகக்கொண்டு, சிறிய கிரேக்க நகரரசில் குடிகளாகக் கருதப்பட்டவர்களெல்லாம் நேரடியாக நகரரசின் ஆட்சியில் பங்குகொள்ளக்கூடிய அரசியலுரிமைபெற்ற கிரேக்க இனமக்களையே உணர்த்திற்று. அரசியல் அல்லாத வேளாண்மை, தொழில், வாணிபம் முதலியவற்றைச் செய்தவர்களும், கிரேக்க இனத்தைச் சேராத மற்ற இனமக்களும், அடிமைகளும் குடிகள் அல்லர். அரிஸ்ட்டாட்டிலின் கருத்துப்படி குடி ஆள் என்பவர் ஆளுவதற்கும், ஆளப்படுவதற்கும் தகுதிகளைப்பெற்று, அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான பொருள்களை ஈட்டும் தொழில் களினின்றும் விடுபட்டிருக்கவேண்டும். பிறருடைய ஆணை களுக்குக் கட்டுப்பட்டுத் தொழில்செய்யும் இயல்புடையவர் நாட்டிற்கு இன்றியமையாதவரேயாயினும், அவர் குடி ஆள் ஆக மாட்டார். இத்தகைய கருத்து இக்காலக் குடிமைபற்றிய கருத்துக்கு ஒத்துவரவில்லை என்பது தெளிவு.

பிரிவு 5 : அடிமைநிலைமை (Slavery) பற்றி அரிஸ்ட்டாட்டிலின் கோட்பாடு

'அடிமைநிலை என்பது இயற்கையிலேயே தோன்றிய ஓர் அமைப்பு' என்று அக்காலத்திய கிரேக்கர் கொண்டிருந்த கருத்தை அரிஸ்ட்டாட்டில் ஒப்புக்கொள்ளுகிறார். 'ஹெலனியரே, காட்டுமிராண்டிகள் எனப்பட்ட (barbarians) ஹெலனியரல்லாத, நாகரிகமற்ற மக்களைவிட அறிவில் 'உயர்ந்தவர்,' என்பதே

கிரேக்க அரசியற் கருத்துகளுக்குப் பின்னணியாக அமைந்திருக்கிறது. அரிஸ்ட்டாட்டிலின் கோட்பாட்டின்படி, கிரேக்கர், கிரேக்கரல்லாத மற்ற இனமக்களையே அடிமைகளாக வைத்துக் கொள்ளவேண்டும். போரில் வெற்றிபெற்றவருடைய அறிவுத் திறமையை அவருடைய வெற்றி காட்டுவதால், போரில் சிறை பிடிக்கப்பட்டவர்களை அடிமைகளாக வைத்துக்கொள்ளுதல் கூடும். மனித வாழ்வின் தேவைகளை நிறைவுசெய்வதற்காகச் சில அலுவல்களைச் செய்யுமாறு ஏவல் அல்லது ஆணையிடும் தொழிலும், ஏவியவற்றைச் செய்யும் பணிமுறையும் இருக்கின்றன. ஏவும் திறமையைப் பெற்றிருப்பதிலும், ஏவியவற்றைச் செய்யும் திறமையைப் பெற்றிருப்பதிலும் மக்கள் வேறுபடுகின்றனர். சிலர் மற்றவரை ஏவும் அலுவலைத் திறம்படச் செய்வதிலும், சிலர் ஆணைகளை விளங்கிக்கொண்டு, செயல்படுத்துவதிலும் திறமைபெற்றுள்ளனர். இருவரும் இணைந்து செயல்படுதலே குடும்பவாழ்வுக்கு இன்றியமையாதது. பல அடிமைகள் தம் தலைவர்களைவிட அறிவாற்றலில் உயர்ந்தவராக இருந்தாலும், ஹெலனியரே மற்ற இனத்தாரைவிட அறிவிலுயர்ந்தவரென்று அரிஸ்ட்டாட்டில் கருதுகிறார்.

பிரிவு 6 : அரிஸ்ட்டாட்டில் கூறும் சில பொருளாதாரக் கோட்பாடுகள்

தனியார் உடைமை—உரிமை சரியானதும், விரும்பத்தக்கதும் ஆகும்.

குடும்பத்தவர் தொழில்களைப்பற்றிக் குறிப்பிடுகையில் அரிஸ்ட்டாட்டில் கூறுவதாவது :

பொருளீட்டுதல் என்பது மிக உயர்தரமான தத்துவக் கருத்து அன்று; ஒரு தொழில் மனித வாழ்வுக்குத் தேவையானதே ஆயினும், அது குடும்ப அலுவல்களுள் மிகத் தாழ்ந்த அலுவல் ஆகும். ஆடு, மாடு வளர்த்தல், வேளாண்மை செய்தல், வேட்டையாடுதல், மீன்பிடித்தல், கொள்ளையடித்தல் முதலியவை பொருளீட்டுதலில் இயற்கையான முறைகள்—அதாவது, உயிர் வாழ்வுக்கு இன்றியமையாத அளவுக்கு ஈட்டுதல் — ஆகும். பணத்துக்காகப் பொருளைவிற்கும் வாணிபமுறை, வட்டிக்குப் பணப்பொருளை விடுதல் ஆகியவை இயற்கைக்கு மாறானவை; ஏனெனில் இவற்றில் வாழ்வின் தேவைக்கான பொருட்களை அளிக்காமல், பணமே பணத்தைத் தருகிறது. பண்டமாற்று முறை இயற்கைக்கு மாறானது அன்று. எனவே பொருளீட்டும் தொழிலும் வாழ்வுக்குவேண்டிய பொருள்களை அடைய உதவி

செய்து, குடும்பத்தவரைப் பண்புடையவர்களாக ஆக்கவேண்டுமே யன்றி, அவர்களைப் பணக்காரர்களாக ஆக்குவதாக இருத்தல் கூடாது என்பது அரிஸ்ட்டாட்டிலின் கருத்தாகும். பணத்தைக் குவிப்பதற்கு வழிசெய்வனவெல்லாம் இயற்கைக்கு மாறானவை என்றும் அரிஸ்ட்டாட்டில் கருதுகிறார்.

ஒரு பொருள் வாழ்க்கைக்குப் பயன்படுவதால் அதற்கு உண்டாகும் மதிப்புக்கும் (value in use), அது வேறொன்றுக்கு அதாவது பணத்துக்காக மாற்றப்படுவதால் உண்டாகும் மதிப்புக்கும் (value in exchange) வேறுபாடு உண்டு என்று அரிஸ்ட்டாட்டில் இக்காலத்தவரைப்போலக் கருதினார். ஆனால் அவர் மூலதனம் அல்லது முதற்பொருள் (Capital) என்பதன் முக்கியத்துவத்தை ஒப்புக்கொள்ளவில்லை; வட்டித் தொழிலைப்பற்றிப் பழங்காலத்தவர் கொண்டிருந்த கருத்தை அவர் கொண்டிருந்தார்; மேலும் கொள்ளையடித்தலை ஓர் இயற்கையான பொருளீட்டும் முறையாக அவர் கூறுவதும் சரியன்று.

பிரிவு 7 : பொதுவுடைமைபற்றி அரிஸ்ட்டாட்டிலின் கருத்து

பிளேட்டோ தமது ‘இலட்சிய அரசில்’ கூறும் பொதுவுடைமைக் கருத்துகளை அரிஸ்ட்டாட்டில் மறுத்துக் கூறுகிறார். அரசில் ஆளுவோராகவும், ஆளப்படுபவராகவும் வேறுபட்ட இயல்பிலுள்ளவர்களுக்கிடையே முரண்பாடு இல்லாமல், நல்லுறவுகளை வளர்ப்பதே ஒற்றுமை (Unity) ஆகும். ஒருவன் தன் பிள்ளைகளை இனம்கண்டுகொள்ளாம லிருப்பானாகில், எல்லாக் குழந்தைகளிடத்தும் ஒத்த அன்புசெலுத்துவானென்றும் எனவே தனியார் குடும்ப உரிமைக்குப் பதிலாகப் பொதுவுடைமைக் குடும்பமுறை இருத்தல் வேண்டுமென்றும் பிளேட்டோ கூறினார். ஒன்றினிடத்து அன்பு என்ற உணர்ச்சி தோன்றுதற்கு இருக்கும் ஒரே ஆதாரம் எது என்றால், அதனைத் தனது சொந்தமான, அல்லது நேரடியான உடைமையாகக் கொள்ளும் முறைதான். எனவே, ஒருவன் தன் குழந்தைகளை இனம்கண்டு கொள்ளாதவாறு குடும்ப வாழ்வு சொத்துடைமையாக ஆக்கப்பட்டால், அவன் எல்லாக் குழந்தைகளிடத்தும் அன்புசெலுத்துவதற்குப் பதிலாக எந்தக் குழந்தையிடத்தும் அன்புசெலுத்தாத மனநிலைமை தோன்றும். பொதுவான சொத்துடைமை முறையில் ஆட்களுக்கிடையே மாறுபாடுகளும், சண்டைகளும் பெருமளவில் தோன்றி, மிகவும் துன்பம் மக்களுக்கு ஏற்படுமாகையால், பொதுவான சொத்துடைமை முறையினாலும் ஒருமைப்பாடு தோன்றாது என்று அரிஸ்ட்டாட்டில் கூறினார். எனவே பொது

வுடைமைக் கருத்தைக் கைவிட்டு, அரசின் ஒற்றுமை உணர்வு (unity of the State) என்ற கருத்தை ஆதாரமாக வைத்து, அரிஸ்ட்டாட்டில், அரசியலமைப்பின் உறவுகளை ஆய்வுசெய்து, முறைப்படுத்திக் கூறுகிறார். ஸ்பார்ட்டா, கிரீட், கார்த்தேஜ் முதலிய நகரரசுகளின் அரசியலமைப்புகளையும், ஹிப்போடாமஸ் (Hippodamus), பேலியஸ் (Phaleas), சோலன் (Solon) முதலிய அரசியலறிஞர்களுடைய திட்டங்களையும் அவர் நுட்பமாக ஆராய்கிறார்.

பிரிவு 8 : அரசியலமைப்பின் இலக்கணமும் இறைமை அதிகாரத்தைப்பற்றி அரிஸ்ட்டாட்டிலின் கோட்பாடுகளும்

அரசாங்கத்தின் தொழில்களெல்லாம் நிறைவேற்றப்படுதற்கு உரிய பொதுவான முறையே **அரசியலமைப்பு** (Constitution) எனப்படும். எனவே அரசியலமைப்பு என்ற முறையில், அரசாங்கத்தின் பல்வேறு உறுப்புகளின் (organs) — அதாவது சட்டம் இயற்றும் உறுப்பு, நிர்வாக உறுப்பு, நீதிமன்றம் முதலியவைகளின் — எண்ணிக்கையும், அவற்றுக்கிடையேயான தொடர்புகளும், அவை இயங்குவதற்கான முறைகளும், அரசாங்கத்தின் தலைமையான அதிகாரம் அல்லது இறைமை (Sovereignty) இருக்கும் இடமும் கூறப்பட்டுள்ளன. நடைமுறையில் ஆட்சியை நடத்தும் குழுவே இறைமை அதிகாரி (sovereign) ஆவார். ஆகையால் இத்தகைய இறைமை அதிகாரம் ஒரு நாட்டில் எவரிடத்து இருக்கிறது என்பதைப்பொறுத்து அந்த நாட்டின் அரசியலமைப்புப் பாகுபாடு செய்யப்படும். எடுத்துக்காட்டாக இறைமை அதிகாரம் மக்களிடத்து இருக்குமானால், அந்நாட்டின் அரசு **குடியாட்சி** அல்லது மக்களாட்சி (democracy) என்று வகைப்படுத்திக் கூறப்படும்.

ஓர் அரசின் தன்மையை அல்லது இயல்பை வெளிப்படுத்துவது அதனுடைய அரசியலமைப்பே ஆகும்; எனவே அரசின் முக்கியமான, சாரமான இயல்பாக அதனுடைய அரசியலமைப்பு இருக்கிறது. அரசியலமைப்பின் முக்கிய இயல்பும் இறைமை அதிகாரம் ஆகும். எனவே ஓர் அரசின் அரசியலமைப்பு மாறும்போது, அவ்வரசினுடைய தனித் தன்மையும் அல்லது இன இயல்பும் (identity) மாறுதல் அடைகிறது. அதாவது ஓர் அரசு, குடியாட்சியிலிருந்து செல்வச் சிறுகுடியாட்சியாகவோ, எதேச்சாதிகார ஆட்சியாகவோ மாறும்போது, அதனுடைய இன இயல்பும் மாறுதல் அடைகிறது.

மக்கள் ஒருவருக்கொருவர் உதவிசெய்தல் என்ற நோக்கத்திற்காக மட்டுமல்லாமல், தம் இனத்தாரோடு கூடிவாழ்தல் என்ற

நோக்கத்திற்காகவும் அரசு தோன்றுகிறது. என்றாலும், அரசிய லமைப்பின் மூலமாக மக்களுக்குக் கிடைக்கும் நன்மைகளும் சமுதாய இணைப்பை வலுவாக்கிக் காப்பதில் மிகவும் பயனுள்ளவை யாக இருக்கின்றன. ஒவ்வொருவரும் ஆளப்படவும், ஆளவும் தகுதி பெற்றிருப்பதனால் இந்தத் தகுதியின் மூலமாக யாவரும் பயனடை யும் பொருட்டு, அரசாங்க அலுவலிலே ஒவ்வொருவருக்கும் முறை வைத்துப் பங்கு இருக்குமாறு அரசியலமைப்பு வகுக்கப்பட வேண்டும்.

அரசியலமைப்பின் சாரமான இறைமை அதிகாரம் அரசில் இருக்குமிடத்தை அரிஸ்ட்டாட்டில் ஆய்வுசெய்கிறார். குடியாட்சி யில் ஒத்த சுதந்திர உரிமையுடைய குடிமக்களடங்கிய தொகுதியில் இறைமை அதிகாரம் காணப்படுகிறது.

அரசின் நோக்கங்கள் உயிர்வாழ்வுக்கான நிலைமைகளைக் காப்பது, பொருள்சேர்ப்பது, வணிக நோக்கங்களை நிறைவேற்று வது ஆகியவைமட்டும் அல்ல. உயிர்வாழ்தலுக்கானவற்றை நிறைவேற்றுதலோடுகூட, பண்பு அல்லது திறன் உள்ள வாழ்வுக் கானவற்றை நிறைவேற்றுவதும் அரசின் நோக்கம் ஆகும். நல் வாழ்வு அல்லது பண்புமிக்க வாழ்வு என்பதற்கு (life of virtue) அரிஸ்ட்டாட்டில் கொள்ளும்பொருள், நல்லியல்புகளை உடைய வாழ்வு என்று ஆகாமல், பண்டையக் கிரேக்கர் கருதிய **'திறன் மிக்க வாழ்வு'** (life of ability) என்ற கருத்தை உணர்த்துகிறது. எனவே 'எவரிடத்து அரசியலதிகாரம் இருத்தல் வேண்டும்?' என்ற கேள்விக்கு விடையை அரிஸ்ட்டாட்டில் கூறும்போது, **'முழுநலன் அல்லது பண்புடைய வாழ்க்கையை ஏற்படுத்துவதற்கு வேண்டிய வற்றையெல்லாம் செய்பவர் எவரோ, அவரிடத்தில்தான் தலைமை யான அதிகாரம் கொடுக்கப்படுதல் வேண்டுமே தவிர, உயர்குடிப் பிறப்போ, செல்வமோ, சுதந்திரமோ பெற்றிருப்பதுதான் இறைமை யைப் பெறுதற்கான அளவுகோலாக ஆகாது'** என்று கூறுகிறார். மக்கள் யாவரிடத்திலும் உள்ள மொத்தமான பண்பு அல்லது திறன் எந்தத் தனி ஆளிடத்திலுமுள்ள திறனிலும் உயர்ந்தது; ஆகையால் குடிமக்கள் யாவரும் அடங்கிய தொகுதியே இறை மையின் இருப்பிடமாக இருத்தல் வேண்டும். செல்வச் சிறுகுடி யினர் ஆட்சியில் (oligarchy) சாதாரணமக்கள் வெளியேற்றப்படு வதால், செல்வரடங்கிய சிறிய ஆளும்கூட்டத்திலேயே இறைமை அதிகாரம் இருக்கிறது. சாதாரண மக்கள் ஆட்சியில் செல்வர்கள் வெளியேற்றப்படுவதால், சாதாரண மக்களிடமே இறைமை அதி காரம் இருக்கிறது. இவ்வாறு அரிஸ்ட்டாட்டில் தம் காலத்தில் கிரேக்க நகரரசுகள் இருந்த நிலைமையை ஆதாரமாக வைத்து இறைமை அதிகாரத்தின் இருப்பிடத்தைக் கூறுகிறார். அரசாங்

கத்திடமே இறைமை அதிகாரம் இருப்பதாக அவர் கூறவில்லை. முக்கிய அதிகாரம் எதுவும் இல்லாத ஒன்றுகவே அரசை அரிஸ்ட் டாட்டில் கருதுகிருர். எனவே 'அரசு என்பது ஒரு முழு அதி காரமுடைய சமுதாய அமைப்பு' என்ற இக்காலத்தவருடைய கருத்தை அவர் ஒப்புக்கொள்ளவில்லை. எனவேதான் அவர் குடிமக்களின் தொகுதியே இறைமையைப் பெற்றிருக்கிறது என்று கூறுகிருர். மக்களிடத்தில் இறைமை அதிகாரம் இருக்கிறது என்பதனுல், எல்லா மக்களுக்கும் எல்லா அரசாங்க அலுவல் களையும் ஏற்றுநடத்தும் தகுதி உண்டு என்று பொருள்படாது; இதன்பொருள், மிக முக்கியமான பிரச்சினைகளெல்லாம் மக்கள் யாவராலும் தீர்மானிக்கப்படுதல் வேண்டும் என்பதே ஆகும். நடைமுறையில் இது எவ்வாறு செயல்படுகிறதென்றல், மக்கள் மன்றம் ஆட்சி அலுவலர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களுடைய தவருன செயல்களைக் கண்டுபிடித்துக் கண்டனம் செய்வதன்மூலம் (criticize) வெளிப்படுகிறது. குடிமக்கள் யாவரும் ஏறக்குறைய ஒரேபடித்தான (uniform) திறமை உடையவர்களாக இருப்பதால், நடைமுறையில் அவர்களே இறைமை அதிகாரத்தோடு செயல் படத் தகுதிபெற்றுள்ளனர். குடிமக்கள் பலருள்ளும், சிலர் அல்லது ஒருவர் மற்றெல்லாரையும்விட மிக்க திறமை உடையவராக இருக்கிருரென்றல், அவரே தருக்கமுறையாகப் பார்க்கும்போது இறைமை அதிகாரம் உடையவராகிருர். எனவேதான் அத்தகை யோரிடமிருந்து அரசைப் பாதுகாக்கும்பொருட்டு, அவரை **நாடு கடத்தல்** (ostracism) என்ற ஒரு முறை குடியாட்சி நாடுகளில் கையாளப்படுகிறது. ஏனெனில் நடைமுறையில் இறைமை அதி காரியாக இருக்கும் குடிமக்கள் தொகுதியானது, எவரொருவரும் சட்டமுறையான இறைமை அதிகாரியாவதற்கு அனுமதிக்காது.

பிரிவு 8a : சட்டத்தின் ஆட்சி அல்லது தலைமை

இறைமை அதிகாரமானது, ஒருவரிடத்திலோ, சிலரிடத்திலோ, மக்கள் தொகுதியிலோ இருந்தாலும், அதற்கும் மேலாகச் சட்டத் தின் இறைமை அதிகாரம் இருத்தல்வேண்டும் (Souvereignty of law). சட்டம் எப்பொழுது முழுமையாக இல்லாமல், குறைவுடைய தாக இருக்கிறதோ, அப்பொழுதுதான் மனிதரின் அதிகாரம் முழுமையாக இருக்கலாம். நீதி கிடைக்கக்கூடாத அளவுக்குச் சட்டம் சிலசமயம் கடுமையானதாக அல்லது இறுக்கமானதாக (rigid) இருக்கலாம்; அப்படி இருந்தாலும், சட்டத்தின் கட்டுப்பாடு எதுவும் இல்லாமல், மனித விருப்பத்தின் மூலமாகமட்டுமே தோன் றக்கூடிய நீதியற்ற தன்மையைவிட, வழக்கம் என்னும் சட்டம் விதிக்கிற விதிகளினுல் தோன்றும் நீதியற்றதன்மை கடுமையானது ஆகாது. எனவே சட்டத்தின் ஆட்சி அல்லது தலைமை என்பது

(Rule of Law) யாவராலும் விரும்பத்தக்கது; அது கடவுளின் ஆட்சி அல்லது அறிவின் ஆட்சியே ஆகும். மனித விருப்பத்தின் மீது அமைந்துள்ள ஆட்சியோ விலங்கின் ஆட்சியாக இருக்கும்.[1]

பிரிவு 9: அரசியலமைப்பின் வகைகள்பற்றி அரிஸ்ட்டாட்டில் வகுத்த கோட்பாடுகள் (Forms of Government)

இறைமை அதிகாரம் தங்கி இருக்கும் ஆட்களின் எண்ணிக்கைக்குத் தக்கவாறும் அரசாங்கச் செயல்கள் எந்த நோக்கத்துக்காக அல்லது குறிக்கோளுக்காகக் கையாளப்படுகின்றனவோ அந்த நோக்கங்களுக்குத் தக்கவாறும் அரசியலமைப்புகள் வகைப்படுத்தப்படுகின்றன; அல்லது பாகுபாடு செய்யப்படுகின்றன. ஆகையால் அரசாங்கத்தின் நோக்கமே, அதைத் தூயவகையானது என்றும் (Pure Form) தூய்மையற்ற, மாசுபட்ட அல்லது சிதைந்தவகையானது என்றும் (Corrupt Form) பிரித்து அறிவதற்கு அளவுகோலாக அமைகிறது. ஓர் அரசாங்கம் தன்னுடைய அதிகாரத்திலுள்ள எல்லா மக்களுடைய முழு வளர்ச்சியையும் கருத்தில் கொண்டு செயல்படுமானுல், அது தூயவகையானதென்றும், ஆளுவோருடைய நலனைமட்டும் கருத்தில்கொண்டு செயல்படுமானுல், அது தூய்மையற்ற வகையைச்சேர்ந்தது என்றும் ஒரு பொதுவான விதியை வகுத்துக்கொள்ளலாம். எனவே, குறிக்கோளுக்கு ஒத்து இருப்பதைத் தூய்மையானதென்றும், அதனின்றும் விலகியிருப்பதைத் தூய்மையற்றதென்றும் கூறலாம். இவ்வகையாகப் பாகுபடுத்திஞல் பின்வரும் அரசியலமைப்பு வகைகளைக் கூறலாம்:

அரசியலமைப்பு வகைகள்

தலைமை அல்லது இறைமை அதிகாரம்	தூய அரசாங்க வகை	தூய்மையற்ற அரசாங்க வகை
1 ஒருவரிடத்து இருந்தால் >	முடியாட்சி (Monarchy)	சர்வாதிகாரம் (Tyranny)
2 சிலரிடத்திலிருந்தால் >	உயர்குடியாளராட்சி (aristecracy)	செல்வச் சிறுகுடியாட்சி (oligarchy)
3 எல்லாக் குடிமக்களிடத்திலும் இருந்தால் >	பாலிட்டி (polity) என்ற மிதமான குடியாட்சி	குடியாட்சி அல்லது மக்களாட்சி (demoeracy)

[1] The Politics, Book III

'பாலிட்டி' (Polity) என்பது கிரேக்க மொழியில் 'அரசிய லமைப்பு' (Constitutions) என்ற பொதுவான பொருளில் வழங்கப் பெறும். இது 'குடியாட்சி' என்ற தூய்மையற்ற அரசாங்கவகைக்கு மாறான, தூய்மையான அரசாங்கவகை ஆகும்; இது குடிமக்க ளுடைய நலன் என்ற சிறந்த குறிக்கோளுக்காக மக்கள் யாவராலும் இறைமை அதிகாரம் கையாளப்படும்போது தோன்றுகிறது. எனவே அரிஸ்ட்டாட்டிலின் கருத்தின்படி, 'பாலிட்டி' என்ற அரசி யலமைப்புவகை தூய்மையானதாகவும், 'டெமாக்ரஸி' என்ற குடியாட்சிமுறை தூய்மையற்ற வகையாகவும் இருக்கின்றன.

பிரிவு 10 : பல்வேறு அரசியலமைப்பு வகைகளையும்பற்றி ஆராய்ச்சிசெய்து அரிஸ்ட்டாட்டில் கூறும் கோட்பாடுகள்

(a) முடியாட்சி

சமுதாயத்தில் திறமையைப் பொறுத்தவரையில் ஒருவர் மற்ற எல்லாரினும் உயர்ந்து விளங்குவாராயின், அந்தச் சமுதாயத்தில் அவர் சட்டத்தின் கட்டுப்பாடு எதற்கும் உட்படாமல் முடியாட்சியை நடத்தலாம். இதிலும் பரம்பரை அடிப்படையில் அரசின் தாய உரிமை (hereditary succession) இல்லாமல், தகுதி அல்லது திறமையின் அடிப்படையில் வரவேண்டும். கருத்தளவிலே இத் தகைய முடியாட்சி அரசியலமைப்பு விரும்பத்தக்கது. இருந்தாலும், நடைமுறையில் அரசுகளிலே, சிறந்த சட்ட அமைப்பின் ஆதா ரத்தில் நடைபெறுகிற, ஆட்சியே, (Constitutional Government) சிறந்த ஒற்றை ஆளின் ஆட்சியைவிட மிகவும் விரும்பத்தக்கதாக இருக்கிறது. இந்தக் கருத்துக்கு அரிஸ்ட்டாட்டில் காட்டும் காரணம் நாம் யாவரும் கருத்திற் கொள்ளவேண்டிய ஒன்று ஆகும் :

> 'ஒற்றை ஆளின் (அறிவுத்) திறமையைவிடத், தொகுதி யாக உள்ள பல மக்களுடைய திறமையே, சட்டத்துக்கு உட்பட்ட அரசாங்கத்தின் அலுவல்கள் செவ்வனே நடை பெறுவதற்கு ஏற்றதாக இருக்கிறது.'

இந்தக் கோட்பாடே பிற்காலத்தில் அரசியலமைப்புக்கு உட்பட்ட அரசாங்கக் கோட்பாடு எனவும் (Theory of Constitutional Government) எதேச்சதிகார அரசாங்கக் கோட்பாட்டுக்கு மாறான குடி யாட்சி அரசாங்கக் கோட்பாடு எனவும் (Theory of Democratic Government) போற்றி உரைக்கப்படுகிறது.

ஒற்றை ஆட்சியாளர் சிறந்த குறிக்கோளினின்று எளிதில் விலகிச்சென்றுவிடுதல் கூடும்; ஆனல் பலர் செலுத்தும் ஆட்சி

யிலோ குறிக்கோளை நெகிழவிடுதல் என்பது எளிது அன்று. எனவே கிரேக்க நகரரசு முறையைமட்டும் மனத்தில் வைத்துக் கொண்டு, அரிஸ்ட்டாட்டில், 'குறிக்கோளுக்கு ஏற்ற முடியாட்சி அமைவதென்பது தருக்கமுறைப்படி பார்த்தால், நடைமுறையில் இயலாது,' என்று கூறுகிறார். முடியாட்சிவகையின் தூய்மை யற்ற வகையாகிய சர்வாதிகார அரசியலமைப்பு, சட்டத்தின் ஆதாரத்தில் அமையாமல், வன்செயல் (Force) என்ற ஆதாரத்தில் அமைந்திருக்கிறது. அரிஸ்ட்டாட்டில் கூறும் இந்தக் கருத்து, பழங்காலக் கிரேக்க நகரரசு முறையிலும், இக்காலச் சில நாட்டு அரசு அமைப்பிலும் காணப்படும் இயல்பு ஆகும். ஆகையால், வன்செயலின்மீதமைந்த இந்த அரசியலமைப்புவகையை, அறி வியலுக்கு ஒத்த அரசியல்நூலில் கூறுதல் சரியன்று என்று அரிஸ்ட்டாட்டில் கூறி அதனை விடுத்து விடுகிறார்.

(b) செல்வச் சிறுகுடி ஆட்சி (Oligarchy)

செல்வச் சிறுகுடியினராட்சியையும், குடியாட்சியையும் வேறு படுத்திக்காட்டுவது ஆளுவோரின் எண்ணிக்கையிலுள்ள வேறு பாடுமட்டுமன்று. ஆளுவோரின் பொருளாதார நிலைதான் இவ்விரு வகையையும் வேறுபடுத்திக்காட்டுகிறது. செல்வச் சிறுகுடி யாட்சியில் செல்வர் வகுப்பு, அளவில் பெரியதும், செல்வம் இல்லா ததுமான வறியவர் வகுப்பின்மீது அதிகாரம் செலுத்துகிறது.

(c) குடியாட்சி

குடியாட்சியிலோ அளவில் பெரிய வறியவர் வகுப்பு, செல்வர் வகுப்பின்மீது அதிகாரம் செலுத்துகிறது. குடியாட்சியில் ஆளும் வறிய மக்கள் வகுப்பும் — வேளாண்மைசெய்யும் வகுப்பு, வணிகம் செய்யும் வகுப்பு, தொழிலாளர் வகுப்பு, கப்பல் தொழிலாளர் வகுப்பு என்ற நான்கில் ஏதேனுமொன்றுக்கு உரிய இயல்பை உடையதாக அமைந்து மிதமான குடியாட்சியாகவோ (moderate democracy), தீவிரமான குடியாட்சியாகவோ (extreme democracy) இருத்தல் கூடும். செல்வர் வகுப்பும் நான்கு வகைகளாகப் பிரிக் கப்படக்கூடியதாக இருக்கிறது. செல்வம் அமைந்திருக்கும் வடிவம், அதன் அளவு அது பலரிடத்துப் பரவியிருக்கும் தன்மை ஆகியவற்றைப்பொறுத்தே அரசியலமைப்பும் செயல்படுகிறது.

(d) உயர்குடியினராட்சி (Aristocracy)

ஒவ்வொரு சமுதாயத்திலும் ஆட்சித் தலைமையைக் கைப்பற்று வதற்கு நான்கு கோட்பாடுகள் போட்டியிடுகின்றன. அவை யாவன :— (1) சுதந்திர அல்லது உரிமைக் கோட்பாடு (principle

of liberty); (2) உடைமை அல்லது சொத்துக் கோட்பாடு (principle of wealth); (3) தகுதி அல்லது பண்புக் கோட்பாடு (principle of virtue); (4) உயர்குடிப்பிறப்புக் கோட்பாடு (principle of good birth). சுதந்திர, சமத்துவக் கோட்பாட்டினடிப்படையில் அரசாங்க அதிகாரம் கையாளப்படுமாயின் அவ்வரசியலமைப்புவகை குடியாட்சிவகை ஆகும். அரசாங்க அதிகாரப்பகிர்வு செல்வத்தை ஆதாரமாகப் பெற்றிருந்தால் அது செல்வச் சிறுகுடியாட்சி ஆகும். அரசியலதிகாரம் பண்பு அல்லது தகுதி (virtue or ability) என்ற கோட்பாட்டின் அடிப்படையில் கையாளப்படுமாயின் அது **உயர்குடிப் பிறந்தோராட்சி** ஆகும் (aristocracy). உயர்குடிப் பிறப்பு என்பது நெடுநாளாகப் பெறப்படும் செல்வம் தகுதி ஆகியவையேயாதலால், அதனை அரசாங்கத்துக்கு ஆதாரமான கோட்பாடாக அரிஸ்ட்டாட்டில் கூறுது விடுக்கிறுர்.

(e) ' பாலிட்டி ' என்ற மிதமான குடியாட்சிவகை (Polity)

உரிமைக் கோட்பாடும், உடைமைக் கோட்பாடும் இணைந்து எந்த அர்சியலமைப்புக்கு ஆதாரமாக இருக்கின்றனவோ அந்த அரசியலமைப்பே **மிதமான குடியாட்சி** அல்லது **பாலிட்டி** (Polity) ஆகும். இவ்வரசியலமைப்பில் அரசாங்க அலுவல்கள் பல்வேறு உறுப்புகளினிடையே (சட்டமன்றம், நிர்வாக அலுவலர், நீதி மன்றம் ஆகியவைகளிடையே) பிரிக்கப்பட்டும், அலுவலர்கள் திருவுளச்சீட்டுமுறை, தேர்தல்முறை ஆகிய இரண்டும் கலந்த கலவைமுறையில் அமர்த்தப்பட்டும் வருவர்.[1]

உரிமை, சொத்துக் கோட்பாடுகளோடு தகுதி அல்லது பண்புக் கோட்பாடும் சேரும்போது, கலவையான உயர்குடியாளர் அரசியலமைப்புவகை (mixed constitution) தோன்றுகிறது.

பொதுவான சில விதிகளை ஆதாரமாக வைத்துக்கொண்டும் அரசியலமைப்புகளுக்கு இடையேயான வேறுபாடுகளை அரிஸ்ட்டாட்டில் கூறுகிறுர். ஒவ்வோர் அரசாங்கத்திலும் மூன்று இன்றியமையாத கூறுகள் இருக்கின்றன. ஒன்று பொதுக்காரியங்களைப் பற்றி யாவரும் கூடிப்பேசி முடிபெடுக்கும் உறுப்பாகிய சட்டமன்றம்; இரண்டு எடுக்கப்பட்ட முடிபுகளுக்கேற்பச் செயல்படும் நிர்வாக அலுவலர் குழு; மூன்று மக்களுக்குச் சட்டத்தை ஆதாரமாகக் கொண்டு நீதிவழங்கும் மன்றம். இம்மூன்று உறுப்புகளின் அமைப்பு, அலுவல் ஆகியவற்றின் வேறுபாடுகளைப்பொறுத்து

[1] Polity என்று அரிஸ்ட்டாட்டில் அழைப்பது நேர்முறை மக்களாட்சி என்று கூறலாம் இன்றைய மக்களாட்சியை அவர் எதிர்முறை மக்களாட்சி என்றே கருதுகிறுர் இதையே மாக்களாட்சி என்றும் அழைக்கலாம். மக்களாட்சி என்பது இன்று நல்ல பொருளைக் கொடுக்கும் ஆட்சியாக அமைந்திருக்கிறது.

அரசியலமைப்புவகைகள் வேறுபடுகின்றன. சட்டத்துக்குக் கட்டுப் படாதவகையில் தீவிரமாக இயங்கும் குடியாட்சியிலே நாட்டின் பொதுவான எல்லா அலுவல்களையும்—அதாவது, போர், அமைதி, அயல்நாட்டு உறவு, சட்டம் இயற்றுதல், இறப்பு, நாடு கடத்துதல், சொத்துகளைப் பறித்தல் முதலிய தண்டனைகளுக்குரிய வழக்குகளை ஆய்ந்து தண்டனை வழங்குதல், நிர்வாக அலுவலர் களைத் தேர்ந்தெடுத்தல், அவர்களுடைய அலுவற்காலச் செயல்களைப் பரிசீலித்தல் முதலிய எல்லா அலுவல்களையும் — நாட்டின் குடி மக்கள் யாவரும் அடங்கிய மக்கள் மன்றமே செய்கிறது. நிர்வாக அலுவலரெல்லாம் திருவுளச் சீட்டுமுறையின் மூலமாகவே தேர்ந் தெடுக்கப்படுகின்றனர். எல்லாக் குடிமக்களும், எல்லா அலுவல் களையும் நிரப்புதற்காக நடைபெறும் திருவுளச் சீட்டுத்தேர்வு முறையில் (lot) கலந்துகொள்வதற்கு உரிமை உடையவர். தீர்ப்பு வழங்கும் சான்றோர் அடங்கிய நீதிமன்றம் (jury court) நீதி வழங்கும் அலுவலைச்செய்கிறது. இதிலுள்ள நீதிபதிகளும் திரு வுளச் சீட்டுமுறைப்படியே குடிமக்கள் தொகுதியிலிருந்தே தேர்ந் தெடுக்கப்படுகின்றனர். எல்லாவகையான வழக்குகளும் இந்த நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு உரியவை. எனவே குடியாட்சி அரசியல் அமைப்பிலே முக்கியமான எல்லா அலுவல்களும் குடிமக்களிடத் திலேயே குவிக்கப்பட்டிருக்கின்றன. எல்லா அலுவல்களும் திரு வுளச் சீட்டுத்தேர்வுமுறையின்படி நிரப்பப்பெறும். யாவருக்கும் ஒத்த அல்லது சமமான உரிமை என்ற நிலை உறுதிசெய்யப்படும்; அரசாங்க அலுவல்களுக்கு ஊதியமும் வழங்கப்படும்.

செல்வச் சிறுகுடியாட்சியிலோ எல்லா அலுவல்களும், அளவிற்சிறிய செல்வர்களடங்கிய சிறிய வகுப்பில் குவிக்கப்பட்டும் சொத்துடைமை அடிப்படையில் அலுவல்கள் அளிக்கப்பட்டும், ஊதியம் வழங்கப்படாமல் அலுவல்கள் நடைபெற்றும்வரும்.

பிரிவு 11a: மிகச் சிறந்த இலட்சிய அரசின் இயல்புகள்பற்றி அரிஸ்ட்டாட்டில் கூறும் கோட்பாடுகள்

'மிகச் சிறந்த அரசியலமைப்பு எது?' என்ற வினாவிற்கு விடை காணும் அரிஸ்ட்டாட்டில், எல்லாவற்றிலும் மிகச்சிறந்த அரசிய லமைப்பு எது என்றுமட்டும் ஆராயாமல், நடைமுறையில் மக்களால் மிகச்சிறந்ததாக அடையக்கூடிய அரசியலமைப்பு எது என்றும், குறிப்பிட்ட சில சூழ்நிலைகளிலே சிறந்ததாக இயங்கக் கூடிய அரசியலமைப்பு எது என்றும் ஆராய்ந்து சில கருத்துகளைக் கூறுகிறார். கருத்தளவில் மிகச்சிறந்த அரசில், சிறந்தபண்பு அல்லது தகுதிபெற்றிருப்பவரே ஆளுதல்வேண்டும். சிறந்த தகுதியுடையவர் ஆளுவாராயின் முடியாட்சிதான் சிறந்தது. சிறப்

பான தகுதியுடைய ஒருசிலர் ஆட்சிசெய்வாராயின் (கலப்பில்லாத) உயர்குடி ஆட்சியே சிறந்தது.

நடைமுறையில் பார்க்கும்போது, எது சிறந்த அரசியலமைப்பு என்ருல், தீவிரமான நிலேயைத் தவிர்த்து, நடுத்தரமானவகையில் செயல்படக்கூடிய அரசியலமைப்பு எதுவோ, அதுவே சிறந்ததென்று கூறலாம். தீவிரமான நிலேகளாவன: மிக்க செல்வநிலேயும், மிக்க வறியநிலேயும் ஆம். செல்வர் செருக்குடன் வாழ்ந்து சட்டங்களுக்குக் கட்டுப்படாத நிலேயிலும், வறியவர் அடிமைமனப் பான்மையுடனும், ஆணைகளே விடுத்துச் செயலாற்றக்கூடிய திறமையின்றியும் இருப்பர். ஆகையால் எந்தச் சமுதாயத்தில் அளவுகடந்த செல்வம்படைத்த வகுப்பாரும், அளவுகடந்த வறுமையில்வாடும் வகுப்பாரும் இருக்கிருர்களோ, அந்தச் சமுதாயத்தில் நிலேயான அரசியலமைப்பு எதுவும் இயங்க இயலாது. இருசாராரும் நட்புறவு ஏதும் இன்றி இருத்தலால், எந்த அரசியலமைப்பும் இரு சாராரின் ஆதரவையும் பெற இயலாது. இவ்வாறு நடைமுறையில் மக்களுடைய பொருளாதார நிலேகளேவைத்து நாம் ஆராயும்போது **இடைத்தர வகுப்பு** (Middle Class) எந்த அரசில் செல்வருடைய வகுப்பையும், வறியவர் வகுப்பையும்விட உறுதியாக இருக்கிறதோ, அந்த அரசே மிகச் சிறந்த அரசாக இருக்குமென்று கூறலாம். அந்த நாட்டில் அல்லது அரசில் வகுப்பு அமைதியும், ஒழுங்கும் நிலேபெறத்தக்க சூழ்நிலேகள் தோன்றும்; தீவிர மாறுதல் நடைபெருமல், ஒரு நிலேயான, அல்லது உறுதியான அல்லது நிரந்தரமான நிலேமை (Stability) தோன்றும். இத்தகைய நடுவான, தீவிர நிலேகளே விடுத்த இயல்பிலமைந்திருப்பது **பாலிட்டி** (Polity) என்ற அரசியலமைப்புவகை ஆகும். இந்த மிதமான குடியாட்சியில் சுதந்திரக் கோட்பாடும், சொத்துடைமைக் கோட்பாடும் இணைந்துள்ளன. ஆகையால் இந்த அரசியலமைப்பே நடைமுறையில் சராசரியான அளவில் மிகச்சிறந்த அரசியலமைப்பு ஆகும்.

ஆயினும் இந்த அரசியலமைப்பு எல்லா வகையான சமுதாயங்களுக்கும், எல்லா வகையான நிலேமைகளுக்கும் ஏற்றதான அரசியலமைப்பு ஆகாது. சூழ்நிலேகளே எவ்வகை அரசியலமைப்பையும் மிகச்சிறந்த ஒன்ருக ஆக்குகின்றன. நடைமுறையில் இயங்கும் அரசியலமைப்பை நிலேத்துநிற்கும்படி செய்வதற்கு உதவும் இயல்பு எதுவோ, அதுவே மாறுதலே உண்டாகும் இயல்பைவிட உறுதியாக இருக்கிறது. நிலேத்திருக்கும் இயல்பை உடைய அரசியலமைப்புச் சிறந்ததென்றும், நிலேயான இயல்பே ஓர் அளவுகோலென்றும் கூறலாம். ஒரு குறிப்பிட்ட சூழ்நிலேகளில் நெடுங்காலத்துக்கு நிலேத்துநிற்கக்கூடிய அரசியலமைப்பு எதுவோ, அதுவே மற்றெல்லாவற்றையும்விட மிகச் சிறந்ததென்று கொள்ள

லாம். இவ்வகையாகப் பார்க்கும்போது செல்வர்களைவிட எண்ணிக்கையில் வறியவர்கள் கூடுதலாக இருக்கும் சமுதாயத்தில் குடியாட்சி அரசியலமைப்புச் சிறந்த வகையாக இயங்குகின்றது. அதேபோல எண்ணிக்கையில் வறியவர்களைவிடச் செல்வர்கள் குறைவாக இருந்தாலும், செல்வ மூலாதாரங்களிலும், ஆற்றலிலும் வறியவர்களைவிட எண்ணிக்கையில் செல்வர்கள் கூடுதலாக இருக்கும் சமுதாயத்தில் செல்வச் சிறுகுடியாட்சியே சிறந்த வகையாக இயங்கும். மிக்க செல்வமோ, மிக்க வறுமையோ இல்லாத நடுத்தர வகுப்பு மற்ற வகுப்பினரைவிட ஆற்றலிலும், எண்ணிக்கையிலும் உயர்ந்துவிளங்குகிற சமுதாயத்தில், **பாலிட்டி** என்ற அரசியலமைப்புவகையே சிறந்ததாக இயங்குகிறது. எனவே சமுதாயச் சூழ்நிலைகளை அளவுகோலாகக்கொண்டு, அவற்றுக்கேற்பப் பல்வேறுவகைப்பட்ட அரசியலமைப்புவகைகளை மிகச் சிறந்தவகை என்ற நிலையிலிருந்து (excellent) படிப்படியாகத் தாழ்ந்தவகைகள் என்ற முறையில் அரிஸ்ட்டாட்டில் பாகுபடுத்திக் கூறுகிறார். மிகச் சிறந்தவகையாக முதலில் குறிப்பிடவேண்டிய அரசியலமைப்புவகை,

(1) கருத்தளவுக்கு ஒத்த முடியாட்சி (ideal royalty); அடுத்த கீழ்நிலையிலுள்ள வகைகள் வருமாறு :

(2) கலப்பில்லாத உயர்குடியாட்சி (pure aristocracy). (அதாவது சுதந்திர, சொத்துக் கோட்பாடுளோடு அமையாமல் தகுதி என்ற கோட்பாட்டின்மீதுமட்டும் அமைந்த உயர்குடி ஆட்சி).

(3) கலவையான உயர்குடி ஆட்சி (mixed aristocracy). (சொத்து, சுதந்திர, தகுதிக் கோட்பாடுகளின்மீது அமைந்த உயர்குடி ஆட்சி);

(4) சுதந்திர, சொத்துக் கோட்பாடுகளின்மீது அமைந்த பாலிட்டி (Polity) என்ற ஆட்சி முறை;

(5) தீவிரநிலைகளை விடுத்த, மிதமான போக்குடைய குடியாட்சி (moderate democracy); இது பாலிட்டியை ஓரளவு ஒத்துள்ளது.

(6) மிதமான போக்குடைய செல்வராட்சி (moderate oligarchy);

(7) குடியாட்சி, செல்வராட்சி ஆகியவற்றின் இரு நடுத்தர வகைகள்;

(8) தீவிரமான போக்கிலமைந்த குடியாட்சி (extreme democracy);

(9) தீவிரமான போக்கிலமைந்த செல்வராட்சி (extreme oligarchy);

(10) சர்வாதிகார ஆட்சி (Tyranry).

பிரிவு 11b: அரிஸ்ட்டாட்டில் அரசின் குறிக்கோள்பற்றிக் கூறும் கோட்பாடுகள்

ஒருவர் தமது தனிவாழ்விலே அரசியலதிகாரத்தையோ, செல்வத்தையோ வளர்ப்பதைக் குறிக்கோளாகக் கொள்ளாமல், தம் தகுதியை அல்லது திறன்களை வளர்த்துக்கொள்ளுவதுதான் (pursuit of virtue) சிறந்த குறிக்கோளாகக் கொள்ளப்படுகிறது. இதிலிருந்து, அரிஸ்ட்டாட்டில் இலட்சிய அரசின் குறிக்கோளும் குடிமக்களுடைய தகுதியை அல்லது திறன்களை வளர்ப்பதற்கு வேண்டுவனவெல்லாம் செய்வதாக இருத்தல்வேண்டும் என்று கூறுகிறார்.

'ஒரு நாடு மற்றொரு நாட்டினரைத் தனது நலனுக்காக ஆளாமல் தனக்குக் கீழ்ப்பட்ட நாட்டின் நலனுக்காக ஆளுமாயின், அத்தகைய எதேச்சாதிகார ஆட்சியியல்பில்லாத ஆட்சி நியாயமானது,' என்று அரிஸ்ட்டாட்டில் கூறுகிறார். அதேபோல அடிமை இயல்போடுள்ள மக்களுக்கு எதிராக நடத்தப்படும் வலுச்சண்டையும் (aggrossive wars) நியாயமானதென்று அரிஸ்ட்டாட்டில் கூறுகிறார். இவ்வாறு அவர் கூறினாலும், ஒருநாடு மற்றொரு நாட்டை ஆளும் அதிகாரத்தைப் பெற்றிருப்பதால் யாதொரு சிறப்பும் இல்லை என்றும், வலுச்சண்டை மூலமாக ஒரு நாடு மற்றொன்றை வென்றுகொள்ளுதலும் சிறந்த ஒரு குறிக்கோளாக எந்த மெய்யறிவுபெற்ற ஆட்சியாளராலும் ஒப்புக்கொள்ளப்படமாட்டாது என்றும் அரிஸ்ட்டாட்டில் கூறுகிறார். எனவே, 'ஓர் அரசுக்கு இருக்கவேண்டிய சிறந்த குறிக்கோள், அதற்கு அமைதியான வாழ்வும், அதன்மூலமாக நாட்டிலுள்ள அரசியல், சமுதாய அமைப்புகளின் கூறுகளெல்லாம், யாதொரு முரண்பாடும் ஓய்வும் இன்றிச் செயல்பட்டு முழுவளர்ச்சிபெறுமாறு செய்தலும், நாடு முழுவதற்கும் முழு இன்பமும் கிடைக்குமாறு செய்தலும் ஆகும்.'

பிரிவு 11c: இக் குறிக்கோளுக்கு ஏற்ற இலட்சிய அரசு

இக்குறிக்கோளை அடைவதற்குரிய வழிகள் பல உள்ளன. அவற்றுள் ஒன்று அறிவியல்முறையாகச் சட்டம்வகுத்து மக்களின் இயல்பையும், நாகரிகத்தையும் உருவாக்குதலும் ஆகும்.

இலட்சிய அரசின் பரப்பளவு, மக்கள்தொகை, தொழில், அரசாங்க அமைப்பு ஆகியவை மேற்கூறிய குறிக்கோளை அடைவதற்கு ஏற்றதாக இருக்கவேண்டும். இலட்சிய அரசின் இயல்புகளை விளக்கும் அரிஸ்டாட்டில், தீவிரநிலைக்குகந்த போக்கைவிடுத்து, நடுத்தர இயல்பான கோட்பாட்டைக் (doctrine of means) கடைப்பிடிக்கிறார். இலட்சியப் பரப்பளவும், மக்கள்தொகையும் அது தன்னிறைவுபெறுவதற்கு ஏற்றவகையில் இருத்தல் வேண்டும். அரசாங்கத்தின் சிறந்த கண்காணிப்புக்குள் அமையக்கூடிய அளவு தான் மக்கள் தொகையாக இருக்கவேண்டும். அவர்களும் தனி வாழ்விலீடுபடாமல் நகரமாக வாழ்தல் வேண்டும்; அதாவது பொது வாழ்வில் பங்கெடுத்துக் கொள்ளுதல் வேண்டும். வெளிநாட்டிலிருந்து தேவையானவற்றைப் பெறுவதற்கு ஏற்றவாறு, நகரமும் கடலுக்கு அருகில் அமைந்தும், மக்கள் வணிக வாழ்விலும், கடல் கடந்துசெல்லும் வாழ்விலும் ஈடுபடாதவாறு கடலினின்று சிறிது விலகியும் இருத்தல் வேண்டும். மக்கள் வடக்கத்திய இன மக்களைப் போல ஊக்கமும், தறுகண்மையும் பெற்று, ஆசிய மக்களைப்போல அறிவுக் கூர்மையும் உடையவர்களாக இருக்கவேண்டும். (இங்கு அரிஸ்டாட்டில் கிரேக்க மக்களை மனத்தில் வைத்துக்கொண்டு சொல்கிறார்.) வேளாண்மை, சிறுதொழில் முதலியவை செய்வோரும், போர்வீரரும், செல்வரும், சமயக் குருக்களும், ஆட்சியாளரும் சமுதாயத்தில் இருக்கவேண்டும். இதில் முதலில் கூறப்பட்ட இரு வகுப்பாரும், நாட்டில் வாழ்பவராக இருக்கவேண்டுமே தவிர, நாட்டின் ஆட்சியில் பங்குகொள்ளும் குடிமக்களாக இருத்தல் கூடா. மற்ற வகுப்பாரே நாட்டின் குடிமக்களாக இருந்து, நாட்டின் பெரும்பகுதி நிலத்தையும் உடைமையாகப் பெற்றுப் போர்வீரர்களாகவும், ஆட்சியாளர்களாகவும், குருக்களாகவும் பணிசெய்தல் வேண்டும். இலட்சிய நகரரசில் அரசாங்கமானது குடிமக்கள் யாவருக்கும் நல்ல கல்விப்பயிற்சியை அளிக்கும் ஆசிரியராகவே பெரும்பாலும் பணியாற்றவேண்டும். மக்கள் அனைவருடைய ஒழுக்க, அறிவுப்பண்புகள் முழுவளர்ச்சிபெறுதல் மூலமாகவே, அரசியற் சமுதாயமும் நல்லபணிசெய்ய இயலும். ஒரேசீரான கட்டாயக் கல்விமுறை இலட்சிய அரசுக்கு இருக்க வேண்டிய முதல்தேவை ஆகும். கல்வி முறையைச் செயல்படுத்துவதுதான் அரசாங்கத்தின் மிக முக்கியமான அலுவல் ஆகும். அரிஸ்டாட்டில் வகுக்கும் கல்வித்திட்டம் **மனப்பண்பாடு (mental culture)** என்பதை நோக்கமாக உடையதேயன்றி, நடைமுறையில் பயன்படும் திட்டம் அன்று. உடற்பயிற்சி, இசைப்பயிற்சி முதலியவை அளிக்கப்படுதல் வேண்டும். ஏழாவது வயதிலிருந்தே கல்விப்பயிற்சி அளிக்கப்படுதல் வேண்டும். மக்களுடைய தனி வாழ்க்கையும் — திருமண வாழ்க்கை, குழந்தை பெறுதற்கான

காலம், குழந்தைப் பாதுகாப்பு முதலியவை — அரசாங்கத்தின் மேற்பார்வைக்குள் அடங்கியதாக இருத்தல் வேண்டுமென்று அரிஸ்ட்டாட்டில் பிளேட்டோவைப்போல் கூறுகிருர். இவ்வாறிருந்தால் குழந்தைகள் பிற்காலத்தில் உடல் அழகும், வலிமையும், ஒழுக்கமும், அறிவுக்கூர்மையும் உடையவர்களாகவும், சுதந்திர மக்களுக்குரிய எண்ணங்களைப் பெற்றுச் சிறந்த செயல்களைச் செய்யக்கூடியவர்களாகவும் வருவார்கள்.

பிரிவு 12a: புரட்சிகளைப்பற்றி அரிஸ்ட்டாட்டில் கூறும் கோட்பாடுகள் (Revolution)

அரசியலமைப்புகள் அடிக்கடி மாறுதலுக்கு உட்படுகின்றன; இலட்சிய அரசியலமைப்பு உட்படுவதில்லை. ஆயினும் ஹெலனியருடைய சமுதாயத்திலும், பொருளாதாரத்திலும் ஏற்படும் மாறுதல்கள், முன்னேற்றம் ஆகியவை அவர்களுடைய அரசியலமைப்பில் ஏற்படும் மாறுதல்களின்மூலம் வெளிப்படுகின்றன. இதனை அரிஸ்ட்டாட்டில் தனது அரசியல்நூலின் மூன்ருவது பிரிவில் ஆய்வுசெய்து, புரட்சிகள் ஏற்படுவதற்கான காரணங்களையும் ஆய்வு செய்கிருர்.

காரணம்

புரட்சி இயக்கங்களுக்கெல்லாம் பொதுவான ஒரு காரணமாக இருப்பது, 'யாவரும் ஒத்த உரிமையோடிருத்தல் வேண்டும்' என்றும், 'மனிதர் யாவரும் சமத்துவம் உடையவர்' என்றும் மக்களிடத்தில் காணப்படும் இயல்பான உணர்ச்சியே ஆகும்.

சமத்துவமும் **முழுமையான** (வரம்பற்ற) **சமத்துவம் (absolute equality)** எனவும், **விகிதாசாரச் சமத்துவம் (proportionate equality)** எனவும் பிரிக்கப்படும்.

பொதுமக்கள் யாவரும் ஆட்சியிலிருக்கும் ஒரு சிலருடைய உரிமைகளையும், அதிகாரத்தையும் பெறுதல்வேண்டுமென்று விரும்புதல் முழுமையான சமத்துவம் ஆகும். ஆளும் வகுப்பினர் தமது மிக்க செல்வநிலைக்கும் அல்லது திறனுக்கும் ஒத்த அல்லது ஏற்ற அளவில், மற்றெவருக்கும் இருப்பதைவிடக் கூடுதலான அளவில் அதிகாரமும், சலுகையும் பெறுதல்வேண்டுமென்று விரும்புவது விகிதாசாரச் சமத்துவம் ஆகும். சமத்துவ நிலைமையின்மீதுள்ள ஆர்வமே முடியாட்சி, உயர்குடியினராட்சி,

செல்வராட்சி, குடியாட்சி முதலிய அரசாங்கவகைகள் மாறுதல்களுக்குள்ளாவதற்குக் காரணம் ஆகும். இந்தப் பொதுவான கார்ணத்துடன் பொருமை, ஆணவம், அச்சம் முதலிய மனித உணர்ச்சிகளும் புரட்சிகளுக்குத் தூண்டுதல்களாக இருக்கின்றன.

பிரிவு 12b: புரட்சியின்மூலமாக மாறுதலுக்குள்ளாகும் சில அரசாங்கவகைகள்

புரட்சிக்கு உள்ளாகும் குடியாட்சி (Democracy)

பாலிட்டி என்ற அரசியலமைப்பின் சிதைந்த வடிவமாகிய குடியாட்சி அரசாங்கமே அடிக்கடி புரட்சிகளின் மூலமாக மாறுதலுக்கு உள்ளாகிறது. இதற்குக் காரணம் அதில் மக்களின் தலைவர்கள் (demagogues), 'மக்கள் சட்டத்துக்கும் அப்பாற்பட்டவர்கள்,' என்று அவர்களிடத்தில் அடிக்கடி எடுத்துக் கூறுவதுதான். மக்களின் தலைவர், மக்களுடைய நலனுக்காக, அவர்களுடைய நண்பனெனப் போராட்டம் நடத்திச் சர்வாதிகாரி ஆகிறார். இவ்விதமே குடியாட்சி, சர்வாதிகார ஆட்சியாகப் புரட்சியின்மூலம் மாறுகிறது. பின்னர் மக்கள்தலைவர் செல்வர்களைத் தாக்கிப்பேச, அவர்கள் தங்களுடைய நலனுக்காகப் போராட்டமோ, புரட்சியோ நடத்துகின்றனர். இவ்வாறு செல்வச் சிறுகுடியாட்சி தோன்றுகிறது.

செல்வச் சிறுகுடியாட்சி புரட்சிக்குள்ளாதல்

இதுவும் புரட்சியின்மூலம் மாறி மறைந்துவிடுவதற்குக் காரணம், ஆட்சியின் சலுகைகளைப் பெற்றிருக்கின்ற வகுப்பார்களுக்கிடையிலேயே பேராசைகளும் பிளவுகளும் தோன்றி, மறைந்துவிடுவதுதான். ஆட்சியாளர்களுக்குள்ளே ஒருமைப்பாடும், நல்லிணக்கமும் இருக்குமானால் எந்த ஆட்சியையும்—அது செல்வச் சிறுகுடியாட்சியாக இருந்தாலும்கூட—எளிதில் மாற்றிவிட முடியாது. செல்வச் சிறுகுடி ஆட்சியானது அதை ஒத்த இன்னொருவகையான ஆட்சியாக மாறுமேயன்றிச் செல்வராட்சிக்கு முற்றிலும் மாறுபட்ட வேறொருவகையான ஆட்சியாக மாறாது.

உயர்குடியினராட்சி புரட்சிக்கு உள்ளாதல்

உயர்குடியினராட்சி, திறமை அல்லது தகுதி என்ற கொள்கையினடிப்படையில் அமைந்துள்ளது. ஆயினும் திறமை மிக்க குடிமக்கள் ஆளும்போது, ஆட்சியில் தங்களுக்குப் பங்கு

வேண்டுமென்று பெறுவதற்காகச் செல்வம்மட்டுமே மிகுந்த வகுப்பார் அதில் தலையிடுவாராயின், அப்போது உயர்குடியின ராட்சி (aristocracy) செல்வச் சிறுகுடியாட்சியாக (oligarchy) மாறும்.

பாலிட்டி புரட்சிக்கு உள்ளாதல்

இதேபோலவே பாலிட்டி என்ற தூயவகைக் குடியாட்சியும் புரட்சிக்கு உள்ளாதல் கூடும். இது மக்களுடைய சுதந்திரம், செல்வம் ஆகிய இரு கோட்பாடுகளின்மீதும் அமைந்திருக் கிறது. இவ்வாட்சிவகையில் ஏழை வகுப்புமக்கள் தேவையில்லாத அளவுக்கு ஆட்சி உரிமை நோக்கத்தை வளர்த்துக்கொண்டு விடுவாராயின், இந்தத் தூயவகை ஆட்சியும் சிதைந்தவடிவ மான குடியாட்சியாக மாறிவிடுகிறது. இந் நிலையில் ஒவ்வொரு வருக்கும் உரிய உரிமைகளை வழங்கி, விகிதாசார அளவில் சமத்துவத்தை ஏற்படுத்துவதன்மூலமாகவே மாறுதல் ஏற்படாமல் நிலைபெற்றிருக்கும் தன்மையை (stability) உண்டாக்கமுடியும்.

கலவை அரசியலமைப்புகளில்தான் (mixed constitution) அடிக்கடி மாறுதல்கள் எவரும் எளிதில் கண்டுகொள்ள இயலாதபடி ஏற்படும். ஏனென்றால் இவற்றில்தான் சமுதாயப் பொருளாதார நிலைகளிலே எவராலும் எளிதில் காண இயலாத மாறுதல்கள் ஏற்படும்.

புரட்சியைத் தடுக்கவல்ல பாதுகாப்புகள்

புரட்சிகளின் காரணங்களை ஆராய்வதோடுகூட, புரட்சி களின் காரணங்கள் எந்த இயல்புடையவை என்று ஆராய்ந்து, புரட்சிகளைத் தடுக்கக்கூடிய இயல்புடைய பாதுகாப்புகளும் எவையென்று அரிஸ்ட்டாட்டில் கூறுகிறார். கலவை அரசிய லமைப்புகளிலே அரசியல் மாறுதல்களை ஏற்படுத்தக்கூடிய புதிய சூழ்நிலைகள் தோன்றுமாயின், அவற்றைத் தொடக்கத்திலேயே கண்டுபிடிப்பதில் யாவரும் கருத்தும், கவனமும் கொண்டிருக்க வேண்டும்.

உயர்குடியாட்சியிலும், செல்வராட்சியிலும், புரட்சிகள் ஏற் படாமல் தடுப்பதற்குரிய பாதுகாப்பு எதுவென்றால், அவற்றில் வாழும் கீழ்வகுப்பு மக்களைப் பரிவோடும், நட்போடும் நடத்து தலும், ஆட்சியின் சலுகைகளைப்பெற்றிருக்கும் வகுப்பார் களிடையே குடியாட்சிச் சமத்துவக் கோட்பாடானது உறுதியாகச் செயல்படும்படி செய்தலும் ஆம். மேலும் அரசியல்வகுப்பு

நிலையாக இருத்தல் வேண்டுமென்று விரும்புகிற குடிமக்களிடையே, 'அரசியலமைப்பு, புரட்சியின்மூலம் மாறுதலடையக் கூடும், அத்தகைய இடையூறு இருக்கிறது,' என்று எடுத்துக் கூறி, அவர்கள் அதைக் காப்பாற்றக்கூடிய அளவுக்குக் கவனமாக இருக்கும்படி செய்தல் வேண்டும். மனித இயல்பானது, செல்வநிலையின்மூலமாக அளவுக்குமிஞ்சிய அதிகாரப்பற்றை வளர்த்துக்கொள்ளக்கூடியது. ஆகையால், அரசாங்கத்தில் எந்த அளவு திறமை உடையவரும், விதிமுறைப்படியாக அல்லாமல், திடீரென உயர்தர அலுவலுக்கு வர இயலாதவாறு தடுத்துப் படிப்படியாக, மெதுவாய் அதிகார அலுவல்களில் உயர்ந்துவரச்செய்தல் வேண்டும். எவரேனும் தமது சொந்தச் செல்வாக்கை வெகுவாகப் பயன்படுத்தி ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற முயன்றால் அந்த முயற்சியை அவரை நாடு கடத்தும் முறையின் மூலமாகவேனும் (Ostracism) தடுக்கவேண்டும். மேலும் ஒவ்வோர் அரசிலும் பணவரும்படிக்கு உரிய வாய்ப்புகளை ஆட்சியாளர்கள் பெறுதவாறு தடுத்தல் வேண்டும். இத்தகைய பாதுகாப்பு, செல்வராட்சியில் மிகவும் வேண்டப்படுகிறது. செல்வராட்சியில் பொதுமக்களுக்குத்தான் பொருள் வரும்படிக்குரிய வாய்ப்புகள் இருக்கவேண்டும். அவ்வாறில்லாமல், ஆட்சி அதிகாரங்கள் பொருள் வருவாய்க்கான வாய்ப்புகளோடு இணைக்கப்பட்டிருக்குமாயின், பொதுமக்கள் வரும்படியைப் பெறும் பொருட்டு, ஆட்சி அதிகாரப்பங்கு தமக்குக் கிடைக்கவேண்டுமென்று விரும்பிப் புரட்சிசெய்யக்கூடும். செல்வப்பொருள் உடைய வகுப்பாரும், பொதுமக்களும் செல்வராட்சியில் மனநிறைவோடு இருத்தற்குரிய வழி எது என்றால், யாவரும் அரசாங்க அலுவல்களைப் (offices) பெறத் தகுதி உடையவரென்று வழி செய்து, அதே சமயத்தில் அலுவல்களுக்கு ஊதியங்கள் (salaries) இல்லை என்று வழிசெய்தல் வேண்டும்.[1] அப்போதுதான் செல்வப்பொருள் உள்ள வகுப்பாரே ஆட்சி அலுவல்களைப் பெற்று ஆட்சிசெலுத்தவும், பொதுமக்கள் பொருள் வரும்படிக்குரிய வாய்ப்புகளை அதாவது தொழில்களைச்செய்யவும் கூடிய மனநிறைவோடிருப்பார்கள். அப்போது அரசாங்கக் கருவூலத்தில் நிதி நிலைமையைப்பற்றி, அடிக்கடி பொதுஅறிக்கைகள் வெளியிடப்படுவதற்கும், பொதுப்பணமானது அலுவலருடைய சொந்த நலனுக்காகப் பயன்படுத்தப்படாமல், பொதுநலனுக்காகச் செலவழிக்கப்படுமாறு கண்காணிப்பதற்கும் ஏற்பாடு செய்யவேண்டும். எந்த ஒரு வகுப்பாருக்குமட்டுமே அரசாங்க அலுவல்கள் கொடுக்கப்படுதல் வேண்டுமென்ற தனிச் சலுகை

[1] இந்த வழி நடைமுறைக்கு ஒத்துவராதென்று கருதியே அதீனிய அரசாங்கம் கி.மு. 5ஆம் நூற்றாண்டில் எல்லா அரசாங்க அலுவல்களுக்கும் ஊதியங்களை வகுத்தது.

முறை (monopoly) தோன்றலாகாது. செல்வராட்சியிலே ஏழை மக்களும், குடியாட்சியிலே செல்வரும் நாட்டின் தலைமை அதிகாரத்துக்குப் பாதிப்பு ஏற்படாத ஆட்சி அலுவல்களையெல்லாம் ஏற்றிருக்குமாறு அவர்களைத் தூண்டுதல் வேண்டும்.

உயர்தர ஆட்சி அலுவலை ஏற்றிருப்பவருக்குக் கீழ்வரும் 3 தகுதிகள் வலியுறுத்தப்படுதல் வேண்டும்.

(a) அவர் நாட்டில் ஏற்படுத்தப்பட்ட அரசியலமைப்புக்குப் பற்றுறுதி உடையவராக (loyalty) இருக்கவேண்டும்;

(b) ஒவ்வோர் அரசாங்கவகைக்கும் விதிக்கப்பட்ட தகுதியும், நீதியும் உடையவராகவும் இருக்கவேண்டும்;

(c) அவர் மிக்க ஆட்சித் திறனுடையவராக இருக்க வேண்டும்.

அரிஸ்ட்டாட்டில் பண்டைக் காலத்தில் கூறிய இம்மூன்று விதிகளும் இக்காலத்தில் எல்லாக் குடியாட்சி நாடுகளிலும் வலியுறுத்தப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, அமெரிக்க ஐக்கிய நாட்டின் குடியரசுத் தலைவராக இருந்த ஜெபர்சன் கீழ்வரும் 3 கேள்விகளை வைத்து அலுவலுக்கு விண்ணப்பம் செய்பவர்களைப் பரிசோதித்தார்:-

(a) விண்ணப்பம் செய்பவர் நாணயம் (sincerity) உடையவரா ?

(b) அலுவல்செய்யத் திறன் உடையவரா?

(c) அவர் அரசியலமைப்புச் சட்டத்துக்குக் கட்டுப்பட்டு நடக்கும் பற்றுறுதி உடையவரா ?

விண்ணப்பம் செய்பவர் ஏழையா, பணக்காரரா என்று ஆய்வு செய்யவில்லை. மேற்கூறிய விதிகள் பின்பற்றப்பட்டால் எந்த ஓர் அரசியலமைப்பும் தீவிரநிலைக்குத் தள்ளப்படாமல் நீடித்து நிலைத்திருக்கும்.

தீவிரநிலைகளே (extremes) எதிர்ப்புக்கும், புரட்சிக்கும் வழி வகுக்கின்றன. எனவே தீவிரநிலைகளை விடுத்து, இடைப்பட்ட நெறியில் அதாவது புரட்சிகளைத் தடுப்பதற்குரிய நல்லநெறியில் அரசாங்கம் செயல்படுதல் வேண்டும். செல்வமுடையவர், சுதந்திரவிருப்பு உடையவர், திறனுடையவர் ஆகிய கூறுகளில் எந்த ஒரு சமுதாயக்கூறு ஆட்சியில் இருந்தாலும், மற்றக் கூறு

களும் அரசுக்கு இன்றியமையாதனவாகையால், மற்றக் கூறு களின் நலன்களையும் பாதுகாக்கக்கூடிய நெறியே தீவிர நிலை களைத்தவிர்த்த நெறி என்று அரசாங்கம் உணர்ந்து, அந்த நடுநிலைமையில் செயல்படவேண்டும். புரட்சிக்கெதிரான மிக முக்கியமான பாதுகாப்பு இன்னொன்றையும் அரிஸ்ட்டாட்டில் சுட்டிக்காட்டுகிருர்; அரசியலமைப்பின் கோட்பாடுகளுக்கு இணக் கமான கல்விப்பயிற்சியை யாவருக்கும் அளிப்பதே அந்த வழி ஆகும். இதுவே அரசைப் புரட்சிகளினின்றும் காப்பதற்கு ஏற்ற மிக்க வலுவானவழி ஆகும். இளைஞர்கள் தங்களுடைய அரசியலமைப்புக்கு இன்றியமையாதது எது என்பதை அறிந்து கொள்ளுவதற்குப் பயிற்சி அளிக்கப்படுதல் வேண்டும். அதுவரை வெறும் சட்டங்களால்மட்டும் புரட்சியைத் தடுக்க இயலாது. இக்கல்விப் பயிற்சி, 'செல்வராட்சியில் எல்லா மக்களுக்கும் நிறைவுதரத்தக்க செயல்களையே அரசாங்கம் செய்யுமானுல், புரட்சி தோன்ருமல் அரசாங்கம் நிலைத்திருப்பதற்கு வழி ஏற் படும்,' என்றும், 'குடியாட்சியில் கட்டுப்பாடற்ற சுதந்திரமும், சமத்துவமும் குழப்பமான நிலையைத் தோற்றுவிக்கும். ஆதலால் அவற்றைவிடுத்து, அரசு புரட்சியிலிருந்து விடுபட்டிருப்பதற்கு, அரசியலமைப்பின் வரம்புகளுக்கு உட்பட்ட அளவிலே சுதந் திரமும், சமத்துவமும் கையாளப்படுவது நலம்விளைக்கும்,' என்றும் இளைஞர்க்கு உணர்த்துதல் வேண்டும்.

சர்வாதிகார ஆட்சி நிலைத்திருப்பதற்கான வழிகளையும் அரிஸ்ட்டாட்டில் கூறுகிருர். சாதாரணமாகச் சர்வாதிகார ஆட்சி நிலைத்திருப்பதற்குச் சர்வாதிகாரி இரக்கம் இன்றி, காரணம் இன்றி, அறிவிற் சிறந்த குடிமக்களை அடக்கியும், கொன்றும், நாட்டைவிட்டு விரட்டியும் விடுகிருர்; வாழ்க்கையின் சிறப்புக்கான செயல்களெல்லாம் அழிக்கப்படுகின்றன; அறிவு வளர்ச்சிக்கும், சமுதாய நலனுக்கும் இன்றியமையாத மக்கள் தொடர்புகளெல்லாம் தடைசெய்யப்படுகின்றன. ஒற்றர்களுடைய செயலினுல் மக்களிடையே தொடர்புகள் தடைசெய்யப்படுகின்றன. போருக்குரிய ஆயத்தங்கள், பெருங்கட்டிடம் கட்டுதற்கான ஆயத் தங்கள் முதலியவை மக்கள் எப்போதும் வறியவராக வேலைசெய்து கொண்டிருப்பதில் ஈடுபட்டிருக்கும்பொருட்டு மேற்கொள்ளப் படுகின்றன. சர்வாதிகாரி அடிமையான சிலரால் சூழப்பட்டுத் தந்நலம் மிக்க வாழ்வு வாழ்கிருர். அவர் தனது சர்வாதிகார ஆட்சியை நலன்தரும் ஆட்சிபோல் தோற்றும்படி செய்கிருர். ஆட்சிச் செலவில் சிக்கனம் கடைப்பிடிக்கப்படுகிறது. அவரி டத்தில் யாவரும் மரியாதையே காட்டுகின்றனர்; அச்சம் காட்டு வதில்லை. அவர் அறிவாளிகளை ஆதரித்தும், சமய வழக்கங்

களுக்கு மதிப்புக்கொடுத்தும், ஆடம்பரமித வாழ்வுக்கான போக்குகளை அவர் விடுத்தும் இருக்கவேண்டும். அவர் போர்த் திறமைகள் உடையவராக மதிக்கப்படுதல் வேண்டும். கடும் உழைப்பில் ஈடுபட்டிருப்பவர்களையே அவர் படையில் தமக்குக் கீழ்ப்பட்ட அலுவலராகத் தேர்ந்தெடுக்கவேண்டும்; முயன்று முன்னேறுபவர்களை விடுக்கவேண்டும், ஏழைகளும், செல்வரும் ஒருவரிடத்தொருவர் நம்பிக்கை இன்றியும் தம்மிடம் நம்பிக்கை யோடு இருக்குமாறும் செய்தல் வேண்டும்; ஆனால் இருவகுப் பாரில் எவரைத் தேர்ந்தெடுப்பது என்ற நிலைவரும்போது, வலுவான வகுப்பாரையே அவர் தேர்ந்தெடுக்கவேண்டும். சர்வாதிகாரி வெகுமதிகளையும், விருதுகளையும் நேரில் வழங்கு தற்கும், தண்டனைகளும், இழிவுக்குள்ளான செயல்களும் வேறு கீழ்ப்பட்ட அலுவலராலும் வழங்கப்படுதற்கும் ஏற்பாடுசெய்யப் படுதல் வேண்டும். சர்வாதிகார ஆட்சியானது, சர்வாதிகார ஆட்சியாக இல்லாமல், ஆதரவளிக்கும் தந்தைக்குரிய ஆட்சி யாக (paternal) இருத்தல் வேண்டும். தீவிரமான செயல்களில் ஈடுபடாமல், மிதமான போக்கை உடையதாகவும், செல்வர் களுடைய நட்பைத் தேடியும், சாதாரண மக்களை மக்கள் தலை வருக்குரிய முறைகளைக் கையாண்டும் தம்பால் இழுக்கவேண்டும். இத்தகைய கொள்கைகளின்மீதமைந்த சர்வாதிகார ஆட்சி யானது, குடிகளுக்கு உகந்ததாகவும், நீடித்தும், ஆளுபவரிடம் நல்ல இயல்பைத் தோற்றுவித்தும் இருக்கும்.

பிரிவு 13 : அரிஸ்ட்டாட்டிலைப்பற்றிய மதிப்பீடு

அரிஸ்ட்டாட்டில் பல்வேறு அரசியல் கோட்பாடுகளை வகுத் துள்ளதைச் சுருக்கமாகக் கண்டோம். இதில் அவருடைய கோட்பாடுகளைப்பற்றி மதிப்பிடும்போது, அவருடைய கோட் பாடுகளுக்குப் பின்னணியாக அவருடைய மனத்தில் வேரூன்றி இருந்த கிரேக்கர்களின் சார்பான எண்ணங்களையும் நாம் சுட்டிக்காட்டியே மதிப்பிடுதல் வேண்டும். அவர் கிரேக்க நாட்டுக்கும் அப்பாற்பட்ட முறைகளையெல்லாம் ஆராய்ந்தாலும், அவர் எழுதிய கோட்பாடுகளெல்லாம் கிரேக்கச் சூழ்நிலைகளால் தாம் உருவாக்கப்பட்டன. அவருடைய கோட்பாடுகளுக்கு ஆதாரமாக இருந்த சில அனுமானங்கள் (postulates) பின் வருமாறு:-

கிரேக்கர் மற்ற இனத்தவரைவிட மன ஆற்றல், உடல் ஆற்றல் ஆகியவற்றில் உயர்ந்தவர். அடிமை வகுப்பு சமுதாய அமைப்புக்கு இன்றியமையாத நியாயமான ஆதாரம் ஆகும்.

வயிற்றுப் பிழைப்புக்கான தொழில்களைச் செய்வதென்பது, முழுவளர்ச்சிபெற்ற குடியுரிமையில் காணப்படும் ஒழுக்க அறிவியற் பண்புகளுக்கு மாறுபட்டது. (இந்த அனுமானம் அதீனிய, ஸ்பார்ட்டன் அரசியலமைப்பிலிருந்து எடுக்கப்பட்டது.) அரசியல்தகுதி பெறும்பொருட்டுக் கல்விப் பயிற்சியை அரசாங்கம் மேற்கொள்ளுதல் வேண்டும் (இது ஸ்பார்ட்டாவில் காணப்பட்டது). சட்டத்தின் விதிகளுக்குத் தனியார் தம் நோக்கங்களையும் செயல்களையும் கட்டுப்படுத்துதல் வேண்டும்.

இந்த எண்ணங்களெல்லாம் காலப்போக்கில் மறைந்து விட்டன.

எனினும், அரிஸ்ட்டாட்டில் வகுத்த கொள்கைகளும், ஆய்வு முறைகளும், அவர் கூறுகின்ற வடிவத்திலேயே இன்றளவும் அரசியற் கலையிலும் நூலிலும் காணப்படுகின்றன. அத்தகைய, என்றும் ஒப்புக்கொள்ளப்படக்கூடிய கொள்கைகளைவைத்து அரிஸ்ட்டாட்டிலின் திறனை மதிப்பிடலாம்.

மனித சுதந்திர உணர்வும் அரசாங்க அதிகாரமும்

அரிஸ்ட்டாட்டில் இலட்சியமாகக் குறிப்பிட்ட நகரரசுமுறை மறைந்து, ஏறக்குறைய 2500 ஆண்டுகளாகிவிட்டன. அவர் இலட்சியமாகக் குறிப்பிட்ட அரசியலமைப்புமுறைகள், அவர் காலத்தில் இருந்த கிரேக்கருடைய மனப்பான்மையை எடுத்துக் காட்டியதனுல், அது எல்லாக் காலத்துக்கும், கிரேக்கரல்லாத எல்லா மக்களுக்கும் பொருத்தமுடையதாக ஏற்றுக்கொள்ளப்பட வில்லை. இவ்வாறிருந்தாலும் அவர்தம் காலத்தில் இருந்த அரசியலமைப்புவகைகளை யெல்லாம் — கிரேக்க, கிரேக்கரல்லாத மற்ற இனமக்களின் வகைகளை — ஆராய்ந்து வகைப்படுத்தி, அவற்றில் ஆதாரமாகக் காணப்பட்ட சில கூறுகளை (elements) எடுத்துக் காட்டினுர். இவ்வாறு அறிவியலுக்கு ஒத்தவகையில் அவர் ஆராய்ந்து எழுதிய கொள்கைகள், எல்லா இனமக்களுடைய இயல்புகள் சிலவற்றை எடுத்துக்காட்டுகின்றன. எடுத்துக்காட்டாக, சமுதாயமாகக் கூடிவாழும் இன உணர்ச்சி, சுதந்திரமாக வாழும் இயல்பு ஆகியவையெல்லாம் எல்லா இனமக்களுக்கும், எக்காலத்துக்கும், சிறப்பாக இக்காலத்துக்கும் காணப்படுகின்றன. ஆகையால் எந்த ஓர் அரசியலமைப்புவகையையும் ஆய்வுசெய்யும்போது, அரசியல் வல்லோர், அதனை ஏற்றுக்கொண்டுள்ள மக்கட் சமுதாயத்தின் சுதந்திர அல்லது உரிமை வளர்ச்சியைப் பாதுகாப்பதற்கு அவ்வரசியலமைப்பு எவ்வளவுக்கு ஏற்றது என்று

ஆராய்கின்றனர். இவ்வாறு ஆய்வுசெய்வதற்கு ஏற்ற ஓர் உரைகல் போல மனித இனத்தின் சில அடிப்படையான கூறுகளை அல்லது இயல்புகளை ஒரு விதியாக வகுத்தவர் அரிஸ்ட்டாட்டில். சுருங்கச் சொல்லின், உலகத்தின் எந்த நாட்டின் அரசியலமைப்பைப்பற்றி அரசியலாசிரியர் எவரும் மதிப்பீடுசெய்தாலும், அதற்கு அரிஸ்ட் டாட்டில் வகுத்த அளவுகோலை ஆதாரமாகக்கொண்டுதான் ஆகவேண்டும்.

மனிதருக்கு இயல்பாக இருக்கும் சுதந்திர உணர்வையும், இனத்தாரோடு சமுதாயமாகச் சில கட்டுப்பாட்டு விதிகளுக்கு உட் பட்டுவாழும் உணர்வையும் அரிஸ்ட்டாட்டில் கூர்ந்துநோக்கி, இந்த இரண்டு இயல்புகளும் அரசியலிலே ஒரு தீராத பிரச்சினையாக இருப்பதை எடுத்துக்காட்டினுர். மனிதருடைய சுதந்திர விருப் பத்தையும், அவர்களுடைய சமுதாய வாழ்க்கைக்கு இன்றியமை யாத அரசாங்க அதிகாரத்தையும் முரண்பாடு இல்லாதவகையில் கூடுமான அளவில் இணைப்பது எப்படி என்பதே அரசியலில் மனித இனம் தோன்றிய நாளிலிருந்து என்றும் இருந்துவருகிற தீராத பிரச்சினை ஆகும். இந்த இரண்டு இயல்புகளுக்கும் — அதாவது சுதந்திர உணர்வுக்கும், அரசாங்க அதிகாரத்துக்கும்—முரண்பாடு இருந்தாலும் சுதந்திரம் இல்லாமல், அதிகாரம்மட்டும் இருத்தலால் பயனில்லை என்றும், அதிகாரம் இல்லாவிடில் சுதந்திரத்திற்குப் பாது காப்பு இல்லை என்றும், அரிஸ்ட்டாட்டில் தாம் ஆராய்ந்த பல்வேறு வகைப்பட்ட கிரேக்க நகரரசு சமுதாயங்களின் அரசியலமைப்பு வகைகளிலிருந்து தெரிந்துகொண்டார்; இரண்டையும் முரண்பா டின்றி இணைப்பதற்கு மக்களுடைய மனத்திலே, **‘அதிகாரத்துக்கு (அதாவது சட்ட விதிகளுக்கு) உட்பட்ட சுதந்திர வாழ்க்கையே முழு உரிமைபெற்ற சுதந்திர வாழ்க்கை’** என்ற கருத்து வேரூன்றுமாறு செய்தல் வேண்டுமென்ற முடிவுக்குவந்தார். ஆகையால் ஒரு குறிப்பிட்ட அரசியலமைப்புவகையானது அதனை, வரைந்து, ஏற்றுக்கொண்டுள்ள மக்களுடைய சுதந்திர உணர்வின் வளர்ச் சியை எடுத்துக்காட்டும் அளவுகோலாகும் என்பது தெளிவாகத் தெரிகிறது. எனவே அரசாங்கமே இல்லாத நிலைமை (anarchy) என்பதை அரிஸ்ட்டாட்டில் ஒப்புக்கொள்ளவில்லை.

> ‘அரசியலமைப்புக்கு உட்பட்ட வாழ்வு அடிமை வாழ்வு என்று கருதப்படாமல், உயர்ந்த நலன்பயக்கும் வாழ்வு எனக் கருதப்படுதல் வேண்டும்.’ [1]

இவ்வுண்மை எக்காலத்துக்கும் பொருந்துவதாகும்.

1 The Politics V.

தனி ஆளுக்கும், அரசுக்குமுள்ள உறவுபற்றிச் சில விதிகளை அரிஸ்ட்டாட்டில் வகுத்திருப்பதைப்போல் சில அதிகாரங்கள் அரசாங்க அதிகாரியால் கையாளப்படுதற்கும் சில தகுதிகளை அல்லது விதிகளை வகுத்துக்கூறுகிறார். அரசாங்கத்துக்கும் மேலானதாகப் பொதுமக்கள் கருத்தும், சமுதாயத்தில் பின்பற்றப் படுகிற வழக்கம் என்னும் சட்டமும் இருக்கவேண்டும். பொது மக்கள் கருத்து என்பது அரசாங்கத்தின் நடவடிக்கைகளைச் சீர் தூக்கி இறுதியான தீர்ப்புக்கூறுவதாகும். மக்களது கருத்தே ஒரு வல்லுநருடைய கருத்தைவிட விரும்பி ஏற்றுக்கொள்ளத் தக்கது. ஒவ்வொரு சமுதாயத்திலும் எவராலும் மீறமுடியாத ஆணையை விடுக்கக்கூடிய தலைமை அதிகாரி ஒருவர் இருத்தல் வேண்டுமென்றும், இத்தகைய இறைமை அதிகாரியும் ஒரு சட்டத் திற்கு உட்பட்டவரெனவும், இக்காலத்தவரைப்போல அரிஸ்ட் டாட்டில் இறைமைக் கருத்துகளை எடுத்துக்காட்டினார்.

மக்கள் இறைமைக் கோட்பாடு (Popular Sovereignty Theory)

தலைமை அதிகாரியாக இருக்கக்கூடியவர் ஒழுக்கத்திலும், அறிவிலும் மற்றவர்களைவிட உயர்ந்தவராக இருக்கவேண்டுமென் றும், அவர் நிர்வாகத்தைமட்டும் நடத்துபவராவார் என்றும் அரிஸ்ட்டாட்டில் கருதினார். ஆனால் நடைமுறையில் மக்கள் இறைமைக் கோட்பாடு ஆதாரமாக அமைந்துள்ள இக்காலக் குடி யாட்சி நாடுகளில், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் சட்டம் இயற்றுகின்றனர்; அவர்களில் ஒருசிலர் அமைச்சர்களாக இருந்து நிர்வாகத்தை நடத்தினாலும், அவர்களும் சட்டம் இயற் றுதலையே பெரும்பாலும் செய்கின்றனர். எவ்வாறுயினும் மக்கள் என்பதற்கு அரிஸ்ட்டாட்டில் தற்காலத்தில் கொள்வதுபோல விரிந்தபொருளைக் கொள்ளாமல், சுருங்கியபொருளைக் கொண் டாலும், 'மக்களே தலைமை அதிகாரம் உடையவர்' என்ற மக்கள் இறைமைக் கோட்பாட்டை வகுத்தவர் என்பதில் ஐயமில்லை.

அரசாங்கத்தின் மூன்றுவகை உறுப்புகள்

அரசாங்கம் என்பது சட்டம் இயற்றும் உறுப்பு (**legislative organ**), நிர்வாக உறுப்பு (**executive organ**), நீதி வழங்கும் உறுப்பு (**judicial organ**) என்னும் மூவகை உறுப்புகளடங்கியது. இந்தப் பாகுபாட்டை அரிஸ்ட்டாட்டில் வகுத்து, அவற்றுக்குக் கொடுக்கும் பொருள், இக்காலத்தவர் கொள்ளும் பொருளினின்றும் வேறு பட்டது. அவர் கூறும் சட்டமன்றம், சமுதாயத்தில் ஏற்கனவே இருந்த வழக்கமான சட்டங்களுக்குத் துணையான சட்டங்களைச் செய்ததே அன்றிப் புதிய சட்டங்களைச்செய்த சட்டமன்றம்

அன்று. அதேபோல அவர்கூறும் நிர்வாக அதிகாரிகள் சட்டங்களை ஆய்வுசெய்பவராகவும் இருந்தனர். அவர் குறிப்பிடும் நீதிமன்றமும் சட்டம் இயற்றும் தொழிலைச்செய்தது. எந்த அரசியலமைப்புக்கு உட்பட்ட அரசாங்கத்திலும் அரிஸ்ட்டாட்டில் கூறும் இம் மூன்று உறுப்புகளும் இருந்தே வருகின்றன.

அரசியலமைப்பு உருவாக்கும் பொருளாதாரக் கோட்பாடுகள்

அரிஸ்ட்டாட்டில்தாம் முதன்முதலில் அரசியலமைப்புவகைகள் புரட்சிகளின்மூலம் மாறுதலுக்கு உட்படுவதை எடுத்துக் காட்டி, அரசியலமைப்பை உருவாக்குபவை பெரும்பாலும் பொருளாதார நிலைமைகளே என்று விளக்கினார். தனியார் சொத்துஉரிமையின் இன்றியமையாமையை அவர் எடுத்துக்காட்டிச் செல்வர் — வறியவர் முரண்பாடுகளால் அரசாங்கத்தின் அமைப்பு ஏற்படுத்தப்படுகிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

முடிவாகக் கூறுமிடத்து, அதீனிய நகரரசை ஆதாரமாக வைத்து அரிஸ்ட்டாட்டில் வகுத்த அரசியல் கோட்பாடுகள், பிற்காலத்தில் தோன்றிய பல்வேறு வகைப்பட்ட அரசியலமைப்பு வகைகளைச் சீர்தூக்கி ஆராய்வதற்கு உதவியாக இருக்கின்றன என்று கூறலாம். கிரேக்கத்தை அடுத்து ரோம் நகரரசிலும் ரோமானியப் பேரரசிலும் தோன்றிய இராணுவ முடியாட்சி (military monarchy), இடைக்காலத்தில் கிறிஸ்தவத் திருச்சபையின் ஆதிக்கத்தில் தோன்றிய அரசு, தற்காலத்தில் பொருளியல் அடிப்படையில் தோன்றிய அரசு ஆகியவற்றில் செயல்பட்ட அரசியலமைப்புகளெல்லாம் ஆராயப்படுவதற்கு அரிஸ்ட்டாட்டிலின் கோட்பாடுகள் உதவுகின்றன. குடியாட்சிக் கோட்பாட்டிலமைந்த அரசியலமைப்பு, பொருளாதார அடிப்படையில் இருவகுப்பாருக்குமிடையே தோன்றிய முரண்பாடு, இந்த முரண்பாட்டில் உருவான பல்வேறு அரசியலமைப்புகள் என்று அரிஸ்ட்டாட்டில் வகுத்த சில கோட்பாடுகளெல்லாம் பல்வேறுவகைப்பட்ட அரசியலமைப்புகளையும் ஆராய உதவியாக இருக்கின்றன.

இயல் நான்கு

பிற்காலக் கிரேக்கச் சிந்தனையாளர்கள்-எப்பிக்யூரஸ்

Epicurus

(கி.மு. 341—கி.மு. 270)

பிரிவு 1: அலக்சாண்டருக்குப் பிற்பட்ட காலத்தில் கிரீசில் ஏற்பட்ட மாறுதல்கள்

நாம் இதுவரையில் கூறிவந்த பண்டையக் கிரேக்க அரசியற் சிந்தனையாளர்களுள், அரிஸ்ட்டாட்டிலைத் தவிர மற்றவர்களெல்லாரும் கிரேக்க மாவீரரான அலக்சாண்டரின் காலத்துக்கு முற்பட்டவர்கள் (அலக்சாண்டரின் காலம் கி.மு. 356-கி.மு.323). அரிஸ்ட்டாட்டில் அலக்சாண்டரின் காலத்தில் வாழ்ந்தவர். பண்டையக் கிரேக்க வரலாற்றிலேயே அலக்சாண்டரின் வெற்றிகளும், அவற்றின் விளைவுகளும், அரசியல் நிலைமைகளிலும், கருத்துகளிலும் ஒரு திருப்பத்தைத் தோற்றுவித்தன. நகரரசு முறையே இயல்பான அரசுமுறை என்ற கருத்து நீடித்து இருக்க இயலாத ஒரு நிலைமை அலக்சாண்டருடைய தகப்பனரும், மாசிடோனியப் பேரரசின் அரசருமான இரண்டாம் பிலிப்பின் ஆட்சிக் காலத்தில் தோன்றிற்று. பிலிப்புக்கும், கிரீசிலுள்ள எல்லா நகரரசுகளுக்கும் இடையே கி.மு. 338ஆம் ஆண்டில் ஷேரோனியா (Chaeronea) என்ற இடத்தில் போர்நடந்தது; இதில் நகரரசுகள் தோற்றன. பிலிப் பெற்ற வெற்றியின் விளைவாகக் கிரீஸ் நாட்டிலுள்ள எல்லா நகரரசுகளும் அவருடைய ஆட்சியிலடங்கிய ஒரே நாடாக இணைந்தன. அவருடைய மகன் அலக்சாண்டரின் ஆட்சியிலும் நகரரசின் மீட்சிக்கு வழி ஏற்படவில்லை. பண்டைய நகரரசு முறை மறைந்தது; இராணுவப் பேரரசு முறை தோன்றிற்று. அலக்சாண்டரின் காலத்துக்குப் பிறகு சில கிரேக்க நகரரசுகள் விடுதலை

பெற்றாலும், அவை தனித்து இயங்காமல் கூட்டாட்சியாக இயங்கின. பின்னர் இவை ரோமின் படைகளால் வெற்றிகொள்ளப்பட்டு ரோமானியப் பேரரசின் உறுப்புகளாக இணைக்கப்பட்டன. இச்சூழ் நிலையில் முன்போல் அரசியில்துறையில் சிந்தனை வளர்ச்சி ஏற்படும் நோக்கத்துடன் எவரும் முற்படவில்லை; அரசியற் சிந்தனையில் வளர்ச்சியே பெரும்பாலும் இல்லை. 'பிளேட்டோவும், அரிஸ்ட்டாட்டிலும் நல்வாழ்வுக்கு உகந்தது நன்கு அமைக்கப்பட்ட **அரசே** (State) என்று கருதினர். ஆனால் அவர்கள் பாராட்டிய அரசு இப்பொழுது மறைந்துவிட்டபடியால், அரசியல் நிலைமை களுக்கு அப்பாற்பட்ட சூழ்நிலையில் அவற்றைப் புறக்கணித்து, நல் வாழ்க்கைக்கு உகந்த நிலைமை ஏற்பட இலுமா எனச் சில சிந்தனையாளர்கள் ஆராயலாயினர். அவர்களே எப்பிக்யூரஸ், சீனோ முதலியோர் ஆவர்.

எப்பிக்யூரசின் வாழ்க்கை வரலாறு (கி.மு.341—கி.மு. 270)

எப்பிக்யூரசின் வாழ்க்கை வரலாற்றைப்பற்றி நிறையச் செய்திகள் கிடைக்கவில்லை. இவர் ஆதென்சில் வாழ்ந்தார். இவரும், இவரோடொத்த நண்பர்களும் கி.மு. 306ஆம் ஆண்டில் ஆதென்சில் தங்களுடைய கருத்தைப் பரப்புவதற்கு ஒரு கழகத்தை நிறுவினர். இதுவும் வேறு மூன்று கழகங்களும் ஆதென்சில் எப்பிக்யூரசுக்குப் பிற்பட்ட காலத்தில் பல நூற்றாண்டுகளாக இருந்தன. சாக்ரட்டீசின் மாணவர்களுள் ஒருவரான அரிஸ்ட்டிப் பஸ் என்பவருக்கும் எப்பிக்யூரசின் கழகத்துக்கும் தொடர்பு உண்டு.

பிரிவு 2: எப்பிக்யூரசின் கருத்துக்கு அடிப்படை

எப்பிக்யூரஸ் மனிதர் சுயநல உணர்வு உடையவர் எனவும், அதன்பொருட்டு, அவர்கள் ஒப்பந்தம் செய்துகொண்டு சமுதாய மாக வாழ்கின்றனர் என்றும் ஆதாரமாகச் சில கருத்துகளைக் கையாண்டார். புலன்களின் இன்ப உணர்வுக்கும் (sensual happiness), அறிவின் இன்ப உணர்வுக்கும் (intellectual happiness) மிதமான அளவில் நிறைவு ஏற்படும்படி செய்வதே மனிதரின் நோக்கம் ஆகும்.

பிளேட்டோவும், அரிஸ்ட்டாட்டிலும் இலட்சியக் கோட்பாடு களின்மீதமைந்த அரசாங்கமே தனிமனிதரின் நல்வாழ்வுக்கு உகந்தது என்று எண்ணினர். அவர்களுக்குப் பிற்பட்ட காலத்தில் சுதந்திரக் கிரேக்க நகரரசு அமைப்பு மறைந்தது; அலக்சாண்டர்

நிறுவிய இராணுவப் பேரரசில் குடிகளுக்குச் சுதந்திர நிலைமையும், அரசாங்கத்தில் குடிகளுக்குப் பங்கு என்ற கருத்தும் மறைந்தன. எனவே எப்பிக்யூரஸ் 'பொது மக்கள் நலன்' என்பதையோ, அரசு என்பதையோ மையமாக வைத்து அரசியலைப்பற்றி எண்ணவில்லை. மனிதர் ஒவ்வொருவரும் தமதுநலனை வளர்த்துப் பாதுகாத்துக் கொள்ளும் வழிகளைப்பற்றியே ஆராய்தல் வேண்டுமென்றும் எண்ணினர். சமுதாயத்துக்கும், தனிமனிதனுக்கும் தொடர்பு இல்லை என்றும், தனிமனிதரின் நல்வாழ்வுக்கு அரசாங்கம் தேவை இல்லை என்றும் அவர் எண்ணினர். நகரரசுமுறை மறைந்து, பேரரசுமுறை தோன்றியதனால், நாட்டுப்பற்று என்ற உணர்வு முக்கியத்துவம் பெறுமல், **உலகக் குடிமை உணர்வும்** (Cosmopolitanism), **தனியார் உரிமைக் கோட்பாடு** (Individualism), **அனைத்துலகக் கோட்பாடு** (Universalism) முதலியவை வளர்ந்தன. கிரேக்கருக்கும், நாகரிகமற்றவரென இகழ்ந்தொதுக்கப்பட்ட ஏனைய இனமக்களுக்கும் பண்டைக் காலத்திலிருந்த வேறுபாடு மறைந்தது. தனிமனிதரின் இன்பமே வாழ்வின் நோக்கமாகுமென எப்பிக்யூரஸ், சீனோ முதலியோர் எண்ணினர்.

பிரிவு 3: எப்பிக்யூரசின் கோட்பாடுகள்

நாகரிக வளர்ச்சி

மனிதர் தந்நலம் பேணும் உணர்ச்சியே மிகுதியும் உடையவர்கள். மனிதரின் சமுதாய வாழ்வு, அரசியல், கலைகள், அறிவியல் சாதனங்கள் சுருங்கச்சொல்லின் நாகரிக வளர்ச்சிக்குரிய எல்லாம் தன்னலம் நாடும் மனித அறிவினால் தோற்றுவிக்கப் பட்டவையே ஆகும். தன்னலன் தேடுவதைத் தவிர வேறெந்த உணர்வும் மனிதனுக்கு இயற்கையாக இல்லை. ஆகவே சமுதாயத் தோடு தனக்கு நெருக்கமான உறவோடு இருக்கவேண்டுமென்ற உணர்வும் மனிதனுக்கு இல்லை. தொடக்கத்தில் மனிதன் நிலையாக எந்த இடத்திலும் தங்காமல், தனியாகக் குகைகளில் தங்கிக் கொடிய விலங்குகளினின்றும் தன்னைப் பாதுகாத்துக்கொண்டான்; தற்செயலாக நெருப்பைக் கண்டுபிடித்தான். இதுவே அவனுக்குப் பயனுள்ள பல வசதிகளை அளித்தது. இதிலிருந்து நாகரிகம் வளர்ந்தது. மனிதன் பின்பு குடிசைகளில் பாதுகாப்பாகவும், தோலை ஆடையாக அணிந்தும் வாழ்ந்தான். நாளடைவில் இயற்கைச் சூழ்நிலைகளுக்கேற்பத் தன்செயலை மாற்றிக் கொள்ளும் திறத்தாலும், பல பயனுள்ள கலைகளையும், நெறியாக அமைக்கப் பட்ட சமுதாயச் சட்டங்களையும் தோற்றுவித்தான். பருப்பொருள் களின் சூழ்நிலைகளுக்குட்பட்டு மனித ஆற்றல்கள் செயல்படுவதாலேயே நாகரிகம் தோன்றிற்று. கனவுகளிலிருந்து இறைநம்பிக்கை

தோன்றிற்று. மனிதருடைய செயல்களில் கடவுளர்க்குத் தொடர்பு இல்லை என்பதைத் தெரிந்துகொள்ளுவதுதான் மெய்யறிவு ஆகும். உலகம் என்பது பௌதிகவிதியை ஒட்டிய ஓர் இயற்கையே. எல்லாப் பொருள்களும் அணுக்களின் திரட்சியால் தோன்று கின்றன.

அரசின் தோற்றத்தைப்பற்றிய கோட்பாடு

அரசு என்பது மக்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்காகத் தோற்றுவிக்கப்பட்டது. மனிதருடைய இயல்பான நெறியாகிய, 'தான் இன்பம் பெறுதல் வேண்டும்' என்ற விருப்பமே அரசின் தோற்றத் திற்குக் காணமாகும். இத்தகைய தந்நல விருப்பம் ஒவ்வொரு வரிடமும் காணப்படுவதால், ஒருவருடைய நலன் மற்றவருடைய தந்நல விருப்பத்தினுல் பாதிக்கப்படுகிறது. எனவே வெளிப்படை யாக இல்லாமல் ஒரு பழக்கத்தின் மூலமாக ஒவ்வொருவரும் தாம் மற்றவருக்குத் தீங்கு இழைப்பதில்லை என ஓர் ஒப்பந்தம் செய்து கொள்கிருர். இவ்வாறு ஒவ்வொருவருடைய உரிமையும் மதிக்கப் படுவதால், ஒவ்வொருவருக்கும் மற்றவருடைய பாதுகாப்புக் கிடைக் கிறது. இவ்வாறே அரசங்கமும் சட்டமும் தோன்றுகின்றன. எனவே தனதுநலன் என்ற ஒன்று இல்லையேல்; நீதி என்பதும் இல்லை. ஒவ்வொருவருக்கும் பாதுகாப்பு அளிக்கும்பொருட்டே சட்டமும், பாதுகாப்பும் இருக்கின்றன.

தன்னலன்

தன்னலன் அல்லது இன்பம் எது எனில் எல்லாத் துன்ப உணர்வுகளையும், வருத்தங்களையும், கவலைகளையும், நீக்குவதால் தோன்றும் மன உணர்வு ஆகும். நல்ல நட்புறவு ஒவ்வொரு வருடைய நலனையும் வளர்க்கும். எப்பிக்யூரஸ் இறைவனுடைய ஆற்றல், சமயக் கருத்துகள் முதலியவற்றினின்றும் மனிதர் விடு பட்டிருத்தலே இன்பம் தரும் என்று கருதினுர்.

சட்டம், நீதி என்பவைபற்றிய கோட்பாடு

மக்களுடைய இயல்பான நெறி தாம் இன்பம் பெறுதல் வேண்டு மென்ற விருப்பம் ஆதலினுல், மக்களுடைய செயல்களைக் கட்டுப் படுத்துகிற மற்றெல்லாவிதிகளும் வழக்கங்களே ஆகும். இவ்விதிகள் மிகுந்த இன்பத்தை நல்கினுல்தான், இவற்றுக்கெல்லாம் பொருள் உண்டு. ஆகையால் இன்பத்தைத் தவிர தன்னியல்பிலே சிறப்பான ஒழுக்கப்பண்புகளோ, வேறெந்த நெறியோ கிடையா. சட்டம் என்பது, மக்கள் வன்செயல், நெறியற்றபோக்கு முதலிய

வற்றினின்றும் தங்களைக் காப்பாற்றிக்கொள்ளும் பொருட்டுத் தங்களுக்காக ஒரு பயன்கருதிச் செய்துகொண்டுள்ள ஓர் ஒப்பந்தம் அல்லது ஏற்பாடு (agreement of utility) ஆகும்.

> 'எந்த நாட்டிலும், எந்தக் காலத்திலும் துன்பத்தை நீக்குவதற்கோ, துன்பம் அடைவதைத் தவிர்ப்பதற்கோ, மக்கள் தங்களுக்கிடையே ஒருவருக்கொருவர் அவ்வப்போது ஏற்படுத்திக்கொண்ட ஒரு வழக்கம்தான் உண்டே தவிர, முழுமையான நீதி அல்லது நெறிமுறை (absolute justice) என்பதாக ஒன்று இல்லை.' (பேராசிரியர் ஜி. எச். சபைன் மேற்கோளாக ஆர். டி. ஹிக்ஸ் என்பவர் கூறிய கருத்திலிருந்து எடுத்துக்காட்டியது.)[1]

ஒழுக்கக் கோட்பாடு என்பது சூழ்நிலைக்கேற்ற விதி (expedience) ஆகும். சரியான நீதி (justice), சரியான நடத்தை (right conduct) என மனிதரால் குறிப்பிடப்படுவன வெல்லாம் கால, இடச் சூழ்நிலைகளுக்கேற்ப மாறும்தன்மையை உடையவை. ஏனெனில் மனித இயல்பு எவ்விடத்தும் ஒரே தன்மையாக இருக்கிறது. எனினும் மனிதருடைய வாழ்க்கை முறைகளுக்கேற்ப நெறிமுறை அல்லது சூழ்நிலைக் கோட்பாடு மாறுகிறது. ஒருகாலத்தில் மனிதரிடையே நல்லுறவுகளை வளர்க்க உதவும் கோட்பாடு, அக்காலத்தில் நீதியாகவும், பின்னர் நிலைமைகள் மாறுதலடையவே அது நியாயமற்றதாகவும் ஆகிறது. எனவே சட்டம், அரசியல் நிறுவனங்கள் முதலியவை சரியானவையா அல்லது சரியற்றவையா என்பது சூழ்நிலைகளைப்பொறுத்தே (expedience) அமைகின்றதாகையால், நல்லுறவையும், பாதுகாப்பையும் வளர்ப்பவை எவையோ, அவற்றை நியாயமானவை என்று கூறலாம்.

அரசாங்கத்தில் மக்களுக்குப் பங்கு, அரசாங்கத்துக்கு மக்கள் கட்டுப்படுதல் ஆகியவைபற்றி எப்பிக்யூரசின் கோட்பாடு

அரசாங்கத்தில் மக்கள் பங்குகொள்ளுதலென்பது இன்பமற்ற ஓர் இடரான வாழ்க்கை ஆகும். தமது நலனுக்குப் பாதுகாப்புக் கிடைக்கும்பொருட்டு, தமக்கு அரசாங்கத்தில் பங்கு இருத்தல் இன்றியமையாதது என்றநிலைமை ஏற்பட்டால்தான் அரசாங்கத்தில் பங்குகொள்ளுவது சரி; இல்லாவிடில் அரசாங்கத்தில் அறிவுள்ள எவரும் பங்குகொள்ளமாட்டார்.

அமைதியையும், ஒழுங்கையும் நிலைநிறுத்துகிற அரசாங்கம் எந்த வகைப்பட்டதாக இருந்தாலும், அதற்கு யாவரும் கட்டுப்பட

[1] G.H. Sabine, A History of Political Theory.

வேண்டும். திறமையான சர்வாதிகார ஆட்சி முறை குடியாட்சி முறையைப்போலவே சிறந்ததாகும். மாவீரர் அலக்சாண்டரும், பேரரசை ஏற்படுத்திய ரோமும் வெற்றிகள் பெற்றுப் பேரரசுகளை நிறுவி, நல்லாடசிசெய்ததற்கு இந்தக் கருத்து முற்றிலும் பொருத்தம் ஆகும். எது பாதுகாப்பையும் நல்லுறவையும் வளர்க்கிறதோ அது நல்ல அரசாங்கம் ஆகும்.

பிரிவு 4: எப்பிக்யூரசின் கோட்பாடுகளைப்பற்றிய மதிப்பீடு

எப்பிக்யூரஸ் மனிதனுடைய தன்னலன் ஒன்றையே (அதாவது புலன் இன்பம் பெறுதல் என்பதையே) ஆதாரமாக வைத்து, அரசு, நாகரிகம் ஆகியவற்றின் தோற்றத்தையும், வளர்ச்சியையும் விளக்கிக் கோட்பாடுகளை வகுத்தார். ஆனால் பொதுவாக எந்த உயர் மெய்யறிவாளரும் (philosopher) மனிதருடைய புலனின்ப நாட்டம் ஒன்றைமட்டும் முக்கியமாகக் கொள்ளாமல் அதே சமயத்தில் மனிதருடைய இன்ப நாட்டத்தினை அழிக்காமல், அதனை ஒழுக்க நெறிக்கு உட்படுத்தி அறிவின் இன்ப உணர்வுக்கும் முக்கியத்துவம் அளித்து ஒரு மேம்பாடான நிலையை வகுத்துள்ளனர். எடுத்துக் காட்டாகத் திருவள்ளுவர்,

'அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது' (குறள் 45)

என்று கூறி, அதன்மூலமாகப் பண்பும், பயனும் உள்ள வாழ்க்கையே குறிக்கோளாக இருத்தல் வேண்டும்மென்று வலியுறுத்துகிறார். எனவே புலன் இன்ப உணர்வுக்காகமட்டுமே ஏற்படும் சமுதாய உறவு நீடித்த சமுதாயத்தைத் தோற்றுவிக்காது என்று தெரிகிறது. இன்ப உணர்வுக்கு ஆதாரமான ஒழுக்க நெறியே, நல்ல சமுதாயம் தோன்றுவதற்கும், அது நீடித்துநிற்பதற்கும் வழிசெய்யும் என்பது தெளிவு. நோக்கமாகிய இன்பம் பெறுதல் என்பது எவ்வளவு முக்கியமோ, அவ்வளவுக்கு அதனை அடையும் வழியும் அல்லது நெறியும் (அதாவது ஒழுக்கமும்) முக்கியமென்பது எல்லாச் சமயத் தலைவர்களும், மெய்யறிவாளர்களும் கண்ட முடிபாகும். மேலும், இறை உணர்வினைப்பற்றி எப்பிக்யூரஸ் கூறிய கோட்பாடும் ஒத்துக்கொள்ளக் கூடியதன்று. பல பண்டையக் கிரேக்கச் சிந்தனையாளரையும், தற்கால ஐரோப்பியச் சிந்தனையாளரையும்போல எப்பிக்யூரசும் இறை உணர்வினின்றும் விடுபட்ட வாழ்க்கையே இன்பவாழ்க்கை என்று கருதினர். இன்பவாழ்வுக்கு உறுதுணையாக இருக்கும் அறிவு, முடிவாக எந்த நோக்கத்தைக் கொண்டுள்ளது என்றால்,

அது இறைவனை அதாவது மெய்யினை உணர்தல் என்பதே ஆகும். இக்கருத்தை எப்பிக்யூரஸ் ஏற்றுக்கொள்ளவில்லை. திருவள்ளுவர்,

'பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்பது அறிவு' (குறள் 358)

என்று கூறுகிறார். மேலும் மெய்யுணர்வு இல்லாதவர்க்குப் புலனுணர்வும், இன்பமும் முழுஅளவில் கிடைத்தாலும், அதனால் பயன் இல்லை என்று கீழ்வரும் குறள்மூலம் தெளிவுபடுத்துகிறார்.

'ஐயுணர்வு எய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர்வு இல்லா தவர்க்கு' (குறள் 354).

இவ்வாறிருப்பினும் மக்களுக்கு எளிதில் அறியப்படக் கூடியதாக இருப்பதும், தற்காலத்தில் பொருளியல் நோக்கத்தை வைத்து வாழ்க்கையைச் சீர்தூக்கிப் பார்ப்பதற்கு உதவியாயிருப்பதுமாகிய புலன் இன்ப உணர்வு என்ற கோட்பாட்டை ஓர் அரசியல் கோட்பாடாக வகுத்தவர் எப்பிக்யூரஸ்தாம். இவருடைய கோட்பாட்டை ஆதாரமாக வைத்து 19ஆம் நூற்றாண்டில் பயன்வழிக் கோட்பாடு (Utilitarian Theory) தோன்றிற்று. மனித இயல்பு துன்பத்தை விலக்குவதும் இன்பத்தை நாடுவதுமே ஆகும் என்ற ஒரு பொதுப் படையான கோட்பாட்டை ஆதாரமாக வைத்தே பயன்வழிக் கோட்பாடும், அதன்வழியாகத் **தனியார் பொருளாதாரக் கோட்பாடும்** (economic individualism) 18, 19ஆம் நூற்றாண்டுகளில் வகுக்கப் பட்டன; அவை சிலகாலம் அரசாங்கத்தால் பின்பற்றவும்பட்டன.

இயல் ஐந்து

ஸ்டாயிக் கோட்பாடு - சீனோ, கிரிசிப்பஸ், பனேஷியஸ்

பிரிவு 1 : தோற்றுவாய்

அரிஸ்ட்டாட்டிலின் காலத்திற்குப்பின் கிரீசில் ஏற்பட்ட அரசியல் மாறுதல்களை நாம் முன்னரே கண்டோம். நகரரசு அமைப்பு மறைந்து, பேரரசு அமைப்புத் தோன்றியதும், அப்போது அரசியல் சிந்தனையில் ஏற்பட்ட மாறுதலும் முன்னரே குறிப்பிடப்பட்டன. 'மனிதன் இன்பம் அடைதல் எவ்வாறு?' என்ற கேள்விக்குச் சிந்தனையாளர்கள் மூன்றுவகையான விடைகள் கூறினர். மனிதன் மனக்கவலை, பேராசை, உடல் துன்பம் முதலியவற்றினின்றும் விடுபடுதல் மூலமாக இன்பமாக வாழ்தல்கூடுமென்று எப்பிக்யூரஸ் கூறினர். வாழ்க்கையில் குறைகளைக்காணும் சிந்தனையாளர்களாகிய **சினிக்குகள்** (Cynics) என்போர், இன்ப வாழ்க்கை வாழ்வதற்கு ஒவ்வொருவரும், தமது இயல்பான பண்புகளையும் அறிவாற்றல்களையும் அறிந்து, உணர்ந்து, தம் இயல்புக்கேற்ற வாழ்க்கையை நடத்துதல் வேண்டும் என்று கூறினர். எனவே எப்பிக்யூரஸ் கூறிய கருத்து, ஒரு குறிக்கோளை வகுத்து மனிதனுடைய நம்பிக்கை, முயற்சியோடிருக்கும் போக்கு ஆகியவற்றைக் காட்டவும், சினிக்குகள் கூறிய கருத்து நம்பிக்கையின் அடிப்படையில் அமையாமல், இருக்கும் சூழ்நிலையைமட்டும் ஆதாரமாகக்கொண்டிருந்தது. சினிக்குகளில் முக்கியமானவராகக் கூறப்படும் **டியாஜெனிஸ்** (Diogenes) என்பவர் உலக வாழ்க்கையினின்றும் விலகிக் கந்தை ஆடை உடுத்தி, வாழ்நாள் முழுவதும் ஒரு தொட்டியில் வசித்தாராம். மேற்கூறிய கேள்விக்கு விடைகூறிய மூன்றாவது வகைச் சிந்தனையாளர்களே **ஸ்டாயிக்குகள்** (Stoics) எனப்படுவோர். இவர்களுடைய கோட்பாடுகள் மூன்று சிந்தனையாளர்

களால் பல்வேறு காலங்களில் உருவாக்கப்பட்டன. அவர்களே சீனோ (Zeno), கிரிசிப்பஸ் (Chryssippus), பனேஷியஸ் (Panaetius) ஆகியோர் ஆவர்.

பிரிவு 2a: சீனோ
(கி.மு. c. 335—கி.மு. c. 265)

சீனோவின் காலம் உத்தேசமாகவே கூறப்படுகிறது; அவரைப் பற்றியும் சில செய்திகளே கிடைக்கின்றன. இவர் சைப்ரஸ் தீவிலுள்ள சிடியம் (Citium) என்ற ஊரில் பிறந்தார். இவர் முதலில் வணிகராகத் தொழில்செய்தார்; இவர் கி.மு. 314ஆம் ஆண்டில் சரக்குகளை ஏற்றிக்கொண்டு ஆதென்சுக்குப் போகும்போது, கப்பல் உடைந்துபோகவும், இவர்தம் பொருள்களை இழந்தார். ஆதென்சுக்கு வந்து தங்கி, கி. மு. 300ஆம் ஆண்டுக்குப் பின்னர் பிளேட்டோ எழுதிய நூல்களையும் பிளேட்டோவைப்பற்றிச் செனுபன் என்பவர் எழுதிய நூல்களையும் பயின்றார்; பிளேட்டோவின் கருத்துகளில் ஈடுபாடுகொண்டார். இவர் சில நாட்கள் சினிக்குகளுடைய கூட்டத்திலும் இருந்தார்; பின்னர் அக்கூட்டத்தினின்றும் விலகித் தாமே ஒரு தத்துவப் பள்ளியைநடத்தினார். அது நடைபெற்ற முக மண்டபத்தின் கூரை வண்ணம்பூசப்பட்டிருந்ததால் (Stoa), இவர் கற்றுக்கொடுத்த தத்துவங்களுக்கு ஸ்டாயிசிசம் (Stoicism) என்ற பெயர் வந்தது. (இவர் தற்கொலை செய்துகொண்டாரென்றும் கூறப்படுகிறது.) அலக்சாண்டருக்குப் பின் மாசிடோனியாவை ஆண்ட அரசர்களுள் ஒருவரான இரண்டாம் அன்ட்டிகோனிட் என்பவருடைய ஆசிரியராகச் சீனோ இருந்தார்.

பிரிவு 2b: கிரிசிப்பஸ்

சீனோவின் கூட்டத்தவர் ஸ்டோயா (Stoa) என அழைக்கப்பட்டனர். அவர்களுள் கி.மு. மூன்றும் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்தவரே கிரிசிப்பஸ் என்ற ஸ்டோயா ஆசிரியர். இவருடைய பிறந்த ஊர், வரலாறு ஆகியவைப்பற்றி வேறு எந்தச் செய்தியும் கிடைக்கவில்லை. இவரே இக்காலத்தில் நமக்குக் கிடைத்துள்ள ஸ்டாயிக் கோட்பாட்டின் பெரும்பகுதியை வரைந்தவர்.

இவர் வாழ்ந்த காலத்தில் ரோம் தனது பேரரசை மத்திய தரைக்கடலைச் சுற்றியிருந்த பெரும்பாலான நாடுகளில் நிறுவிற்று. இவர் வாழ்ந்த கிரீசிலும் ரோமானியருடைய பேரரசு பரவத்தொடங்கியிருந்தது. மாவீரர் அலக்சாண்டர் நிறுவிய பேரரசில் கிரேக்க

இனமக்களும், கிரேக்கரல்லாத மற்ற இனமக்களும் வாழ்ந்த அரசுகள் அடங்கியிருந்தன. நாகரிகமற்றவரெனக் கருதப்பட்ட கிரேக்கரல்லாத இனமக்களுக்கும் (barbarians), கிரேக்க இனமக்களுக்கும் இடையே **நல்லிணக்கத்தை** (concord) ஏற்படுத்துதல் வேண்டுமென்ற சீரியநோக்கம் உடையவர் மாவீரர் அலக்சாண்டர். இந்த நோக்கமே அவருக்குப் பிற்பட்ட காலத்தில் வாழ்ந்த கிரிசிப்பஸ் போன்ற ஸ்டாயிக் ஆசிரியர்களால் சிறந்த கோட்பாடாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்த வரலாற்றுச் சூழ்நிலை ஸ்டாயிசிசத்தை மதிப்பீடுசெய்வதற்கு மிகவும் இன்றியமையாதது.

பிரிவு 2c : பனேஷியஸ்

இவர் கிரிசிப்பசைப்போல ஒரு ஸ்டோயா ஆசிரியர்; இவர் கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் **ரோட்ஸ்** (Rhodes) நாட்டில் வாழ்ந்தவர்; இவர் காலத்தவர் ஸ்டாயிக் கோட்பாடுகளை ஏற்றுக்கொள்ளும் வண்ணம், இவர் சீனோவின் கோட்பாடுகளைச் சிறிது மாற்றியமைத்தார். இவற்றைத் தவிர இவ்வாசிரியரின் வரலாற்றைப்பற்றி வேறொன்றும் தெரியவில்லை.

இனி இம் மூன்று ஆசிரியர்களும் வகுத்த ஸ்டாயிக் கோட்பாடுகளைச் சுருங்கக் கூறுவோம்.

பிரிவு 3 : ஸ்டாயிக் கோட்பாடுகள்

சீனோவின் கோட்பாடுகள்

சீனோவின் கோட்பாடுகளுக்கு மையமாக இருந்த கருத்து, 'மனிதன் இன்பம் அடைதல் எவ்வாறு?' என்ற வினாவிற்கு அவர் தரும் விடையில் காணப்படுகிறது.

இயற்கை (Nature)

உலகம் ஏதோ ஒருநெறியும் இல்லாமல் இயங்கும் ஓர் இயந்திரம் அன்று. மாறாக ஒரு தெய்விகப் பேராற்றல் அதை இயக்குகிறது. எல்லாப் பொருள்களும் நன்மைபெறுதல் வேண்டுமென்ற நோக்கத்தோடேயே அவ்வாற்றல் யாவற்றையும் இயக்குகிறது. மனிதர் தமது பகுத்தறிவுக்கும், இயல்புக்கும் ஏற்ப வாழ்வை அமைத்துக்கொள்ளுதல் வேண்டும். இயற்கையில் காணப்படும் அமைப்புகளெல்லாம் (phenomena , காரண காரிய அடிப்படையில் அமைந்தும், நன்மைதருபவையாகவும் இருக்கின்றன. ஆகையால் அறிவுள்ளவர், இயற்கையின் வழியைப் பின்பற்றி, நடைமுறைச்

செயல்களுக்கேற்பத் தம் விருப்பங்களையும், நோக்கங்களையும் உருவாக்குகிறார். இதனை உணர்ந்துகொண்டால் வாழ்க்கையின் இடர்ப்பாடுகளைக் கண்டு எவரும் மனக்கவலை கொள்ளமாட்டார்; மாறாக, தந்நிறைவு உடையவராக இருப்பார். எனவே இந்த மன நிலையில் விருப்பம், துன்பம் முதலியவற்றினின்றும் யாவரும் விடுபட்டும், தெய்விகக் குறிக்கோளுக்கேற்பச் செயல்களைச்செய்தும் வந்தால், துன்பம் நீங்கி, இன்பம் கிடைக்கும்.

சீனோ, இவ்வாறு எப்பிக்யூரசுக்கு மாறாக, புலன் இன்ப உணர்வை ஆதாரமாகக் கொள்ளாமல், தெய்விகக் குறிக்கோளையும், மனித அறிவு அதனை ஒட்டி இயங்கும் இயல்பையும் ஆதாரமாகக் கொண்டார். இந்தக் கருத்து, கிறிஸ்து பிறப்பதற்குமுன் ரோம் மக்களிடையே வெகுவாகப் பரவியிருந்தது.

நல்லொழுக்கப் பண்பு

நல்லொழுக்கப் பண்புதான் வாழ்வின் இன்பத்துக்கு ஏற்ற நெறி ஆகும். ஆகையால் இதை வளர்ப்பதுதான் கோட்பாடாக இருக்கவேண்டும். நல்லொழுக்கப் பண்பைத் தவிர மற்றவைகளெல்லாம் — அதாவது உடைமை, திருமணம், குடும்ப வாழ்க்கை, குடி உரிமை, கல்விப் பயிற்சி, நற்பெயர் — முதலியவை எல்லாம், தம்மிலே நல்லனவுமல்ல; தீயவையுமல்ல. இவ்வாறான தன்மை உடையவைகளெல்லாம் தம்மிலே நன்மைபயப்பனவுமில்லை; தீமைபயப்பனவுமில்லை; இவை **பொது இயல்பினவாகும் (indifferent).**

சமத்துவக் கோட்பாடு (Doctrine of Equality)

யாவரும் சமத்துவம் உடையவர்; கிரேக்கருக்கும், கிரேக்கரல்லாதவருக்கும், சுதந்திரக் குடிமக்களுக்கும், அடிமைகளுக்கும் வேறுபாடு இல்லை; யாவரும் சமத்துவம் உடையவரே. சமுதாயச் சிறப்பு வேறுபாடுகள் இல்லை. அரிஸ்ட்டாட்டில்போன்ற பெரிய அறிஞர்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட அடிமைநிலையை முதன் முதலாகத் தத்துவக் கோட்பாட்டின் மூலமாகத் தகர்த்தெறிந்த கிரேக்கச் சிந்தனையாளர் ஸ்டாயிசிசத்தைத் தோற்றுவித்த சீனோதாம்.

கிரிசிப்பசின் கோட்பாடுகள்

சீனோ வரைந்த கோட்பாடுகள், அவர் சினிக்குகளுடன் தொடர்புகொண்டிருந்த காரணத்தால், மிகக் கடுமையாக இருந்தன; பொதுவாக அவர் அறிவுடையோரைப்பற்றியும், இயற்

கையின் சட்டத்தைப்பற்றியும் கூறிய கோட்பாடுகள் மனிதாபிமானம் அற்றவையாக இருந்தன. எனவே அவற்றைச் சிறிது மாற்றியும், நல்லொழுக்கப் பண்பு, சமத்துவம் ஆகியவற்றைப்பற்றிய கோட்பாடுகளை விரிவாக்கியும் கிரிசிப்பஸ், பனேஷியஸ் முதலிய ஸ்டாயிக் ஆசிரியர்கள் வரைந்தனர். கிரிசிப்பஸ் தம் கருத்துகளைத் தாம் எழுதியுள்ள **சட்டங்கள் (on Laws)** என்ற நூலில் கூறுகிறார். இவர் வகுத்த கோட்பாடுகள் எல்லாவற்றிற்கும் ஆதாரமாக இருப்பது, மனிதர் **தந்நிறைவும் (self-sufficiency)**, **நல்வாழ்வும்** பெறுதல் வேண்டுமென்ற நோக்கமே ஆகும்.

தந்நிறைவு பெறுதல்

மனிதர் இந்த இயல்பைப்பெற வேண்டுமானால், மன உறுதி வளர்வதற்கு உரிய பயிற்சிசெய்தல் வேண்டும்; அதாவது உறுதி, பொறுமை, கடமை உணர்வு, இன்ப நாட்ட உணர்வினைப் புறக்கணித்தல் முதலியவற்றைப் பழக்கப்படுத்திக்கொள்ளுதல் வேண்டும். கடமை உணர்ச்சி என்பதை ஒரு சமய நெறியாக, இறைவன் வகுத்தநெறியாகக் கொள்ளுதல் வேண்டும்.

மனிதரும் சமுதாய வாழ்வும்

கடவுளைப்போல மனிதரும் அறிவுடையவர். விலங்குகளினின்றும் மனிதரை வேறுபடுத்திக்காட்டுவது, அவர்களிடமுள்ள அறிவே ஆகும். இதன் உதவிகொண்டு அவர்கள் பேசுவதற்கும் சரியானது எது தவறானது எது என்று உணரவும் வல்லவர்களாகின்றனர். எனவே உயிர்களெல்லாவற்றுள்ளும் மனிதர்களே பெரும் குடும்பமாக அதாவது சமுதாயமாக வாழ்வதற்குத் தகுதி உடையவர்கள். அவர்கள் யாவரும் கடவுளின் குழந்தைகள், எனவே அவர்கள் தம்முள் உடன்பிறந்தாரென்ற உணர்வோடிருக்க வேண்டும். சமுதாய வாழ்வில் சில நோக்கங்கள் நிறைவேறும் பொருட்டு நல்லவர்கள் அரசாங்கத்தில் பங்குகொள்ளுதல் வேண்டும்.

இயற்கையில் முரண்பாடு இல்லை. அது முழுமையான, உண்மையான ஒழுக்கநெறியாக இருக்கிறது. எனவே இயற்கையோடு ஒத்த வாழ்வு வாழ்பவன் கடவுளின் தீர்ப்புக்கு முழுவதும் உடன்பட்டவனாகிறான்.

உலக அரசு (The City of the World)

மனிதச் சமுதாயம் முழுவதையும் கொண்ட அமைப்பை **ஓர் அரசு** அதாவது **உலக அரசு** என்று கூறலாம். இதில் கடவுளரும்,

மனிதரும் குடிகள் ஆவர். இந்த உலக அரசுக்கு ஓர் அரசியலமைப்பும் இருக்கிறது. இந்த அரசியலமைப்புத்தான் சரியான அறிவு (Right Reason) என்பது ஆகும்.

இயற்கையின் சட்டம் (Law of Nature)

சரியான அறிவே இயற்கையின் சட்டம் ஆகும். எந்த இடத்தையும், எதனையும் நியாயமானதா, சரியானதா என்று அறிந்துகொள்ளுதற்கு ஓர் உரைகல்லாக அல்லது அளவு கோலாக இந்த இயற்கையின் சட்டம் அமைந்திருக்கிறது. மனிதரிடம் இயற்கையில் அமைந்திருக்கிற நியாய உணர்வே சரியான அறிவும், இயற்கையின் சட்டமும் ஆகும். இதனுடைய கொள்கைகளுள் எதுவும் மாற்றப்பட இயலாதவாறு நிலையாக இது அமைந்திருக்கிறது. இது அரசர், குடிகள் மற்றும் யாவரையும் கட்டுப்படுத்தவல்லது. இதுவே கடவுளின் சட்டமும் ஆகும்.

> 'சட்டம் என்பது கடவுளர், மனிதர் ஆகிய எல்லாருடைய செயல்களையும் கட்டுப்படுத்தும் விதி ஆகும். அதுவே எந்தச் செயல் உயர்ந்தது, எது தாழ்ந்தது என்று தீர்மானிப்பதில் நமக்கு வழிகாட்டியாக இருக்கிறது. எனவே எது சரி, எது தவறு என்றறிய உதவும் அளவு கோலாக standard) அது இருக்கிறது. இயற்கையிலேயே சமுதாயமாக அமைந்துவாழும் எல்லா உயிர்களும் செய்ய வேண்டுவது எதுவோ, அதைச்செய்யும்படி அவற்றைத் தூண்டுவதாகவும், எதைச்செய்யவேண்டாமோ அதைத் தடுப்பதாகவும் இருப்பது சட்டம்.'[1] (G.H.சபைன்).

சமுதாய வேறுபாடுகள் (Social distinctions)

உலகச் சமுதாயத்தில் உள்ள பல்வேறு நாடுகளிலும் ஒன்றை மற்றவற்றினின்றும் வேறுபடுத்திக்காட்டுகின்ற வேறுபாடுகள் அல்லது வழக்கங்கள் (conventions) இருக்கின்றன. ஒவ்வொரு நாட்டுக்கும் உரிய சில தனிப்பட்ட வழக்கங்கள் அல்லது வேறுபாடுகள் மேலே குறிப்பிட்ட உலக நாட்டுக்கு அல்லது உலக அரசுக்குப் பொருந்துவதாகாது.

சமத்துவக் கோட்பாடு (Doctrine of Equality)

உலக அரசில் (World State) யாவரும் சமத்துவம் உடையவர்கள். அதன் குடிமை உரிமையைப்பெறுதற்கு அறிவுடையோர்

[1] G. H. Sabine எழுதிய A History of Political Theory.

யாவரும் தகுதி உடையவர்களாவர். சிலரைமட்டும் அறிவிற் சிறந்தோரெனவும், சிலரை அறிவிலிகளெனவும் கொள்ள இயலாது. சிலரைக் கடவுள் தலைமைதாங்கி நடத்திச்செல்லக்கூடிய வர்களாகவும், சிலரைக் கடவுள் ஒருநெறியில் கட்டாயப்படுத்தித் தம்மோடு இழுத்துச்செல்லக்கூடிய நிலையிலும் இருக்கிருர்கள். இதைத் தவிர அறிவுடையோர், அறிவிலி என்ற வேறுபாடு இல்லை. **மேலும் அடிமைகள் என்பவரும் மனித இனத்தில் இல்லை.** அடிமைகள் என்பவர் யாரெனின், வாழ்நாள் முழுமைக்கும் வேலையாட்களாக அமர்த்தப்பட்டவர்களே ஆவர். இயல்பில் மனிதர் எவரும் அடிமைகள் அல்லர். (இந்தக் கருத்து, 'அடிமை என்பவர் உயிரோடிருக்கும் கருவி,' என்னும் அரிஸ்ட்டாட்டிலின் கருத்தோடு ஒப்பிடத்தக்கது.)

இருவகைச் சட்டங்கள் நாட்டின் சட்டம் (அல்லது நாடுகளின் சட்டம்) (Law of Nations), இயற்கையின் (உலக நாட்டின்) சட்டம் (Law of Nature)

ஒவ்வொருவரும் இருவகையான சட்டங்களால் கட்டுப்படுத்தப் படுகிருர். ஒன்று, அவர் வாழும் சமுதாயத்தின் அல்லது நாட்டின் சட்டம்; இன்னென்று உலக நாட்டின் சட்டம். நாட்டின் சட்டம் வழக்கத்தை ஆதாரமாகவும், உலக நாட்டின் சட்டம் அறிவின் சட்டத்தை (Law of Reason) ஆதாரமாகவும் கொண்டிருக்கின்றன. இரண்டில் உலக நாட்டின் சட்டமே உயர்ந்த அதிகாரம் உடையது. இதுவே ஒவ்வொரு நாட்டின் எழுதப்பட்ட சட்டங்களுக்கும், வழக்கங்களுக்கும் இருக்க வேண்டிய நோக்கத்தை அல்லது குறிக்கோளை அமைக்கக்கூடிய தாக இருக்கிறது. வழக்கங்கள் நாட்டுக்குநாடு வேறுபடுகின்றன. ஆனல் பகுத்தறிவு என்பது எல்லா நாடுகளுக்கும் ஒன்றே ஆகும். வழக்கங்களெல்லாவற்றுக்கும் ஒரே நோக்கமே ஆதாரமாக இருத்தல்கூடும்.

பொதுச் சட்டம் (Common Law)

நாடுகளுக்கிடையேயும், ஒவ்வொரு நாட்டினுள்ளும் எழும் வழக்குகளைத் தீர்ப்பதற்கு நடுவர்முறையும் (arbitration), மன்ற ஆய்வுமுறையும் (adjudication) கையாளப்படுகின்றன. மன்ற ஆய்வுமுறையில் ஒரு நாட்டு வழக்கு ஆய்வுசெய்யப்படும்போது, மற்ற நாட்டிலிருந்து நீதிபதிகள் வரவழைக்கப்பட்டனர். எனவே பல்வேறு நாடுகளின் சட்டங்களை ஒத்துப்பார்க்கவும், தரும நியாய உணர்வை (equity) ஒட்டியே தீர்ப்புவழங்கவும் சாத்திய மாயிற்று. இவ்வகையாக எல்லா நாடுகளுக்கும் கையாளப்படக் கூடிய ஒரு பொதுச்சட்டம் (Common Law) தோன்றிற்று. இந்தப்

பொதுச்சட்டம் தோன்றுவதற்கு இயற்கையின் சட்டம் மிகவும் துணைசெய்கிறது.

(c) பனேஷியசின் கோட்பாடுகள்

சீனோ வகுத்த கோட்பாடுகளைக் கிரிசிப்பஸ் சிறிது மாற்றியமைத்தபோதிலும், கிரிசிப்பஸின் கோட்பாடுகளும் கல்வி அறிவுடையோரால்மட்டுமே விளங்கிக்கொள்ளத் தக்கவையாக இருந்தன. சிலர் ஸ்டாயிக்குகளின் நீதிக்கருத்தை மறுத்தனர்; கார்னியாடஸ் என்பவர், (Carneaedes) ஸ்டாயிக்குகளின் இயற்கைநீதிக் கோட்பாட்டை மறுத்து, 'மனிதர் யாவரும் தந்நல நோக்கத்துடனும், அதற்கேற்ற சுய அடக்கத்துடனும் வாழ்கின்றனர் (self interest and prudence); இவற்றுக்கே நீதி (justice) என்ற கவர்ச்சியான பொருள் கொடுக்கப்பட்டிருக்கிறது,' என்று கூறினர். வேறு சிலர், ஸ்டாயிசிசம் கூறும் அறிவாளி இயற்கையில் காணப்படாத இயல்புடையவரென்றும், அஞ்சத்தக்கவராக, மக்கட்பற்று இல்லாதவராக மனித உணர்ச்சியினை அழிப்பவராக இருக்கிருரெனவும் கூறினர். பொதுவாக ஸ்டாயிக்குகள் கூறிய அறிவாளி மக்கட் பற்றற்றவரென்றும், ஸ்டாயிக்குகள் வகுத்த இயற்கையின் சட்டமாகிய சரியான அறிவு என்பது மக்கட் சமுதாய வழக்கங்களுக்குப் பொருத்தமில்லாதது எனவும் யாவரும் எண்ணினர். ஆகையால் ஸ்டாயிக்குகளின் கருத்துகளை மேலும் சிறிது மாற்றியமைக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இவ்வாறு மாற்றியமைத்தவர் பனேஷியஸ் என்பவர் ஆவார்.

ஒழுக்கப்பண்பு

பனேஷியஸ், ஸ்டாயிசிசத்தின் முதலாவது ஆசிரியரான சீனோ கூறிய ஒழுக்கக் கோட்பாடுகளான தன்னடக்கம், கடமையில் ஈடுபாடு, பொதுநல நோக்கு முதலியவைகளை ஒப்புக்கொண்டு அவற்றை வற்புறுத்தினர். இக் கோட்பாடுகளில் ரோமானிய உயர்குடிச் செல்வர்கள் ஈடுபாடுகாட்டினர். கடமை உணர்வு பெற்றவரான ரோமானியர் அதன்விளைவாக ஒரு பேரரசை (empire) அமைத்து, ஆளும் நிலைக்கு உயர்ந்தனர். ரோமானியர் கடமை உணர்வோடு தொடக்கத்தில் இருந்ததனுல் அவர்கள் ஸ்டாயிக்குகளின் கோட்பாடுகளில் ஆர்வமுடையோராக இருந்தனர்.

பொதுநல நோக்கு அல்லது பொதுநலப் பண்பு (Public spirit)

மக்கள் பொதுநல நோக்கத்துடனும் செயல்படுதல் வேண்டும். இந்த நோக்கமே சமுதாய நல்லுறவையும், நல்வாழ்வையும் வளர்க்கும். இக் கோட்பாட்டுக்குப் பனேஷியசினுல் முழுவடிவம் கொடுக்கப்பட்டது; இதுவே மேலும் விரிவாக அமைக்கப்பட்டுப்

பிற்காலத்தில் உலக நாடுகளின் சட்டம், (International law), உலகப் பொதுநோக்கு (cosmopolitanism) முதலியவற்றுக்கு ஆதாரமாக அமைந்தன.

மக்கட்பற்றும், இரக்கமும் (Love of Humanity and Compassion)

பனேஷியஸ், அறிவாளிகள் மனிதாபிமான உணர்ச்சி அற்றவர்களாக இருத்தல் வேண்டுமென்ற பழைய ஸ்டாயிக் கோட்பாட்டை மாற்றி அமைத்து, அறிவாளிகள், மக்கட்பற்று, இரக்கம், அன்பு முதலிய உணர்ச்சிகளை உடையவராக இருத்தல் வேண்டுமென வகுத்தார். மேலும் ஸ்டாயிக் கோட்பாடு இறை உணர்வை ஒப்புக்கொள்ளும் ஒரு கோட்பாடு ஆகும்.

நீதியும் சட்டமும் (Justice and Law)

நீதி, சட்டம் ஆகியவைகளைப்பற்றி ஸ்டாயிக்குகள் வகுத்த பழைய கோட்பாடுகளைமாற்றி, அவற்றுக்குத் தற்காலத்திலுள்ள பொருள்களைக்கொடுத்து, பனேஷியஸ் வகுத்தார். மக்கள்யாவரும், உரிமைகளைப்பொறுத்தவரையில் சமமானவர்; இவ்வுரிமைகளைச் சட்டம் ஒப்புக்கொண்டு பாதுகாப்பு அளிக்குமாயின், சட்டமே நீதியும் ஆகும். நீதி என்பது நாட்டில் முரண்பாட்டிற்கு இடமில்லாத, ஒருமைப்பாட்டுக்கு ஆதாரமாக இருக்கும் சட்டம் ஆகும். இதுவே சட்டத்தையும், நீதியையும்பற்றிய இக்கருத்து ஆகும்.

> ‘தரம் (rank) இயற்கை ஆற்றல், செல்வம் முதலிய தவிர்க்கமுடியாத வேறுபாடுகளின் காரணமாக மக்கள் வேறுபட்டுள்ளனர். அவ்வாறிருந்தாலும், யாவரும் மனிதத்தரம் என்ற நிலைமையைப் பெற்றிருப்பதற்கு இன்றியமையாதனவாக இருக்கும் சில உரிமைகளைப் பொறுத்தவரையில் (rights) சமமானவரே ஆவர். எனவே இவ்வுரிமைகளைச் சட்டம் ஒப்புக்கொண்டு இவற்றைச் செயல்படுத்துவதில் அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்குமானால், அச்சட்டமே நீதி ஆகும்.’ [1]

பிரிவு 4: ஸ்டாயிக் கோட்பாடுகள் பிற்கால ஐரோப்பியரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட வகை; ஸ்டாயிசிசத்தின் மதிப்பீடு

அடிமை ஒழிப்பு

ஸ்டாயிக்குகளின் கோட்பாடுகள் இன்றைய உலக அரசியலில் முக்கியத்துவம் பெற்றுள்ளன. அவர்கள் வகுத்த **மக்கள் சமத்துவக்**

[1] G. H. சபைன் எழுதிய A History of Political Theory.

கோட்பாடு இருவகையில் மக்கட் சமுதாயச் சீர்திருத்தத்துக்கும், அரசியலமைப்பு வளர்ச்சிக்கும் உதவிசெய்தது. மக்கட் சமுதாயத்தில் **அடிமைநிலை ஒழிப்பு (abolition of slavery)** என்ற முக்கிய சீர்திருத்தம் செய்யப்படுவதற்கு ஸ்டாயிக்குகளின் மக்கள் சமத்துவக் கோட்பாடு மிகவும் உதவிசெய்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்தே அடிமை ஒழிப்பு இயக்கங்கள் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் வளரலாயின.

குடியாட்சி வளர்ச்சி

'மக்கள் உரிமைகளில் சமத்துவம்' என்ற ஸ்டாயிக்குகளின் சமத்துவக் கோட்பாடு குடியாட்சிச் சீர்திருத்தங்கள் தோன்றுவதற்குரிய சூழ்நிலைகளைத் தோற்றுவித்தன. பிரபுக்கள் வகுப்பு, சாதாரணமக்கள் வகுப்பு என்ற இரண்டுக்குமுள்ள வேறுபாடுகள் நீங்குவதற்கு, உரிமைகள் இருவகுப்பாருக்கும் ஒத்த வகையில் இருக்குமாறு செய்யப்பட்டன. இங்கிலாந்திலும், மற்ற நாடுகளிலும், குடிமக்கட்கு அரசாங்கத்தில் பங்கு இருப்பதற்காக, அரசியலுரிமைகள் யாவருக்கும் சமமாக வழங்கப்படவே அரசாங்கம் குடியாட்சிவகையாக ஆவதற்கு வாய்ப்பு ஏற்பட்டது. இந்த வகையிலான வளர்ச்சி, பிரெஞ்சுப் புரட்சிக்குப் பிற்பட்ட காலத்தில் வலுவடைந்தது.

உலக நாடுகள் சட்டம்

ஸ்டாயிக்குகள் வகுத்த இயற்கையின் சட்டமும், மனிதச் சமத்துவக் கோட்பாடும், இக்காலத்திய **உலகநாடுகளின் சட்டத்துக்கு** அடிப்படையாக அமைந்தன (International Law). 16ஆம் நூற்றாண்டில் **ஹியூகோ குரோஷியஸ் (Hugo Grotius 1583–1645)** என்ற டச்சு ஆசிரியர் இயற்கையின் சட்டக்கருத்துகளையும் மனிதச் சமத்துவக் கருத்துக்களையும் அடிப்படையாகவைத்து, உலக நாடுகளின் சட்டம் என்ற தொகுப்பை வரைந்தார். எனவே ஸ்டாயிக்குகளின் கருத்துகள் பல இன்றும் உலக அரசியல் நிலையில் செயல்பட்டுவருகின்றன என்று கூறலாம். உலக அரசு என்ற ஸ்டாயிக்குகளின் குறிக்கோளை நோக்கியதே 1919ஆம் ஆண்டில் தோன்றிய சர்வதேச சங்கமும்,1945இல் தோன்றிய ஐக்கிய நாடுகள் சபையும் ஆகும்.

இதனைத் தவிர ஸ்டாயிக் கருத்துகள் இக்காலத்தில் ஒவ்வொரு நாட்டிலும் இருக்கும் குடியாள் உரிமை என்றமுறை வளர்வதற்கு உதவிசெய்தன. இவற்றை அடுத்த இயலில் காண்போம்.

இயல் ஆறு

கிரேக்க ஸ்டாயிக் கோட்பாடுகளும் ரோமானியச் சட்டமுறைகளும் இக்காலக் குடி ஆள் உரிமைக் கோட்பாடு வளர்வதற்குச் செய்த உதவி

பிரிவு 1: தற்காலக் குடி ஆள் உரிமைக் கோட்பாடு (Theory of Modern Citizenship)

இக்காலத்தில் ஒவ்வொரு நாட்டிலும் இருந்துவரும் குடி ஆளுரிமை என்ற கோட்பாடு வளர்வதற்கு எவ்வாறு பண்டைக் காலத்திய கிரேக்க ஸ்டாயிக் கருத்துகளும், ரோமானியச் சட்ட முறையும் உதவிசெய்தன என்பதைச் சுருங்கக் கூறுவோம்.

இக்காலத்தில் ஒவ்வொரு நாட்டிலும் வாழும் குடி ஆள் ஒவ்வொருவருக்கும் (1) சிவில் உரிமைகள் (Civil Rights), (2) அரசியல் உரிமைகள் (Political Rights), (3) பொருளாதார உரிமைகள் (Economic Rights) எனும் மூவகை உரிமைகள் இருக்கின்றன. அரசியல் உரிமைகளைக் கையாளுவதன்மூலம் தக்க வயதுவந்தோர் தேர்தல்களில் வாக்களிக்கவும், வேட்பாளராகத் தேர்தல்களில் போட்டியிடவும், சில தகுதிகளினடிப்படையில் அரசாங்க அலுவல்களை ஏற்கவும் உரிமைகளைப் பெறுகின்றனர். பொருளாதார உரிமைகளின்மூலமாக நல்ல வாழ்க்கைத்தரத்துக்கு வேண்டியபொருளை ஈட்டவும், அலுவல்பெறவும், தக்க ஊதியம் பெறவும், தொழிலாளர் நலனைக் கண்காணிப்பதற்காகத் தொழிற் சங்கங்களை நிறுவவும் வாய்ப்புகள் தோன்றுகின்றன. சிவில் உரிமை களின்மூலம், ஆள்சுதந்திர உரிமை (அதாவது சட்டவகையி லன்றி ஏதேச்சாதிகாரமாக எவராலும் சிறைப்படுத்தப்படாமல் சுதந்திரமாக இருக்கும் உரிமை), சட்டத்தின் முன்னர் யாவரும்

சமமென்ற உரிமை, கல்விவசதி, சமய உரிமை, கலாசார வசதிகளைப்பெறும் உரிமை முதலியவைகள் தோன்றுகின்றன. ஒவ்வொரு நாட்டின் அரசியலமைப்புச் சட்டத்திலும் பெரும்பாலும் இவ்வுரிமைகள் ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கின்றன.

ஆனால் இத்தகைய வடிவத்தில் பண்டையக் கிரேக்க நகரரசில் குடிஆள் உரிமைக்கருத்தும், சட்ட அமைப்பும் இருக்கவில்லை. பண்டைய நகரரசில், அதனுடைய குடியாட்கள் சமுதாயத்தில் பிறந்தவருக்கே குடி ஆள் உரிமைகள் இருந்தன. அடிமைகட்கும், அயலவருக்கும் குடி ஆள் உரிமைகள் இல்லை. பண்டைய ரோம் நகரரசிலும் (Rome) இவ்வாறான நிலைமைதான் இருந்தது. இத்தாலி நாட்டின் மேற்குக் கரையின் நடுவில் கி.மு. எட்டாம் நூற்றாண்டின் நடுவில் ஒரு சிறிய நகரரசாகத் தோன்றியது ரோம். இந் நகரரசின் சட்ட அமைப்பும் கிரேக்க நகரரசைப்போலவே ஒருசாராருக்கு உரிய குடி ஆளுரிமைக் கருத்தை ஒட்டியே அமைந்திருந்தது. பண்டைய ரோமானியச் சட்டமானது, அந்த நகரரசுக்கு உரிய சட்டமாக, அதாவது, அதைப்பின்பற்றுவதற்குப் பிறப்பின்மூலம் உரியவராகக் கருதப்பட்ட ஒருசில குடிமக்களுடைய சட்டமாக இருந்தது. அதில் சில சமயச் சடங்குகளும், பண்டைய வழக்கங்களும் கலந்திருந்தன. ஆகையால் ரோமானியராகப் பிறவாமல், ரோமில் வந்துதங்கி இருந்தவர்களுக்கு ரோமானிய நாட்டுச் சட்டம் கையாளப்படலாகாது.

பிரிவு 2: ரோமானியர் வகுத்த நாடுகளின் சட்டம் (Ius Gentium)

நாளாவட்டத்தில் ரோமானியர் தம் இனத்தைச் சாராத அயலவரோடு வாணிபம் முதலிய துறைகளில் தொடர்புகொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. முதலில் தனித்த ஒரு சிறிய நகரரசாக இருந்த ரோம் கி.மு. இரண்டாம் நூற்றாண்டின் இறுதிக்குள் இத்தாலிநாடு முழுவதையும், சிசிலி, கார்சிகா, சர்டினியாத்தீவுகளையும், ஸ்பெயின், பிரான்ஸ் (அல்லது கால்–Gaul), தென் பிரிட்டன், வட ஆப்பிரிக்கக் கரையிலுள்ள கார்த்தேஜ், சைரின், எகிப்து முதலிய நாடுகளையும், கிரீஸ், ஆசியா மைனர் முதலிய நாடுகளையும் வென்று தனது ஆட்சியின்மூலமாக இணைத்து ஒரு பேரரசைத் தோற்றுவித்தது. இந்த நிலையில் ரோமானியருடைய ஆட்சிமுறையும், வணிகத்தொடர்புகளும். ரோமானியரல்லாதவரோடு விரிவாகக் கையாளப்படவேண்டிய கட்டாயம் உண்டாயிற்று. ஆகையால், தமதுநாட்டில் குடியேறிய ரோமானியரல்லாதவர்களுடைய செயல்களுக்கு ரோமானியர் தமது நாட்டின் சட்டத்தில்

ஒப்புதல் கொடுக்கவேண்டியதாயிற்று. எனவே அயலவருடைய செயல்கள் ரோமானியருடைய சட்டப்படி சரியா என்று ஆய்ந்து தீர்ப்புக்கூறும்பொருட்டு **பிரீட்டர்** (Praetor) என்ற ஒரு விசேட நீதி அலுவலரை ரோமானிய அரசாங்கம் அமர்த்திற்று. இந்த நீதி அலுவலர் அயலவர் சம்பந்தப்பட்ட வழக்குகளை ஆய்வுசெய்யும் போது, பண்டைய ரோமானியச் சட்டத்திலிருந்த சமயச் சடங்கு விதிகள் கையாளப்படவேண்டிய தேவை தோன்றுமல், நீதிக்கும், காரணத்துக்கும் (அல்லது பொது அறிவுக்கும்) பொருத்தமான செயல்களையே விதியாகக் கொள்ளவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அனைவருடைய உரிமைக்கும் மதிப்புக்கொடுக்கும் நேர்மையான செயல்முறைகளெல்லாம் விதிகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டன. இவ்வாறு எல்லாருடைய - ரோமானியர், ரோமானியரல்லாதவர் ஆகியோருடைய - பொதுநலனுக்கும் உகந்த, நேர்மையோடு பொருந்திய செயல்முறைகளை விதிகளாக உடைய ஒரு சட்டவகை ரோமானியருக்கு அயலவரோடு ஏற்பட்ட தொடர்பின்மூலம் உண்டாயிற்று. இதுவே **எல்லா நாட்டினருக்கும் பொதுவான சட்டம்** அல்லது **நாடுகளின் சட்டம்** (Ius Gentium) என ரோமானியச் சட்ட அறிஞரால் அழைக்கப்பட்டது. இது ஆங்கில வணிகச் சட்டமுறையை (English Mercantile Law) ஒத்திருந்தது. இந்த நாடுகளின் சட்டம் அறிவுக்குப் பொருந்தியும், இரக்க உணர்வோடு பொருந்தியும் இருந்ததால் இதுவே நாளடைவில் ரோமானியச் சட்டத்தின் ஒரு பெரும்பகுதியாக ஆயிற்று.

பிரிவு 3: கிரேக்க ஸ்டாயிக் கருத்துகள் ரோமானியச் சட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்படுதலும், இயற்கையின் சட்டம் (Ius Naturale) தோன்றுதலும்

ரோமானியருடைய நாட்டின் சட்டத்திற்குத் தத்துவ அடிப்படையாகச் சில நல்லபண்புகளைக் கிரேக்க ஸ்டாயிக் கோட்பாடுகள் கொடுத்தன; இவ்வகையால் ஸ்டாயிசிசம் சில நல்லபண்புகளை வற்புறுத்திற்று. அது வற்புறுத்திய நற்பண்புகளாவன :—மனித இனத்தின் ஒற்றுமையான இயல்பு (unity of the human race), மனிதரின் சமத்துவம், நாட்டில் நீதி, ஆண், பெண் அனைவருடைய சமத்துவமான தரம் அல்லது தகுதி, மனைவியர், குழந்தைகள் ஆகியோருடைய உரிமைகளுக்கு மதிப்பு, ஈகை, அன்பு, குடும்பத்தில் தூயநிலை, ஒருவருக்கொருவர் காட்டும்பொறை, நல்லுதவி எல்லா நிலையிலும்—அதாவது குற்றவாளிகளுக்கு மரணதண்டனை கொடுக்கவேண்டிய அஞ்சத்தக்க கட்டாயமான நிலையிலும்—இரக்க உணர்ச்சி ஆகியவை. இத்தகைய ஸ்டாயிக் பண்புகளை எல்லாம்

ரோமானியச் சிந்தனையாளர் ஏற்றுக்கொண்டு, இவற்றுக்குப் பொருந்துமாறு தமது நாட்டின் சட்டங்களை இணைத்தனர். இவ்வாறு கிரேக்க ஸ்டாயிக் கருத்துகள் ரோமானியருடைய நாட்டின் சட்டத்தோடு இணைந்து **இயற்கையின் சட்டம்** (**Ius Naturale**) என ஆயிற்று. இந்த இயற்கையின் சட்டம் பலநன்மைகளை அளிக்கும் சட்டமாக நிலைபெறலாயிற்று. இது பேரரசை (empire) நிறுவி ஆட்சிசெய்த ரோமானியருடைய அதிகாரப்பற்று என்ற உணர்வை மாற்றி, இரக்கம், நல்ல நோக்கம், நட்புணர்வு, கலை இலக்கியங்களிலீடுபாடு முதலிய நற்பண்புகளைப் பேரரசின் ஆட்சிமுறையில் பொருந்தவைத்தது.

பிரிவு 4: இயற்கையின் சட்டம் தோற்றுவித்த சில நற்பயன்கள்

ஸ்டாயிக் கருத்து, பிற்காலத்தில் பலமாறுதலுக்கு உள்ளாகிச் சில மனிதப் பண்புகளை வற்புறுத்திற்று; இம்மனிதப் பண்புகளை ஆதாரமாகக்கொண்டே இயற்கையின் சட்டம் பின்வருமாறு தோன்றிற்று:

சட்டத்தின் முன்பாக யாவரும் சமம் (**equality of all before law**) என்ற கருத்து நிலைபெறலாயிற்று. எனவே, குடிகள் யாவருக்கும் ஒத்த உரிமைகளும், ஒத்தமுறையில் சட்டத்தின் பாதுகாப்பும் இருக்கின்றன என்றநிலைமை தோன்றிற்று. இதன் மூலமாகக் குடியாட்சி அரசாங்க இயல்பு வளரக்கூடிய நிலைமையும், அடிமைகள் வகுப்பு நீங்குவதற்கும் வழிகள் தோன்றின.

பொதுவாக ஒவ்வொரு நாட்டின் சட்டத்தொகுப்பிலும்; இயற்கையின் சட்டத்திஞல் வற்புறுத்தப்படுவதும், எல்லா இன மக்களிடத்தும் காணப்படுவதுமான மனிதப்பண்புகளை ஒட்டிய விதிகளே இடம்பெற்றன; சமயச் சடங்குபற்றிய விதிமுறைகள் எல்லாம் நீக்கப்பட்டன.

மனித அறிவுக்கு அல்லது காரண இயலுக்குப் பொருத்தமில்லாத கடுமையான செயல்முறைகளை இயற்கையின் சட்டம் மாற்றிற்று.

நீதி என்ற பிணைப்பின் மூலமாக ஒன்றுபடுத்தப்பட்டுள்ள உலகம் முழுவதிலுமுள்ள மனிதக்குடும்பம், அல்லது உலக மனிதக்குடும்பம் (**world human brotherhood**) என்ற கருத்தை ஸ்டாயிக்குகளின் இயற்கையின் சட்டம் தோற்றுவித்தது.

இது மிக முக்கியமான கருத்து ஆகும். எவ்வாறெனில் உலக நாடுகளுக்கு இடையே எழும் பூசல்களை நீக்கி, அமைதியான நல்லுறவை ஏற்படுத்துவதற்காகப் பிற்காலத்தில் ஏற்படுத்தப்பட்ட நிறுவனங்களும், உலக நாடுகளின் சட்டமும், ஸ்டாயிக்குகள் நிறுவிய உலக மனிதக்குடும்பம் என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டே அமைக்கப்பட்டன.

அரசு என்ற அமைப்பானது—அது கிரேக்கருடையதைப் போல நகரரசு அமைப்பாக இருந்தாலும் சரி அல்லது ரோமானியருடையதைப்போலப் பேரரசு அமைப்பாக இருந்தாலும் சரி—அந்த அமைப்பு ஓர் உயரிய நோக்கத்துக்காக இருக்கும் அமைப்பு ஆகும். அதனுடைய அரசாங்கமும் மக்களுடைய கீழ்ப்படிதலை வலுக்கட்டாயமான முறையில் பெறாமல்; அவர்களுடைய பற்றுறுதியையும் **(loyalty),** ஆதரவையும் ஒழுக்க இயல்பான தகுதியின்மூலம் பெறுதல் வேண்டும்.

இயற்கையின் சட்டம் என்ற இந்த நல்ல கோட்பாடு நிலை பெறுவதற்கு, அரிஸ்ட்டாட்டில் மறைந்த கி.மு. 322ஆம் ஆண்டிற்குப் பிற்பட்ட இருநூறாண்டுக் காலத்தில்தோன்றிய சூழ்நிலைகள் உதவிசெய்தன. இந்த இருநூறாண்டுக் காலத்தில் நகரரசு என்ற சமுதாய அமைப்பு மறைந்தது. அதோடு, நகரரசைமட்டுமே மையமாகக்கொண்டு வளர்ந்திருந்த நாட்டுப்பற்று என்ற உணர்வும், பிரதேச அல்லது உள்ளூர் வழக்கங்களுக்கு இருந்தமதிப்பும், குடிமக்கள்—அயலவர் என்ற பாகுபாடுகளும், ஆட்சி அலுவலில் பங்கு உடையவருக்கே குடியாள் உரிமை என்ற முறையும், மாறி மறைந்துவிட்டன. இச்சூழ்நிலையில்தான் ஸ்டாயிசிசம் ரோமானியப் பேரரசு முறைக்கு ஏற்ப **(imperial system)** பழைய அரசியல் கருத்துகளுக்குப் புதிய வடிவம் கொடுத்தது. ரோமானியப் பேரரசில் ஏற்பட்ட பல அரசியல், சமுதாய, பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் ஸ்டாயிக் கருத்துகள் உதவிசெய்தன. நகரரசு முறையை ஒட்டிவளர்ந்த குடி ஆள் உரிமைக் கருத்துக் கைவிடப்பட்டுப் பேரரசு முழுவதற்கும் உரிய ரோமானியக் குடிஆள் உரிமை **(Roman citizenship)** என்றநிலை தோன்றிற்று. இந்தநிலை தோன்றவே வகுப்பு வேறுபாடுகள் நீங்கின. ரோமானியப்பேரரசைச் சேர்ந்த மக்கள் யாவரும் வேறுபாடற்ற, சமத்துவமான குடி ஆள் உரிமை உடையவர் என்ற நிலைமை ரோமானியப் பேரரசர் காரகல்லா **(Emperor Caracalla)** என்பவர் கி.பி. 212ஆம் ஆண்டில் விடுத்த ஆணை ஒன்றின்மூலமாக நிறுவப்பட்டது. இவ்வாறு நகரரசு அமைப்பின் மறைவும், பேரரசுமுறையின் தோற்றமும் இயற்கையின் சட்டம் நிலைபெறுவதற்கான சூழ்நிலைகளைத் தோற்றுவித்தன.

இயல் ஏழு

பாலிபியஸ்

(Polybius)

(கி.மு. 204 — கி.மு. 122)

பிரிவு 1: பாலிபியஸ் வாழ்ந்தகாலச் சூழ்நிலைகள்

பாலிபியஸ் என்பவர் ஒரு கிரேக்க ஆசிரியர். இவர் கி.மு. 204ஆம் ஆண்டிற்கும், கி.மு. 122ஆம் ஆண்டிற்கும் இடையில் வாழ்ந்தவர். எனவே இவருடைய வாழ்நாளில் கிரேக்கருடைய பண்டைய நகரரசுமுறை முற்றிலும் மறைந்து, ரோமானியப் பேரரசு தோன்றியிருந்தது. இவரே கி.மு. இரண்டாம் நூற்றுண்டி லிருந்த ரோம் நாட்டின் வரலாற்றை எழுதிய வரலாற்றுசிரியர் ஆவர். இவருடைய ரோமானிய வரலாற்றிலிருந்துதான் நாம் கி.மு. இரண்டாம் நூற்றுண்டிலிருந்த ரோமானியக் குடியரசு அரசிய லமைப்பு எவ்வாறு செயல்பட்டது என்பதையும், அரசியலமைப் பைப்பற்றி இவர் வகுத்த கோட்பாடுகளைப்பற்றியும் நாம் அறிந்து கொள்கிறோம்.

ஏறக்குறைய கி.மு. 753ஆம் ஆண்டில் ரோம் நகரரசு நிறுவப் பட்டதாக ரோமானியர்களுடைய (பழங்கதை) வரலாறு நமக்குக் கூறுகிறது. இதை நிறுவிய லத்தீன் இனமக்கள் (Latins), கிரேக்கர், இந்திய வேதகால ஆரியர் ஆகிய மக்களோடு இனம், மொழி, சமுதாய, சமய அமைப்புகள், பழக்க வழக்கங்கள் முதலியவற்றில் உறவுடையவர்களாவர். கி.மு. 510ஆம் ஆண்டுவரை ரோம் முடி யாட்சியாக இருந்தது. அவ்வாண்டில் அரசராக இருந்த டார்க்வின் (Tarquin) என்ற ஆணவப்போக்கு மிக்க ஒருவருடைய கொடுஞ் செயலை மக்கள் தாங்க இயலாமல், அவர்கள் அவ்வரசரைத் துரத்தி விட்டு முடியாட்சியை ஒழித்துக் குடியரசாக ரோம் நகரரசை அமைத்தனர். அரசருடைய உயர்தர இராணுவ, சிவில் அதிகா

ரங்கள் — (இவ்வுயர்தர அதிகாரத்துக்கு **imperium** என்று பெயர்)— ஆண்டுதோறும் தேர்ந்தெடுக்கப்பட்ட சம அதிகாரங்களேயுடைய இரு நிர்வாக அதிகாரிகளிடம் (அவர்களுக்குக் **கான்சல்கள் Consuls** என்று பெயர்) ஒப்படைக்கப்பட்டன. கமிஷியா கியூரியாட்டா **(Comitia Curiata)**,கமிஷியா செஞ்சூரியாட்டா **(Comitia Centuriata)** என்ற இரண்டு மக்கள் மன்றங்களும், ஆலோசனை கூறுவதற்காக அமர்த்தப்பட்ட செனட் **(Senate)** என்ற ஒரு முதியோர் மன்றமும் இருந்தன.

ரோமானியக் குடியரசின் அரசாங்க அமைப்பு, தொடக்கத்தில் இவ்வாறு எளிமையான ஒன்ருக இருந்தது. ரோமானியச் சமுதாயத்தில் உயர்குடி வகுப்பினரான பட்ரீஷியன் **(Patrician)** என்ற பிரபுக்களுக்கும், சாதாரண வகுப்பினரான பிளபியன் **(Plebeian)** என்ற மக்களுக்கும் போராட்டம் கி.மு. **494**ஆம் ஆண்டிலிருந்து கி.மு. **287**ஆம் ஆண்டுவரை நடந்தது; பிளபிய வகுப்பார், உயர்தர வகுப்பாருக்கு ஒத்த உரிமைகளேச் சட்டத் துறையிலும், பொருளாதார, அரசியல், சமுதாயத் துறைகளிலும் பெறுதல் வேண்டுமென்று கிளர்ச்சிகள் நடத்திப் படிப்படியாக வெற்றிபெற்றுச் சமத்துவம் அடைந்தனர். இந்தக் கிளர்ச்சிகளின் விளேவாகப் பல புதிய அலுவல்களும், நிறுவனங்களும் தோன்றின. பிறப்பினடிப்படையில் ரோமானியச் சமுதாயத்தில் பண்டைக் காலத்தில் இருந்த பட்ரீஷியன் — பிளபியன் (அதாவது பிரபு, சாதாரண மக்கள்) என்ற பழைய வகுப்புப்பிரிவுகள் மறைந்து, கி.மு. இரண்டாம் நூற்ருண்டில் செல்வர், ஏழைகள் என்று பொருளுடைமையின் அடிப்படையில் இருவகுப்புகள் தோன்றின. இந்தச் சூழ்நிலேயில்தான் பாலிபியஸ் வாழ்ந்து, ரோமானியக் குடியரசு அரசாங்கம் இயங்கியவகையை ஆய்ந்து, அதிலிருந்து சில கோட்பாடுகளே வகுத்தார். இவர் வாழ்ந்தகாலத்தில் ரோம் நகரரசு ஒரு பேரரசை நிறுவி, அதனே ஆளும்நிலேக்கு உயர்ந்து வலிமை பெற்றிருந்தது. கி.மு. மூன்ரும், இரண்டாம் நூற்ருண்டுகளில் அது கார்த்தேஜ் முதலிய வலிமிக்க அரசுகளுடன் வெற்றியான போர்களேச்செய்து, பல நாடுகளே ஆளக்கூடிய வல்லரசாக ஆயிற்று. இத்தாலி நாடு, சிசிலி, கார்சிகா, சர்டீனியா, கிரீஸ், ஸ்பெயின், வட ஆப்பிரிக்காவில் கார்த்தேஜ் (டியூனிஸ்), எகிப்து, சிறிய ஆசியா (துருக்கி), கால்நாடு (பிரான்ஸ்) தென்பிரிட்டன் முதலியவற்றை ரோம் வென்றது. பண்டைய வரலாற்றிலேயே ரோமானியப் பேரரசு ஒரு முக்கியமான அமைப்பு ஆகும். அதிலும் இத்தகைய பேரரசு ஒரு குறுகிய காலத்துக்குள் ஒரு சிறிய நகரரசினுல் ஏற்படுத்தப்பட்டது என்பது ஒரு முக்கியமான நிகழ்ச்சி ஆகும். ரோமானியப் பேரரசு முழுவளர்ச்சி

பெற்றிருந்த கி.மு. இரண்டாம் நூற்றுண்டில் செயல்பட்ட ரோமானியக் குடியரசின் அரசியலமைப்பை ஆய்வுசெய்து, பாலிபியஸ், சில கோட்பாடுகளே வகுத்தார்.

பிரிவு 2 : ரோமானியக் குடியரசின் அரசாங்க அமைப்பு

(Government of the Republic of Rome in the Second Century B. C.)

பாலிபியஸ் சுட்டிக்காட்டிய கி.மு. இரண்டாம் நூற்றுண்டிலிருந்த ரோமானிய அரசியலமைப்பின் கூறுகளேயும், அவற்றின் இயல்புகளேயும் நாம் இங்குச் சுருக்கமாகக் கூறினுல், அவர் வகுத்த கோட்பாடுகளேயும் விளங்கிக்கொள்ள இயலும். கி.மு. 509ஆம் ஆண்டிலிருந்து கி.மு. 44ஆம் ஆண்டுவரை குடியரசு அமைப்பு ரோமில் இருந்தது. கி.மு. இரண்டாம் நூற்றுண்டில் ரோமின் குடியாட்சி அரசியலமைப்பில் (1) ஆறு வகைப்பட்ட நிர்வாக அலுவலரும் (Executive officials), (2) நான்கு மக்கள் மன்றங்களும் (Popular Assemblies), (3) ஓர் ஆலோசனே மன்றமும் (Senate) உண்டு. ஆறுவகைப்பட்ட நிர்வாக அதிகாரிகள் 2 கான்சல்கள் (Consuls), பிரீட்டர்கள் (Praetors), சென்சார்கள் (Censors), எடைல்கள் (Aediles), 8 குவெஸ்ட்டர்கள் (Quaestors), 10 டிரிபியூன்கள் (Tribunes) ஆகியோராவர். இரண்டு கான்சல்களும் ஆண்டுதோறும் கமிஷியா செஞ்சூரியாட்டாவினுல் தேர்ந்தெடுக்கப்பட்டனர்; இவர்கள் முன்பு அரசரால் கையாளப்பட்ட உயர்தர இராணுவ, சிவில் அதிகாரங்களேக் (imperium) கையாண்டனர்.

ஆனுல் இவர்கள் ரோம்நகர எல்லேக்கு வெளியில்தான் இராணுவ அதிகாரத்தைக் கையாள இயலும்; மேலும் குற்ற வழக்குகளில் இவர்கள் அளிக்கும் மரணதண்டனேகளேக் கமிஷியா செஞ்சூரியாட்டா மறுபரிசீலனேசெய்யவும், மாற்றவும்கூடும். கான்சல்களுடைய நீதி அதிகாரங்களேப் பகிர்ந்துகொண்ட அலுவலரே பிரீட்டர்கள் ஆவர். இவர்களும் செஞ்சூரியாட்டாவினுல் தேர்ந்தெடுக்கப்பட்டனர். செனட் மன்றத்தின் பெயர்ப்பட்டியலே அவ்வப்போது திருத்தங்கள் செய்வதற்காக 18 மாதகாலத்துக்குச் செஞ்சூரியாட்டாவினுல் தேர்ந்தெடுக்கப்பட்ட அலுவலரே சென்சார்கள் ஆவர். எடைல்கள் என்ற அலுவலர் ஆண்டுதோறும் கமிஷியா டிரிபியூட்டா, கன்சிலியம் பிளபிஸ் முதலிய மக்கள்மன்றங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவர்கள் நகர ஆட்சி, அரசாங்கப் பதிவேடுகள், கட்டடங்கள் பாதுகாப்பு, நீர்வழங்குதல், காவல்துறை முதலிய அலுவல்களேச்செய்தனர். படைவீரர்களுக்கு, ஊதியங்கள் வழங்கி

அரசாங்க வரிகளைப் பிரித்தளித்து அலுவல்செய்த குவெஸ்ட்டர்கள் ஆண்டுதோறும் கமிஷியா டிரிபியூட்டாவினுல் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பிளபிய வகுப்பாருடைய நலன்களைப் பாதுகாக்கும் பொருட்டும், அவர்களுக்கெதிராக மற்ற அலுவலரால் விடுக்கப்படும் ஆணைகளைத் தள்ளுபடி செய்யவும், பிளபியருக்கு எதிரானவர்களைச் சிறைப்படுத்தவும் 10 டிரிபியூன்கள் ஆண்டுதோறும் கான்சிலியம் பிளபிஸ் என்ற மக்கள் மன்றத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மக்கள் மன்றங்களுள் காலத்தால் முற்பட்டது கமிஷியா கியூரியாட்டா (Comitia Curiata) ஆகும். இது புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கான்சல்களுக்கு உரிய அதிகாரங்களை வழங்கும் சட்டத்தைச்செய்தது. கமிஷியா செஞ்சூரியாட்டா (Comitia Centuriata) என்ற மக்கள் மன்றம், தன்முன் ஒப்புதலுக்காகக் கான்சல்களால் கொண்டுவரப்படும் மசோதாக்களை ஏற்றுக் கொள்ளவோ, மறுக்கவோ செய்தது; கான்சல்கள், பிரீட்டர்கள், சென்சார்கள் முதலியவர்களை இது தேர்ந்தெடுத்தது; கான்சல்களால் கொண்டுவரப்படும் அமைதி, போர், உடன்பாடுசெய்தல் முதலியவற்றின்மீது இது முடிபுகள் எடுத்தது; கான்சல்களால் குற்ற வழக்குகளில் அளிக்கப்பட்ட மரணதண்டனைகளை இந்த மன்றம் மறுபரிசீலனைசெய்து மாற்றிற்று. கமிஷியா டிரிபியூட்டா (Comitia Tributa) என்ற மக்கள் மன்றம் இரண்டு எடைல் அலுவலர், 8 குவெஸ்ட்டர்கள் ஆகியோரைத் தேர்ந்தெடுத்தும், கடும் வட்டிவிதிப்புப்பற்றிய (Usury) வழக்குகளை ஆய்வுசெய்து தீர்ப்புக் கூறியும் அலுவல்செய்தது. கன்சிலியம் பிளபிஸ் (Concilium Plebis) என்ற மன்றம் சாதாரண ரோமானிய வகுப்பினரான பிளபிய மக்களுக்குமட்டுமே பிரதிநிதித்துவம் அளித்தது; இது ஆண்டுதோறும் இரண்டு எடைல்களையும், 10 டிரிபியூன்களையும் தேர்ந்தெடுத்தது; சில மேல்முறையீட்டு வழக்குகளை இது தீர்த்துச் சில சட்டங்கள் இயற்றி அலுவல்செய்தது.

முடியாட்சிக் காலத்திலிருந்தே இருந்துவந்த செனட் (Senate) என்ற முதியோர் ஆலோசனை மன்றத்தில், குடியாட்சிக் காலத்தில் (கி.மு. இரண்டாம் நூற்றுண்டில்) முந்நூறு உறுப்பினர் இருந்தனர். கான்சல்கள், பிரீட்டர்கள், சென்சார்கள், டிரிபியூட்டாவினுல் தேர்ந்தெடுக்கப்பட்ட எடைல்கள் முதலியோர் தம்முடைய பதவிக்காலத்திற்குப் பின்னர் இதில் உறுப்பினராயினர். மற்ற உறுப்பினர்கள் பொதுப்பணியிலும், திறமையிலும் சிறந்த ரோமானியக் குடும்பங்களிலிருந்து சென்சார் என்ற அலுவலரால் அமர்த்தப்பட்டனர். தொடக்கத்தில் இது அரசர்களுக்கும், குடியாட்சிக் காலத்தில் கான்சல்களுக்கும்

ஆலோசனைகூறும் மன்றமாக இருந்தது. தனது ஆலோசனை யின்படி அவர்கள் செயல்படுமாறு அவர்களை இதனால் கட்டாயப் படுத்த இயலாது. ஆனால் கி.மு. இரண்டாம் நூற்றாண்டினளவில் நடைமுறையில் இது பல அதிகாரங்களைப் பெற்றுவிட்டது. மக்கள் மன்றங்களுடைய ஒப்புதலுக்காக வைக்கப்படும் மசோதாக்களை, முன்னதாகத் தான் ஆய்வுசெய்யவும், அதிகாரி களின் பணிகளுக்குரிய ஆணைகளை விடுக்கவும், அவர்களைத் தற்காலிகமாக அலுவல்களிலிருந்து நீக்கிவைக்கவும், சட்டத்தின் கட்டுப்பாட்டிலிருந்து சில தனிப்பட்டவர்களுக்கு விலக்கு அளிக் கவும், சட்டங்களைத் திருத்தவும், இராணுவச் சட்டத்தைச் செயல்படுத்தவும்கூடிய அதிகாரங்களையெல்லாம் செனட் கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் பல சூழ்நிலைகளில் பெற்றுவிட்டது.

இத்தகைய அதிகாரவளர்ச்சிக்குப் பல காரணங்கள் இருந்தன; இதன் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படாமல், அமர்த்தப் பட்டவர்கள்; இவர்கள் வாழ்நாள் முழுவதற்கும் உறுப்பினரே; இவர்கள் செல்வமும், ஆட்சித்திறனும் உடையவர்கள்; மேலும் ரோமுக்கும் அண்டை நாடுகளுக்குமிடையே போர்கள் நடை பெற்ற நீண்டகாலங்களில், செனட் மன்றத்தவர் போரை வெற்றியாக நடத்தியும், உள்நாட்டு ஆட்சியை நடத்தியும் அனுபவம் பெற்றிருந்தனர்; மேலும் அனுபவம் இல்லாமல் ஓராண்டுக்குமட்டும் அலுவலை ஏற்றிருந்த கான்சல்களும், அவர் களுக்குக் கீழ்ப்பட்ட மற்ற நிர்வாக அலுவலரும், செனட்டின் ஆலோசனைகளையும், கட்டுப்பாட்டையும் மீறமுடியாமல் அதற்குப் பணிந்து அலுவல்செய்ததும், செனட்டின் அதிகார வளர்ச்சிக்கு மற்றொரு முக்கிய காரணமாகும். எனவே மேலெழுந்தவாரி யாகப் பார்க்கும்போது கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் இயங்கிய ரோமானிய அரசியலமைப்பை ஒரு மக்களாட்சி வகையானது என்று நாம் கருத இடமிருந்தாலும், நடைமுறையில் பார்க்கும் போது செல்வர்களடங்கிய செனட்டின் கட்டுப்பாட்டிற்கு உட் பட்டே குடிகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட அலுவலரும், மக்கள் மன்றத்தினரும் ஆட்சியை நடத்தினர் என்று தெரிகிறது. இதைச் சுட்டிக்காட்டி ஆசிரியர் ஃபௌலர் என்பவர் (Fowler), 'கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் செயல்பட்ட ரோமானிய அரசாங்கம் ஒரு குடியாட்சியுமன்று; உயர்குடிமக்கள் ஆட்சியு மன்று; அது இதுவரை உலகத்திலேயே காணப்பட்ட செல்வச் சிறுகுடியினராட்சிகளுள் மிகவும் கட்டுப்பாடான செல்வச் சிறு குடியினராட்சி' என்று கூறுகிறார். இதுவே சரியான கருத்தும் ஆகும்.

பிரிவு 3 : பாலிபியஸ் கூறிய கோட்பாடுகள்

கலப்பு அரசியலமைப்புக் கோட்பாடு (Theory of Mixed Constitution)

மிகக் குறுகியகால அளவில் ரோம் ஒரு பேரரசை வென்றதற்கு ஒரு காரணம், அதனுடைய குடியரசிலிருந்த கலப்பு அரசியலமைப்பும் ஆகும். உலக வரலாற்றிலே வளர்ச்சியும், மறைவும் ஏற்படுவதைக்காட்டும் ஒரு விதி அல்லது சட்டம் இருக்கிறது. அரசியல் துறையில் கலப்பில்லாத தூய அரசாங்கவகைகளெல்லாம் நாளடைவில் தேய்ந்து மறைந்துவிடுகின்றன. எடுத்துக்காட்டாக முடியாட்சியானது, ஒற்றை மனிதருடைய சர்வாதிகார ஆட்சியாகவும், உயர்குடிப்பிறந்தோராட்சி (aristocracy) தன்னல நோக்குடைய செல்வராட்சியாகவும் (oligarchy) தேய்ந்துமறைகின்றன. இத்தகைய பலவீனத்துக்கு ரோம் ஆளாகாமல், ஒரு கலப்பு அரசியலமைப்பை ஏற்றுக்கொண்டது. அதனுடைய அரசியலமைப்பிலே – அதாவது பாலிபியஸ் வாழ்ந்த கி.மு. இரண்டாம் நூற்றுண்டிலிருந்த அரசியலமைப்பிலே – (1) முடியாட்சி, (monarchy), (2) உயர்குடிப் பிறந்தோராட்சி (aristocracy), (3) குடியாட்சி (democracy) ஆகிய அரசாங்கவகைகளின் இயல்புகள் கலந்துள்ளன. கான்சல்கள் குழு அரசர்களுடைய அதிகார நிலையையும், செனட் மன்றம் உயர்குடியினருடைய அதிகார நிலையையும், மக்கள் மன்றங்கள் குடியாட்சி அரசாங்கத்தின் இயல்பையும் காட்டுகின்றன. ‘இந்த மூன்றுகூறுகளும் ஒன்றோடொன்று மாறுபடாமல் இணைந்தும், இவற்றுள் எதுவும் தீவிர நிலைக்குப்போகாமல் மற்றக் கூறுகளினுல் தடுக்கப்பட்டுச் சம நிலையில் இருப்பதனுலும், ரோமானிய அரசாங்கமானது வலுவாக அமைந்து ஒரு பேரரசை ஏற்படுத்தி ஆளக்கூடிய நிலையில் இருக்கிறது.’

தடைச்சமன் கோட்பாடு (Theory of Checks and Balances)

இக் கலப்பு அரசாங்கவகையிலேயே **தடைச்சமன் கோட்பாடு** அமைந்திருப்பதையும் பாலிபியஸ் சுட்டிக்காட்டினுர். கான்சல்கள் என்ற உயர்தர நிர்வாக அலுவலருடைய இராணுவ, சிவில் அதிகாரங்களுக்குப் பின்கூறப்படும் தடைகள் இருந்தன. இவ்வலுவலர் எண்ணிக்கையில் இருவர் ஆவர்; இருவருக்கும் சம அதிகாரங்கள் இருந்தன; ஒருவர் சர்வாதிகாரியாக வருவதை மற்றவர் தடுக்கமுடியும்; இவர்களுடைய அலுவல் காலமும் ஓராண்டுதான்; மேலும் இவர்கள் தங்களுடைய இராணுவ

அதிகாரங்களை ரோமுக்கு வெளியில்தான் கையாள இயலும்; ரோமுக்கு உள்ளேயும் இவர்கள் குற்றவாளி எவருக்கும் விதிக்கும் மரண தண்டனையைக் கமிஷியா செஞ்சூரியாட்டா என்ற மக்கள் மன்றம் மேல்முறையீட்டை அனுமதித்து, மறுபரிசீலனைசெய்து, மாற்ற இயலும். இவர்கள் விடுக்கும் ஆணைகள் பிளபிய மக்களுடைய நலனுக்கு மாறானவை என்ற காரணம்காட்டி, அவற்றை டிரிபியூன்கள் தள்ளுபடிசெய்யமுடியும். இதேபோல மக்கள் மன்றங்களின் அதிகாரங்களும் பல தடைகளுக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றன. இந்த மன்றங்களெல்லாம் நிர்வாக அதிகாரிகளால் (அதாவது கான்சல்களால்) கூட்டப்பட்டால்தான் இவை கூடமுடியுமேதவிர, இவை தாமாகவேகூடிச் செயல்பட இயலாது. மேலும் இவை தம் முன்னர் தம் கூட்டத் தலைவர்களால் கொண்டுவரப்படும் மசோதாக்களை ஏற்றுக்கொள்ளவோ, மறுக்கவோதான் செய்ய இயலுமேதவிர, தாமாகவே ஒரு மசோதாவை இயற்றவோ, எந்த மசோதாவின்மீதும் விரிவான விவாதங்களை நடத்தவோ இயலாது. பெயரளவில் பார்த்தால் செனட் மன்றமும் தடைச்சமன் கோட்பாட்டுக்கு உட்பட்டதுதான். அது தேர்ந்தெடுக்கப்பட்ட மன்றம் அன்று; அதன் உறுப்பினர்கள் அமர்த்தப்பட்டவர்கள்; மேலும் இது கான்சல்களுக்குக் கூறும் ஆலோசனைகளை அவர்கள் ஏற்றுக்கொண்டாக வேண்டுமென்ற கட்டாயமும் இல்லை.

பாலிபியஸ் கலப்பற்ற தூய அரசாங்கவகைகள் நிலைத்து நிற்கமாட்டா எனவும், அவை மாறுபடும் அல்லது தேய்வுறும் எனவும் ஒரு விதியை வகுத்தார். அரிஸ்ட்டாட்டில் கலப்பு அரசாங்க அமைப்பு என்பது சமுதாயத்திலுள்ள பல்வேறு (சமுதாய) வகுப்புகளின் சமத்துவநிலையில் அமைந்திருக்கிறதென்றுகூறினார். பாலிபியஸ் கலப்பு அரசாங்க அமைப்பு என்பது அரசாங்க அதிகாரங்களின் சமநிலையில் — அதாவது ஒருகூறு மிகாமல் அல்லது கூடுதலாகாமல் மற்றவை அதைத் தடுப்பது என்ற சமநிலையில் — அமைந்திருக்கிறது என்று கூறினார். ரோமின் அரசாங்கத்தில் எந்த நீதி அதிகாரியும், தன்னேடொத்த அதிகாரமுடைய எந்த அலுவலருடைய செயலையும் தடுப்பதற்குத் தடை ஆணை (Veto) விதிக்கும் அதிகாரத்தைப் பெற்றிருந்தார். இதை மனத்தில் வைத்துக்கொண்டே பாலிபியஸ் மேற்கூறியவாறு அரசியலதிகாரங்களின் சமநிலை என்ற இயல்பைக் கலப்பு அரசாங்கக் கோட்பாட்டில் கூறியிருத்தல் வேண்டும். எனவே கலப்பு அரசாங்க முறை என்பது தடைகளும், சமநிலைகளும் அடங்கிய ஓர் அமைப்பு ஆகும் என்று பாலிபியஸ் வகுத்தார்.

பிரிவு 4: பாலிபியசின் கோட்பாடுகளைப்பற்றிய மதிப்பீடு

பாலிபியஸ் கி.மு. இரண்டாம் நூற்றுண்டில் ரோமில் செயல் பட்ட அரசாங்கத்தை வலுவான ஒரு கலப்பு அரசாங்கமென்று புகழ்ந்துகூறியது சரி அன்று; கி.மு. இரண்டாம் நூற்றுண்டில் ரோமில் இயங்கியது கலப்பு அரசாங்கம் அன்று. அது உண்மையில் ஒரு செல்வச் சிறுகுடியினராட்சியே (oligarchy) என்று ஆசிரியர் ஃபௌலர் கூறும் கருத்துத்தான் சரி ஆகும். இதற்குக் காரணங் களும் பிரிவு 2இல் கூறப்பட்டன.

மேலும் பாலிபியஸ் கூறியபடி அது ஒரு வலுவான கலப்பு அரசாங்கமாக இருந்தால் அது நீடித்து, நிலைத்து இருந்திருக்க வேண்டும். ஆனல் அது அவ்வாறு நீடித்திராமல் போயிற்று என்றும் கி.மு. 44ஆம் ஆண்டிற்குப் பிறகு குடியரசு அரசாங்கம் மறைந்து இராணுவ முடியாட்சியே (Military Monarchy) மீண்டும் தோன்றி இந்த முடியாட்சியும் ரோமானியப் பேரரசு கி.பி. ஐந்தாம் நூற்றுண்டில் மறைந்துபோன காலம்வரையில் இருந்ததென்றும் பண்டைய ரோமானிய வரலாறு நமக்குக் காட்டுகிறது. கி.மு. இரண்டாம் நூற்றுண்டின் தொடக்கத்திலேயே குடியரசு அரசாங்க மானது பலவகை மாறுதல்களுக்கு உள்ளாகத் தொடங்கிற்று. அளவிற் பெரிதாயிருந்த ரோமானியப் பேரரசை ஆளுவதற்குச் சிறிய ரோமானிய நகரரசுக்காக வகுக்கப்பட்ட குடியரசு அரசாங்க அமைப்பு ஏற்றதாக இல்லை. பல அரசியல், பொருளாதார, சமுதாயப் பிரச்சினைகளைச் செல்வச் சிறுகுடியினருடைய கையி லிருந்த குடியரசு அரசாங்கத்தால் தீர்க்க இயலவில்லை. பலவித முயற்சிகள் மேற்படி பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக மேற்கொள்ளப் பட்டன. கேயஸ் கிராக்கஸ், டைபீரியஸ் கிராக்கஸ் என்ற இரு உடன்பிறந்தார்கள் மக்கள் மன்றங்களின் மூலமாகப் பிரச்சினை களை தீர்க்கமுயன்று பணக்காரச் செனட்டர்களுடைய எதிர்ப்புக்கு ஆளாகித் தோல்வியுற்று அழிந்தனர். பின்னர் மேரியஸ் (Marius) என்ற சிறந்த படைத்தலைவர் ஒன்றன்பின் ஒன்றுக அடுத்தடுத்து எட்டு ஆண்டுகளுக்குக் கான்சல் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தார்; இவர் சிறந்த படைவீரராயினும், ஆட்சித் திறனற்றவராகை யால் மேற்படி பிரச்சினைகளைத் தீர்க்க இயலவில்லை. சல்லா (Sulla) என்ற சிறந்த போர்வீரர் செனட் மன்றத்தின் வலிமையையும், அதன் இன்றியமையாமையையும் ஒப்புக்கொண்டு அதன் துணை கொண்டு ஆட்சிசெய்தார்; ஆனல் அவர் ஆட்சியிலிருந்து விலகி யதும், செனட்டுக்கு ஆதரவில்லாமல், மீண்டும் அதற்கு எதிர்ப்புத் தொடங்கிற்று. பாம்ப்பியஸ் (Pompeius) என்ற சிறந்த போர்வீரர் ஆட்சியைக் கைப்பற்றக்கூடிய நிலையிலிருந்தாலும், அவ்வாறு

செய்யவில்லை. ஆனால் சிறந்த போர் வீரரும், பிரச்சினைகளைத் தீர்க்கும் திறம் உடையவருமான ஜூலியஸ் சீசர் (Julius Caesar), கான்சலாக வந்து சர்வாதிகாரங்களையும்பெற்றுச் சீர்திருத்தங்களைச் செய்தார். ஆயினும் அவர் குடியரசுவாதிகளுடைய (Republicans) உணர்ச்சியை மதிக்கவில்லை என்ற ஐயத்துக்கு இடம் தந்தார்; எனவே செனட்டர்கள் சிலருடைய சூழ்ச்சியால் கி.மு. 44ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 15ஆம் நாள் இவர் செனட் கட்டடத்தில் கொல்லப்பட்டார். எனினும் ஒற்றை மனிதரின் ஆட்சி தவிர்க்க முடியாததாயிற்று. இவருடைய பேரர் ஆக்டேவியஸ் சீசர் என்ற அகஸ்ட்டஸ் சீசர் குடியரசு அரசாங்கத்தின் அமைப்பை வைத்துக் கொண்டு, படைவலிமையை வைத்துக்கொண்டு செனட்டின் ஆதர வோடு தம் சர்வாதிகார ஆட்சியை நிறுவினார். இவ்வாறு தந்திர மாக இவர் குடியரசு அரசியலமைப்பு என்ற போர்வையில், உண்மை யில் இராணுவ முடியாட்சியை நடத்தினார். இவர் நிறுவிய முடி யாட்சிமுறை இந்த அமைப்பில் நிலைத்துநின்றது. பாலிபியஸ் பாராட்டிய 'குடியரசு ஆட்சி மறைந்துபோயிற்று.

இவ்வாறு பாலிபியஸ் கூறிய கருத்து ரோம் அரசில் காணப் படவில்லை என்றாலும், அவர் வகுத்த தடைச்சமன் கோட்பாடு 18ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சார்ல்ஸ் மான்ட்டஸ்க்யு என்ற பிரெஞ்சு அரசியலறிஞரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது; இவ்வாசிரியர் இக் கோட்பாட்டை ஆதாரமாக வைத்தே **அதிகாரங்களின் பிரிப்புக் கோட்பாட்டை (Doctrine of Seperation of Powers)** வகுத்தார். 'குடி ஆளின் சுதந்திரம் அரசாங்கத்தால் அழிக்கப்படாமல் பாது காப்பாக இருப்பதற்கு, சட்டம் இயற்றும் அதிகாரம், நிர்வாக அதி காரம், நீதி வழங்கும் அதிகாரம் ஆகிய மூன்றும் ஒரே ஆட்சியாள ரிடத்தில் குவிக்கப்படாமல், வெவ்வேறு தனித்தனியான உறுப்பு களில் (organs) பிரிக்கப்படுதல் வேண்டும்,' என்பதே மான்ட்டஸ்க்யு வின் கோட்பாடு ஆகும்.

மான்ட்டஸ்க்யுவின் கோட்பாட்டை ஆதாரமாகவைத்தே இக் காலத்தில் ஐக்கிய அமெரிக்கக் கூட்டாட்சி நாட்டின் அரசியலமைப்பு வரையப்பட்டிருக்கிறது. இதனை வரைந்த (1787இல்) ஜார்ஜ் வாஷிங் டன், ஜேம்ஸ் மேடிசன், ஹாமில்ட்டன் முதலியோர் மான்ட்டஸ்க்யு வின் கோட்பாட்டைவைத்து அமெரிக்க நிர்வாக அதிகாரியான தலைவருக்கும், சட்டமன்றங்களுக்கும், நீதிமன்றங்களுக்கும் ஒன்றையொன்று தடுத்துச் சமன்படுத்தக் கூடியசில அதிகாரங் களை வழங்கினார். அதன்படி சட்டமன்றங்களாகிய பிரதிநிதிகள் மன்றம், செனட் ஆகியவை (House of Representatives, Senate) ஆகியவை நிறைவேற்றும் மசோதாக்களைக் குடியரசுத் தலைவர்

கையெழுத்திட்டு ஏற்றுக்கொள்ளாமல், ஒரளவு தள்ளிப்போடும் தடை ஆணையைப்பெற்றிருக்கிக்கிருர். இதேபோல அயல்நாட்டு உறவுகளைப்பொறுத்தவரையில் குடியரசுத்தலைவர் எடுக்கும் முடிவு களை ஏற்றுக்கொள்ளவோ, தள்ளிவிடவோ (3இல் 2 பங்குடைய) உறுப்பினருடைய வாக்குகளின்மூலம்கூடிய அதிகாரத்தைச் செனட் பெற்றுள்ளது. (இவ்வதிகாரம் 1919இல் உட்ரோ வில்சனு டைய தீர்மானத்துக்கெதிராகச் செனட்டிஞல் கையாளப்பட்டது.) இதேபோலச் சட்டமன்றங்களிரண்டும், தலைவரும் நிறைவேற்றும் சட்டம் எதனையும், அமெரிக்க அரசியலமைப்புச் சட்டத்துக்கு மாருனதெனக்கூறி அதனைத் தள்ளுபடிசெய்யவும், துரோகக்குற்ற விசாரணைக்காகச் செனட்டின்முன் நிறுத்தப்படும் குடியரசுத் தலைவரை விசாரித்துத் தண்டிக்கவும் உயர்நீதிமன்றத்துக்கு அதி காரங்கள் இருக்கின்றன. எனவே ஐக்கிய அமெரிக்க அரசாங்கத் தில் மூன்று உறுப்புகளும் ஒன்றும் மிகாமல் ஒன்றையொன்று தடைசெய்து சமநிலையில் நிறுத்துகின்றன. ஆகையால் குடியாள் சுதந்திரத்தின் பாதுகாப்புக்கு ஏற்றதாக வகுக்கப்பட்ட அதிகாரங் களின் பிரிப்புக் கோட்பாட்டுக்குப் பாலிபியஸ் ஓர் ஆதாரத்தைத் தடைச்சமன் கோட்பாடு என்ற கோட்பாட்டின்மூலமாக அமைத் தார் என்று கூறலாம்.

இயல் எட்டு

சிசரோ

(Cicero)

(கி.மு. 106 – கி.மு. 43)

பிரிவு : 1 சிசரோவின் வாழ்க்கை வரலாறும், அவர் வாழ்ந்தகாலச் சூழ்நிலைகளும்

மார்க்கஸ் டல்லஸ் சிசரோ (**Marcus Tullus Cicero**) கி.மு. **106**ஆம் ஆண்டிற்கும் கி.மு. **43**ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் ரோமில் வாழ்ந்த நாவலரும், அரசியல்வாதியும் ஆவார். இவர் இத்தாலியில் அர்ப்பினம் என்ற ஊரிலுள்ள ஒரு போர் வீரரின் மகன் ஆவார். அப்பொழுது குடியாட்சி அரசாங்க அமைப்பு ரோமானியக் குடியரசில் செயல்பட்டுவந்தது. எனவே அரசியலில் முன்னேற்றமடையும் நோக்கத்துடன் இளைஞராக இருந்தபோது இவர் நீதிமன்றங்களில் வழக்கறிஞராக வேலைசெய்தார். செக்ஸ்ட் டஸ்ரோசியஸ் என்பவருக்காக இவர் வழக்கு ஒன்றில் வெற்றியாக வாதிட்டபோது, மக்களுடைய கவனத்தை ஈர்த்தார். ரோமானியக் குடியாட்சி அரசாங்கத்தில் குவெஸ்ட்டர் என்ற சிறிய நிர்வாக அலுவலைப்பெற்றார். ரோமானிய ஆட்சியிலிருந்த சிசிலி மக்களுடைய பிரச்சினைகளை இவர் பரிவுடன் அணுகினார். எனவே இவர் அவர்களுடைய நண்பரானார். எடைல், பிரீட்டர் முதலிய அலுவல்களையும் இவர் ஏற்றிருந்தார். ரோமானியப் பணக்காரர் வகுப்பு செனட் ஆலோசனை மன்றத்தில் நிறைந்து இருந்தது. ரோமானியக் குடியாட்சியை நடைமுறையில் பணக்கார ஆட்சியாக நடத்தி வந்தது. அதனுடைய ஊழல்மிக்க ஆட்சியை இவர் எதிர்த்த போதிலும், நல்லதொரு குடியாட்சிக்கான திட்டம் எதனையும் இவர் ஏற்கவில்லை. பிற்போக்குக் கருத்துகளை இவர் ஆதரித்தார்.

ரோமானியப் பேரரசை ஆளுவதற்காகப் பாம்ப்பியஸ், ஜூலியஸ் சீசர், கிராசஸ் ஆகியோர் அமைத்த முக்கூட்டு ஆட்சியில், இவர் பாம்ப்பியசை ஆதரித்தார். இவர் செல்வமுடைய நடுத்தர வகுப்பைச் சேர்ந்தவராகையால், இவர் சாதாரண ஏழைமக்களு டைய கருத்துகளையோ, உணர்ச்சிகளையோ மதிக்காமலும், செல்வ ருடைய தந்நலம்மிக்க தீய ஆட்சியை வெறுத்தும் இருந்தார். அரசாங்கத்தைச் செனட்டிலுள்ள செல்வர்களும், உயர்குடிப்பிறந் தோரும் சேர்ந்துநடத்துதல் வேண்டுமென்று இவர் விரும்பினர். கிளோடியஸ் என்பவர் சிசரோவை எதிர்த்து, அவரை வெளியேற்றத் திட்டமிட்டார். எனவே சிசரோ தாமாகவே கி.மு. 58இல் மாசி டோனியாவில் ஓராண்டு தங்கியிருந்து ரோமிலுள்ள தம் நண்பர் களின்மூலமாகத் தம்மை ரோமுக்கு மீட்குமாறு வேண்டினர். பாம்ப்பியஸ் கொண்டுவந்த ஒரு தீர்மானத்தின்மூலம் சிசரோ கி.மு. 57இல் ரோமுக்கு மீட்கப்பட்டார். இவர் முக்கூட்டு ஆட்சியை ஒத்துக்கொண்டபோதிலும், ஜூலியஸ் சீசர் ஏழைக் குடியானவர் களுடைய நலனுக்காகக் கொண்டுவந்த நல்ல சட்டங்களை எதிர்த் தார். செனட்டின் பணக்காரர்க்கும், சீசரின் ஏழைக்கட்சிக்கும் இடையே தோன்றிய பூசலில், சிசரோ செனட்டிற்கும், பாம்ப்பிய சுக்கும் ஆதரவளித்துச் சீசருடைய பகைவரானர். சீசரைச் சூழ்ச் சிக்காரர்கள் குத்திக் கொன்றுவிட்டபோது சூழ்ச்சிக்காரர் கட்சிக்கும், சீசர் கட்சிக்கும் போர் நடந்தது. அதில் இரு தரப்பின் குற்றவாளிகளுக்கும் மன்னிப்பு வழங்கவேண்டுமென்று சிசரோ செனட்டில் கூறினர். சீசரின் நண்பரான அன்டோனியஸ் ஆட்சிக்கு வரக்கூடுமென்றெண்ணி, இவர் அன்ட்டோனியசின் செயல்களையெல்லாம் கண்டித்து, பிலிப்பிக்ஸ் (Philippics) என்ற தம் சொற்பொழிவுகளைச்செய்தார். கி.மு. 43இல் அன்ட்டேனியஸ், ஆக்டேவியஸ் சீசர், லெப்பிடஸ் ஆகிய மூவரும் இரண்டாம் முக்கூட்டை ஏற்படுத்தித் தங்களுடைய ஆட்சியை வலுப்படுத்தும் பொருட்டு, அதனை எதிர்த்த 300 செனட்டர்களையும், 2000 உயர் குடிப் பிரபுக்களையும் நாட்டுக்குப் புறம்பாக்கிஅவர்களுக்குக் கொலைத் தண்டனை கொடுத்தனர். அவ்வாறு தண்டிக்கப்பட்டவருள் சிசரோவும் ஒருவர். இவர் பார்மியே என்ற ஊருக்கருகில் அன்ட்டோனியசின் ஆட்களால் கொல்லப்பட்டார்.

சிசரோ வாழ்ந்தகாலச் சூழ்நிலைகளே அவருடைய அரசியற் கருத்துகளை உருவாக்கின. ரோமானியக் குடியரசில் ஆட்சியில் குடிகளுக்குப் பங்கு இருந்தது. ரோம் ஒரு சிறிய நகரரசாக இருந்த காலம் வரையில் அதன் குடியாட்சி அரசாங்க இயல்பு உறுதியாக இருந்தது. கி.மு. இரண்டாம் நூற்றுண்டில் ரோமுக்கு ஒரு பேரரசு தோன்றி, அதனை ஆளும் பொறுப்பும் ஏற்பட்டது. எனவே

பழைய குடியாட்சி அரசாங்கத்தால் பேரரசுக்குரிய பொறுப்புகளைச் சரிவர நிறைவேற்ற இயலவில்லை. குடியாட்சி அரசாங்க அமைப்பின் மூலமாகச் சுயநலம் மிக்க ஊழல்நிறைந்த செல்வர்களுடைய ஆட்சி நடைபெற்றது. அதற்கு எண்ணிக்கையில் பெரிய சாதாரண ஏழை மக்களுடைய எதிர்ப்புத் தோன்றிற்று. குடியரசு அமைப்பை வைத்துக்கொண்டு பேரரசை ஆளும்பொறுப்புகளை நிறைவேற்ற இயலாது என்ற நிலைமை ஏற்பட்டது. அவ்வாறு இருந்தும் பழைய குடியரசு அமைப்பையே நீடித்து ஏற்றுக்கொள்ளுதல் வேண்டுமென்று சிசரோ வற்புறுத்தினர்.

பிரிவு 2: சிசரோவின் கோட்பாடுகளுக்கு ஆதாரமான ஸ்டாயிக் கருத்துகள்

சிசரோ தமது அரசியல் கோட்பாடுகளுக்கு ஆதாரமாக ஸ்டாயிக் கருத்துகளைப் பனேஷியஸ் கூறிய வடிவத்தில் ஏற்றுக் கொண்டார். அவர் தாம் எழுதிய ரிபப்ளிக் அல்லது குடியரசு (Republic) என்ற நூலிலும், சட்டங்கள் அல்லது லாஸ் (Laws) என்ற நூலிலும் தம் கோட்பாடுகளைக் கூறினர். ரோமிலுள்ள இரு வகுப்பாரும் இணக்கமாக இருத்தல் வேண்டுமென்றும், பாலிபியசின் கலப்பு அரசாங்கக் கோட்பாடும், அதற்கு அடிப்படையான தடைச்சமன் கோட்பாடும் ஏற்றுக்கொள்ளப்படுதல் வேண்டுமென்றும் அவர் கூறினர். இவை அரசருடைய ஆட்சியை நோக்கிச் சென்றுகொண்டிருந்த ரோமானிய அரசியல் சூழ்நிலைக்குப் பொருந்தமாட்டா என்பதையும் இவர் உணர்ந்திருந்தார். எனவே இவர் வகுத்துள்ள இயற்கையின் சட்டம் என்ற கோட்பாட்டுக்கும் (Theory of Natural Law), மனிதச் சமத்துவக் கோட்பாட்டுக்கும் (Theory of Equality of Men) மட்டும் இப்போது மதிப்பு இருக்கிறது. பனேஷியஸ் பழைய ஸ்டாயிக் கருத்துக்களுக்குப் புதிய வடிவம்கொடுத்ததனுல், உலக அரசு, உலகக் குடிமை, இயற்கையான நீதி முதலிய கருத்துகள் தோன்றின. இவற்றினின்றும் ஒழுக்க இயல்பான நம்பிக்கைகளும், சமய இயல்பான நம்பிக்கைகளும் தோன்றின. அவையாவன:- தகப்பன் மக்கள் என்ற உறவினடிப்படையில் அமைந்துள்ள சில நல்ல இயல்புகளோடுகூடிய கடவுளின் அரசாங்கத்தில் உலகம் அடங்கி இருந்தது. அறிவுடைமை என்ற பண்பின் காரணமாக ஓரின உறவு உடையவர்களாகவும், கடவுளுக்கு ஒத்த நிலைமையினராகவும் மக்கள் இருக்கின்றனர். நல்லொழுக்கவிதிகளும், நீதிபற்றிய விதிகளும், காரண அடிப்படையிலமைந்த நடத்தைவிதிகளும் இருக்கின்றன. இவற்றை மீறுதலினுல் தண்டனைகள் வழங்கப்படுவதில்லை. மனிதர்கள் சமுதாயமாக வாழும் இயல்பை உடைய

வர்கள். இந்த ஸ்டாயிக் கருத்துகளெல்லாம் கி.மு. முதலாம் நூற்றுண்டிலும், கி.பி. இரண்டாவது, மூன்ருவது நூற்ருண்டுகளிலும் இருவகையாக வளர்ந்தன. ரோமானியச் சட்ட இயலே ஸ்டாயிக் கருத்துகள் வளர்த்தன; எனவே அதில் ஸ்டாயிக் கருத்தாகிய இயற்கையின் சட்டம் என்பது ரோமானியச் சட்ட இயலில் கலந்தது. ஸ்டாயிக் கருத்துகளின் சட்ட இயல்பான வளர்ச்சியையே சிசரோவின் கோட்பாடுகள் காட்டுகின்றன. ஸ்டாயிக் சட்டத்தின் இரண்டாவது வகையான வளர்ச்சி சமயச் சார்புடைய வளர்ச்சியாக (theological) இருந்தது. சட்டமும், அரசாங்கமும் மனித வாழ்வை நெறிப்படுத்துவதற்காகத் தெய்விக ஏற்பாடு என்ற திட்டத்திலேயே வேரூன்றியுள்ளன என்பதே ஸ்டாயிக் கருத்துகளின் சமயச் சார்பான வளர்ச்சியைக் காட்டுவதாகும். ஸ்டாயிக் கருத்துகளின் சமயச் சார்பான வளர்ச்சியைச் செனக்கா (Seneca) என்ற ரோமானியருடைய கருத்துகள் அல்லது கோட்பாடுகள் காட்டுகின்றன.

பிரிவு 3 : சிசரோவின் கோட்பாடுகள்

(a) அரசின் தோற்றம்

சட்டம் என்பதிலிருந்தும், உரிமைகளிலிருந்தும் தோன்றியதுதான் அரசு என்ற அமைப்பு ஆகும். சட்ட இயல்பாக அரசின் தோற்றத்தை முதன்முதலில் எடுத்துக்கூறியவர் சிசரோதாம். சட்ட இயல்பான இப்போக்கு (legalism) இக்காலத்திலும் ஒப்புக் கொள்ளப்படுகிறது.

(b) முழுமையான அரசியலமைப்பு

பண்டைய ரோமில் தொடக்கத்தில் இருந்தது மன்னராட்சி; இதிலிருந்து ஒற்றை மனிதரின் கொடுங்கோலாட்சி, அதிலிருந்து உயர்குடிப் பிரபுக்களாட்சி, அதிலிருந்து செல்வராட்சி, அதிலிருந்து குடியாட்சி என்ற அரசாங்கவகைகளாகத் தோன்றின. எனவே முழுமையான அரசியலமைப்பு என்பது இத்தகைய அரசாங்கங்களினுடைய வளர்ச்சிவட்டத்தில் அமைந்தும், ஒரு கலப்பு அரசியலமைப்பாகவும் இருக்கும்.

சிசரோ கூறிய இந்தக் கோட்பாடு அவருடைய காலத்திலிருந்த ரோமானிய அரசுக்கே ஒத்துவராது என்பதை அவரே உணர்ந்திருந்தார். எனினும் ரோமானியக் குடியரசின் அரசியலமைப்பின் பல பகுதிகள் பல்வேறுவகைப்பட்ட சூழ்நிலைகளில் அறிவிற் சிறந்தபலரால் உருவாக்கப்பட்டும், அவ்வப்போது தோன்றும் அரசியல் பிரச்சினைகளுக்கான தீர்வுகளைக் கொண்டதாகவும்

இருப்பதால், அது மனிதனுடைய சிறந்த அரசியலனுபவத்தில் தோன்றியதாகவும், அதுவே மிக்க முழுமையான வளர்ச்சியும், நிலைத்துநிற்கும் தன்மையும் உடையது என்றும் சிசரோ அதனைப் புகழ்ந்தார்.

(c) இயற்கையின் சட்டம்

உலகம் முழுவதற்கும் பொருந்தக்கூடிய இயற்கையின் சட்டம் ஒன்று இருக்கிறது. உலகம் முழுவதையும் ஆளுவதற்காகக் கடவுள் ஓர் அரசாங்கத்தை ஏற்படுத்தி இருக்கிறார். மனிதருடைய அறிவுடைமை, சமுதாய உணர்வு என்ற இரு பண்புகளும் அவரைக் கடவுளோடு ஒத்த நிலையிலுள்ளவராக ஆக்கக் கூடியவை; இவ்விரு பண்புகளினின்றும், கடவுளின் அரசாங்கத்தினின்றும் இயற்கையின் சட்டம் தோன்றுகிறது. இந்த இயற்கையின் சட்டமே உலக அரசு என்ற அமைப்புக்குரிய அரசியலமைப்புச் சட்டம் ஆகும். (**Law of Nature is the Constitution for the world-state**). இது உலகமெங்கிலும், ஒரே வகையாகவும், எல்லா நாடுகளையும், எல்லா மனிதர்களையும் மாறுதலுக்கு இடம் இல்லாதவகையில் கட்டுப்படுத்தவல்லதாகவும் இருக்கிறது. இதற்கு மாறாக இருப்பவையெல்லாம் சரியானவை அல்ல. எனவே அத்தகைய மாறுபாடான சட்டங்களெல்லாம் தீயவை; தவறானவை; அவற்றைச் சட்டமெனக் கூறவோ, செயல்படுத்தவோ இயலாது.

> ‘ சரியான காரணம் அல்லது அறிவு (right reason என்ற உண்மையான காரணம் ஒன்று இருக்கிறது. இது இயற்கையோடு பொருந்தியதாகவும், எல்லா மனிதர்களிடத்தும் கையாளத்தக்கதாகவும், மாற்ற இயலாததாகவும், என்றும் நிலைத்துநிற்பதாகவும் இருக்கிறது. இந்த உண்மையான சட்டமானது, தன் ஆணைகளின் மூலமாக மனிதர்களைத் தம் கடமைகளைச் செய்யுமாறு தூண்டுகிறது. அவர்கள் தீயவைகளைச் செய்யாமல் அவர்களைத் தடுக்கிறது. இதனுடைய ஆணைகளும், தடைகளும் நல்ல மனிதர்களைச் செயல்படுத்துவனவாகவும், தீயவர்களிடத்து யாதொரு விளைவுகளையும் உண்டாக்கமுடியாமலும் இருக்கின்றன. இந்தச் சட்டத்தைச் செல்லாததாக ஆக்குவதற்குச் செய்யப்படும் மனிதச் சட்டம் எதுவும் ஒருபோதும் நீதியானதாகவோ, சரியானதாகவோ இருக்க இயலாது; இச் சட்டம் செயல்படுவதைத் தடுப்பதும் அனுமதிக்கப்பட

முடியாது; இதை முழுவதும் தள்ளிவிடுவதென்பதும் இயலாது. மேலும் இந்தச் சட்டத்தை விளக்குவதற்கோ, எடுத்துக்கூறுவதற்கோ செக்ஸ்ட்டஸ் ஏலஸ் போன்ற உயர்தர அதிகாரிகளும் வேண்டுவதில்லை. இந்தச் சட்டம் ரோம்நாட்டில் ஒரு தனிப்பட்ட விதியையும், ஆதென்ஸ் நாட்டில் வேறுவகைப்பட்ட விதியையும் விதிக்காது. மேலும் இதனுடைய விதிகள் இன்று ஒரு வகையாகவும், நாளை வேறுவகையாகவும் இருக்கமாட்டா. என்றும் நிலைத்திருக்கிற ஒரே சட்டமாகவும் எல்லா மனிதர்களையும், எல்லாக் காலத்திலும் கட்டுப்படுத்துவதாகவும் இந்த இயற்கையின் சட்டம் இருக்கிறது. மேலும் எல்லா மனிதர்களுக்கும் பொதுவான மேலானவராக ஆட்சியாளர் அல்லது கடவுள் இருக்கிறார்; இவரே சட்டத்தைத் தோற்றுவித்தவர்; விளக்குபவர்; செயல்படுத்துபவர். இச் சட்டத்தை மீறும் மனிதர் தனது நல்லியல்பை இழந்துவிடுகிறார்; அவர் இவ்வாறு உண்மை மனித இயல்பை இழப்பதன்மூலமாக, மனிதர் தரும் தண்டனைகளினின்றும் தப்பித்துக்கொண்டாலும், உண்மையில் கொடிய தண்டனைக்கு உள்ளாகி வருந்துபவர் ஆவார்.'[1] (மேற்கோள்: ஜி.எச். சபைன்).

(d) சமத்துவக் கருத்து அல்லது கோட்பாடு (Doctrine of Equality)

மேலே கூறப்பட்ட இயற்கையின் சட்டத்திலிருந்து எல்லா மனிதரும் சமமானவரே என்ற கருத்துப்பெறப்படுகிறது. மனிதர்கள் படிப்பிலோ, உடைமையிலோ சமமானவரல்லர்; ஆனால் அறிவுடைமையைப் பொறுத்தவரையிலே (possession of reason), மன அமைப்பைப் பொறுத்தவரையிலே எல்லாரும் ஒன்றுபோலவே இருக்கின்றனர். எல்லா இனமக்களும் அநுபவங்களைப் பெறுவதற்கு ஒத்த அல்லது சமமான ஆற்றலையும், சரியானவற்றைத் தவறானவற்றிலிருந்தும் பிரித்தறிவதற்குச் சமமான ஆற்றலையும் பெற்றுள்ளனர்.

மேற்படி சமத்துவக் கோட்பாடு, 'பிறப்பினால் எல்லா உயிர்களும் ஒரு தன்மை உடையனவே; ஆயினும் செய்கின்ற தொழில்களின் உயர்வு, தாழ்வு வேறுபாடுகளால் சிறப்பியல்பு ஒத்திருப்பதில்லை,' என்றும் 'மேன்மைப் பண்புதான் ஒருவருக்குப் பெருமை அளிப்பதேதவிர, அவர் பிறந்துள்ள மேல்வகுப்பினால்

[1] G. H. Sabine எழுதிய A History of Political Theory என்ற நூலில் ஒரு பகுதியின் மொழிபெயர்ப்பு.

அவருக்குப் பெருமை வராது; அதேபோல் கீழ்வகுப்பில் பிறந்தும், கயமைப்பண்பு நீங்கியவர், கீழ்மக்களாகார்' என்றும் கூறுகின்ற வள்ளுவர் கோட்பாடுகளோடு ஒத்து விளங்குகின்றது.

'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்'

'மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர் கீழிருந்தும்
கீழல்லார் கீழல் லவர்.' (பெருமை, 972, 973.)

(e) அரசின் இயல்பு

மேற்படி சமத்துவக் கருத்திலிருந்து சிசரோ, அரசினுடைய தன்மையைப்பற்றி ஒரு கருத்துக்கூறுகிறார். அரசு என்பது ஓர் **ஒழுக்க இயல்பான, நீதி இயல்பான** சமுதாயம் ஆகும். அதில் வாழும் மக்கள் அதன் சட்டத்தையும், அரசு முழுவதையும் தங்களுக்குப் பொதுவாக வைத்துள்ளனர். ஆகையால் மக்கள் ஒருவருக் கொருவர் ஆற்றவேண்டிய கடமைகளை அறியும்படியாகவும், ஒவ் வொருவரும் மற்றவர் உரிமைகளுக்கு மதிப்புக்கொடுக்கும்படி யாகவும் அரசாங்கம் செயல்படுதல் வேண்டும். எனவே **நாடு என்பது மக்களுடைய பொதுவான உடைமை அல்லது செயல் ஆகும்.** (இதனையே ஆங்கிலத்திலுள்ள காமன்வெல்த் (Commonwealth என்ற சொல் குறிப்பிடுகிறது.) அரசு என்பது ஒழுக்க இயல்பான நோக்கங்களுக்காக இணைந்துள்ள ஒரு சமுதாய மாகையினால், அது தனது உண்மையான இயல்போடு நீடித்து இருக்கவேண்டுமானால், மேற்படி நோக்கங்கள் நிறைவேறுதல் வேண்டும். சட்டம், உரிமைகள் முதலியவைகளைப்பற்றி மக்க ளிடையே ஒரு பொதுவான இணக்கம் இருப்பதனாலும், ஒருவருக் கொருவர் நன்மைகள் செய்துகொள்ளுவதில் பங்கெடுத்துக் கொள்ளுவதனாலும், அவர்கள் ஒன்றாக இணைந்துவருகிறார்கள்.

(f) அரசின் பயன் (Use of the State)

அரசு ஒரு கூட்டான அமைப்பு அல்லது மன்றம் ஆகும். அதில் உறுப்பினராக இருத்தல் என்பது எல்லாக் குடிகளுக்கும் பொதுவான உடைமை ஆகும். அது நீதியான அரசாங்கத்தின் நற்பயனையும், ஒருவருக்கொருவர் உதவிசெய்தலினால் வரும் நன்மையையும் அளிக்கிறது.

(g) அரசாங்க அதிகாரத்தின் தோற்றம் (Origin of Political Power)

அரசும், அதன் சட்டமும் மக்கள் யாவருக்கும் பொதுவான சொத்து. ஆகையினால், அதன் அரசாங்கம் அல்லது அரசாங்க

அதிகாரம் மக்கள் அனைவருடைய கூட்டு அதிகாரத்தினின்றும் தோன்றுகிறது. அரசாங்க அதிகாரத்தைப்பற்றிச் சிசரோ வகுக்கும் இந்தக் கோட்பாடு குடியாட்சி அரசாங்கக் கோட்பாட்டுக்கு ஒத்த ஒரு விதி ஆகும்.

(h) அரசியலதிகாரமும் சட்டமும் (Political Power and Law)

அரசியலதிகாரம் என்பது சட்டத்திற்கு ஒத்தவகையிலும், சரியானதாகவும் கையாளப்படும்போது, அது மக்களுடைய கூட்டு அதிகாரமாகவே இருக்கிறது. அரசாங்க அதிகாரத்தை எந்த அதிகாரியும் கையாளுவதற்கு ஆதாரமாக இருப்பது சட்டம் ஆகும். சட்டங்களே அரசாங்க அதிகாரிகளைக் கட்டுப்படுத்துகின்றன. அதிகாரம் சட்டத்தினடிப்படையில் கையாளப்பட்டால்தான் அது நீதியானதாக இருக்கும்.

பிரிவு 3: சிசரோவின் கோட்பாடுகள்பற்றிய மதிப்பீடு

சிசரோவின் கோட்பாடுகளுள், கலப்பு அரசாங்கத்தைப் பற்றிய கோட்பாட்டைத் தவிர, மற்றவை பெரும்பாலும் சரியானவையாக ஒப்புக்கொள்ளப்படுகின்றன. 'இயற்கையின் சட்டம்' என்ற ஸ்டாயிக் கருத்துக்குச் சிசரோ இலத்தீன்மொழியில் கொடுத்த தெளிவான விளக்கமானது, அவருடைய காலத்திலிருந்து பத்தொன்பதாம் நூற்றாண்டுவரையிலும் மேற்கத்திய நாடுகளிலெல்லாம் பரவியிருந்தது. அவரிடமிருந்தே இந்தக் கருத்தை ரோமானியச் சட்ட அறிஞர்களும், கிருஸ்தவத் திருச்சபையை நிறுவிய செயின்ட் அம்ப்ரோஸ், செயின்ட் அகஸ்டின், செயின்ட் கிரிகரி முதலிய கிருஸ்தவத் திருச்சபைத் தலைவர்களும் (Church Fathers) அறிந்தனர். இடைக்காலத்தில் (Middle Ages அதாவது கி.பி. 1000—கி.பி. 1500) இக்கருத்துப் பல தடவைகளில் மேற்கோளாகக் காட்டப்பட்டது. சிசரோவின் காலத்துக்குப் பிற்பட்ட காலத்திய அரசியல் கோட்பாடுகளை நாம் அறிய விரும்பினுல், அதற்குச் சிசரோவின் கோட்பாடுகளை நாம் நினைவில்கொள்ளுதல் வேண்டுமென ஓர் அரசியலாசிரியர் கூறுகிறுர்.

அவர் கூறிய மனிதச் சமத்துவக் கோட்பாடு அரிஸ்ட்டாட்டிலின் கருத்துக்கு முரணானது. சுதந்திரக் குடிஉரிமை (free citizenship) என்பது சமத்துவம்உடையவர்களிடையேதான் இருக்கக்கூடிய தொடர்பு என்றும், மனிதர்கள் சமத்துவம் உடையவரல்லர் என்பதால், குடிமை உரிமை என்பது கவனமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சிறிய குழுவினருக்குமட்டுமே உரியது என்று அரிஸ்ட்டாட்டில் கருதினுர். இதற்கு நேர்மாருக எல்லா மனிதர்களும்,

(இயற்கையின் சட்டம் என்கிற) ஒரு சட்டத்திற்கு உட்பட்டவர்களாகையினுல், அவர் ஒத்தநிலையிலுள்ள குடிகளாவார் என்றும், அவர்கள் ஓரளவிலேனும் சமமானவர் என்றும் சிசரோ கருதினுர். எனவே நடைமுறையில் மனிதச் சமத்துவக் கோட்பாட்டை ஏற்றுக்கொள்ளாவிடினும், நீதியினடிப்படையில் சமத்துவக் கோட்பாட்டை ஏற்றே ஆகவேண்டுமென்று சிசரோ கருதினுர். இது பாராட்டுதலுக்குரிய, சிறப்பான ஒரு கருத்து ஆகும். எனவே ஒவ்வொருவருக்கும் ஓரளவிலேனும் மனிதரென்ற மதிப்புக், கொடுக்கவேண்டுமென்று சிசரோ கூறுகிருர். இந்தக் கருத்தையே சிசரோவுக்கு 18 நூற்றுண்டுகளுக்குப் பின்னர் வாழ்ந்த இம்மானுவல் கான்ட் (Immanuel Kant) என்ற சிந்தனையாளர், மனிதனே குறிக்கோளாகக் கருதப்படவேண்டுமே தவிர, குறிக்கோளை அடைவதற்கான வழியாக அவனைக் கொள்ளலாகாது,' என்று கூறி வலியுறுத்தினுர். எனவே சிசரோ அரிஸ்ட்டாட்டிலை ஒத்து இராமல், இக் காலச் சிந்தனையாளரான இம்மானுவல் கான்ட் என்பவரை ஒத்துவிளங்கும் ஒரு தாராள இயல்புள்ள சிந்தனையாளர் என்று கூறலாம். மேலும் 'அரசு மக்களுடைய அதிகாரத்திலிருந்து தோன்றுகிறது,' 'அரசாங்க அதிகாரத்துக்குச் சட்டமே ஆதாரமாக இருக்கவேண்டும்,' எனவே 'அரசாங்கம் நீதி செலுத்துவதற்கே அதிகாரத்தைக் கையாளுதல் வேண்டும்' என்ற சிசரோவின் கோட்பாடுகளெல்லாம் தற்காலக் குடியாட்சி இயல்பான கோட்பாடுகளே ஆகும்.

இயல் ஒன்பது

ரோமானியச் சட்ட அறிஞர்கள்

(Roman Lawyers)

பிரிவு 1: தோற்றுவாய்

உலக நாகரிகத்தின் வளர்ச்சிக்குப் பண்டைய ரோமானிய அரசு செய்த பெருந்தொண்டு எந்தத் துறையில், என்ற கேள்வி எழுமானால், அதற்கு விடையாக, **'சட்டவளர்ச்சித் துறையில்'** என்றுதான் (field of law) எல்லா வரலாற்றாசிரியர்களும் ஒரு முகமாகக் கூறுவர். இன்றும் நாம் ஆங்கிலத்தில் கற்கும் பலசட்ட இயல்பான சொற்றொடர்களும், வழக்கங்களும் பண்டைய ரோமானிய மொழியான இலத்தீன் (Latin) மொழியிலிருந்து வந்தவை ஆகும். மேற்கு ஐரோப்பிய நாடுகளிலெல்லாம் ரோமானியச் சட்டங்களுக்கு மிக்க மதிப்புக் கொடுக்கப்பட்டுவந்தது. அச்சட்டங்களில் பொதிந்து, ஆதாரமாக இருந்த எத்தகைய பொதுவான கருத்தும், அல்லது விதியும், கல்வியறிவு உடையவருக்குமட்டுமல்லாமல், கல்வியறிவு இல்லாதவருக்கும் கேள்விவாயிலாகவும் தெரியக்கூடியதாக இருந்தது.

> 'இவ்வாறு ரோமானியச் சட்டம் என்பது ஐரோப்பிய நாகரிக வரலாற்றிலேயே பேராற்றல்களுள் ஒன்று (one of the greatest intellectual forces) என ஆயிற்று. எவ்வாறெனில், அச்சட்டத்தின் வாயிலாகவே அரசியல் உட்பட எல்லாத் துறைகளிலும் மக்கள் ஆராயலாயினர். சட்டத்தின்வாயிலாக ஆராய்தல் அல்லது மனித உரிமைகள் மூலமாகவும், ஆளுவோருடைய அதிகாரங்கள்மூலமாகவும் ஆராய்தல் என்பது அரசியல் ஆராய்ச்சியில் கையாளப்படலாயிற்று.'[1] (மேற்கோள் ஜி. எச். சபைன்)

[1] G. H. Sabine, A History of Political Theory.

பிரிவு 2: ரோமானியச் சட்ட அறிஞர்கள்

ரோமானியச் சட்ட அறிஞர்களுள் கி.பி. இரண்டாம் நூற்றுண்டில் வாழ்ந்த **கேயஸ்** (Caius) என்பவரும், கி.பி. மூன்றும் நூற்றுண்டில் வாழ்ந்த **உல்பியன்** (Ulpian) என்பவரும் குறிப்பிடத் தக்கவர்கள். இவர்களைத் தவிர பல சட்ட அறிஞர்கள் பேரரசர்களாகிய **ஹேட்ரியன், தியோடோஷியஸ்** (ஆட்சிசெய்த ஆண்டு கி.பி. 379-கி.பி. 395,) **ஜஸ்ட்டினியன்** (ஆட்சிசெய்த ஆண்டு கி.பி 527 - கி.பி. 565) முதலியோர் காலத்திலும் வாழ்ந்தனர். பேரரசர்களான ஹேட்ரியனும், தியோடோஷியசும் பழைய ரோமானியச் சட்டங்களை ஒன்றுதிரட்டித் தொகுப்பாக வெளியிட ஏற்பாடு செய்தனர். இத்தாலி, வட ஆப்பிரிக்கா முதலிய நாடுகளை எல்லாம் வென்று கான்ஸ்ட்டான்ட்டிநோப்பிள் (இப்போது இஸ்ட்டான்புல் எனப்படுவது) நகரத்திலிருந்து ஒரு பேரரசை ஆண்ட **ஜஸ்டிடினியன்** டிரெபோனியஸ் என்ற மேற்பார்வையாளரின்கீழ் பல சட்ட அறிஞர்களை ஒன்றுகூட்டிச் சட்டத்தொகுப்பை (Code) வகுக்க ஏற்பாடுசெய்தார். இத்தொகுப்பில் ரோமானியப் பேரரசின் சட்டங்களும், அவற்றின் சுருக்கங்களும், விளக்கங்களும், அவற்றின் அடிப்படையில் வழங்கப்பட்ட தீர்ப்புகளும் அடங்கியுள்ளன. இத் தொகுப்பைத்தவிர, சட்ட அறிஞர்களுக்கு மேற்கோள்நூலாகப் பயன்படும்படியான சட்டத் திரட்டுநூல் ஒன்றையும் (Digest), பல ரோமானியப் பேரரசர்கள் விடுத்த ஆணைகளும், தொகுப்புநூலிலிருந்து சுருக்கங்களும் அடங்கிய ஒரு பாடநூலையும் (Institutes) பேரரசர் ஜஸ்ட்டியன் வெளியிட கி.பி. 533இல் ஏற்பாடு செய்தார். இச் சட்டத்தில் **'பேரரசரே எல்லாச் சட்டங்களுக்கும், மனித உரிமைகளுக்கும் மூலாதாரம்'** என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஜஸ்ட்டினியன் வெளியிட்ட மூன்றுவகையான சட்டவெளியீடுகளும் சேர்ந்துதான் **சிவில் சட்டத் தொகுதி** அல்லது **ஜஸ்டிடினியன் தொகுப்பு** (Justinian Code) என்று அழைக்கப்படுகின்றன. இத் தொகுப்பு விளங்கிக்கொள்ளுவதற்கும், ஆதாரம் தேடிக்கண்டுபிடிப்பதற்கும் எளிதாகவும், மனித அறிவுக்கு ஒத்ததாகவும், நீதி, மனிதப்பற்று என்ற பண்புகளின் அடிப்படையில் அமைந்தும் இருக்கிறது. மனிதச் சமுதாயங்களுக்கிடையே உள்ள இனவேறுபாடுகளை ஆதாரமாகக்கொள்ளாமல், 'மனிதர் என்ற நிலையில் யாவரும் சமம்' என்ற கருத்தை ஆதாரமாகக்கொண்டு **ரோமானிய ஜஸ்ட்டினியன் தொகுப்பு** பல விதிகளை வகுத்திருப்பது, இத் தொகுப்பில் காணப்படும் ஒரு சிறப்பு ஆகும். ரோம் சிறிய நகரரசாகவும், குடியரசாகவும் (republic) இருந்தகாலத்தில் கி.மு. 509—கி.மு. 44) அதனுடைய பண்டையச் சட்டங்கள் எளிமையாகவும், அதேபோல் பல பண்டைக்காலச் சட்டங்களைப்போலக்

கடுமையாகவும் இருந்தன. இவையெல்லாம் கி.மு. 449ஆம் ஆண்டில் முதன்முதலாக 10 ஆணையர்களடங்கிய (Commissioners) குழுவினால் 12 வெண்கலப்பட்டயங்களில் எழுதிவைக்கப்பட்டன. இப் பட்டயங்களில் உள்ள சட்டங்கள் பல வகையான குற்றங் களுக்கு இலக்கணம் கூறி, அவற்றுக்கு உரிய தண்டனைகளையும் வரையறைசெய்தன. சொத்துரிமைகள், ஆளுரிமைகள் (personal rights), சட்டத்தின் அடிப்படையிலான செயல்முறைகள் (legal procedure) முதலியவைகளையும் மேற்படி பண்டைய ரோமானியச் சட்டங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

பிரிவு 3: ரோமானியச் சட்டத்தின் வளர்ச்சி: ஜஸ்ட்டினியன் வகுத்த மூவகைச் சட்டங்கள்

அளவில் சிறியதாக இருந்த ரோம் நகரரசு ஒரு பேரரசாக விரி வடையவும், மக்களுக்கிடையேயுள்ள தொடர்பும் விரிவாக ஆயின. முன்பு ரோமின் குடிகளுக்குமட்டுமே வகுக்கப்பட்டிருந்த சட்டவழி களெல்லாம், இப்பொழுது ரோமின் ஆட்சிக்குள்வந்த மற்ற மக் களுக்கும் கையாளப்படும்போது, ரோமின் சட்டதிட்டங்களில் தக்க சில மாறுதல்கள் செய்யப்படுதல் இன்றியமையாததாயிற்று. பழைய ரோமானியச் சட்டங்களே விரிவாகக் கையாளப்பட்டுத் தேவைக் கேற்பச் சீர்த்திருத்தம் பெறலாயின. பேரரசில் பொருள்வளர்ச்சி யும், வாணிப வளர்ச்சியும் பெருகவே, சொத்துரிமை, வாணிப ஒப் பந்தங்கள் முதலியவைபற்றிப் புதிய நல்ல சட்டங்கள் செய்யப் பட்டன. அயலவர் சம்பந்தப்பட்ட வழக்குகளை ரோமானிய நீதி மன்றங்களே ஆய்வுசெய்யவேண்டிய பொறுப்பை ஏற்றுக் கொண்டன. அப்போது ரோமானியச் சட்டத்தின் அடிப்படைக் கருத்துகளையும், அயலவரின் வழக்கங்களையும் ஆதாரமாக வைத்தே ரோமானிய நீதிபதிகள் தீர்ப்புகளை வழங்கினர். பிரிட்டி ஷார் நம் நாட்டில் 1765ஆம் ஆண்டின் அலகபாத் உடன்படிக் கையின்படி முகலாயப் பேரரசர் இரண்டாம் ஷா ஆலம் என்பவரிட மிருந்து திவானி (Diwani), நிஸாமத் (Nizamat) முதலிய அதிகாரங் களைப் பெற்றதும், (ரெவின்யு வரி தண்டுதல், படைகளை வைத்தி ருத்தல், சிவில் குற்ற வழக்குகளில் நீதிவழங்குதல் ஆகியவையே மேற்படி அதிகாரங்கள்) சில ஆண்டுகள் கழித்து, 1772 ஆம் ஆண்டில் வங்காள கவர்னராகிய வாரன் ஹேஸ்ட்டிங்க்ஸ் மேற்படி அதிகாரங்களை ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பேனியே கையாளுதற்கு ஏற்பாடுகளைச் செய்தார். அப்போது அவர் இந்துக்களின் சிவில் வழக்குகளைத் தீர்ப்பதற்கு இந்துமக்களுடைய சமயசட்டத்தையும், வழக்கங்களையும் பின்பற்றுமாறும், முஸ்லிம்களுடைய சிவில் வழக் குகளைத் தீர்ப்பதற்கு முஸ்லிம் சமயசட்டங்களைப் பின்பற்றுமாறும்

ஏற்பாடுசெய்தார். இவரும் இவருக்குப்பின்வந்த பிரிட்டிஷ் ஆட்சியாளர்களும் இவ்வாறு செய்தமுறையானது, பண்டைய ரோமானியர் கையாண்ட மேற்படி முறையே ஆகும். ரோமானியர் இவ்வாறு அயலவருடன்கொண்ட தொடர்புகளின்விளைவாகப் புதிய சட்டங்கள் பல தோன்றின. அவைகளாவன :—

(1) ரோமானியக் குடிகளுக்காக ரோமானிய அரசாங்கத்தால் செய்யப்பட்ட சட்டங்கள்;

(2) ரோமானியரல்லாதாருக்காக ரோமானியச் சட்டங்களை விளக்கி, அவ்வழியாக ரோமானிய நீதிபதிகளால் இயற்றப் பட்ட (judge- made laws) சட்டங்கள்;

(3) ரோமானியப் பேரரசர்கள் விடுத்த ஆணைகள் (**Decrees of Emperors.**)

இம்மூவகைச் சட்டங்களையே பேரரசர் ஜஸ்ட்டினியன் தொகுத்து வைத்தார். பண்டைய ரோமானியப் பேரரசின் முதல் பேரரசராகிய அகஸ்ட்டஸ் சீசர் காலம்முதல் (கி.மு. 27முதல் கி.பி. 14வரை) தத்துவ ஆசிரியராக விளங்கிய பேரரசர் மார்க்கஸ் அரேலியஸ் காலம் வரை (கி.பி. 161—கி.பி. 180 வரை) ஒற்றுமையும் அமைதியும் கொண்டு விளங்கிற்று. பின்னர் பல்வேறு காரணங்களால் கி.பி. 476இல் மேற்கத்திய ரோமானியப் பேரரசு மறைந்துபோயிற்று. கிழக்கு ரோமானியப் பேரரசு கான்ஸ்ட்டான்ட்டிநோப்பிள் என்ற நகரத்தைத் தலைநகரமாகக்கொண்டு கி.பி. 1453ஆம் ஆண்டு வரை இருந்தது; 1453இல் துருக்கியர் மேற்படி நகரத்தைக் கைப்பற்றியதும், கிழக்கத்தியப் பேரரசும் (**Eastern Empire**) மறைந்தது. ஜஸ்ட்டினியன் கான்ஸ்ட்டான்டிநோப்பிளைத் தலைநகரமாகக் கொண்டு கிழக்கத்திய ரோமானியப் பேரரசை கி.பி. 527முதல் கி.பி. 565 வரை ஆண்டார். இவரே மேற்படி மூவகைச் சட்டங்களைத் தொகுத்தார்.

பிரிவு 4: ரோமானியச் சட்ட அறிஞர்கள் தொகுத்த மூவகைச் சட்டங்கள்

ரோமானியர்கள் நிறுவியிருந்த பேரரசு மறைந்துவிட்டாலும், அவர்கள் வகுத்த ஆட்சிக் கோட்பாடுகளும், சட்டவகைகளும் நிலைத்துநிற்கின்றன. பண்டைய ரோமானியச் சட்ட அறிஞர்கள் மூன்றுவகையான சட்டங்களைக் குறிப்பிடுகின்றனர். அவை யாவன:

(1) சிவில் சட்டங்கள் (ius civile);

(2) நாடுகளின் சட்டம் (ius gentium);

(3) இயற்கையின் சட்டம் (ius naturale).

சிவில் சட்டம் என்பது ஒரு குறிப்பிட்ட நாட்டில் அல்லது அரசில் இயற்றப்பட்ட, அல்லது வழக்கத்தில் இருந்துவருகிற சட்டமாகும். இவை சமுதாயத்தில் உள்ள ஒவ்வொருவரும் செய்யத்தக்கவை இவை, செய்யத்தகாதவை இவை எனக் கூறு கின்றன. இதனையே இப்போது உடன்பாட்டுவகையான உள்ளூர்ச் சட்டம் (Positive Municipal Law) என்று கூறுகின்றனர்.

நாடுகளின் சட்டத்திற்கும், இயற்கையின் சட்டத்திற்கும் பண்டைய ரோமானியச் சட்ட அறிஞர்கள் துல்லியமான வேறு பாடெதுவும் காட்டவில்லை. சிசரோ இவ்விரண்டையும் ஒன்று கவே குறிப்பிடுகிறார். பொருளைப்பொறுத்தவரையில் (substance) இவ்விருவகைச் சட்டங்களும் ஒன்றுதாம் என்று பண்டைய ரோமானியச் சட்ட அறிஞர்களும் கருதினர். இவ்விருவகைச் சட்டங்களும் மக்கள் யாவராலும் பொதுவாக ஒப்புக்கொள்ளப்பட்ட பல கோட்பாடுகளைக் (Principles) காட்டுகின்றன. எனவே இக் கோட்பாடுகள் பல்வேறு இனமக்களுடைய சட்டங்களுக்கும் பொது வாக இருக்கின்றன. மேலும் இவை மனிதப் பகுத்தறிவு உணர்வுக்கு ஏற்புடைத்தாகவும், சரியானவையாகவும் இருக்கின்றன. இவற்றைப் பொதுமக்கள் ஒப்புக்கொள்ளும்போது இவைசெல்லுபடியாகின்றன. கி.பி. மூன்றும் நூற்றாண்டில் வாழ்ந்த உல்ப்பியனும், வேறுசில சட்ட அறிஞர்களும், ஜஸ்டினியன் சட்டங்களைத் தொகுத்த சட்ட அறிஞரும் நாடுகளின் சட்டத்திற்கும், இயற்கையின் சட்டத்திற்கும் வேறுபாடுகாட்டினர். இவர்கள் எடுத்துக்காட்டிய வேறுபாடு, ஒழுக்க விதிகளை ஆதாரமாக வைத்து எந்தச் சட்டத்தையும் ஆய்வு செய்வதற்குப் பெரிதும் உதவிசெய்தது.

பிரிவு 5: ரோமானியச் சட்டத்தின் ஆதாரமாக அமைந்துள்ள சில ஸ்டாயிக் கருத்துகள்

இயற்கையின் சட்டத்தில் மனித நியாய உணர்வுக்கும், அறிவு உணர்வுக்கும் பொருந்திவரக்கூடிய நல்ல கருத்துகள் அடங்கி இருக்கின்றன. நாடுகளின் சட்டத்திலோ இத்தகைய கருத்துகள் பெரும்பாலும் காணப்படவில்லை.

(a) மனிதச் சமத்துவமும் அடிமைகள் ஒழிப்பும்

நாடுகளின் சட்டத்திற்கும், இயற்கையின் சட்டத்திற்கும் இடையே காணப்படும் ஒரு முக்கிய வேறுபாடு அடிமைநிலை

என்பதைப் பொறுத்ததாகும். நாடுகளின் சட்டத்தில் அனுமதிக்கப் பட்டதும், நடைமுறையில் கடைப்பிடிக்கப்பட்டதுமான அடிமை நிலை என்பது, மனித அறிவின்வழியாகவும் மனித நியாய உணர் வின்வழியாகவும் பார்க்கும்போது ஒப்புக்கொள்ள முடியாத ஒன்று என்று ஆகிறது. பல்வேறு சமுதாயங்களிலும் சட்ட அறிஞர்கள் அடிமைகளின் பாதுகாப்புக்கும், மற்றத் தாழ்ந்த வகுப்பாரின் முன்னேற்றத்துக்கும் பலவிதிகளை வகுத்திருப்பதைப் பார்க்கும் போது அடிமைநிலை என்பது நாடுகளின் சட்டத்தில் ஒப்புக் கொள்ளப்பட்டிருந்தாலும் இயற்கையின் சட்டத்தில் அதற்கு இடமில்லை என்றே சட்ட அறிஞர்கள் கருதியுள்ளனர்.

(b) நியாயம் என்பதே நாட்டின் சட்டத்துக்கு மேலானது

சட்ட அறிஞர்கள் யாவரும் 'எந்த ஒரு நாட்டின் அரசாங்கத் தாலும் இயற்றப்படும் சட்டங்களுக்கும் மேலானதாக, உயர்வான தாக ஒரு சட்டம் அல்லது நியாயம் இருக்கவே செய்கிறது,' என்று உறுதியான ஒரு கருத்தை வகுத்திருந்தனர். சிசரோ பின்வரு மாறு கூறினார்: 'சரியான நியாயக் கோட்பாடுகளைப் பொறுத்த வரையிலாவது, எந்தச் சட்டமும் இறுதியாகப் பார்க்கும்போது, அது மனித அறிவுக்கு ஏற்புடைத்தாகவும், எல்லா மக்களுக்கும் செல்லுபடியாகத் தக்கதாகவும், மாற்ற இயலாதவாறும் தெய்விகத் தன்மையுடையதாகவும் இருக்கிறது,' என்று கூறினார். இக் கருத்தைச் சட்ட அறிஞர்கள் பலரும் வலியுறுத்தினர். இயற்கை வகுக்கிற சில குறிக்கோள்களுக்கு ஏற்பவே அதாவது மனிதனுடைய நியாய அறிவு உணர்வுகட்கும் சமுதாய உணர்வுகட்கும் ஏற்பவே பண்டைய ரோமானியச் சட்டமும், ஆங்கிலச் சட்டமும் (English Common Law) அமைந்து வளர்ந்தன; அவற்றின் பெரும்பகுதி யும் அரசாங்கத்தால் இயற்றப்படவில்லை. இயற்கையின் குறிக் கோள்களுக்கு ஏற்ப நாட்டின் சட்டம் அமைதல் வேண்டும்; இவற்றுக்கு மாறுகச் செய்யப்படும் எந்தச் சட்டமும் சட்டமாகாது. சர் பிரடரிக் போலக் என்பவர் கூறுவதாவது: 'பகுத்தறிவும், சமுதாய உணர்வுமுடையவன் என்ற நிலையில் உள்ள மனித னுடைய இயல்புக்கு ஒவ்வொரு நாட்டின் சட்டமும் ஒத்துப் பொருத்தமாக இருத்தல் வேண்டும்; இதையே ரோமானியக் குடி யரசு காலத்திலிருந்து தற்காலம்வரையிலும் வளர்ந்துள்ள இயற்கைச் சட்டம் என்பதன் மையமான கொள்கை சுட்டிக் காட்டுகிறது.'

செல்ஸஸ் என்ற சட்ட அறிஞரின் கருத்தை மேற்கோளாகக் காட்டி உல்ப்பியன் கூறுவதாவது: 'நீதி (Justice) என்பது ஒவ்வொரு

வருக்கும் உரியவற்றை வழங்குதல் வேண்டுமென்ற நிலையான ஓர் இயல்பாகும். யாவரும் மனிதர் என்ற மதிப்புடன் வாழ்தல் வேண்டும் என்றும்; எவரும் மற்றவருக்குத் தீங்குசெய்தலாகாது என்றும்; ஒவ்வொருவருக்கும் உரியவை வழங்கப்படுதல் வேண்டு மென்றும் சட்டத்தின் ஆணைகள் கூறுகின்றன. மனித, தெய்விக இயல்பானவற்றையும் நியாயமானவற்றையும், நியாயம் இல்லாத-வற்றையும் அறிவதே சட்ட அறிவாகும்.'

உல்ப்பியன் கூறும் கொள்கைகளின் அடிப்படையிலேயே ரோமானியச் சட்ட அறிஞர்கள் தங்களுக்குமுன்னர் எவரும் செய்யாத அளவுக்கு அறிவியலுக்கு ஒத்த சட்டத் தொகுப்பை ஏற்படுத்தினர்.

இயற்கையின் சட்டம் உணர்த்திய சில விதிகளாவன :—

சட்டத்தின்முன் யாவரும் சமம். வாக்குறுதிகளைக் காப் பாற்றும் மன உறுதிவேண்டும். யாவரிடத்தும் அறிவுணர்வோடு செயல்படுதல்வேண்டும். வெறும்சொற்களைவிட நோக்கத்தையே பெரிதெனக் கொள்ளுதல் வேண்டும். சார்ந்தாரைக் காப்பாற்றுதல் வேண்டும். உறவின் அடிப்படையிலான கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும். தகப்பனுக்குத் தன் குழந்தைகளின் ஆள் சுதந்திரம், உடைமை ஆகியவற்றின்மீது வரம்பற்ற கட்டுப் பாட்டு அதிகாரம் இல்லை. திருமணமான பெண்கள் தங்கள் கணவன்மாருடன் சட்டப்படி முழுமையான நிலையிலுள்ளவர் ஆவர். எனவே அவர் தம் குழந்தைகளையும், உடைமைகளையும் கையாளுவதில் தம் கணவரோடு சமமானவரே. அடிமைகளுக்குப் பாதுகாப்பு அளிக்கவும், அவர்களைச் சுதந்திரக் குடிகளாக விடுதலை செய்யவும்கூடிய அளவுக்கு இயற்கையின் சட்டக் கருத்துகள் இடமளித்தன. மேற்படி இயற்கையின் சட்டவிதிகளெல்லாம் ஸ்டாயிக் கருத்துகளினின்றும் பெறப்பட்டவையே. இவற்றைச் சட்ட அறிஞர்கள் ஒத்துக்கொண்டதனுல், இவற்றின்வாயிலாக எதனையும் சீர்தூக்கி ஆராயக்கூடிய நிலை ஏற்பட்டது. நியாயம் என்பதில் ரோமானியச் சட்ட அறிஞருக்கு இருந்த நம்பிக்கையே ரோமானியச் சட்டநூலில் இடம்பெறலாயிற்று. இத்தகைய மனிதப்பற்று இயல்பான, இரக்க உணர்வை ஒட்டிய கருத்தெல்லாம் பண்டைய ரோமானியச் சட்டத்தில் புகுவதற்குக் கிறிஸ்தவ சமயக் கோட்பாடுகள் துணைசெய்யவில்லை என்பதும், ஸ்டாயிக் கோட் பாடுகள்தாம் இதற்குக் காரணம் என்பதும் ஈண்டுக் குறிப்பிடப் படவேண்டும்.

(c) அரசாங்க அதிகாரம் மக்களிடமிருந்து பெறப்படுவது

'ஆட்சியாளரின் அதிகாரம் மக்களிடமிருந்தே பெறப்படுவதாகும்,' என்ற சிசரோவின் கோட்பாட்டை ரோமானியச் சட்டம் மையமாகக் கொண்டுள்ளது. இதனையே உல்ப்பியன் பின்வருமாறு கூறுகிறார்:—

'பேரரசரின் விருப்பமே சட்டத்தின் ஆற்றலைப் பெறுகிறது. எவ்வாறெனில் சட்டத்தை நிறைவேற்றுவதன் மூலமாக மக்கள் தங்களுடைய சொந்த அதிகாரத்தை எல்லாம் பேரரசருக்கு மாற்றி, அவரிடத்தில் தங்கும்படி செய்கிறார்கள்.' இதற்குப் பொருள் அரசர் ஏதேச்சாதிகாரம் உடையவர் என்பதோ, மக்களுக்குப் பிரதிநிதித்துவ அரசாங்கம் அமைக்க அதிகாரம் உண்டு என்பதோ அன்று. சிசரோ கூறியதுபோல, ஓர் அரசியற் சமுதாயமாக இணைந்திருக்கும் மக்கள் யாவருக்கும் பொதுவாக உரியதுதான் சட்டமாகும். ஏதேனும் ஒரு வழக்கம் மக்களால் செயல்படுத்தப்படும்போது, அது அவர்கள் யாவருடைய ஒப்புதலையும்பெறுகிறது. சட்டம் இயற்றுபவர் யாராயினும் அத்தகைய அதிகாரம், அவருக்கு மக்களால் கொடுக்கப்பட்ட ஒன்றாக இருத்தல் வேண்டும்.

(d) சட்டமும், சுதந்திரமும் முரண்பட்டவை அல்ல

யாவரும் சட்டத்திற்கு உட்பட்டுநடத்தல், என்பது அவர்களுடைய சுதந்திரத்துக்கும், மனிதமதிப்புக்கும் முரணான ஒன்று அன்று; சட்டம் என்பது ஒரு குறிப்பிட்ட ஆளின் அறிவு அன்று. அது (சட்டம் என்பது) ஓர் ஆளைமட்டும் சார்ந்திருக்கும் அறிவைக்காட்டுவதும் அன்று. பண்டைய ரோமானியச் சட்ட அறிஞர்களால் வலியுறுத்தப்படும் இக் கருத்துகளெல்லாம் இக் காலச் சட்ட இயலிலும் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

இரண்டாம் பாகம்

இடைக்கால அரசியல் கோட்பாடுகள்

இயல் பத்து

கிறிஸ்தவத் திருச்சபை நிறுவியோரின் அரசியல் கோட்பாடுகள்

பிரிவு 1: தோற்றுவாய்

இடைக்கால வரலாற்றின் சில இயல்புகள்

ஐரோப்பிய வரலாற்றை, அதன் ஆசிரியர்கள் பண்டைக்காலம், (Ancient Period), இடைக்காலம் (Middle Ages), தற்காலம் (Modern Times) என மூன்றாகப் பிரித்துக்கூறுவர். பண்டைக் கால வரலாறு கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்திலிருந்து, ரோமானியப் பேரரசு மறைந்த கி.பி. ஐந்தாம் நூற்றாண்டுமுடிய (500-A.D.) உள்ள காலத்தைக் கூறும் வரலாறு ஆகும். அதை ஒட்டிய 500 ஆண்டுக்காலம் அதாவது கி.பி. 1000 வரையுள்ள காலம் இருண்டகாலம் (Dark Ages) எனவும் குறிப்பிடப்படும் .கி.பி. 1000 முதல் கி.பி. 1500ஆம் ஆண்டுவரையுள்ள காலமே இடைக்காலம் (Middle Ages) எனப்படும். அதற்குப் பிற்பட்ட வரலாறு தற்கால வரலாறு ஆகும். இப்பாகுபாடு வரலாற்றாசிரியர்களால் உத்தேசமாக வரையறுக்கப்பட்ட ஒன்று. இதை ஒட்டியே அரசியல் கோட்பாடுகளையும் நாம் குறிப் பிடலாம்.

இடைக்கால அரசியல் கோட்பாட்டின் இரண்டு முக்கியமான இயல்புகள் என்னவெனில், அவையே (1) **கிறிஸ்தவ சமயத்தின் கோட்பாடும்** (Doctrine of Christianity, (2) **படை அல்லது நில மானியமுறையின் கோட்பாடும்** (Theory of Feudalism) ஆகும்.

(அ) கிறிஸ்தவ சமயத்தின் தோற்றம்

ரோமானியப் பேரரசு அகஸ்டர் சீசருடைய ஆட்சியின்கீழ் வந்துகொண்டிருந்த காலத்தில், கிறிஸ்தவ சமயமானது, ரோமா

னியப் பேரரசின் ஒரு மாகாணமாகிய பாலஸ்டைனில் தோன்றிற்று. கடவுளின் திருமுன்னர் மனிதர் யாவரும் சமத்துவம் உடையவரே என்ற ஸ்டாயிக் கோட்பாட்டை வற்புறுத்தியும், தனிமனிதரின் சிறப்புக்கு முக்கியத்துவம் அளித்தும் கிறிஸ்தவநெறி தோன்றிற்று. கி.பி. நான்காம் நூற்றுண்டில் ரோமானியப் பேரரசர் கான்ஸ்ட் டன்டைன், தமதாட்சிக்காலம்வரையில் ரோமானியரால் பின் பற்றப்பட்டுவந்த கிறிஸ்தவம் அல்லாத பழைய சமயநெறியை (பேகன் நெறி, paganism) விடுத்து, தாம் கிறிஸ்தவ சமயநெறியை ஏற்றுக்கொண்டு, அந்த நெறியையே ரோமானிய அரசாங்கத்தால் ஒப்புக்கொள்ளப்பட்ட சமயமாகவும் ஆக்கினுர். இவ்வாறு ரோமானியப் பேரரசின் சட்டத்தினுல் ஒப்புக்கொள்ளப்பட்ட சமய மாகக் கிறிஸ்தவநெறி கி.பி. நான்காம் நூற்றுண்டில் வந்தபின்னர், அதனை ஏற்றுக்கொண்டவர்களுடைய முயற்சியினுல், அது ரோமானியப் பேரரசுக்கு வெளியே வாழ்ந்த நாகரிகமற்ற டியூட் டானிய இனமக்களிடையேயும் பரவிற்று. இவ்வாறு ரோமானியப் பேரரசரின் அதிகாரத்தை டியூட்டானிய மக்கள் ஒப்புக்கொள்ளும் படி கிறிஸ்தவநெறி செய்தது. உலகத்தை ஆளுவதற்குத் தெய்வ ஆணையின் மூலமாக நிறுவப்பட்டதுதான் ரோமானிய அரசாங்கம் என்ற ஒரு நம்பிக்கையையும் அது வலுவாக வளர்த்தது. இந்தக் கருத்துகள் இடைக்கால அரசியல் கோட்பாட்டிற்கு ஆதாரமாக அமையலாயின.

தொடக்கத்தில் கிறிஸ்தவ சமயமானது ரோமானிய அர சாங்கத்தால் தடைசெய்யப்பட்டு இருந்தது. அப்பொழுது, 'சமய நம்பிக்கை என்பது ஒவ்வொருவரும் தம்விருப்பத்தின் பேரிலேயே கையாளும் கோட்பாடு,' என்றும் 'அது எவராலும் வலுக் கட்டாயமாகச் சுமத்தப்படக்கூடியதன்று' என்றும் கருத்துகளைக் காரணங்களாகக் காட்டிச் சமயத்துறையில் பொறுமை அல்லது பொறை (toleration) என்ற கொள்கையைக் கடைப்பிடிக்குமாறு கிறிஸ்துவ சபை ரோமானிய அரசாங்கத்தைக் கேட்டது. ஆனுல் அதே கிறிஸ்தவ சமயம் அரசாங்கத்தின் சமயநெறியாக ஒப்புக் கொள்ளப்பட்டவுடனே, பொறை என்ற கோட்பாட்டைக் கை விட்டுவிட்டுச் சமயக்கோட்பாட்டை வலுக்கட்டாயமாகப் பரப்புவது என்ற முறையைக் கையாளலாயிற்று. சமயப் பொறையற்ற போக் கையும், விட்டுக்கொடுக்காத பிடிவாதமான போக்கையும், இடைக் காலத்தில் கிறிஸ்தவநெறியானது கையாளவே, கி.பி. ஐந்தாம் நூற்றுண்டிலிருந்து ஓராயிரம் ஆண்டுகளாகக் கிறிஸ்தவத் திருச் சபையின் சமயப் பொறையற்றபோக்கு இடைக்கால அரசியல் வரலாற்றில் பதிந்துகாணப்பட்டது. பகுத்தறிவுமுறையும், திற ளுய்வுசெய்தலும் கிறிஸ்தவநெறியின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு

வரப்பட்டன. கிஸ்தவநெறியை ஏற்றுக்கொள்ளாதவரெல்லாம் துன்புறுத்தப்பட்டார்கள். கிறிஸ்தவசமயத்தை ரோமானியப் பேரரசு அரசாங்கத்தின் சமயநெறியாக ஏற்றுக்கொண்டவுடனேயே கிறிஸ்தவத் திருச்சபை அரசியல் விவகாரங்களில் தலையிடத் தொடங்கிற்று. பண்டைய ரோமானியப் பேரரசின் அரசாங்க அமைப்பு முறையைக் கிறிஸ்தவத் திருச்சபையானது பின்பற்றிற்று. கிறிஸ்தவத் திருச்சபை அலுவலாளர்கள் நிறைய அரசாங்க அதிகாரங்களை எடுத்துக்கொண்டனர். நாகரிகமற்ற மக்களுடைய படையெடுப்புகளும், தாக்குதல்களும் நடைபெற்றகாலத்தில் நிலவிய குழப்பமான சூழ்நிலையிலே அமைதியையும், ஒழுங்கையும் பாதுகாக்கும்பொருட்டு, கிறிஸ்தவத் திருச்சபையானது பெருமளவில் பேரரசாங்க அதிகாரங்களை (temporal authority) எடுத்துக்கொண்டது. கிறிஸ்தவமக்களின் சமய, ஆன்மிக நலன்களைக் கண்காணிப்பதற்காக அமர்த்தப்பட்ட மேற்பார்வையாளர்கள் அல்லது பிஷப்புகள் (bishops or supervisors) சமய நிறுவன அதிகாரிகளாக மட்டுமின்றி, அரசாங்க அலுவலாளராகவும் ஒப்புக்கொள்ளப்பட்டனர்.

(b) நிலமானியக் கோட்பாடு (Feudalism)

இடைக்கால ஐரோப்பியருடைய நிலமானிய அல்லது படைமானிய அமைப்பானது பல்வேறு சூழ்நிலைகளிலிருந்து தோன்றிற்று. கிறிஸ்தவ சமயநெறி தோன்றுவதற்கு முந்தியகாலத்தில் ரோமானியப் பேரரசில் ரோமானியரிடையே **ஆதரவாளர் (Patron) சார்வாளர் (Client)** என்ற முறையும், போர்வீரருக்கு மானியம் (நிலம்) வழங்குமுறையும் இருந்தன. மேற்கத்திய ரோமானியப் பேரரசு மறைந்ததும், குழப்பம் நிலவிற்று. சிறுநில உடைமையாளர், தம் உயிர், உடைமை முதலியவற்றின் பாதுகாப்புக்காக, அயலிலுள்ள பெரும்நிலப்பிரபுவிடம் தமது நிலத்தைக்கொடுத்து அதனையே (fief) மானியமாகத் திரும்பப்பெற்றார்; இவ்வாறு சுதந்திர நில உரிமையாளராக இருந்தவர், பிரபுவைச் சார்ந்திருக்கும் நில மானியக் கீழாளாக (feudal vassal) ஆனார். கீழாள் நிலமானியப் பிரபுவின் பாதுகாப்பைப் பெற்றார்; நிலமானியப் பிரபு கீழாளின் **பற்றுறுதியையும்** (fidelity) சில பணிகளையும், உதவிகளையும், பெற்றார்.[1] கீழாளின் பிரபுவிற்கு வாரிசுக் கட்டணம், கீழாள் பெண்ணுயின் திருமணக்கட்டணம் முதலியவை செலுத்துதல் வேண்டும்.

[1] நிலமானிய முறையிலுள்ள முக்கியமான பணி, கீழாள் பிரபுவுக்குக் கட்டுப்பட்டு, ஆண்டுக்கு 40 நாட்களாவது போர்ப்பணி (military service) செய்யவேண்டும். உதவிகள் மூன்றுவகையாகும்; பிரபுவின் மூத்தமகன் நிலமானியப் போர்வீரனாக ஏற்றுக்கொள்ளப்படும்போதும், மூத்தமகள் திருமணத்தின் போதும் கீழாள் பண உதவி அளிப்பதுடன், பிரபு போரில் சிறைப்பட்டால் அவருக்காக மீட்சிப் பணமும் (ransom) கொடுக்கவேண்டும்.

சிறுநில உரிமையாளர் தமது விருப்பத்தின்பேரிலேயே பெருநிலக் கிழாருடைய கீழாளாக வந்தமுறைக்குப் **பரிந்துரைப்புமுறை** (Commendation) என்று பெயர். படைவெற்றி முறையின்மூலமாகவும் நிலமானியமுறை தோன்றிற்று. பல்வேறு ரோமானிய மாகாணங்களை நாகரிகமற்ற டியூட்டானிய இனமக்கள் கைப்பற்றியபோது தலைவர்கள், போரில் தமக்கு உதவிசெய்த படைவீரர்களுக்கு, வெற்றிக்கொள்ளப்பட்ட நிலங்களை மானியங்களாகப் பிரித்தளித்தனர்.

போர்வீரர்களும், தளபதிகளும் தாம் பெற்ற பெரும்மானியங்களைத் தங்கட்குக் கீழ்ப்பட்ட சிறுநிலமானியக்காரருக்குப் பிரித்தளித்தனர். **அதிகாரங்களைக் கைப்பற்றுதல்** (usurpation) என்னும் மூன்றுவது வழியாகவும் நிலமானியமுறை தோன்றிற்று. அரசர்களிடமிருந்து அலுவல்செய்த பெரிய அலுவலர், வலியற்ற அரசர்களுடைய ஆட்சிக்காலத்தில் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றி, நாட்டில் நிலமானியமுறையை ஏற்படுத்தினர். ஒரு பிரபுவின் கீழாளாக இருப்பவர், வேறொரு பிரபுவிடமும் மானியம் பெற்று, அவருடைய கீழாளாகவும் இருத்தல் கூடும். இதேபோல ஒரு பிரபுவுக்குக் கீழாளாக இருப்பவர், தமது மானியத்தைச் சிறு பகுதிகளாகப் பிரித்து மற்றவர்களுக்கு வழங்கி, அப்போது அவர் தம்மிடமிருந்து மானியம் பெற்ற சிறு கீழாட்களுக்குப் பிரபுவாக இருந்தார். மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது, நிலமானிய முறை ஒரு சமுதாய அமைப்பு என்று தோன்றினும், நடைமுறையில் இது ஒரு பெருங்குழப்பத்தை விளைவித்தமுறை ஆகும்.

பிரிவு 2: இயேசு கிறிஸ்துவும், அவருடைய சீடர்களும் சில கிறிஸ்தவப் பெரியோர்களும் அருளிய சில கோட்பாடுகள்

இயேசு கிறிஸ்துவின் போதனைகளில் அரசியல் கோட்பாடு இருப்பதாகக் கூற இயலாது. அவருடைய போதனைகள் எல்லாம் மிக எளிமைவாய்ந்த ஒழுக்கவிதிகள் ஆகும். வாழ்க்கையில் துன்புற்றவர்களுக்கெல்லாம் இரக்கம் காட்டுதல் வேண்டும் என்று அவருடைய போதனைகள் வலியுறுத்துகின்றன; மனிதருக்கிடையே இருக்கவேண்டிய நல்லுறவையும் அவை வகுக்கின்றன. இவை அரசியல் தன்மை உடையவை அல்ல. அவர் தம்மைப் பின்பற்றியவர்கள் அடையும் நாட்டை இவ்வுலக அரசுகளெல்லாவற்றிலும் உயர்ந்ததாகவும், அதனைத் துறக்கம் (அல்லது மோட்சம், heaven), அல்லது இறைவர் நாடு (kingdom of god)என்றும் குறிப்பிட்டார்.

மேலும் தாம் இவ்வுலகத்தின் எந்த அரசின் இயல்புகளையும் குறிப் பிடவில்லை என்றும் குறிப்பிட்டார். 'அவர் ரோமானிய அரசாங்க அதிகாரிகளோடு மாறுபாடுகொண்டவர்; அவ்வரசை ஒப்புக்கொள் ளாதவர்,' என்று அவரைப் பகைத்தவர்கள் கூறியபொழுது அவர் கூறிய கோட்பாடு இதுதான்:—

> 'அரசருக்குச் செலுத்தவேண்டிய கடமைகளை அரசருக்குச் செலுத்திவிடுவீர்களாக! இறைவனுக்குச் செலுத்த வேண்டிய கடமைகளை இறைவனுக்குச் செலுத்துங்கள்.' (Render unto Caesar the things that are Caesars; render unto God the things that are God's.)[1]

மேலும் அவர் தமது இறுதிக்காலத்தில் பைலேட் என்ற ரோமானிய அரசாங்க அதிகாரியிடம் கூறியது இதுதான்:—

> 'நான் குறிப்பிடும் நாடு இந்த உலகத்தைச் சேர்ந்தது அன்று.'[2]

இவ்வாறு உலகியல்சார்ந்த, அரசியலதிகாரத்தைப்பற்றி அவர் தமது கருத்தில்கொள்ளவில்லை; இந்தப் போக்கே அவருடைய சமய நெறியை எல்லா மக்களிடையேயும் பரப்புவதில் அவருடைய சீடர்களுக்குத் துணைசெய்தது.

இயேசுவின் மேற்கூறிய போதனைகளுக்கு **செயின்ட் பால்** **(Saint Paul)** என்பவரெழுதிய விளக்கங்கள் அவருடைய கடிதங் களில் (epistles) காணப்படுகின்றன. பால் மக்களை நன்னெறி வாழ்க்கையிலீடுபடுமாறும், கிறிஸ்தவ சமயநெறியைக் காக்குமாறும் தூண்டுகிருர். பால் கூறும் அரசியல் கோட்பாடுகள் பின் வருமாறு:—

> 'ஒவ்வொருவரும் தமக்கு மேலான அதிகாரிகளுக்குக் கட்டுப்பட்டிருப்பாராக; ஏனெனில் கடவுளைத் தவிர வேறெந்த அதிகாரியும் இல்லை; இவ்வுலகில் காணப் படும் அதிகாரியெல்லாம் கடவுளின் ஆணையால் அமர்த்தப்பட்டவரே ஆவர்.'[3] 'கடவுளின் ஆணையைச் (will) செயல்படுத்துவதற்காக இருக்கும் ஒரு கருவியே அரசாங்கம் என்பதாகும்.'

[1] Matthew, XXII
[2] John XVIII, 36
[3] Romans XIII 1-7.

இதே கோட்பாட்டைக் கிறிஸ்துவின் முதற்சீடரான **செயின்ட் பீட்டர் (Saint Peter)** என்பவர் பின்வருமாறு கூறுகிருர்:—

> ‘உங்களுக்கு ஆணையிடும் மனிதர் உயர்தர அரசரா யினும், அல்லது மாநில ஆட்சியாளராக இருப்பினும், அவருடைய ஆணைக்கு நீங்கள் எல்லாரும் இறைவன் பொருட்டுக் கீழ்ப்படிந்து நடப்பீர்களாக! அவர்களெல் லாம், தீயவை செய்வோரைத் தண்டிப்பதற்காகவும், நல்லவை செய்வோரை வாழ்விப்பதற்காகவும் இறை வனுல் அனுப்பப்பட்டவர்கள் என்று நீங்கள் கருதிக் கீழ்ப்படிந்து இருங்கள்.’ [1]

இத்தகைய கருத்துகள் பணிவுடன் இருக்கும் பண்பைவளர்த்துத் தியாக மனப்பான்மையை உருவாக்கின. ‘மனிதருக்குக் கீழ்ப் படிதலைவிட இறைவனுக்கே நாம் கீழ்ப்படிதல் வேண்டும்’ என்ற கொள்கையையும் இவை வலியுறுத்தின.

தொடக்கத்தில் கிறிஸ்தவ சமயநெறியில் சடங்குமுறைகள் விரிவாக இல்லை. கிறிஸ்தவச் சமுதாய அமைப்பும் அந்தச் சமயத்தவர் வாழ்ந்த இடங்களிலுள்ள பழக்கங்களை அடிப்படை யாகக்கொண்டு குடியாட்சி இயல்புடையதாக (democratic) இருந்தது. கண்காணிப்பாளர் அல்லது பிஷப்பு (bishop) என்ற கிறிஸ்தவச் திருச்சபை அலுவலாளரை—(அவர் ஒரு துறவி யாகவே இருக்கவேண்டும்). கிறிஸ்தவர்களே தேர்ந்தெடுத் தனர். சமயநெறியைச் சேர்ந்த எல்லாருடைய நலனையும்பற்றிய பொதுக்காரியங்களெல்லாம் திருச்சபையின் ஆலோசனையின் மூலம் தீர்மானிக்கப்பட்டன. **குருமார் பரம்பரைக் கோட்பாடு (Doctrine of Apostolic Succession)** என்ற கருத்தின் விளை வாகக் கிறிஸ்துவை வணங்குகிறவர்களுக்கு அவர் குருமார் மூலமாக அருளுவார் என்ற கோட்பாடு தோன்றிற்று. சமுதா யத்தில் தாழ்த்த நிலையிலிருந்துதான் இயேசுவின் சீடர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். எனவே அவர்கள் இயேசுவின் போதனைகளைப் பொதுவுடைமைப் போக்கில் பரப்பிச் செல்வர்களைத் தாழ்த்திப்பேசினர். இத்தகைய தீவிரமான போக்கைச் செயின்ட் பால் என்பவரும், அவருடைய சீடர்களும்விடுத்து, ‘கிறிஸ்தவ சமய, சமுதாயநெறியில் சேருவதற்குச் செல்வமுடைமை ஒரு தடையோ, ஒரு தகுதியோ ஆகாது,’ என்று போதித்தனர். ‘இயேசுவிடம் நம்பிக்கைகொள்ளுவது ஒன்றுதான் கிறிஸ்தவ சமய, சமுதாயநெறியில் சேர்வதற்கு ஒரே தகுதியாகும். இந்த

[1] Peter II, 13-17.

நம்பிக்கை உடையவர்களிடையே செல்வர், ஏழை, உயர்ந்தவர், தாழ்ந்தவர், அடிமை, சுதந்திரர் என்ற வேறுபாடு கிடையாது' என்றும் அவர்கள் கூறினர். முன்பு எவ்வாறு ஸ்டாயிக் கோட்பாடு சமுதாயத்தில் சிந்தனைமிக்க உயர்வகுப்பாரிடையே சமத்துவக் கோட்பாட்டையும், சகோதரத்துவக் கோட்பாட்டையும் ஏற்படுத்திவிட்டதோ, அதேபோல, ரோமானியப் பேரரசில் செயின்ட் பாலின் போதனைகள் தாழ்ந்த வகுப்பாரிடையே சமத்துவ, சகோதரத்துவக் கொள்கையை உருவாக்கின. உயர் வகுப்பாரிடையே ஸ்டாயிக் கோட்பாடு முன்னரே பரவியிருந்தமையால், கிறிஸ்தவ சமயமானது கீழ்வகுப்பாரிடையே தொடங்கி மேல்வகுப்பாரிடையே பரவுவது எளிதாயிற்று.

பல காரணங்களால் திருச்சபையின் அமைப்பு வளரலாயிற்று. ரோம் நகரத்தில் இருந்த திருச்சபை மன்றம் **(Church Council)** கிறிஸ்தவர்களுடைய பொதுக்காரியங்களை ஆய்ந்து தீர்மானித்தது. அந் நகரத்தில் இருந்த கண்காணிப்பாளர் அல்லது பிஷப் தலைமைக் குரு ஆகையினால், அவருக்கு மிக்க செல்வாக்கு வளரலாயிற்று. ரோமானியப் பேரரசரே மிக முக்கியமான அதிகாரியாகையால், அவர் கிறிஸ்தவநெறிக்கு மாறான கோட்பாடுகளை (heresy), ஒழிப்பதற்காகக் கிறிஸ்தவத் திருச்சபை மன்றம் விடுக்கும் ஆணைகளை **(anathema)** நிறைவேற்றும் அதிகாரத்தைப் பெற்றிருந்தார். இவ்வகையாகக் கிறிஸ்த்வத் திருச்சபை அரசியலில் தலையிடலாயிற்று. கி.பி. நான்காம், ஐந்தாம் நூற்றாண்டுகளில், பேரரசருக்கு இருந்ததைவிடக் கூடுதலான அதிகாரங்கள் திருச்சபைக்கு வரலாயின. இதற்குக் காரணங்கள், பல ரோமானியப் பேரரசர்களின் பலவீனங்களும், திறமையின்மையும், பல கிறிஸ்தவப் பிஷப்புகளுடைய ஆணை விடுக்கும் திறமையும், சிதைவுற்ற நிலையிலிருந்த சமுதாய அமைப்புக்குக் கிறிஸ்தவ சமயம் அளித்த நம்பிக்கையூட்டும் கருத்துகளும், காட்டுமிராண்டிகளின் படையெடுப்புகளின்போது, திருச்சபையினருடைய நிறுவனங்களைப் படை எடுத்த போர் வீரர்கள் தாக்காமல் விட்டுவிட்டதும் ஆகும். பேரரசர் வாலன்டினியன் கிறிஸ்தவநெறியின் சில கோட்பாடுகளுக்கு எதிராகத் தோன்றிய **அரியன் (Arianism)**[1] கொள்கையை மிலான் **(Milan)** நகரத்தில் கொண்டுவருவதற்காக, அதனுடைய பிஷப்பாக இருந்த அம்ப்ரோஸ் **(Ambrose)** என்பவருடைய பதவியைத் தம்மால் புதிதாக அமர்த்தப்பட்ட அக்சன்ஷியஸ் என்பவரிடம் கொடுத்துவிடும்படி அம்ப்ரோசுக்கு ஆணைவிடுத்தார்; அம்ப்ரோஸ் இவ்வாணையை

[1] அரியன் கொள்கை பின்னர் விளக்கப்படுகிறது.

ஏற்க மறுத்துப் பேரரசடைய மறுப்புப் போக்கைக் (heretical) கண்டித்தார். மக்களும் அம்ப்ரோசுக்கு ஆதரவளித்தனர். இதே போல் தமக்குப் பணியமறுத்த பேரரசர் தியோடோஷியஸ் என்ப வருக்குச் சில சமயச் சடங்குகளைச்செய்ய இவர் மறுத்து, அவரைத் தமக்குப் பணியவைத்தார். ஹிப்போவின் பிஷப்பான அகஸ்டைன் என்பவர் பேரரசரின் அவைக்களத்தில் தமக்கு இருந்த செல்வாக்கின்மூலமாகவும், கிறிஸ்தவநெறியின் கோட் பாடுகளுக்கு அவர் கொடுத்த விளக்கவுரைகளின் மூல மாகவும், அதற்கு அதிகார வளர்ச்சியை ஏற்படுத்தினர். ஜெரோம் என்பவர் தம் போதனைகளின்மூலமாகவும், தமது துறவுவாழ்க்கையின்மூலமாகவும், துறவுவாழ்க்கைக் கொள்கை களுக்கு ஊக்கம்கொடுத்து, அதன்மூலமாகவும், திருச்சபைக்குச் செல்வாக்குத் தேடினர். ரோமின் பிஷப் லியோ என்பவர் (Leo) ஹூணர்களுடைய கொடிய படையெடுப்பினின்றும் ரோம் நகரத்தைக் காப்பாற்றி, அந்நகர மக்களின் பற்றுறுதி யையும், ஆதரவையும் பெற்றுர். ரோமானியப் பேரரசருடைய அதிகாரம் மறைந்தகாலத்தில், பண்டைய ரோமானியக் கருத்துகளை, நாகரிகமற்ற மக்களுடைய ஆட்சியில்வந்த பண் டைய ரோமானிய மாகாணங்களில் நிறைவேற்றிச் செயல்படுத்தக் கூடிய ஒரேநிறுவனம் கிறிஸ்தவத் திருச்சபைதான். பண்டைய ரோமானிய மாகாணங்களை நாகரிகமற்ற டியூட்டானிய இன மக்கள் வென்று தமதாட்சியை நிறுவியதும், அவர்களுடைய வழக்கங்களுக்கும், மரபுகளுக்கும் உட்பட்ட வழியிலேயே, அம் மாகாணங்களிலிருந்த பழைய ரோமானிய அரசியல், சட்ட நிறு வனங்கள் செயல்படுத்தப்பட்டன; ஆயினும் அவை கருத்து களில் மாறுதலடையவில்லை. நெடுங்காலத்துக்குப் பின்னரே டியூட்டானியரும், ரோமானியரும் கலந்தனர். முதலில் கிறிஸ் தவத் திருச்சபையின் முக்கிய அலுவலராக ரோமானியரே இருந் தனர். ரோமானியப் பிஷப்புகளே டியூட்டானிய அரசுகளில் முக்கிய சட்டம் இயற்றும் அலுவலராகவும், ஆட்சி அலுவல ராகவும் இருந்தனர். வாண்டல் (Vandals), பர்கண்டியன் (Burgundian), ஆஸ்ட்ரகோத்ஸ் (Ostrogoths), விசிகாத்ஸ் (Visigoths), ஃபிராங்க் (Frank) ஆகிய மக்கள் கிறிஸ்தவநெறியை ஏற்றனர். கிழக்கத்திய ரோமானியப் பேரரசில் கிறிஸ்தவத் திருச்சபையின் கோட்பாடுகளுக்கு மாருன கோட்பாடுகள் (heresy) தோன்றின. எனினும் கான்ஸ்ட்டான்ட்டிநோப்பிளில் கிறிஸ் தவப் பேரரசு (கிழக்கத்திய) மறையாமல் நீடித்திருந்த காரணத் தால், கிழக்கே திருச்சபையானது மேற்கே இருந்த கிறிஸ்தவத் திருச்சபையைப்போலச் சுதந்திரமாக வளரவில்லை. இஸ்லாம் சமயம் கிழக்கத்தியப் பேரரசில் கி.பி. ஏழாம் நூற்றுண்டிலிருந்து

வளர்ந்து வலுவடையவும், கிழக்கத்தியக் கிறிஸ்தவச் திருச்சபை (Eastern Church) கிழக்கத்தியப் பேரரசின் அரசாங்கமும் இணைந்து, இஸ்லாமுக்கு எதிராகச் செயல்படலாயின.

பிரிவு 3: போப் நிறுவனத்தின் தோற்றம்

ரோம் நகரத்தில் இருந்த பிஷப்பே **போப்** ஆக ஆயினர். கிறிஸ்தவத் திருச்சபையில் இவரே முதன்மை அதிகாரம் உடைய வராக ஆவதற்குப் பல காரணங்கள் இருந்தன. மேற்கத்திய ரோமானியப் பேரரசு மறைந்த ஒரு நிகழ்ச்சி, ரோமிலுள்ள போப்பின் அதிகார வளர்ச்சிக்கு முதற்காரணமாக அமைந்தது. திருச்சபை சம்பந்தமான விஷயங்களிலெல்லாம் பேரரசருக்கு முக்கிய ஆலோசனை கூறுபவராக ரோமின் பிஷப் (போப்) பேரர சருக்கு மிக அருகிலிருந்தது மற்றொரு காரணமாகும். பேரரசின் எல்லாப் பகுதிகளிலும் இருந்த திருச்சபையைப் பாதிக்கக்கூடிய எல்லாப் பிரச்சினைகளையும் பேரரசருடைய தீர்ப்புக்கு அனுப்பி வைத்துத் திருச்சபையின் நலன்களைப் பாதுகாத்துக்கொள்ளக் கூடிய ஒரே அதிகாரியாகப் போப்பே இருந்தார். பேரரச ருடைய தலைநகரம் கான்ஸ்ட்டான்ட்டிநோப்பிளுக்கு மாற்றப்பட்ட வுடனேயே, அந்த நகரத்திலும், மற்றும் அன்ட்டியாக் (Antioch) அலக்சாண்டிரியா முதலிய நகரங்களிலும் இருந்த கிறிஸ்தவத் திருச்சபை அதிகாரிகள் ரோமிலிருந்த போப்புக்கு முன்பு போல் கட்டுப்பட்டிராமல் சிறிது சுதந்திரமாக இருந்தனர்; ஆயினும் பேரரசின் மற்ற மாகாணங்களாகிய கால், (Gaul), ஸ்பெயின், ஆப்பிரிக்கா முதலியவற்றிலெல்லாம் போப்பினுடைய அதிகாரம் பாதிக்கப்படாமல் உறுதியாக இருந்தது. ரோமிலுள்ள போப்புக்குத் திருச்சபையில் முதன்மையான அல்லது தலைமை யான அதிகாரம் தோன்றுவதற்குக் காரணமாகக் கொள்கை யளவில் இருந்தது எதுவென்றால், 'ரோமில் போப்பின் நிறுவனம் கிறிஸ்துவின் முக்கிய சீடரான பீட்டர் என்பவரால் நிறுவப்பட்டது,' என்பதே ஆகும். மேலும் மேற்கத்திய மாகாணங்களிலுள்ள திருச்சபைகளெல்லாம் ரோமிலுள்ள பிஷப் பினது தலைமையில் நிறுவப்பட்டமையினால், மாகாணத் திருச் சபைகளெல்லாம் தலைநகரத்திலுள்ள மேலான அதிகாரிக்குச் செலுத்தவேண்டிய மரியாதையை, ரோமிலுள்ள பிஷப்புக்குச் செலுத்தவேண்டியவராயினர்.

வைதிகக் கிறிஸ்தவ நிறுவனத்தாருக்கும் (Orthodox Church), அரியன் பிரிவினருக்கும் இடையே பூசல்கள் நிகழ்ந்தபோது, சார் டிகாவில் கி.பி. 347ஆம் ஆண்டில் கூடிய சார்டிகா மன்றம்

(Council of Sardica), மற்றப் பிஷப்புகளுக்கெல்லாம் மேலான தீர்ப்புவழங்கக்கூடிய மேல்முறையீட்டு அதிகாரத்தை ரோமிலுள்ள பிஷப்புக்கு வழங்கிற்று. மேற்கத்திய ரோமானியப் பேரரசராகிய மூன்ரும் வாலன்ட்டினியன், 'பேரரசின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் வரக்கூடிய சமயநெறிபற்றிய வழக்குகளையெல்லாம் ஆய்வுசெய்து, தீர்ப்புக்கூறக்கூடிய ஒரு மேல்முறையீட்டு நீதிமன்றமாக ரோமின் பிஷப் இருக்கிருர்,' என்று ஒப்புக்கொண்டு ஓர் ஆணையை கி.பி. ஐந்தாம் நூற்ருண்டில் விடுத்தார். இவ்வாணையின்படி போப்பினுடைய தலைமை அதிகாரம் மற்றெல்லாப் பிஷப்புகளுடைய அதிகாரத்தையும்விட மேலானதாக ஆயிற்று. இவ்வாறு பேரரசரே போப்புக்கு உயர்தர அரசியலதிகாரத்தை வழங்கினுர். இதற்கு முற்பட்ட காலத்திலேயே முதலாம் இன்னசென்ட், முதலாம் லியோ முதலிய போப்புகள் சமயப் பூசல்கள் நிகழ்ந்தபோது தங்களுடைய தலைமையதிகாரத்தை உறுதியாகக் கையாண்டனர். காட்டுமிராண்டிகளின் படையெடுப்பினுல் மேற்கத்தியப் பேரரசருடைய ஆட்சிமறைந்து, இத்தாலி நாடு அரியன் கிறிஸ்தவநெறியைச் சார்ந்திருந்த கிழக்கத்தியப் பேரரசருடைய ஆட்சிக்குள் வந்தது. அப்போது இத்தாலியிலிருந்த பழைய வைதிகக் கிறிஸ்தவநெறியாளர்களுடைய உரிமைகளைப் பாதுகாக்கவும், அடிக்கடி படையெடுத்து அழிவுச்செயல்களைச்செய்து வந்த லாம்பர்டு கூட்டத்தாரிடமிருந்து ரோம் நகரத்தைக் காப்பாற்றவும்கூடிய ஒரே நிறுவனமாயிருந்தது போப்பின் நிறுவனமே. பேரரசர் வெகுதொலைவிலுள்ள கான்ஸ்ட்டான்ட்டிநோப்பிளில் இருந்தமையால், அவரால் இத்தாலியை லாம்பர்டுகளிடமிருந்து காப்பாற்ற இயலவில்லை.

கி.பி. 590ஆம் ஆண்டிலிருந்து, கி.பி. 614ஆம் ஆண்டுவரை போப்பாக இருந்த கிரிகரி என்பவருடைய காலத்தில் போப்பின் தலைமை அதிகாரம் அரசியல் துறையிலும் வளர்ந்தது. இத்தாலிய மக்கள் ஒரு சிறிது காலத்திற்குமட்டுமே கான்ஸ்ட்டான்ட்டிநோப்பிளிலிருந்த கிழக்கத்தியப் பேரரசரின் அதிகாரத்தையும், இத்தாலியில் ரவன்ன (Ravenna) என்ற ஊரில் அவருடைய துணை அதிகாரியாக இருந்தவருடைய (Exarch) அதிகாரத்தையும் ஏற்றனர்; லாம்பர்டுகளின் படையெடுப்புகள் நிகழ்ந்தபோதும், கி.பி. ஏழாம் நூற்ருண்டில் முஸ்லீம்கள் கிழக்கத்தியப் பேரரசின் பகுதிகளை வென்று தம் சமயத்தைப் பரப்பியபோதும், ரோம் நகரத்தில் கிழக்கத்தியப் பேரரசருடைய அதிகாரம் மறையலாயிற்று. கான்ஸ்ட்டான்டிநோப்பிளிலிருந்த கிறிஸ்தவ நிறுவனத் தலைவர் **(Patriarch)** கிறிஸ்தவத் திருச்சபையிலுள்ள மற்றெல்லா அதிகாரிகளையும்விடத் தாமே உயர்ந்தவரென்று அதிகாரம் கோரியபோது,

அதனைப் போப்புகள் எதிர்த்தனர். இதனாலும் போப்புகள் அரசியல் நிலைமையிலும் கிழக்கத்தியப் பேரரசருடைய கட்டுப்பாட்டிலிருந்து விடுபட்டுச் சுதந்திரமாக இருக்கும் நிலைமை தோன்றிற்று. மேலும் கிரேக்கக் கிறிஸ்தவநெறிக்கும், ரோமானியக் கிறிஸ்தவநெறிக்கும் இடையே பல்வேறுபட்ட கொள்கைகள் இருந்தன; கிரேக்கப் பிரிவினர் சிலைவழிபாட்டை எதிர்க்கவும், ரோமானியப் பிரிவினர் சிலைவழிபாட்டு முறையை ஆதரிக்கவும் செய்தனர். இப் பிரிவினால் ரோமின் போப்பினுடைய அதிகாரம் மேற்கத்திய நாடுகளெல்லா வற்றிலும் ஒப்புக்கொள்ளப்பட்டது; மேலும், மேற்கு ஐரோப்பிய நாடுகளெல்லாம் அரசியலிலே கிழக்கத்தியப் பேரரசருடைய கட்டுப்பாட்டினின்றும் விடுபட்டுச் சுதந்திரமாக இருக்கவும், சமயத் துறையிலும், கிழக்கத்தியப் பேட்ரியார்க்கின் கட்டுப்பாடின்றிச் சுதந்திரமாகவும் இருக்கலாயின.

ரோம் நகரத்தை லாம்பர்டுகள் தாக்கி, அதைக் கைப்பற்ற முயன்றபோது போப்புகள், இன்னொரு வலிய மக்களாகிய ஃபிராங்கு களின் (சார்லஸ் மார்ட்டல், பிப்பின் முதலிய ஃபிராங்கு அரசர் களின்) உதவியைக்கொண்டு லாம்பர்டுகளை விரட்டிவிட்டு, கிறிஸ் தவத் திருச்சபைக்கு உரிய மாநிலங்களை மீட்டனர். ஃபிராங்குகள் இத்தாலி முழுவதையும் கிழக்கத்தியப் பேரரசர்களிடமிருந்து வென்று கைப்பற்றி, அதனைப் போப்புக்கே அளித்தனர். இதுவே போப்புக்கு அரசியலதிகாரம் வந்து அடையக்கூடிய சூழ்நிலை யாகும். இதற்கு மாறாகப் போப்புகள் ஃபிராங்கு அரசர்களுடைய அதிகாரம் கால் நாட்டில் உறுதியடைய உதவிசெய்தனர். பிப்பி னுடைய மகன் சார்லமே (Charlemagne, Emperor 800 A.D.—814 A.D.) என்பவருக்குப் போப் மூன்றும் லியோ, பேரரசர் என்ற பட்டம் அளித்து, கி.பி. 800-ஆம் ஆண்டில் தம் கையால் முடிசூட் டினார்; இந்த நிகழ்ச்சிகளெல்லாம் போப்பினுடைய செல்வாக்கை ஐரோப்பிய அரசியலரங்கில் வலுவாக்கி உயர்த்திற்று. 1059-ஆம் ஆண்டில் கூடிய லேட்டரன் குழு (Lateran Council), போப்பைத் தேர்ந்தெடுக்கும் அதிகாரத்தைக் கார்டினல்கள் என்று சொல்லப் பட்ட குருமார் கூட்டத்திற்கு வழங்கி, அதன்மூலமாகப் போப்பு களுக்கு இத்தாலியிலும், வெளிநாட்டிலும் இருந்தமதிப்பை உயர்த் திற்று. இவ்வாறு பல நல்ல சீர்திருத்தங்கள் ஹில்டபிரான்டைன் இயக்கமெனப்படும் இயக்கத்தால் செய்யப்படவே, கிறிஸ்தவக் குருமார்களனைவரும் துறவு அல்லது பிரமசரியக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டனர்; அவர்கள் உலகியல் சார்பான அலுவல் களை ஏற்றுக்கொள்ளாதபடி அவர்களைப் பல கட்டுப்பாடுகள் தடுத்தன. இதனால் போப்புகளின் அதிகாரமும், செல்வாக்கும் வளர்ந்தன.

பிரிவு 4 : இடைக்காலப் பேரரசின் தோற்றம்

போப்பின்கீழமைந்த புனித ரோமானியக் கிறிஸ்தவத் திருச் சபையைப்போல (Holy Roman Church), இடைக்காலத்தில் சமயத்துறை அல்லாத உலகியல்சார்ந்த இன்னெரு வலிய நிறுவனம் புனித ரோமானியப் பேரரசு (Holy Roman Empire) ஆகும். இந்தப் புனித ரோமானியப் பேரரசை, இடைக்காலத் துப் புனித ரோமானியக் கிறிஸ்தவத் திருச்சபைக்கு ஒர் இணையான நிறுவனம் என்றும், அதற்குப் போட்டியான ஒரு நிறுவனம் என்றும் கூறலாம். இதனுடைய தோற்றம் ஃபிராங்கு மக்க ளுடைய அரசர்களின் வரலாற்றில் காணப்படுகிறது.

முதலாவது ஃபிராங்கு அரசராகிய குளோவிஸ் (Clovis) என்பவர் ரோமன் மாகாணமாகிய கால் (Gaul) நாட்டை வென்று அதன் அரசராஞர். அவருடைய காலத்தில் ஃபிராங்குமக்கள் போப்பி னுடைய தலைமையை ஏற்றுக்கொண்டு வைதிகக் கிறிஸ்தவநெறியைப் பின்பற்றினர். அவர்களுடைய அரசியல் நிறுவனங்கள் எல்லாம் கிறிஸ்தவ சமயக் கோட்பாடுகளுக்கிணங்க அமைக்கப்பட்டன. அரசவையிலும், உள்ளூராட்சி மன்றங்களிலும். கிறிஸ்தவப் பிஷப்புகளும், கிறிஸ்தவ மடங்களின் தலைவர்களும் மிக்க செல் வாக்கைப் பெற்றிருந்தனர். இதனல் திருச்சபையின் செல்வாக்கு வளர்ந்தது.

கரோலிஞ்சியன் அரசக் குடும்பத்தாரது ஆட்சிக் காலத்தில், அந்தக் குடும்பத்தாருக்கும், கிறிஸ்தவத் திருச்சபைக்கும் உறுதி யான நல்லுறவு ஏற்பட்டது. முஸ்லிம்கள் மேற்கு ஐரோப்பாவில் படையெடுத்துவந்தபோது, அவர்களை அரசர் சார்லஸ் மார்ட்டல் (Charles Martel) என்பவர் தடுத்துநிறுத்திஞர். போப்புகள், லாம்பர்டுகளுக்கு எதிராக, ஃபிராங்கு அரசரின் உதவியை நாடிய போது ஃபிராங்குகள் இவ்வுதவியை அளித்தனர்; இவ்வாறு அவர்கள் போப்புகளுக்கு உதவிசெய்ததற்குக் காரணம், தங்களுடைய ஆட்சியை வலுப்படுத்திக்கொள்ளவேண்டும் என்ற அரசியல் நோக்கமே ஆகும். எனவே, பிப்பின் (Pippin) என்பவர் போப்பி னுடைய உடன்பாட்டோடு, 'ஃபிராங்குகளின் அரசர்' (King of the Franks) என்று அழைக்கப்பட்டார். அவருடைய மகன் சார்லமே (Charlemagne) என்பவர் கி.பி. 800ஆம் ஆண்டு கிறிஸ்துமஸ் நாளன்று, ரோமில் உள்ள செயின்ட் பீட்டர்ஸ் கோவிலில், 'சார்லமே பேரரசர்' என்று போப்பிஞல் முடிசூட்டப்பட்டு அதற் குரிய அடையாளச் சின்னம் கொடுக்கப்பெற்ருர்.

இந்த நிகழ்ச்சி, சார்லமே பேரரசருக்குரிய அதிகாரத்தைப் போப்பிஞல் கொடுக்கப்பெற்ருர் என்பதையோ, போப் இத்தகைய

அதிகாரத்தைச் சார்லமேக்கு வழங்கக்கூடிய அதிகாரத்தைப் பெற்றிருந்தார் என்பதையோ எடுத்துக்காட்டவில்லை. சார்லமே தமது போர்த் திறமையினுல் பண்டைய ரோமானியப் பேரரசைப் போல ஒரு பெரிய பேரரசை நிறுவி, அதில் தமது பேரரசு அதி காரத்தை நிலைநாட்டினர்.

இவ்வாறு, தாம் ஏற்கெனவே பெற்றிருந்த ஒரு பேரரசு அதி காரத்திற்குக் கிறிஸ்தவ நாடுகளில் வழக்கமாகக் கையாளப்படுகிற சில சடங்குகளின்மூலமாக ஒரு முறையான ஒப்புதலைப் போப்பி பினிடமிருந்து பெற்றுர் என்பதையே மேற்படி முடிசூட்டுவிழா நிகழ்ச்சி எடுத்துக்காட்டிற்று. இதன்மூலம் சார்லமே பழைய பேரரசர்களின் வழித்தோன்றல் என்று கருதப்படுவதற்குரிய நிலைமையும் தோன்றிற்று. சார்லமேயின் பேரரசில் பழைய பேகன் சமயமும், இஸ்லாம் சமயமும் பரவாதபடி தடுக்கவும், கிறிஸ்தவ நெறியே அதில் பரவி நிலைபெற்றிருக்கவும்கூடிய சூழ்நிலைகள் தோன்றின. இதன்மூலம் டியூட்டானிய அரசியல்முறைகளுக்கும், ரோமானியக் கிறிஸ்தவநெறிக்கும் இடையே நெருக்கமான தொடர்பு ஏற்பட்டது. கிறிஸ்தவநெறியானது ஒரு சமயமாக மட்டும் கருதப்படாமல், ஒரு வலுவான அரசியல்நெறியாகவும் வளர்ந்தது.

சார்லமேயினுடைய ஆட்சிக்குப் பிறகு அவருடைய பேரரசு பல சுதந்திர நாடுகளாகப் பிரிந்து மறைந்தது. எனினும் ஒரே பேரரசு, ஒரே பேரரசர் என்ற பழைய கருத்துகள் மறையவில்லை. போப்பினுல் ரோம் நகரில் எவர் முடிசூட்டப்படுகிருரோ, அவரே பேரரசரின் அதிகாரத்தை முழுமையாகவும், முறையாகவும் பெறு கிருர் என்ற கருத்தும் பரவி இருந்தது. இத்தகைய கருத்துப் பரவு வதற்குக் காரணம், போப்புகள் தங்களுக்கெதிராகத் தோன்றிய இத்தாலிய அரசர்களை அடக்குவதற்கு ஃபிராங்கு அரசர்களுடைய உதவியை நாடியதுதான். அத்தகைய தருணங்களில்தான் சார்ல மேக்கு முன்பு உரியதாயிருந்த பேரரசு முழுவதையும் தங்களுக்கு உரியதாக ஃபிராங்கு அரசர்கள் உரிமைகோர வழி ஏற்பட்டது.

மிக்க போர்த்திறமையும் ஆட்சித்திறமையும் பெற்றிருந்த முதலாம் ஒட்டோ (Otto I) என்ற ஜெர்மானிய அரசர், கி.பி. 962ஆம் ஆண்டில் இத்தாலியை வென்று அதைத் தம்முடைய நாட்டோடு இணைத்துக்கொண்டு பேரரசர் என்ற பட்டத்தையும் போப்பிடமிருந்து பெற்றுர். ஒட்டோவின் முடிசூட்டுவிழா நிகழ்ச்சியி லிருந்துதான் புனித ரோமானியப் பேரரசின் வரலாறு தொடங்கு கிறது.

புனித ரோமானியப் பேரரசர்கள் அனைவரும் ஜெர்மானியர் ஆவர். இவர்கள் இத்தாலியையும் ஜெர்மனியையும் தங்களுடைய பேரரசு ஆட்சியின்மூலமாக இணைக்க முயன்றனர். இவர்களுடைய வளர்ச்சிக்குத் தடையாக மூன்று காரணங்கள் இருந்தன; ஒன்று, இத்தாலியிலும், ஜெர்மனியிலும் அரசருடைய அதிகாரமானது பல நிலமானியப் பிரபுக்களுடைய அதிகாரத்தினால் கட்டுப்படுத்தப்பட்டிருந்தது; இரண்டு, டியூட்டானிய இனத்தைச் சேர்ந்த ஜெர்மானியருக்கும், இலத்தீன் மக்களாகிய இத்தாலியருக்கும் இடையே இனவேறுபாடுகள் இருந்தன; மூன்று, ஜெர்மன் அரசருடைய அதிகாரத்திற்கு எதிராகப் போப்பினுடைய சமயத்துறை அதிகாரம் மிகுந்த வளர்ச்சிபெற்று இருந்தது. ஜெர்மன் அரசருடைய அதிகாரத்தை ஜெர்மானிய நிலமானியப் பிரபுக்கள் கட்டுப்படுத்தினர்.

இத்தாலியர், ஜெர்மானியரை நாகரிகமற்ற காட்டுமிராண்டிகள் என்று வெறுத்தனர். இதன் காரணமாக இத்தாலியர் ஜெர்மன் பேரரசருக்கு எதிராகக் கலகங்களைத் தோற்றுவித்தனர். போப்புகள் தங்களுடைய ஆணைகளை மீறுபவர்களைத் தண்டிப்பதற்குரிய அதிகாரங்களைப் பெற்றிருந்தனர். பேரரசர்கள் தங்களுக்கு உதவிசெய்யும் நண்பர்களாக இருத்தல் வேண்டுமேதவிர, தங்களுடைய மேலாள்கள் ஆக இருத்தல் கூடாது என்று போப்புகள் உறுதியாகக் கூறினர். ஒட்டோவிற்குப் பின்னர் ஒரு நூற்றாண்டுக் காலமாக ஜெர்மானிய அரசர்கள் இத்தாலியையும், போப்புகளையும் தங்களுடைய கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர்; அதற்குப் பின்னர் கிறிஸ்தவத் திருச்சபையில் ஹில்டபிரான்டைன் இயக்கம் தோன்றி அதன்விளைவாகப் போப்புகளுக்கும், பேரரசர்களுக்கும் இடையே நூற்றைம்பது ஆண்டுக்காலம் போராட்டம் நடைபெற்றது.[1] இப்போராட்டத்தின் விளைவாக ஜெர்மன் பேரரசருடைய அதிகாரம் இத்தாலியில் மறைந்தது.

பிரிவு 5 : செயின்ட் அம்ப்ரோஸ் கூறிய கோட்பாடுகள்

கி.பி. நான்காம் நூற்றாண்டில் கிறிஸ்தவ சமயநெறியின் கோட்பாடுகளை விளக்கிய ஆசிரியர்கள், இயேசுவும், அவருடைய சீடர்களும் வகுத்தபோக்கையே ஏற்று எழுதினர்: அதில் பணிவு, அரசியல்நோக்கம் இல்லாமை, மறுமைவாழ்வில் நாட்டம் முதலிய நோக்கங்கள் இருந்தன. ஆயினும் நான்காம் நூற்றாண்டிலேயே, கிறிஸ்தவத் திருச்சபையானது ஒரு சமய நிறுவனமாகமட்டுமல்லாமல் ஒரு பெரிய சமுதாய நிறுவனமாகவும், பெருமளவு ஓர்

[1] இப் போராட்ட நிகழ்ச்சிகளின் சுருக்கத்தை அடுத்த இயலில் காணலாம்.

அரசியல் நிறுவனம் ஆகவும் ஆயிற்று. அதற்கு ஏராளமான சொத்துகள் இருந்தன; பேரரசு அலுவலர்களோடு அதற்கு நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. அதனுடைய சில கோட்பாடு களுக்கு எதிர்ப்புத் (Heresy) தோன்றவே, திருச்சபையிலும், உறுதி யான ஒற்றுமை இல்லை; இந்தச் சூழ்நிலையில் கிறிஸ்தவத் திருச் சபையின் தலைமையை நிலைநாட்டும் நோக்கத்தோடு மிலான் நகரத்தில் பிஷப்பாக இருந்த அம்ப்ரோஸ் என்பவர் சில கோட் பாடுகளை வகுத்தார்.

(a) திருச்சபைக்குப் பேரரசை ஒத்த உரிமைகளும், மதிப்பும் இருக்கின்றன; ஆகையால் திருச்சபை பேரரசருடைய அரசியல் அதிகாரத்திற்கு உட்பட்டது அன்று.

(b) எல்லாக் கிறிஸ்தவ மக்களின் ஒழுக்கவாழ்வும் கிறிஸ்தவத் திருச்சபையின் குருமாரின் ஆதிக்கத்திற்கு உட்பட்டது.

இத்தகைய கோட்பாடு வகுக்கப்படுவதற்கு ஒரு நிகழ்ச்சி காரணமாக இருந்தது; 'பேரரசருக்குச் செலுத்தப்பட வேண்டிய கடமைகள் யாவை? கடவுளுக்குச் செலுத்தப் பட வேண்டிய கடமைகள் யாவை?' என்று தீர்மானிக்க வேண்டியதாயிற்று. பேரரசர் தியோடோஷியஸ் தமக்கு எதிராகக் கலகம்செய்த குடிமக்களை இரக்கமின்றிக் கொடு மையாக அடக்கியதை அம்ப்ரோஸ் வன்மையாகக் கண் டித்துக் கோவிலுக்குள் அவரை வரவிடாமல் தடுத்து, பேரரசர் தமது செயலுக்கு வெளிப்படையாக வருந்தும் படி செய்தார். இதுவே மேற்படி கோட்பாடு தோன்றக் காரணமாக இருந்தது.

(c) 'கிறிஸ்தவத் திருச்சபை அலுவலராகிய பிஷப்புகள் நியாய மான முறையில் அமர்த்தப்பட்டனரா?' என்று தீர் மானிக்க வேண்டியவர் பேரரசர் அல்லர்; இதற்கு மாறாகப் 'பேரரசர் நியாயமான முறையில் அமர்த்தப்பட்டனரா?' என்று தீர்மானிப்பதற்கு, பிஷப்புகளுக்கு அதிகாரம் இருக் கிறது. அரியன் இயக்கம் என்ற ஓர் இயக்கம் (**Arianism**) கிறிஸ்தவக் கோட்பாட்டுக்கெதிராக வளர்ந்துவந்தது. அலக்சாண்டிரியா நகரத்தைச் சேர்ந்த அரியஸ் (**Arius**) என்பவர் 'கிறிஸ்துவின் உடம்பு இறைவனைப்போன்றது' (**of similar substance**) என்று விளக்கினர். இது முன் னரே நிறுவப்பட்டிருந்த வைதிகக் கிறிஸ்தவக் கோட் பாட்டுக்கு மாறானதாகும். இதனை எதிர்த்து, அதனை-

ஷியஸ் (Athanasius) என்பவர் வைதிகக் கோட்பாட்டை ஆதரித்து, 'கிறிஸ்துவினுடைய உடம்பு இறைவனுடையதே' (of same substance) என்று கூறினர். கி.பி. 325ஆம் ஆண்டில் நிகேயாக் குழு (Council of Nicaea), அரியனியக்கத்தை மாறுபாடான இயக்கமெனக் கண்டித்தது. பேரரசர் வாலன்ட்டினியன், அம்ப்ரோசின் பிஷப் பதவியை, அரியனியக்க ஆதரவாளர் ஒருவர் கோரிய போது, அந்த வழக்குப் பேரரசருடைய நீதிமன்றத்தில் ஆய்ந்துதீர்க்கப்படுதல் வேண்டுமென்று கூறினர். இந்தப் பேரரசருடைய ஆணையை ஏற்க மறுத்தே அம்ப்ரோஸ் கீழ்க்கண்ட கோட்பாட்டை வகுத்தார் :

'பிஷப்புகளே பேரரசர்களை விசாரித்துத் தீர்ப்புக்கூறுதல் வேண்டுமேதவிர, பேரரசர் பிஷப்புகளை விசாரிக்க இயலாது.'

(d) 'பேரரசருடைய சட்டமானது இறைவனுடைய சட்டத்துக்கு மேலானது அன்று; ஒரு வரம்புக்குமேல் பேரரசரால் அதிகாரம் செலுத்தப்பட இயலாது.'

(e) 'பேரரசர் கப்பங்களை வாங்க இயலும்; திருச்சபையின் நிலங்களையும் அவர் எடுத்துக்கொள்ள இயலும்; ஆனுல் கடவுளின் கோவில்களை அரசர் எடுத்துக்கொள்ள அதிகாரம் இல்லை. அரண்மனைகள் பேரரசருக்கு உரியவை; கோவில்கள் குருமார்களுக்கு உரியவை. எது தெய்விகத் துறையைச் சார்ந்ததோ (divine), அது பேரரசருடைய அதிகாரத்துக்கு உட்பட்டது அன்று.'

இவருடைய கோட்பாடுகளின் சாரம் பின்வருமாறு:

'எந்தெந்த ஒழுக்க, தெய்விக இயல்பான செயல்களிலெல்லாம் திருச்சபையின் அதிகாரத்துக்கு எதிர்ப்பு இல்லையோ, அவற்றில் உலகியலதிகாரிகளுக்கு எந்தத் தொடர்பும் இல்லை; உலகியல் துறைகளில் அரசாங்கத்தின் அதிகாரத்துக்கு எதிர்ப்பு இல்லை; அது பாராட்டப்படுகிறது.'

இக் கோட்பாடுகளின் மூலமாக அம்ப்ரோஸ் கிறிஸ்தவத் திருச்சபையின் தன்னுரிமை உணர்வை எடுத்துக்காட்டினர்.

பிரிவு 6: செயின்ட் அகஸ்டின் கூறிய கோட்பாடுகள் (ஒன்பதாம் நூற்றுண்டு)

கிறிஸ்தவத் திருச்சபையை நிறுவியோருள் ஒருவராகிய செயின்ட் அகஸ்டின் என்பவர் தாம் எழுதிய 'இறைவனின் நகரம்' (The City of God, De Civitate Dei) என்ற நூலில் சில கோட்பாடுகளைக் கூறியுள்ளார். இவர் பண்டையக் கிரேக்க ஆசிரியராகிய பிளேட்டோ, ரோமானியச் சிந்தனையாளராகிய சிசரோ ஆகியோருடைய போக்கை ஒட்டி, 'சிறந்த அரசு எவ்வாறு இருக்க வேண்டும்?' என்று ஆய்ந்து, அதன் இயல்புகளைக் கூறி முடிபாக, இலட்சிய அரசு என்பது, 'கிறிஸ்தவ அர'சாகத்தான் இருத்தல் வேண்டுமென்று கூறினுர். இவர் வகுத்த கிறிஸ்தவப் பேரரசு (Christian Empire) என்ற குறிக்கோளை கி.பி. 800முதல் கி.பி. 814வரை பேரரசராகச் சார்லமே என்ற ஃபிராங்கியப் பேரரசர் ஏற்றுக்கொண்டு அதனைச் செயல்படுத்த விரும்பினுர்.

(a) அரசியலதிகாரத்தின் வடிவங்களும், செயல்களும் சமய நெறியாளர்களுடைய ஆன்மிக வாழ்வைப்போல முக்கியமானவை அல்ல; இரண்டையும் ஒப்பிடும்போது சமய நெறிப்பட்ட வாழ்வே உயர்ந்தது.

(b) இலட்சிய அரசில் (Commonwealth) வாழ்பவரெல்லாம் கடவுளின் அன்புக்கு உரியவர் ஆவர்; அதாவது, அவர்கள் யாவரும் மறுமைவாழ்வில், அதாவது துறக்கத்தில் இன்பம் பெறுதற்கு உரியவராகக் கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் ஆவர். இத்தகைய மறுமை வாழ்வுக்கு ஓர் அறிகுறியாக இந் நிலவுலகத்தில் அமைந்திருப்பதுதான் கிறிஸ்தவத் திருச்சபை ஆகும்.

(c) கிறிஸ்தவ சமயநெறியின் விதிகளெல்லாம் இலட்சிய அரசில் செயல்படுகின்றன.

(d) சட்டம், அரசியல், மக்களுக்கும் அரசுகளுக்கும் இடையே இவ்வுலகிலுள்ள தொடர்புகள் ஆகிய இவையெல்லாம் மிக முக்கியமானவை ஆகமாட்டா. இறைவனுடைய அடியார்களுக்கு முத்தி அருளுதலும், அவர்களுடைய இடையருத நல்வாழ்த்துகள் உலகத்தாருக்குக் கிடைக்கவும் இறைவனல் வகுக்கப்பட்ட திட்டம் எதுவோ, அதுவே முக்கியமாகும்.

(e) அண்டங்களெல்லாம் எதனைக் குறிக்கோளாகக்கொண்டு இயங்குகின்றன என்றால், அவற்றில் அமைதியும் (Peace), ஒருமைப்பாடும் (Harmony), ஒழுங்கும் (Order) ஏற்படுதல் வேண்டும் என்பதையே குறிக்கோளாகக்கொண்டு இயங்கு கின்றன.

(f) இந் நிலவுலக அமைதி என்பது என்றும் நிலையான மறு வுலக வாழ்வின் அமைதி என்பதோடு ஒப்பிடப்பட இயலாதது. குடும்பம், நகரம், சமுதாயம் முதலிய அமைப்புகளெல்லாம் இவ்வுலகத்தினுடைய வேறுபட்ட வடிவங்களேயாகும். இவை அழியும் தன்மையன; மறு வுலகமோ அழியாத வாழ்வைத் தருவதாகும். ஆன் மாவின் அமைதியோடு, உடலின் அமைதியை ஒப்பிடு மிடத்து உடலின் அமைதி அவ்வளவு முக்கியமானது அன்று. ஆன்மா இல்லாத பொருள்களின்மீது மனிதன் ஆட்சிசெய்வதற்குக் கடவுளால் உரிமைகொடுக்கப் பட்டிருக்கிறான். இதனை நாம் எண்ணும்போது உடம் புக்கும், ஆன்மாவுக்குமுள்ள வேறுபாடு தெரியவரும்.

(g) அடிமைமுறை என்பது கிறிஸ்தவ நெறியின்படி இயல் பானதேயாகும். அடிமையாக இருப்பவர் தாம் செய்த தீவினைகளுக்குத் தண்டனையை அனுபவிக்கும் நிலையி லிருக்கிறார். போரில் வெற்றிபெற்றவரால் கொல்லப்படாமல் உயிரோடு விட்டுவைக்கப்பட்ட எதிரியே அடிமையாவார் என்ற ரோமானியச் சட்ட அறிஞருடைய கோட்பாட்டை அகஸ்டின் ஒப்புக்கொண்டு மேலும் ஒரு கருத்தைக் கூறுகிறார்:— ஒவ்வொரு வெற்றியாளரும் அடையும் வெற்றியானது — அவர் தீயவரானாலும் — கடவுளால் அளிக்கப்பட்ட தீர்ப்பு ஆகும்; தோல்வியுற்றவருடைய வீழ்ச்சியின்மூலம், இறைவர் தோற்றவரின் தீவினைக்காக அவருக்குத் தண்டனை வழங்குகிறார். அழியாத துறக்க வாழ்வில் எல்லாரும் சமத்துவம் உடையவரே ஆவர்; அவர்களுக்கிடையே எந்த வேறுபாடும் கிடையாது.

(h) பேரரசுகளின் தோற்றமும், வீழ்ச்சியும் ஆகிய நிகழ்ச்சிக ளெல்லாம் தற்செயலாக நடைபெறுவன அல்ல; அவை யெல்லாம் இறைவனுடைய தீர்ப்பின்படியே நடை பெறுகின்றன. வரலாற்றின் தத்துவம் முழுவதையும் கடவுளுடைய தீர்ப்பு என்ற ஓர் அளவுகோலின் மூல மாகத்தான் சரியாக விளக்க இயலும். ரோமானியப்

பேரரசு, கிறிஸ்தவ சமயநெறி வளர்ந்த நாள்களில் வீழ்ந்தது என்று கூறுவது உண்மையன்று; கிறிஸ்தவ நெறிக்கு முற்பட்ட பண்டைய சமயநெறியாகிய பேகனிசம் (Paganism) மக்களிடையே வளர்த்துவிட்டிருந்த தீயபண்புகளினாலேயே ரோம் வீழ்ந்தது; ரோமன் வீழ்ச்சியினாலேற்பட்ட கடுந்துன்பத்தை ஓரளவு குறைத்து, மட்டுப்படுத்தி, விலக்கியது கிறிஸ்தவ சமயநெறியே ஆகும்.

(i) **நீதி (Justice)**: உண்மையான கடவுளை ஒப்புக்கொள்ளாத மக்களுக்கு நீதி என்பது பொருந்துவதாகாது. ஒவ்வொருவருக்கும் உரியது எதுவோ, அதை வழங்கும் பண்பே நீதி என்பதாகும். எனவே, மனிதனைக் கடவுளிடமிருந்து பிரித்தெடுத்து, அவனைப் பேய்களிடம் ஒப்படைக்கின்ற சமுதாயத்துக்கு நீதி என்பது பொருந்தாது. கடவுளிடமிருந்து மனிதனைப் பிரிக்கின்ற செயல், அவனுக்கு உரியதை வழங்குவதாகாது. அதற்கு மாறாக அது, அவனுக்கு உரியதை மறுக்கின்ற செயல் ஆகும். உண்மையான கடவுளை வணங்குகின்ற மக்களிடத்திலே தான் நீதி இருக்கமுடியும்.

அகஸ்டின் இவ்வாறு நீதிபற்றி வகுக்கின்ற கோட்பாட்டிலிருந்து நாம் அறிவது என்னவெனில், 'மறுவுலக வாழ்வுக்குரிய துறக்க நாட்டைவிட இந் நிலவுலக அரசு முக்கியமானது அன்று' என்பதும், 'கிறிஸ்தவ சமயத்தைச் சாராத இந் நிலவுலக அரசுகளிலெல்லாம், எவ்விதச் சமுதாயப்பண்பும், நீதியும் இருக்க முடியாது' என்பதும் ஆம். நீதி இல்லாத நாட்டுக்கும், கள்வர் கூட்டத்துக்கும் எவ்வித வேறுபாடும் இல்லை.

(j) **அரசாங்கம்**: மக்கள் செய்த தீவினைகளே அரசாங்கத்தின் தோற்றத்துக்குக் காரணம் ஆகும். மேலும், அரசாங்கம் என்பது மக்களுடைய தீவினைக்கு ஏற்ற ஒரு மருந்தாக, அல்லது பரிகாரமாக இறைவனால் நிறுவப்பட்ட அமைப்பாகவும் இருக்கிறது. முதலில் மனிதனுடைய இயல்பான சூழ்நிலையில் அரசாங்கம் என்பது தேவைப்படவில்லை. ஏனெனில், அந்தச் சூழ்நிலையில் எல்லா மக்களும் கபடு, வஞ்சகம், தன்னலம் முதலிய குறைபாடுகள் இன்றி இருந்தனர். எப்பொழுது மக்கள் தீயபண்புகளை வளர்க்கத் தொடங்கினார்களோ, அப்பொழுதே அரசாங்க அதிகாரமும் இன்றியமையாததாயிற்று.

பிரிவு 7 : செயின்ட் கிரிகரி (அல்லது போப் ஏழாம் கிரிகரி)

அகஸ்டினுக்கு இருநூறுண்டுகளுக்குப்பின் வாழ்ந்த போப் ஏழாம் கிரிகரி, அகஸ்டினின் போக்கை ஒட்டியே கிறிஸ்தவத் திருச்சபையின் உயர்வையும், கிறிஸ்தவக் குருமாரின் தலைமையையும், ஆன்மிக வாழ்வின் உயர்வையும் வலியுறுத்தி எழுதினர். அவர் தம் முன்னேர் எழுதிய நூல்களுக்கு விளக்கங்கள் கொடுத்தும், அற்புதங்களை விளக்கியும், (miracles) கிறிஸ்தவத் திருச்சபையின் செல்வாக்கை உயர்த்தினர். அவர் கி.பி. 1073 ஆம் ஆண்டிலிருந்து கி.பி. 1085ஆம் ஆண்டுவரை போப் ஆக இருந்தார். அவர் தாம் எழுதியுள்ள **டிக்டேட்டஸ்** (Dictatus) என்ற நூலில் போப்புகளுக்கு உரியனவாகக் குறிப்பிடும் சில அதிகாரங்களை இங்குக் குறிப்பிடலாம் :

1. போப்புக்கு மற்றப் பிஷப்புகளையெல்லாம் பதவிகளில் அமர்த்தவும், நீக்கவும் அதிகாரம் உண்டு.

2. பேரரசர்களைப் பதவியிலிருந்து நீக்கவும், ஒரு நீதியற்ற ஆட்சியாளருக்குக் கீழ்ப்படியவேண்டிய கடமையினின்றும் அவருடைய குடிமக்களுக்கு விடுதலையளிக்கவும், போப்புக்கு அதிகாரங்கள் உண்டு.

3. போப் விடுக்கும் ஆணைகள் எந்த அதிகாரியாலும் தள்ளுபடி செய்யக்கூடியவை அல்ல; ஆனால் இந் நிலவுலக அரசுகளின் ஆணைகளையெல்லாம், தள்ளுபடி செய்யப் போப்புக்கு அதிகாரம் உண்டு. போப்பினுடைய செயல்கள் நியாயமானவையா என்று சீர்தூக்கிப் பார்த்துத் தீர்ப்புக்கூற எவராலும் இயலாது.

4. எந்த அரசருடைய செயலுக்கும் எதிராக எவரேனும், போப்பினிடம் முறையிட்டுக்கொண்டால், அவ்வாறு முறையிடுபவரை எவரும் கண்டிக்கவோ, தடுக்கவோ கூடாது.

5. மேலும் போப்பைத் தலைமையாகக்கொண்டு இவ்வுலகில் செயல்படுகிற கிறிஸ்தவத் திருச்சபை ஒருபோதும் குற்றம் செய்யாத நிறுவனம் (infallible) ஆகும். கிறிஸ்தவத் திருச்சபை ஒருபோதும் தவறு செய்ததில்லை; அது தவறு செய்யவும் மாட்டாது.

6. தெய்விகக் காரியங்களைச் சரிவர மதிக்காதவர்களால் அரசியலதிகாரங்களைச் சரிவரக் கையாள இயலாது.

கிரிகரி, கிறிஸ்தவத் திருச்சபையின் அலுவல்கள் பணத்துக்காக விற்கப்படுவதைப் (Simony) பிரெஞ்சு அரசர் தடுத்தல்வேண்டும் என்றும், அவ்வாறு செய்யாவிட்டால் அவரைச் சமுதாயத்தினின்று நீக்கிவிடுவதாகவும் அச்சுறுத்தினர். போப்பின் அதிகாரமும், அரசரின் அதிகாரமும் இறைவனுல் படைக்கப்பட்டவை என்றும், போப்பின் அதிகாரம் சூரியனைப்போலப் பெரியது என்றும், அரசரின் அதிகாரம் சந்திரனைப்போல் சிறியது என்றும், எனவே அரசர் போப்புக்குப் பொறுப்பானவர் என்றும் கிரிகரி, இங்கிலாந்தின் அரசர் முதலாம் வில்லியத்திடம் கூறினர். ஆனல் வில்லியம் தாம் ஆளும் இங்கிலாந்துநாட்டைப் போப்பினுல் தமக்கு அளிக்கப்பட்ட மானியமாகக் கருதாமல், இங்கிலாந்தின் திருச்சபைமீது போப் மட்டற்ற அதிகாரங்களைச் செலுத்தாதபடி, சில வரம்புகளை விதித்தார். அவற்றின்படி, (1) இங்கிலாந்தின் திருச்சபையினர் அரசருடைய ஒப்புதல் இல்லாமல் எந்தப் போப்பையும் ஏற்றுக்கொள்ளக் கூடாது; (2) அரசருடைய ஒப்புதல் இல்லாமல் இங்கிலாந்தின் திருச்சபையிலிருந்து போப்புக்குக் கடிதங்கள் அனுப்பப்படுவதோ, போப்பின் கடிதங்கள் இங்கிலாந்தின் திருச்சபையால் ஏற்றுக் கொள்ளப்படுவதோ கூடா; (3) அரசருடைய ஒப்புதல் இல்லாமல் திருச்சபைக் குருமார் திருச்சபைச் சட்டங்களையோ, விதிகளையோ செய்தல் கூடாது; (4) அரசருடைய உடன்பாடு இல்லாமல் அவருக்குக் கீழ்ப்பட்ட நிலமானியப் பிரபுக்களைப் போப் சமயநீக்கம் செய்வதோ (excommunicate), அதுபோன்ற நடவடிக்கைகளை எடுப்பதோ கூடாது.

கிரிகரி வகுத்த கோட்பாடுகள் சமயநிறுவனம் அரசாங்க நிறுவனத்தைவிட உயர்ந்தது என்பதை வலியுறுத்திற்று. இவருடைய காலத்தில்தான் போப்புகளுக்கும், பேரரசர்களுக்குமிடையே 'எவர் உயர்ந்தவர்?' என்ற கேள்வியின்மீது போராட்டம் தொடங்கிற்று. இதிலடங்கியுள்ள கோட்பாடுகளை அடுத்துக் காணலாம்.

இயல் பதினொன்று

சமய நிறுவன ஆதிக்க காலத்தில் தோன்றிய கோட்பாடுகள்

பிரிவு 1: பேரரசர்களுடைய அரசியல் அதிகாரத்துக்கும் போப்புகளுடைய சமய அதிகாரத்துக்கும் இடையே எழுந்த போராட்டம்

போப்புகளுக்கும், பேரரசர்களுக்குமிடையே நடைபெற்ற போராட்டத்தின் சுருக்கமான வரலாற்றைக் காண்போம். பேரரசர் நான்காம் ஹென்றி (இவர் ஜெர்மானிய ஹோஹன்ஸ்டாபன் குடும்பத்தவர்), உலகியலில் உயர்தர அதிகாரமும், போப் ஏழாம் கிரிகரி சமயத்துறையில் உயர்தர அதிகாரமும் உடையவராகக் கருதப் பட்டாலும், இருவகை அதிகாரங்களுக்குமிடையே உள்ள வரம்பை வரையறைசெய்வதுதான் கடினமான பிரச்சினையாகவும், போராட்டத்துக்குக் காரணமாகவும் இருந்தது. நிலமானியமுறையில் திருச்சபையின் பிஷப்புகள், தங்களுடைய சமயத்துறை அலுவல்களோடு அரசர், பேரரசர் ஆகியோரின் அரசியல் அலுவலராகவும், அமைச்சர்களாகவும் பணிசெய்தனர். புதிதாக அமர்த்தப்படும் பிஷப்புகளுக்கு அரசர்கள், பிஷப் அலுவலுக்குரிய அதிகாரச் சின்னங்களாக மோதிரம், கைத்தடி முதலியவைகளை வழங்கினர் (**Investiture**). உலகியல்துறை சார்ந்தவர், துறவி அலுவலருக்குப் பதவிச்சின்னங்களை அளித்தலினால் (lay investiture), புதிதாகப் பதவி ஏற்பவர் அரசருக்கே முதல் மரியாதை செலுத்தவேண்டியவராகிறார். ஆகையால், கி.பி. 1075ஆம் ஆண்டில் போப் கிரிகரி ஓர் ஆணையின் மூலமாகச் சமயத்துறை அலுவலருக்குப் பதவிச் சின்னங்களை வழங்கும் எந்த உலகியல் சார்ந்த அரசரும் பேரரசரும் **சமயநீக்கம்** **excommunication)** செய்யப்படுவாரென்று கூறினர். இதனைப் பேரரசர் நான்காம் ஹென்றி எதிர்த்து, போப்பை வசைமொழி

கூற, போப் ஹென்றியைச் சமயநீக்கம் செய்து, அவருக்குக் கீழ்ப் படியவேண்டிய கடமையினின்றும் அவருடைய குடிகளை விடுவிக்க, ஹென்றிக்கெதிராக நிலமானியப் பிரபுக்கள் கலகம்செய் தனர். ஹென்றி, போப்புக்கு அடிபணிந்து, 1077-ல் கனோசா வில் வெளிப்படையாகப் போப்பிடம் வருத்தம் தெரிவித்து மன்னிப்புப்பெற்றார். போப் அவரை மீண்டும் கிறிஸ்தவநெறிக்கு வரவழைத்தார். ஆயினும், ஹென்றி தமது நிலைமையை ஜெர்மனி யில் வலுவாக்கிக்கொண்டு 1084-ல் ரோமைத் தாக்க, போப் நார் மானியரை உதவிக்கு அழைத்தார். அடுத்து இருவரும் இறந்தனர். 1122-ல் செய்யப்பட்ட ஒரு தாற்காலிக உடன்பாட்டின்படி, பிஷப்புகள் திருச்சபையினரால் தேர்ந்தெடுக்கப்பட்டு, போப்பினால் பதவிச்சின்னங்கள் கொடுக்கப்படவேண்டும் என்றும், வழக்குக்கு உள்ளான தேர்தல்களைத் தீர்ப்பதற்குப் பேரரசின் அலுவலர் ஒருவர்முன் தேர்தல் நடைபெறுதல்வேண்டும் என்றும், தேர் தலுக்குப்பின் புதிதாக அலுவல் ஏற்கும் பிஷப் முதலில் பேரரச ருக்குத்தான் மரியாதை தெரிவிக்கவேண்டுமென்றும் ஏற்பாடு ஆயிற்று.

மேற்படி ஏற்பாடு பயனளிக்கவில்லை; போராட்டத்தின் இரண் டாவது கட்டத்தில் ஒருபுறம் போப்புகளான காலிக்ஸ்டஸ் II, ஹேட்ரியன் IV, மூன்றும் அலக்சாண்டர் ஆகியோரும், மறுபுறம் பேரரசர் முதலாம் பிரடரிக்கும் இருந்தனர். பிஷப்புகளையும், மடங்களின் தலைவர்களையும் (abbots) அரசின் பணியாள்களாக அமர்த்தப்படுவதைப் போப் எதிர்த்ததால், கல்விப்பயிற்சி பெற்ற வராக இருந்த சமய அலுவலர் அரசாங்கப்பணியில் சிறந்த தொண் டாற்ற இயலுமென்று பேரரசர் கூறினார். பேரரசு என்பது போப் பினிடமிருந்து வந்த ஒரு நன்கொடை என்று போப் கூறியபோது பேரரசர் அதை வன்மையாகக் கண்டித்தார்.

பிரடரிக் I, வாணிபத்திலும், நாகரிகத்திலும் முன்னேறிச் சுதந்திரமாக வளர்ந்துகொண்டுவந்த இத்தாலிய நகரங்களாகிய பிளாரன்ஸ், மிலான், ஜெனோவா முதலியவைகளைக் கைப்பற்றும் பொருட்டு ஆறு தடவைகள் படையெடுத்து வந்தார். போப்பின் தூண்டுதலின்பேரில் தோன்றிய லாம்பர்டுகளின் எதிர்ப்பினால் பிரடரிக் தோற்றார்; போப்பினிடம் (அலக்சாண்டர் III) அடி பணிந்து, வெனிஸ் நகரத்தில் போப்பின் மத்தியஸ்தத்துக்கு ஒப்புக் கொண்டார். லாம்பர்டு நகரங்கள் சுதந்திரமாயின.

இறுதியான மூன்றாவது கட்டத்தில் போப்பாக இருந்தவர் **மூன்றும் இன்னசென்ட்டும்**, பேரரசராக இருந்தவர் பிரடரிக் பார்ப-

ரோசா என்பவரும் ஆவர். போப்பின் அதிகாரங்களெல்லாம், இதற்கு முன்பிராத அளவுக்கு வளர்ந்ததும், ஐரோப்பாவில் உள்ள எல்லாக் கிறிஸ்தவ அரசர்களும் போப்பின் கட்டுப்பாட்டு அதிகாரத் துக்கு உட்பட்டும் இருந்தகாலமே மூன்றும் இன்னசென்ட்டின் காலம். ஆகையால், 'அவர் போப்பாக இருந்து அரசியல் ஆட்சி செய்தார்' என்றே அரசியல் கோட்பாட்டு நூலாசிரியரும், வரலாற்று சிரியரும் குறிப்பிடுகின்றனர்.[1] இவர் போப்பாக இருந்தது கி.பி. 1198ஆம் ஆண்டுக்கும், கி.பி. 1216ஆம் ஆண்டுக்கும் இடைப் பட்ட 18 ஆண்டுக்காலமாகும். போப்பின் அதிகாரங்களுக்கு ஆதரவாகப் பிரான்சிஸ்க்கன், டாமினிக்கன் துறவிகள் இயக்கங் களும், குளூனி (Cluny), சிஸ்டர்ஷியன் (Cistarcian) மடங்களும், வேலைசெய்தன. இன்னசென்ட் பேரரசரைத் தேர்ந்தெடுக்கும் அலுவல் நடைபெற்றபோது அதில் தலையிட்டு, பிரடரிக்கை ஆதரித்துப் பேரரசராக்கினர். பிரடரிக் கல்வியறிவு மிக்கவராய்ப் பல்கலைக்கழகம் நிறுவியும், கற்றோரை ஆதரித்தும் (செயின்ட் தாமஸ் அக்வினைசை ஆதரித்தார்) புகழ்பெற்றவர்; எனினும் அவருக்கும் இன்னசென்ட்டுக்கும் தகராறு தோன்றிற்று; பிரடரிக் சிசிலிநாட்டைத் தம் மகனுக்கு வழங்கிவிட்டுத் தாம் சிலுவைப் போரில் கலந்துகொள்ளுவதாக வாக்களித்திருந்தார்; ஆனல் இவற்றை மீறிச் சிலநாள் பாலஸ்டைனில் இருந்துவிட்டுப் பின்னர் சிலுவைப்போரில் கலந்துகொள்ளாமல் திரும்பினர். போப் அவரைச் சமயநீக்கம் செய்துவிட்டார். பின்னர்ப் பாலஸ்டைனில் பல ஆண்டுகள் தங்கிவிட்டுத் திரும்பிவந்தபோது, புதிய போப் ஒருவர் அவருக்கெதிராகச் சிலுவைப்போர் தொடங்கினர். பிரடரிக் தோற் கடிக்கப்பட்டுப் பல சிறுமைகளுக்கு உள்ளாகி 1250-ல் இறந்தார். அவருடைய வழித்தோன்றலான கான்ராடினே என்பவருக்கெதி ராகப் போப் பிரெஞ்சு அரசருடன் சேர்ந்துகொண்டு பேரரசரைத் தோற்கடித்துக் கொன்றார். இவ்வாறு ஹோஹன்ஸ்டாபன் அரசக் குடும்பம் அழிந்தது; போப் பிரெஞ்சு அரசருடைய உதவியின் மூலமாகப் போராட்டத்தில் வெற்றிபெற்றபோதிலும், பின்னர் பிரெஞ்சு அரசர்களின் செயல்களினலேயே அவர் வலுவும், மதிப்பும் இழந்தார்.

பிரிவு 2: போப்-பேரரசர் போராட்டத்தில் காணப்பட்ட சில பிரச்சினைகள்

மேலே கூறப்பட்ட போப்-பேரரசர் போராட்டங்களைப்பற்றிய வரலாற்றை ஆயும்போது, இருசாராருக்குமிடையே சில பிரச்சினை

[1] W. A. Dunning – Political Theory.

கள் இருந்தன என்று தெரிகிறது. எல்லாப் பிரச்சினைகளுக்கும் அடிப்படையான கேள்வியாக இருந்தது, 'போப்புகள் செலுத்திய ஆன்மிக அதிகாரத்துக்கும் (Spiritual power), பேரரசர்கள் செலுத்திய அரசியல் அல்லது உலகியல் அதிகாரத்துக்கும் (Political or secular authority) இடையே உள்ள தொடர்பு அல்லது வரம்பு என்ன?' என்பதே ஆகும்.

இக் கேள்வியை ஆதாரமாகக்கொண்டு வேறுபல பிரச்சினைகள் தோன்றின. கிறிஸ்தவ சமயத்தினுடைய தொடக்க வரலாற்றில் ரோமில் இருந்த பிஷப்புக்கு, எவரையும் சமயநீக்கம் செய்யும் அதிகாரம் இல்லை; மிலானின் பிஷப்பாக இருந்த அம்ப்ரோஸ், ஒழுக்கவிதிகளுக்கு மாறுகக் குற்றங்கள் செய்த பேரரசர் தியோடோஷியசுக்குக் கிறிஸ்தவ சமயச்சடங்குகளை எந்தக் கிறிஸ்தவக் குருவும் செய்துகொடுக்கக்கூடாது என்று ஆணை பிறப்பித்தார். இதிலிருந்து சமயநீக்கம் செய்தல் என்ற அதிகாரமானது அடுத்த நூற்றுண்டுக் காலத்தில் திருச்சபையின் உயர் அலுவலர்களால் கையாளப்படலாயிற்று. முதலில் இந்த அதிகாரம் திருச்சபை அலுவலர்களுக்குள்ளேயே கையாளப்பட்டது; போப்பினிடம் சமய அதிகாரங்கள் குவிக்கப்பட்ட உடனே, இந்த அதிகாரம், சமயம் அல்லாத உலகியல்துறைசார்ந்த கேள்விகளிலும் கையாளப்படும் அளவுக்கு வளர்ந்தது.

சமயநீக்கம் செய்தல் என்ற அதிகாரத்திலிருந்து, வேருெரு அதிகாரக் கோட்பாடும் தோன்றிற்று; சமயநீக்கத் தண்டனை பெற்ற அரசர் தம் குடிகளுடைய மரியாதைக்கும், மற்றக் கடமைகளுக்கும் உரிமை உடையவர் அல்லர் என்றும், எனவே அத் தகைய அரசர் தொடர்ந்து ஆளுவதற்கு உரியவர் அல்லர் என்றும் கோட்பாடுகள் வளர்ந்தன. எனவே சமயநீக்கம் செய்யப்பட்ட அரசருக்குக் கீழ்ப்படியவேண்டிய கடமையினின்றும் அவருடைய குடிமக்களுக்கு விடுதலை அளிக்கவும், அத்தகைய அரசருக்கு எதிராகக் குடிகளைக் கலகம்செய்யுமாறு குடிகளுக்கு ஆணையிடவும் போப்புக்கு அதிகாரங்கள் உண்டு என்றும் கோட்பாடுகள் தோன்றின.

இதற்குப் பின்னர் அரசருடைய அதிகாரத்திற்கு மேலான அதிகாரங்களைப் போப் பெற்றுள்ளார் என்ற கோட்பாடு தோன்றிற்று. 1075ஆம் ஆண்டில் போப் ஆக இருந்த ஏழாம் கிரிகரி என்பவர் (ஹில்ட பிராண்டு எனப்பட்டவர்), திருச்சபையில் நல்ல சீர் திருத்தங்களை நிறைவேற்றும் நோக்கத்துடன் தம் திட்டங்களை எதிர்த்த பேரரசர் நான்காம் ஹென்றியைச் சமயநீக்கம் செய்தார்.

பேரரசருக்கே மற்றெல்லா உலகியல் அரசர்களைவிட உயர்வான அதிகாரம் இருந்ததாகையால், பேரரசரைத் தமக்குக் கீழ்ப் படியும்படி செய்தால், போப்பின் தலைமை அதிகாரம் வலுவடையக் கூடும் என்று கிரிகரி எண்ணினர். இதனுல்தான் பதினென்ருவது பன்னிரண்டாவது நூற்ருண்டுகளிலே உலகியல் அதிகாரத்திற்கும், ஆன்மிகத்துறை அதிகாரத்திற்கும் இடையே தோன்றிய போராட்டமானது முறையே போப்பின் பதவிக்கும் பேரரசரின் பதவிக்கும் இடையே தோன்றிய போராட்டமாக அமைந்தது.

போப் பேரரசரைச் சமயநீக்கம் செய்ததும், அவருக்குக் கீழ்ப்படியும் கடமையிலிருந்து குடிமக்களை விடுவித்து ஆணைபிறப்பித்ததும் போப்பின் தலைமை அதிகாரக் கோட்பாட்டை எடுத்துக் காட்டும் நிகழ்ச்சிகளாகும்.

கி.பி. 1122ஆம் ஆண்டில் பதவிச் சின்னங்களை வழங்குவது பற்றி ஒரு தாற்காலிக ஒப்பந்தம் ஏற்பட்டபோதிலும், போப், பேரரசர் ஆகிய இருவருள் யார் உயர்ந்த அதிகாரி என்ற கேள்வி தீர்க்கப்படாமல்போகவே, போராட்டம் தொடர்ந்து நடந்தது. போப் ஏழாவது கிரிகரியும், அவருக்குப்பின் வந்தவர்களும், ஒழுக்க விதிகளுக்குப் புறம்பான செயல்களைச் செய்த அரசர்களைத் தண்டிப்பதற்குப் போப்புக்கு அதிகாரம் உண்டு என்ற கோட்பாட்டை வெகுதுணிச்சலுடன் கையாண்டனர். இதற்கு வேருெரு நிகழ்ச்சியும் துணைசெய்தது; பாலஸ்டைனைக் கைப்பற்றிய துருக்கிய முஸ்லிம்களுக்கும், ஐரோப்பியக் கிறிஸ்தவ அரசர்களுக்கும் இடையே கி.பி. 1096ஆம் ஆண்டிற்கும் கி.பி. 1291ஆம் ஆண்டிற்கும் இடையே நடைபெற்ற சிலுவைப்போர்கள் (Crusades), பன்னிரண்டாம் நூற்ருண்டில் போப்பின் அதிகாரம், வரலாற்றிலே அதுவரை கண்டிராத அளவு உச்சநிலைக்கு வளர்வதற்கு ஏற்ற சூழ்நிலைகளை உண்டாக்கின.

போப்பின் அதிகார வளர்ச்சிக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக இருப்பது கி.பி. 1198முதல் கி.பி. 1216ஆம் ஆண்டு முடிய போப்பாக இருந்த மூன்ரும் இன்னசென்ட் என்பவருடைய ஆட்சிக் காலம் என்று முன்னரே குறிப்பிட்டோம். இவர் செய்த செயல்கள் ஐரோப்பிய அரசியலில் போப்புக்கு இருந்த உயரிய நிலையை எடுத்துக்காட்டின. அவை பின்வருமாறு:

(1) பேரரசர் பட்டத்திற்கு ஏதேனும் வழக்குகள் தோன்றினுல் அவற்றில் எவருக்குப் பேரரசர் பட்டம் உரியது என்று முடிவாகத் தீர்ப்புக்கூறும் அதிகாரத்தை இவர் கோரினர்; இவ்வதிகாரத்தை

இவர் கையாண்டதன்விளைவாக முறையே பிலிப், நான்காம் ஒட்டோ, இரண்டாம் பிரடரிக் முதலியோர் பேரரசர் பட்டத்தைப் பெற்றனர்.

(2) பிரெஞ்சு அரசர் பிலிப் அகஸ்ட்டஸ் தம் மனைவியைத் தள்ளிவைத்துவிட்டு, வேறு ஒருத்தியைச் சேர்த்துக்கொள்ளவும், போப் மூன்றும் இன்னசென்ட் பிரெஞ்சு நாடு முழுவதையும் சமய விலக்கு ஆணையின்கீழ்வைத்து (interdict), பிலிப் அரசர் தம் மனைவியைத் திரும்ப ஏற்றுக்கொள்ளும்படி அவரைக் கட்டாயப் படுத்தினர்.

(3) இங்கிலாந்தின் அரசர் ஜான், கிறிஸ்தவத் திருச்சபையினோடு மாறுபாடுகொள்ள, போப் இன்னசென்ட் தமது சமயநீக்க ஆணையின்மூலமாக (ex communication) ஜானைத் தம் நில மானியக்கீழ் ஆளாகப் (Feudal vassal) பணியவைத்து இங்கிலாந்து நாட்டையும், போப்பினால் அரசருக்கு அளிக்கப்பட்ட ஒரு நில மானியமாக (Fief) மாற்றினர்.

(4) ஸ்பெயின், போர்ச்சுக்கல் ஆகிய ஒவ்வொன்றிலும் ஓர் ஆட்சியின்மூலம் இணைப்பு ஏற்படாமல், ஒவ்வொன்றிலும் பல சுதந்திரக் கிறிஸ்தவ அரசர்கள் ஆண்டுவந்தனர். அவர்கள் அங்கு வாழ்ந்த மூர்கள் என்ற (Moors) முஸ்லீம்களோடு போரிட்டு அவர்களை விலக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்தனர். எனவே அவர்கள் போப்பின் அதிகாரங்களுக்கு மீறிப்போக இயலாமல், அவருக்குக் கட்டுப்பட்டிருந்தனர். அவர்களுடைய நாடுகளை எல்லாம் தம்மைச் சார்ந்த நாடுகளாகவே போப்புகள் கருதி நடத்திவந்தனர். இவ்விரு நாடுகளும் முன்பு கிறிஸ்தவர் அல்லாத மக்களிடமிருந்து கைப் பற்றப்பட்டவை ஆகையால், அவற்றிற்கெல்லாம் மேலதிகாரி போப் என்றும் கூறி ஒரு கோட்பாடு வகுக்கப்பட்டது.

> ‘ சுருங்கச்சொல்லில், கிறிஸ்தவ உலகம் முழுவதிலும் ரோமானியப் போப்பின் உயர்தர ஆன்மிக அதிகாரமானது, ஓரளவிலேனும் உயர்தர அரசியல் அதிகாரமாகவே ஒப்புக்கொள்ளப்பட்டிருந்தது.’ [1]

போப் மூன்றும் இன்னசென்ட்டின் ஆட்சிக்குப் பிற்பட்ட காலத்தில் பல மாறுதல்கள் ஏற்பட்டன. போப்புகளை எதிர்த்த ஜெர்மானிய ஹோஹன்ஸ்டாபன் அரசக் குடும்பம் 1254ஆம்

[1] W. A. Dunning, A History of Political Theories.

ஆண்டில் மறைந்துவிடவும், போப்பின் தலைமை அதிகாரக் கோட்பாடு பேரரசரின் எதிர்ப்புக்கு இடம் இல்லாமல் நிலைபெற்றது. புனித ரோமானியப் பேரரசு மறைந்துபோயிற்று. புனித ரோமானியப் பேரரசர் என்ற பட்டம்மட்டும் இருந்தது; அந்தப் பட்டத்திற்குமட்டும் மதிப்புக்கொடுக்கப்பட்டது. மாட்சிமிக்க பேரரசர் முதலாம் ஓட்டோ கி.பி. 962ஆம் ஆண்டில் உருவாக்கிய புனித ரோமானியப் பேரரசில் ஜெர்மனி வெளிப்பார்வைக்குத்தான் ஒரே நாடாகத் தோன்றிற்றே தவிர, அதில் பல சுதந்திர அரசர்கள் தத்தம் நாடுகளில் ஆட்சிசெய்துவந்தனர்.

இதேபோல இத்தாலியும் பெயரளவில்தான் புனித ரோமானியப் பேரரசருக்கு உட்பட்டிருந்ததே தவிர, அது பல சுதந்திரக் குடியரசு நகரங்களும், (Free City Republics) சிறிய அரசுகளுமாகப் பிரிவுபட்டு இருந்தது. அதில் போப்பை ஆதரித்த கட்சியினராகிய **கெல்ப் (Guelphs)** எனப்பட்டோரும், பேரரசரை ஆதரித்த கட்சியினராகிய **கிபல்லின்ஸ் (Ghibellines)** என்பவரும் அடிக்கடி ஒருவரோடு ஒருவர் சண்டையிட்டுக்கொண்டனர். போப் எட்டாம் போனிபேஸ் (Boniface VIII) என்பவருக்கும், பிரெஞ்சு அரசர் பிலிப் என்பவருக்கும் (Philip the Fair) போராட்டம் தொடங்கிற்று. இதன்விளைவாகப் போப்பின் அதிகாரம் வீழ்ந்தது. இதுவரை போப்புகளுடைய அதிகாரம் உலகியலில் வளர்ந்ததற்குக் காரணம், படைவலிமை எதுவும் இல்லாமல், போப் தமது உயர்தர அதிகாரத்தைக் கையாளுவதற்கு நிலமானியப் பிரபுக்களைவிட ஏற்ற நிலையில் இருந்ததே ஆகும். பல நிலமானியப் பிரபுக்கள் தங்களுடைய நிலமானிய மேல்ஆட்கள் ஆகிய (Feudal overlords) அரசர்களுக்கு எதிராகக் கலகம்செய்யும் இயல்போடு இருந்தனர். ஆகையால், அவ்வரசர்கள்மீது அதிகாரம் செலுத்துவது போப்புகளுக்கு எளிதாக இருந்தது.

பிரான்ஸ் நாட்டில், பதின்மூன்றும் நூற்றாண்டில், இந்த நிலைமை மாறிற்று; பிரெஞ்சு அரசர் ஒன்பதாம் லூயி என்பவர் தமது அதிகாரத்தைக் கையாண்டு தம் நாட்டிலுள்ள எல்லா நிலமானியப் பிரபுக்களையும் தமது கட்டுப்பாட்டில் கொண்டுவந்து அடக்கிவிட்டார். ஆகையால் போப் போனிபேஸ், தனது ஒப்புதலின்பேரில் தான் பிரெஞ்சுத் திருச்சபையின் சொத்துகளின்மீது பிரெஞ்சு அரசர் வரிவிதிக்கவேண்டுமென்று கூறியபோது, அவரைப் பிரெஞ்சு அரசர் பிலிப், பிரெஞ்சுத் திருச்சபையின் ஆதரவோடும், தம் குடிகளின் ஆதரவோடும் எதிர்த்தார். பிலிப் போப்பின் நகரத்தின் மீதே தாக்குதல் நடத்தி, அவரைச் சிறைசெய்து, தென் பிரான்சில் அவிக்நோன் என்ற இடத்தில், பிரெஞ்சு அரசாங்கத்தின்கீழ்

இருக்குமாறு வைத்தார். இதுவே 'பாபிலோனியச் சிறைவாசம்' (Babylonyish captivity) எனப்படும்.

கி.பி. 1305ஆம் ஆண்டுமுதல், கி.பி. 1377ஆம் ஆண்டுவரை போப்புகள் ரோம் நகரத்தைவிட்டு, நீங்கிப் பிரெஞ்சு அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் அவிக்நோனில் இருந்தனர். இதனால் அவர்களுடைய அதிகாரமும் செல்வாக்கும் குறைந்தன. மேலும் கி.பி. 1378ஆம் ஆண்டுக்கும் கி.பி. 1415ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில், போப்பின் பதவிக்குப் பலர் போட்டியிடவே, ஒன்றுக்கும் மேற்பட்ட போப்புகள் தேர்ந்தெடுக்கப்பட்டுக் கிறிஸ்தவத் திருச்சபையிலேயே பெரும்பிளவு (The Great Schism) ஏற்பட்டது. இதனாலும் போப்பினுடைய அதிகாரமும், செல்வாக்கும் மேலும் குறைந்தன. கி.பி. 1415ஆம் ஆண்டிற்குப் பின்னர்க் கிறிஸ்தவத் திருச்சபையில் மீண்டும் ஒற்றுமையும் இணைப்பும் ஏற்படுத்தப்பட்டபோதிலும்கூட, போப்பினுடைய பழைய சுதந்திரநிலை அதற்கு ஏற்படவில்லை. நிலமானியச் சமுதாய அமைப்பு மறைந்துகொண்டுவந்த காரணத்தால் போப் அரசர்களின்மீது செலுத்திவந்த அதிகாரம் மறைந்தது. ஜெர்மனியிலும், இத்தாலியிலும்மட்டுமே ரோமானியக் கிறிஸ்தவத் திருச்சபைக்கு மிகச்சிறு அளவில் அரசியல் செல்வாக்கு இருந்தது. தேசிய அரசுகளாக மாறிக்கொண்டு வந்த பிரான்ஸ், இங்கிலாந்து, ஸ்பெயின் முதலிய நாடுகளில் திருச்சபையின் அரசியல் அதிகாரமானது அரசருடைய அதிகாரத்திற்கு உட்பட்டதாக ஆயிற்று.

பிரிவு 3: இருவகை அதிகாரக் கோட்பாடும் குருமார் அதிகாரமே உயர்ந்தது என்ற கோட்பாடும்

சமய நிறுவனத்திற்கும், அரசியல் நிறுவனத்திற்கும், இடையே உள்ள தொடர்பு என்ன என்ற பிரச்சினையை மையமாக வைத்தே கி.பி. பத்தாம் நூற்றாண்டிலிருந்து பதினான்காம் நூற்றாண்டுவரையில் அரசியல் கோட்பாடுகள் எழுந்தன. கி.பி. 9ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 13ஆம் நூற்றாண்டுவரையுள்ள காலத்தில் உலக அரசியலில் சமய நிறுவனத்தின் தலைமையையும் போப் நிறுனத்தின் தலைமையையும் ஆதரிக்கும் கோட்பாடுகள் எழுந்தன. போப்பின் தலைமையை ஆதரித்த கோட்பாடுகளை எழுதியவர்கள் லியான்சின் பிஷப்பான அகோபார்ட் என்பவரும், ரீம்ஸ் நகரத்தின் ஆர்ச் பிஷப்பான ஷிங்கமார்க் என்பவரும், போப் முதலாம் நிக்கலாஷ், போப் ஏழாம் கிரிகரி ஆகியோர் ஆவர்.

வெர்டன் நகரத்தின் பிஷப்பான தியோடோரிக்கும், நாம் பர்க்கின் பிஷப்பான வால்ட்ராமும் பேரரசரின் தலைமையை ஆதரித்து அரசியல் கோட்பாட்டை எழுதினர். 12ஆம் நூற்ருண்டில் செயின்ட் பெர்னுட், சாலிஸ்பரியின் ஜான், கிரேஷியன் (Gratiun) என்பவரும் கிறிஸ்தவத் திருச்சபையின் படிப்படியான அமைப்புமுறையை ஒரு கோட்பாடாக வகுத்தனர். பேரரசர் பிரடரிக் பார்பரோசாவும், சிவில்சட்ட அறிஞர்களும், பேரரசருக்கு ஆதரவான கோட்பாட்டை வகுத்தனர். இருதரப்பினரும் தங்களுடைய கோட்பாடுகளுக்கு ஆதரவாக, பைபிளின் பழைய ஏற்பாட்டின் வரலாற்றுப் பகுதியிலிருந்து மேற்கோள்கள் காட்ட முயன்றனர். பழைய ஏற்பாட்டில் கூறப்பட்ட, சமயச்சார்புள்ள இஸ்ரேல் நாட்டின் இயல்புகள் இடைக்கால அரசியல் கோட்பாட்டை உருவாக்கின. பைபிளின் காலத்து இஸ்ரேலிய அரசில், நிறுவனங்கள் எல்லாம் சமயநெறியையே மேற்கொண்டு செயல் பட்டன. கடவுளினுடைய தீர்ப்பின் நேர்வடிவமாகவே ஆட்சியின் சட்டங்களும், நிறுவனங்களும் கருதப்பட்டன.

அந் நாட்டில் குருமார்களும், நீதிபதிகளும், தீர்க்கதரிசிகளும் கடவுளின் ஆணைகளுக்குட்பட்டே ஆட்சிசெய்தனர். பண்டைய யூதர்களுடைய சமயக் குருமார்கள், தீர்க்கதரிசிகள் ஆகியோர் அமைக்கப்பட்டிருந்தவகையை ஒட்டியே, கிறிஸ்தவத் திருச்சபையிலும் குருமார்முறை தோன்றிற்று. இஸ்ரேலிலும், ஜுடா நாட்டிலும் குருமார்களுக்கும், அரசர்களுக்கும் இடையே இருந்த உறவுகள் கடவுளால் அமைக்கப்பட்டன என்றும், அவையே எப்போதும் இருக்கவேண்டியவை என்றும் யாவராலும் ஒப்புக் கொள்ளப்பட்டன. எனவே போப்புகளுக்கும், பேரரசர்களுக்கும் இடையே இடைக்காலத்தில் தோன்றிய போராட்டத்தில், கடவுள் அருள் அரசர்களுக்கு அல்லது குருமார்களுக்குச் சார்பாக இருந்ததாகக்கூறிப் பல எடுத்துக்காட்டுகள் கூறப்பட்டன. ஆயினும் பழைய வரலாறுகள் எல்லாம், அரசர்கள் தாம் குருமார்களுக்கு அடங்கியிருந்ததாகக் கூறினமையால், தெய்வீக ஆணையின்பேரில் அரசர்கள்மீது குற்றம்சாட்டுதல் எளிதாக இருந்தது.

உலகமானது அரசியல் அதிகாரம் என்ற ஒருவகை அதிகாரத்திற்கும், குருமார் அதிகாரம் என்ற வேறோர் அதிகாரத்திற்கும் ஆக இருவகை அதிகாரங்கட்கு உட்பட்டிருப்பதாக ஒரு கோட்பாடு வகுத்துக் கூறப்பட்டது. இவ்விருவகை அதிகாரக் கோட்பாட்டைப் பேரரசர் அனேஸ்ட்டேசியஸ் என்பவருக்குப் போப் ஜெலேஷியஸ் (Gelasius) என்பவர் கி.பி. 494-ல் எழுதிய கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிடுகின்ருர்:

'இந்த உலகமானது இருவகை அமைப்புகளால் ஆட்சி செய்யப்படுதற்கு உகந்ததாக இருக்கிறது. புனிதமான குருமார்களின் அதிகாரமும், அரச அதிகாரமுமே இவ்விருவகை அமைப்புகளாகும். இவற்றுள் இறைவனின் கடைசித் தீர்ப்புநாளின் போது அரசர்களுடைய செயல்களுக்கும் சேர்த்துக் குருமார்களே பொறுப்புக்கூறவேண்டிய நிலையில் இருப்பதால் குருமாரின் அதிகாரமே மற்றையதைவிட மிக முக்கியமானதாகும்.' கிரேஷியன் என்பவர் தாம் எழுதிய **டிக்ரிட்டம்** (Decretum) என்பதில் இருவகை அதிகாரக் கோட்பாட்டைப் பின்வருமாறு கூறி ஆதரிக்கின்றார் :

> 'இயேசு தாம் விரும்பி இருந்தால், கிறிஸ்தவம் அல்லாத சமயத்தைச்சேர்ந்த பேரரசர்களைப்போல், தாமே குருவாகவும், அரசராகவும் இருந்திருத்தல்கூடும்; ஆயினும் அவர் இவ்விரண்டையும் இணைக்க விரும்பவில்லை; அவருக்குப்பிறகு எந்த அரசரும் குருமாரின் அலுவலையோ, குருமார் அரசருடைய அலுவலையோ ஏற்றுக் கொள்ளவில்லை.'

இருவகை அதிகாரங்களும் வேறுபட்டு இருந்தபோதிலும், இவற்றுள் அரசியல் அதிகாரம் குருமார் அதிகாரத்திற்குத் தாழ்ந்தது என்றும், குருமார் அதிகாரத்தை அது சார்ந்திருப்பது என்றும், எனவே குருமார் அதிகாரமே உயர்ந்ததென்றும் கோட்பாடுகள் தோன்றின. இதனைக் கூறுகின்ற ஜெலேஷியஸ் கருதுவதாவது:

> 'கடவுளுக்கும் மனிதனுக்கும் இடையே நடுவராக உள்ள இயேசு கிறிஸ்து, ஒவ்வொருவருக்கும் உரிய மரியாதைகளையும், முறைகளையும் வகுத்தார்; இருவகை அதிகாரிகளின் கடமைகளில் உள்ள வேறுபாடுகளைப்பற்றி அவர் சுட்டிக்காட்டவில்லை. எனவே கிறிஸ்தவப் பேரரசர்கள் மறுமைவாழ்வில் இன்பம்பெறும்பொருட்டுக் குருமார்களின் துணையைப்பெறுதல் வேண்டும்; இதேபோல் குருமார், பேரரசுக்குரிய செயல்களை நிறைவேற்றுவதற்கு மட்டுமே பேரரசுச் சட்டங்களைக் கையாளுதல் வேண்டும்.'

மேற்படி கோட்பாட்டுக்கு எடுத்துக்காட்டுகள் பழைய ஏற்பாட்டு வரலாற்றிலிருந்து கூறப்பட்டன; மெல்கிசேடக் என்பவர் குருவாகவும், அரசராகவும்; டேவிட் என்பவர் தீர்க்கதரிசியாகவும், அரசராகவும் இருந்தனர்; இயேசு கிறிஸ்துவும் அரசர் வழியிலும், குருமார் வழியிலும் வந்தவர். போப் மூன்றும் இன்னசென்ட்

குருவைச் சூரியனாகவும், அரசனைச் சந்திரனாகவும் ஒப்பிட்டுக் கூறியதும், இவ்விருவகை அதிகாரிகளும் ஒரேவகையான தெய்விக அதிகாரத்தின் இரண்டு கூறுகள் என்பதனைக்காட்டுதற்கே ஆகும். குருவின் அதிகாரத்தை ஆன்மாவுக்கும், அரசரின் அதி காரத்தை உடலுக்கும் ஒப்புமைகூறியும் விளக்கம் கொடுத்தனர். இரண்டுக்கும் வேறுபாடு இருப்பதாகக் கருதப்பட்டாலும், இரண் டுக்குமிடையே முழு ஒற்றுமை இருப்பதுதான் தெய்வத்தால் ஏற் படுத்தப்பட்ட உறவு என்று கொள்ளப்பட்டது. இவ்வுலகத்தொடர் பான செயல்கள் எல்லாம் அரச அதிகாரத்திற்குட்பட்டவை என்றும், ஆன்மிகத்துறைபற்றிய செயல்கள் எல்லாம் குருமாரின் அதிகாரத்திற்கு உட்பட்டவை என்றும் கருதினர். ஒவ்வொரு வகை அதிகாரமும் மற்றதினின்றும் பிரித்துக்காட்டப்படுவதற் காகக் கடவுளால் வரம்புகட்டப்பட்டுள்ளது என்றும் யாவரும் கருதினர். இத்தகைய கருத்தை ஜெலேஷியசும் சுட்டிக்காட்டு கின்றார்.

ஆகையால் கோட்பாட்டின் அடிப்படையிலே நாம் இவ்விரு வகை அதிகாரங்களையும் ஆராய்ந்தால், போப்புக்கும், பேரரசர் கட்கும் போராட்டம் தோன்றுதற்கு ஆதாரம் இல்லை என்று கூற லாம். எனினும் எது ஆன்மிகத்துறைபற்றிய செயல் என்றும் (**spiritual**), எது உலகியல்துறைபற்றிய செயல் என்றும் (**secular**) தெளிவாக வரையறைசெய்வது கடினமாக இருந்தது. அரசர்கள் ஆன்மிகத் துறையில் தலையிடுவதாகத் திருச்சபையினரும், திருச் சபையினர் உலகியல் துறையில் தலையிடுவதாக அரசர்களும் குறை கூறினர். எனவே இந்த வழக்கு எந்தக் கோட்பாட்டின் அடிப் படையிலும் தீர்க்கமுடியாததாக இருந்தது.

குருமாரின் தலைமைக்குச் சார்பான கோட்பாடுநிலைபெறுவதற்கு அக்காலத்தில் நிலவிய சமுதாயநிலைகளும், கருத்துகளின் வளர்ச்சி நிலைகளும் சாதகமாக இருந்தன. இக்கோட்பாட்டின் சுருக்கமான கருத்தாவது:—

> 'ஒன்று, இருவகை அதிகாரங்களுள் உலகியல் அதிகாரத்தை விட ஆன்மிக அதிகாரத்திற்குத்தான் மிகுதியான மதிப்பு உண்டு என்பது. இரண்டாவது, உலகியல் ஆட்சியாளரின் ஒழுக்கத்தையும், அவர்களின் நோக்கங்களையும், அவர் களின் தீவினை, நல்லொழுக்கம்பற்றிய செயல்களையும் சரியானவையா என்று ஆய்வுசெய்யவும், தவறுயிருப்பின் திருத்துவதற்கும், கடவுள் கிறிஸ்தவத் திருச்சபைக்கு அதிகாரம் வழங்கி இருக்கிறார் என்பதாம்.'

இவற்றுள் முதலாவது கருத்து, வெறும் உடல் வாழ்க்கையை ஒழுங்குபடுத்துவதுமட்டும் நோக்கமாக இராமல், மக்களுடைய ஆன்மாக்களைத் தீவினையினின்றும் காப்பதுதான் முக்கியமான நோக்கம். ஆகையால், உடல் வாழ்க்கையை ஒழுங்குபடுத்தும் அரசர்களைவிட, மக்களுடைய ஆன்மாக்களைக் காப்பாற்றும் குருமார்களுக்குத்தான் கூடுதல்மதிப்பு உரியது என்ற கருத்தை ஆதாரமாக உடையது. அரசர்களின் புகழ் ஈயத்தின் ஒளிபோன்றதென்றும், பிஷப்புகளின் புகழ், பொன்னின் ஒளியைப்போன்றதென்றும் அம்ப்ரோஸ் கூறினார். இறக்கும்நிலையில் உள்ள பாவிகளின் ஆன்மாக்களை நரகதண்டனையிலிருந்துகாப்பாற்றவோ, பேய்களை விரட்டவோ அரசர்களால் இயலாதென்றும், அரசர்களும், இளவரசர்களும் பாவமன்னிப்புப் பெறுதற்குக் குருமார்களிடத்தில்தான் பணிவுடன் வருதல் வேண்டுமென்றும், போப் ஏழாம் கிரிகரி, மெட்ஸ் நாட்டின் தலைவரான ஹெர்மன் என்பவருக்குக் கூறினார். குருமார்களே இறந்தவர்களை உயிர்ப்பித்தும், நோயாளிகளைக் குணப்படுத்தியும், குருடர்களைப் பார்வைபெறும்படி செய்தும் பல அற்புதங்களைச் செய்துள்ளனர். இதனால் குருமார்களின் பெருமை அரசர்களுடைய பெருமையிலும் உயர்ந்தது எனத்தெரிகின்றது. ஆன்மா உடம்பைவிட உயர்ந்திருப்பதைப்போன்று, குரு பதவியே அரச பதவியைவிட உயர்ந்தது. குரு பதவியே அரச பதவியைவிட காலத்தால் முற்பட்டதென்பது பழைய ஏற்பாட்டு வரலாற்றிலிருந்து ஒரு சான்று காட்டப்பட்டது. அதில் கூறப்படும் ஒரு கப்பலின் தலைவரான நோவா (Noah) என்பவர், தாம் கிறிஸ்தவத் திருச்சபையினுடைய குரு பதவியைக் காட்டும் ஓர் அடையாளம் என்றும், கிறிஸ்தவக் குரு இறைவனுக்குக் காணிக்கைகொடுப்பதைப் போலப் பழங்காலத்தில் ஆபெல் (Abel) என்பவர் தம்மிடம் இருந்த சிறந்த ஆட்டை இறைவனுக்குக் காணிக்கையாகக் கொடுத்து அவருடைய அருளைப்பெற்றார் என்றும் கூறப்பட்டன.

குருமாருக்கு அரசருடைய நோக்கங்களையும் செயல்களையும் ஆய்வுசெய்து சீர்த்திருத்தம் செய்வதற்கு உரிமை உண்டு என்ற இரண்டாவது கருத்து வளர்ந்து, உறுதியடைவதற்குக் காரணமாய் இருந்தது எதுவென்றால், திருச்சபையின் ஆன்மிகச் செயல்களிலும் நிர்வாகச் செயல்களிலும் அரசர்கட்கு யாதொரு தொடர்பும் இல்லையென ஒதுக்கியதேயாகும். குருமார்களின் கருத்தின்படி, உலகியல்துறையில் ஈடுபட்டுள்ள எல்லா அரசர்களும், சாதாரண மக்களைப்போலத் தீவினை செய்பவர்கள். ஆகையால், அவர்கள் குருமார்களால் குற்றம் சாட்டப்படுவதற்கும், தண்டிக்கப்படுவதற்கும், இடித்துரைக்கப்படுதற்கும் உரியவர் ஆவர்.

அரசர்களுடைய செயல்கள் எல்லாம் திருச்சபையின் தீர்ப்புக்கு அப்பாற்பட்டவை என்றும், கடவுளின் தீர்ப்புக்குட்பட்டவை என்றும், அரசர் சார்பாகக் கூறப்பட்ட வாதங்கள், கடவுள் நெறிக்கு மாறுனவை என்று ஒதுக்கப்பட்டன. நியாயமற்ற கொடுங்கோல் ஆட்சியாளர், எல்லாப் பாவிகளையும்போலக் குருமாரின் தீர்ப்புக் குரியவர் என்றும் குருமாரின் மூலமாகவே கடவுள் தீர்ப்பு அளிக் கின்றுர் என்றும் குருமாரிடத்தில் கடவுள் வீற்றிருக்கிருர் என்றும் கூறப்பட்டன. இயேசு தம் சீடர்களிடத்து,

> ' நீங்கள் எந்தச் செயல்களை எல்லாம் சரியென்று உலகில் தீர்ப்புக் கூறுகின்றீர்களோ, அவையெல்லாம் கடவுள் உலகத்தில் சரியானவை என்று ஒப்புக்கொள்ளப்படும்; எவற்றையெல்லாம் தவறுனவை எனத் தள்ளுகின்றீர்களோ அவையெல்லாம் மேலுலகத்தில் ஒப்புக்கொள்ளப்பட மாட்டா;'

என்று கூறி, அதிகாரம் வழங்கினுர். அதனுலேயே கிறிஸ்தவ மக்களிடையே ஏற்படும் வழக்குகளைத் தீர்ப்பதற்கு முடிவான அதிகாரத்தைத் திருச்சபைக்கு இயேசு வழங்கினுர் என்று கூறப் பட்டது. இதற்குச் சான்று பழைய ஏற்பாட்டு வரலாற்றிலிருந்தும் எடுத்துக்காட்டப்பட்டது.

போப் ஏழாம் கிரிகரி, இயேசு தம் சீடராகிய பீட்டரிடத்து, 'என்னை நம்பியுள்ள இம்மக்கட்கு உணவு அளித்துக் காப்பாற்று' (**Feed my sheep**) என்று விடுத்த ஆணையைச் சுட்டிக்காட்டி, இவ்வாணை உலகம் முழுவதும் குருமாருக்கு இருக்கக்கூடிய அதி காரத்தைக் குறிப்பதாகும் என்றும், இவ்வதிகாரத்திலிருந்து அரசர் களுக்குக் கூட விலக்கு இல்லை என்றும் கூறினுர். மேலும் இதையே ஆதாரமாகக்கொண்டு குருமார்களுக்கு அரசர்களின்மீது தீர்ப்புக் கூறும் அதிகாரம் உண்டு என்றும், ஐயத்திற்குள்ளான சமயவழக்கு களும், சிவில் வழக்குகளும் ஆய்வுசெய்யப்பட்டுத் தீர்ப்பதற்குப் போப்பின் நீதிமன்றத்துக்கே கொண்டுவரப்பட வேண்டுமென்றும் போப் மூன்றும் இன்னசென்ட் துணிச்சலுடன் எடுத்துரைத்தார்.

குற்றவாளியைத் தண்டிக்கும் அதிகாரத்தைப் பொறுத்தவரை யில், திருச்சபையானது தன்னுடைய ஆணைகளை மீறும் அரசர்களைச் சமயநீக்கம் செய்யவும் (**Excommunicate**), அவர்கள்மீது பழிப் புரைகூறவும் (**Anathema**) அதிகாரங்களைப் பெற்றிருந்தது. இரத்தம் சிந்துதல் முதலான கொலைத்தண்டனையை அது வழங்க அதிகாரம் பெறவில்லை யாகையால், குற்றவாளியின் ஆன்மாவுக்கே

அது மேற்படி தண்டனைகளை வழங்கிற்று. சமயநீக்கம் செய்யப் பெற்றும் பணியாத அரசர்களை அரியணையிலிருந்து நீக்குதல், அவர்களுக்குக் கீழ்ப்படிய வேண்டிய கடமையினின்றும் அவர்களு டைய குடிமக்களை விடுவித்தல் ஆகியவற்றை வழங்கவும் திருச்சபை அதிகாரம் பெற்றிருந்தது. கீழ்ப்படியவேண்டிய கடமையினின்று விடுவித்தல் என்பது அக்காலத்தில் நிலமானியச் சமுதாய அமைப்பு முறையிலிருந்து தோன்றியது; நிலமானியப்பிரபுவுக்குத் தாம் கீழ்ப் படிந்துநடப்பதாகப் பற்றுறுதியுடன் அவருடைய கீழாள் **(vassal)** அவருக்குக் **கீழ்ப்படிதல் வாக்குறுதியைக் (Oath Allegiance)** கொடுத் திருந்தார். ஆகையால் இக்கடமையினின்றும் குடிமக்களுக்கு விடுதலை அளித்துவிட்டால், பிரபு ஆதரவற்ற நிலையில் சமயநிறுவன அதிகாரிகளுக்குப் பணிந்தே ஆகவேண்டும்.

குருமார்களுக்கு இருந்த இன்னோர் அதிகாரம் என்னவெனில், தீவினைகளின் கொடிய விளைவுகளை முன்னதாக அரசர்களுக்கு அறிவிக்கும் அதிகாரமேயாகும். இதற்கும் பழைய வரலாறுகளி லிருந்து சான்றுகள் காட்டப்பட்டன. போப்பின் தலைமையை ஆதரித்தவர்கள் அவருக்குச் சார்பாகக்கூறிய இன்னொரு காரணம் 'கான்ஸ்ட்டன்டைனின் கொடை' **(Donation of Constantine)** என்பதாகும். அதாவது பேரரசர் கான்ஸ்ட்டன்டைன், தன்தலைநகரைக் கான்ஸ்ட்டான்ட்டிநோப்பிள் நகரத்திற்கு மாற்றிச் கொண்டுபோன காலத்தில், மேற்கத்திய ரோமானியப் பேரரசின் பகுதிகளில் பேரரசருக்குரிய அரசியல் அதிகாரங்களை எல்லாம், போப் சில்வெஸ்ட்டர் என்பவரிடம் வழங்கினார் என்றும், அதனால் மேற்கத்திய அரசர்களுக்கெல்லாம் மேலான பேரரசு அதிகாரங்கள் போப்பிற்கு உரியவை என்றும் கூறப்பட்டன. இதனைக் கிரேஷியன் தமது டிக்ரிட்டம் என்னும் நூலில் குறிப்பிடுகின்றார். பல ஆசிரியர்கள் இதனைக் கட்டுக்கதை என்கின்றனர்.

இடைக்காலத்தில் சமய நிறுவனத்திற்கிருந்த தலைமை அதிகாரத்தை முடிவாகச் சுருக்கி ஓர் ஆசிரியர் கூறி இருப்பதை இங்கு மேற்கோளாகக் கூறலாம்:—

> 'இடைக்காலக் கிறிஸ்தவத் திருச்சபை, கொள்கையளவில் இல்லாவிட்டாலும் நடைமுறையிலே மிக்க வலுவான ஓர் அரசியல் நிறுவனமாக இருந்தது; இந்த அரசியல் அதி காரமும், பல்வேறுவகையான சட்டக் கருத்து மாறுபாடு களின்மீதும், வழக்குகளின்மீதும் தீர்ப்பளித்தற்கு இருத்தல் வேண்டும் என்ற பொது மக்களின் உணர்ச்சியையும், வழக்கத்தையும் ஆதாரங்களாகக் கொண்டு இருந்தது;

இந்த அதிகாரம் ஆன்மிக இயல்புள்ள எல்லாச் செயல்களிலும் வேறெவருடைய தலையீடும் இல்லாமல், செலுத்தப் படக்கூடியதாக இருந்தது. மேலும் இந்த அதிகாரம் தீவினைச்செயல்கள் எல்லாற்றையும் கண்டித்துத் தண்டிக்கும் அளவுக்கு விரிவானது என்ற கோட்பாட்டை உள்ளடக்கி இருந்தது. அரசியல் அதிகாரிகளை ஆட்சியினின்றும் விலக்கிவிடும் அளவுக்கும் இவ்வதிகாரத்திற்கு விளக்கம் கொடுக்கப்பட்டது.' [1]

பிரிவு 4: அரசரின் தலைமை அதிகாரக் கோட்பாடு

போப்புக்கும், பேரரசருக்குமிடையே இடைக்காலத்தில் 'எவர் தலைமையானவர்?' என்ற பிரச்சினையின்மீது போராட்டம் நடந்த காலத்தில் போப்பின் தலைமை அதிகாரக் கோட்பாட்டைச் சிலர் எடுத்துக்கூறியதைப்போல், பேரரசின் (அல்லது) அரசரின் தலைமை அதிகாரக் கோட்பாட்டை எடுத்துவிளக்கிச் சிலர் கூறினர். இந்த வாதம், பிற்காலத்தில் கூறப்பட்ட தெய்விக அரசுரிமைக் கோட்பாடு (Divine Right Theory of Kings) என்பதனுடைய ஆதாரத்தில் அமைந்திருந்தது.

அரசர்களுடைய தலைமை அதிகாரத்திற்குச் சார்பான கோட்பாடும், குருமாருடைய தலைமை அதிகாரக் கோட்பாட்டைப் போல், இயேசுகிறிஸ்து சுட்டிக்காட்டிய இருவகை அதிகாரங்களின் பாகுபாட்டிலிருந்து வருவிக்கப்பட்டது. அவர் கூறியிருப்பதிலிருந்து அரசரின் அதிகாரமும், குருவின் அதிகாரத்தைப்போன்றே இறைவன் அருளால் தோற்றுவிக்கப்பட்டது ஆகும். ஆகையால் அரசர்கள் தங்களுடைய செயல்களுக்கு இறுதியாகக் கடவுளுக்கே பொறுப்பானவர்கள். அவர்கள் நீதியோடு ஆளுதல் வேண்டும்; திருச்சபையின் வளர்ச்சிக்கும், அதற்குப் பணிசெய்பவர்க்கும் அரசர்கள் ஆதரவும், பாதுகாப்பும் அளித்தல் வேண்டும். அவர்கள் தங்கள் கடமையினின்றும் தவறினால், அதற்காக அவர்கள் தங்கள் அரச நிலையை இழந்துவிடவேண்டுமென்றோ, ஆன்மிக வகையல்லாத தண்டனைக்கு உட்படுதல் வேண்டுமென்றோ ஆகா. அவர்களுக்கு உரிய தண்டனை இம்மைவாழ்க்கையில் அல்லாமல், மறுமை வாழ்க்கையில்தான் கொடுக்கப்படும். அரசர் நல்லவராயினும்சரி, தீயவராயினும்சரி, அவர் கடவுளின் நோக்கத்தை நிறைவேற்ற இருக்கும் கருவியே ஆவார். அரசர் செய்யும் நற்செயல்கள் கடவுளுடைய இரக்கமுடைமையைக் காட்டுகின்றன; அரசருடைய கொடிய செயல்

[1] W. A. Dunning, A History of Political Theory, page, 176

மக்களிடத்து இறைவன் கொண்டுள்ள சினத்தைக் காட்டுகிறது. ஆகையால் அரசருடைய ஆணைகளுக்குக் கட்டுப்படுதலே அனைவருடைய கடமையும் ஆகும். கொடுங்கோலாட்சியின் தீமைகளைத் தவிர்ப்பதற்கு ஒரேவழி தீவினைகளுக்கு இரங்குதலும், இறைவனிடத்து வேண்டிக்கொள்ளுதலும் ஆம்.

இந்தக் கோட்பாட்டிலிருந்து மக்கள் அரசருக்கு ஓர் இயந்திரம் போலக் கீழ்ப்படிந்துநடத்தல் வேண்டும் என்ற முடிபு கூறப்பட்டது. இதற்கு மேற்கோள்களும் காட்டப்பட்டன. செயின்ட் பால் என்பவர் கூறியதாவது:—

> ‘ உலகத்தில் உள்ள அதிகாரங்கள் கடவுளின் ஆணையால் ஏற்படுத்தப்பட்டன. எவர் உலக அரசரை எதிர்க்கிறாரோ, அவர் கடவுளின் ஆணையை எதிர்ப்பவர் ஆவார்...... அரசர் கடவுளின் ஏவலாளர் ஆவார்; தீயவை செய்தார்மீது அவர் கடவுளின் சினத்தைச் செயல்படுத்திப் பழிதீர்ப்பார். ஆகையால் நீங்கள் எல்லாரும் கடவுளின் சினத்துக்கு ஆளாகாமல் உங்களுடைய மனச்சான்றின் நலத்துக்காக அரசருக்குக் கீழ்ப்படிந்து இருத்தல் வேண்டும்.’ [1]

பீட்டர் என்ற இயேசுவின் முதற்சீடர் கூறுவதாவது:—

> ‘ இறைவன் பொருட்டாக, நீங்கள் அரசருக்கும், அவருடைய கீழ் அதிகாரிகளுக்கும் கீழ்ப்படிந்து இருங்கள். இதுவே கடவுளின் விருப்பம் ஆகும்; நன்மையைச் செய்வதன்மூலமாக, நீங்கள் அறிவிலிகளின் செயல்களைப் பயனற்றவைகளாக ஆக்க இயலும்.’

அரசர் தலைமைக் கோட்பாட்டுக்கு ஆதரவாக அமைந்த ஒரு முக்கிய நிகழ்ச்சி, பன்னிரண்டாம் நூற்றாண்டில் பொலோக்னா நகரத்தில் பேரரசர் பிரடரிக் பார்பரோசாவின் உதவியோடு சட்ட அறிஞர்கள் பேரரசர் ஜஸ்ட்டினியனின் சட்டத்தொகுப்பை ஆய்ந்து விளக்கியதே ஆகும். இந்த விளக்கத்தின் பயனாகச் சட்டம் இயற்றுவதில் அரசருக்கு உயர்தர, வரம்பில்லா அதிகாரம் உண்டு என்ற பண்டைய ரோமானியக் கோட்பாடு பரவத் தொடங்கிற்று. இந்தக் கோட்பாட்டை வலியுறுத்தவே, போப்பின் அதிகாரத்திற்கு ஒரு வரம்பு ஏற்படுத்தப்பட்டது. இந்தக் கோட்பாட்டைப் பேரரசர் ஆதரித்தார்; இதன்மூலம், தமக்குப் பண்டைய ரோமானியப் பேரரசரை ஒத்த மதிப்பைத் தேடிக் கொள்ள முயன்றார்.

[1] W. A. Dunning, A History of Political Theories. page. 178.

இந்தக் கோட்பாட்டை வலியுறுத்துவதன்மூலமாக, போப்பின் கட்சியினர் கூறிய ஒரு கருத்தை மறுத்து ஒதுக்குவதற்கு வாய்ப்பு ஏற்பட்டது; போப்பின் ஆதரவாளர்கள் கூறியதாவது: சார்லமேன் என்ற பேரரசருக்குப், பேரரசு அதிகாரத்தைப் போப் மாற்றியதனால்தான், ஜெர்மானியப் பேரரசர்களுக்கு அதிகாரம் கிடைத்தது என்பதேயாகும். ஜஸ்ட்டினியனின் சட்டத்தொகுப்பு, பண்டைய ரோமானியக் கோட்பாட்டை எடுத்துக்காட்டி, அரசருடைய அதிகாரத்திற்குச் சமயத் தலைவர்தாம் ஆதாரம் என்ற கருத்தை மறுத்தது.

உலகமெங்கிலும் ஒரே முடியாட்சி ஏற்படுவதுதான் சாதாரணமான அரசியல் அமைப்பு என்ற கருத்தையும் மேற்படி ரோமானியச் சட்டக் கோட்பாடு வலியுறுத்திற்று. அனைத்துலக முடியாட்சி அதிகாரம் சிவில் சட்டங்களின் தொகுப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்டது. அனைத்துலக முடியாட்சிக் கோட்பாடு, திருச்சபையின் அனைத்துலக அதிகாரக் கோட்பாட்டிற்கும் வழிகாட்டியாக இருந்தது. முடிவாகக்கூறினுல் சட்ட அறிஞர்கள் யாவரும், பேரரசரின் அதிகாரம் சமய நிறுவனத்தின் அதிகாரத்தினின்றும் சுதந்திரமானது, என்ற கோட்பாட்டை உறுதியாக ஆதரித்தனர் என்று தெரிகிறது.

பிரிவு 5 : செயின்ட் பெர்னுர்ட்டின் கோட்பாடுகள்

சமயநிலையத்தின் தலைமை அதிகாரக் கோட்பாடுகளை வகுத்தவர்களுள் பன்னிரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த **செயின்ட் பெர்னுர்ட்** என்ற துறவியும் (Saint Bernard), சாலிஸ்பரியைச் சேர்ந்த ஜான் என்பவரும் (John of Salisbury) முக்கியமான சிந்தனையாளர்கள் ஆவர். இருவரும் அரசியல் அதிகாரத்தைவிடச் சமய அதிகாரமே சிறந்ததெனக் கூறினுலும், இருவருக்கும் இடையே சில வேறுபாடுகளும் இருந்தன. திருச்சபையை வளர்த்த அம்ப்ரோஸ், அகஸ்டின், கிரிகரி ஆகியோரைப்போல் சீர்திருத்தங்கள் திருச்சபையில் செய்யப்படுதல் வேண்டுமென்றும், துறவறநெறிக்கும், அனுபூதி இயல்புக்கும் (Mystic Spirit) முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்றும் பெர்னுர்ட் கருதினுர். அவர் இவ்வுலக வாழ்வு பற்றிய கருத்துகளை வெறுத்தார்; உலகியல் தொடர்பான கல்வி முறையையும் அவர் ஒதுக்கினுர். தனி ஆன்மிக வாழ்வுக்குப் புறம்பான உலகியல்போக்குகள் திருச்சபையிலும், போப்பின் நிறுவனத்திலும் காணப்பட்டதால், அவற்றை அவர் கண்டித்தார். உயர்தர அதிகாரத்தைப் போப் கிரிகரி கைபாண்டதைப் பெர்னுர்ட் ஆதரித்தார். பெர்னுர்ட் ஆதரித்த கோட்பாடு 15ஆம்

நூற்றாண்டில் தோன்றிய பிராட்டஸ்டன்ட் சமயச் சீர்திருத்த இயக்கத்தைத் தடைசெய்ய இயலாமல் போய்விட்டது. செயின்ட் பெர்னார்ட் எழுதிய கோட்பாடுகள் அவர் போப் 3 ஆம் யூஜேனியஸ் என்பவருக்கு (கி.பி. 1145ஆம் ஆண்டிலிருந்து கி.பி. 1153ஆம் ஆண்டுவரையில்) எழுதிய **சிந்தனைகள்** (Reflection) என்ற நூலில் காணப்படுகின்றன.

ஆன்மிகத்துறை அல்லாத விஷயங்களிலும், ஆட்சித்துறை விஷயங்களிலும் போப்பும், திருச்சபையும் ஈடுபாடும், நாட்டமும் கொள்ளலாகா; அவற்றில் போப்பும், திருச்சபையும் தலையிட்டுத் தங்கள் ஆற்றலை வீணுக்கக் கூடாது. நடு இத்தாலியில் ரோமன் கத்தோலிக்கத் திருச்சபைக்குச் சொந்தமாக இருந்த நாடுகளை விரிவுசெய்தலும், ஆட்சிசெய்தலும், சிலுவைப்போர்களுக்கு வேண்டியவற்றை ஏற்பாடுசெய்தலும், போப்பின் நிறுவனத்தை அரசியல் செயல்கள் வளர்வதற்குரிய மையமாக ஆக்கி, அங்குச் சூழ்ச்சிகளும், பேராசைகளும் தோன்றுவதற்கு வழி ஏற்பட்டுவிட்டது. போப்பினுடைய காலமும், கருத்தும் இவ்வாறு உலகியலான செயல்களில் செலவழிக்கப்படுவது பொறுக்க முடியாத துன்பமாகும். இத்தகைய போக்கு, திருச்சபையின் வளர்ச்சியையும் இறைவனுடைய வேதச் சட்டங்களை ஆய்ந்து அறிவதையும் தடைசெய்யும். **போப்புகளும், குருமார்களும் உலகியல் அதிகாரத்தைவிட உயர்ந்த அதிகாரமாகிய ஆன்மிக அதிகாரத்தைப் பெற்றிருந்தபோதிலும்கூட, அவர்கள், அதைக் காரணமாகக் கொண்டு உலகியல் விவகாரங்களில் தங்கள் அதிகாரங்களைச் செலுத்துதல் கூடாது.**

போப், இயேசுவிற்காக உலகெங்கும் பணிசெய்யும் வேலையாளாவார்; அவருடைய அலுவல் ஒரு சமய அலுவலேதவிர, ஆட்சிசெய்யும் அரசனின் அதிகாரமன்று. எனவே போப்புக்கு ஆட்சிசெய்வதற்குரிய அரசியல் அதிகாரம் சிறிதும் கிடையாது. இயேசு ஒருவர்தாம் சமயக் குருவாகவும், ஆளும் அரசராகவும் இருத்தல் கூடும்.

போப்பினுடைய மேல்முறையீட்டு அதிகாரமானது பல தவறுகளுக்கும் இடம் கொடுக்கின்றதாகையால், அவ்வதிகாரம் கண்டிக்கப்படக்கூடியதாகும்.

இயேசு வன்செயலைக் கண்டித்துரைத்திருக்கின்ற காரணத்தால், போப் தமது ஆட்சிக்குட்பட்ட நாடுகளைப் படைவலிமையால் காக்க முயல்வது தவறாகும். ஆயினும் இயேசு, 'ஆன்மிக

அதிகாரமும், உலகியல் அதிகாரமும் திருச்சபைக்கே உரியன வாய் இருக்கட்டும்' என்று கூறி இருப்பதனல், திருச்சபையே உயர்ந்த அதிகாரமுடையதாகும்.

உலகியல் அதிகாரம் திருச்சபையின் நலனுக்காகக் கையாளப்படுதல் வேண்டும்; ஆன்மிக அதிகாரம் திருச்சபையினல் கையாளப்படவேண்டும். அதாவது, **ஆன்மிக அதிகாரத்தைச் சமயக் குருமார்கள் கையாளவேண்டும்; உலகியல் அதிகாரத்தைப் பேரரசர் ஆணையின்பேரிலும், சமயக் குருவின் ஆலோசனையின்பேரிலும் போர்வீரர்கள் கையாளுதல் வேண்டும்.**

உலகியல் விஷயங்களைச் சமயக் குருமார்களின் அலுவல்களில் சேர்க்கக்கூடாது; அவற்றை இவ்வாறு ஒதுக்குவதற்குக் காரணம், அவை சமயக் குருவின் அலுவல்வட்டத்திற்கு அப்பாற்பட்டவை என்பது அன்று; அவை எல்லாம் சமயக் குருவின் மதிப்புக்கும், தரத்திற்கும் தாழ்ந்தவை என்பதும், அவை குருமார்களைக் கெடுத்துவிடும் என்பதும்தான் காரணமாகும்.

அரசியல் அதிகாரமானது திருச்சபையை நிலைபெறும்படியாகவும், பாதுகாப்பாக வைப்பதற்குவேண்டிய எல்லாக் கீழ்த்தரக் கடமையையும் செய்வதற்கே கையாளப்படுதல் வேண்டும்.

பிரிவு 6 : சாலிஸ்பரியைச் சேர்ந்த ஜான் கூறிய கோட்பாடுகள் (John of Salisbury)

ஜான் கல்வியறிவு நிரம்பப்பெற்று, இவ்வுலக வாழ்வின்நெறியைக் கருத்திற்கொண்டவர். அபெலார்ட் (Abelard) என்ற கல்வியறிவும், திறனய்வுசெய் ஆற்றலும் நிரம்பப்பெற்ற ஆசிரியருடைய மாணக்கர்; தம் ஆசிரியரைப்போன்று அவர் பல திறப்பட்ட இலக்கியங்களை எல்லாம் பயின்று சிறந்த கல்வியாளருள் ஒருவரானர். பெர்னர்டின் போக்குக்குமாறாக, ஜான் பழங்காலத்தில் இருந்த கிறிஸ்தவநெறிக்கு முற்பட்ட சமயக் கருத்துகளையும் கையாண்டு கிறிஸ்தவ சமயநெறிக்கும், குருமாரின் தலைமை அதிகாரத்திற்கும், ஆதரவு தேடினர். இவ்வகையில் பார்க்கும்போது, அவர் பிற்காலத்தில் தோன்றிய பெரும்புலவர்களுக்கு முன்னேடியாக விளங்கினர் எனக் கூறலாம். பெர்னர்ட் ஆதரித்த கோட்பாடு பிராட்டஸ்ட்டன்ட் சமயச்சீர்திருத்த இயக்கத்தைத் தடுக்க இயலாமல்போக, ஜான் கையாண்ட ஆராய்ச்சிமுறைகளோ வருங்காலத்தில் எல்லாவிதத் தத்துவப் பயிற்சியும் வளர்வதற்கு நல்ல வழிகாட்டியாக இருந்தன.

ஜான் எழுதிய நூல் **'பாலிகிரேட்டிகஸ்'** (Polycraticus) என்பதாகும். இதில் அரசருடைய அதிகாரத்தின் இன்றியமையாமையையும், மற்றக் கூறுபாடுகளையும் அவர் விருப்பு, வெறுப்பு இன்றி ஆராய்கின்றார். பழைய சமய இலக்கியக் கருத்துகளையும், தத்துவங்களையும் அவர் மேற்கோளாகக்காட்டி, கிறிஸ்தவ சமயத்திற்கு ஆதரவு கூறுகிறார்.

வன்செயலுக்கு உரியதாக இருக்கின்ற அரசியல் அதிகாரத்தைத் திருச்சபையிடமிருந்தே அரசர் பெறுகிறார்; திருச்சபை ஆன்மிக அதிகாரத்தைத் தன்வசமே வைத்துக்கொள்ளுகிறது. மேலும், அது அரசியல் அதிகாரத்தை அரசரின் மூலமாகக் கையாளுகிறதாகையால், அரசர் குருமார்களின் ஒரு வேலையாளேயாவார். குற்றங்களுக்காகத் தண்டனை அளிப்பது என்ற செயல் குருமார்களால் செய்யக்கூடிய அளவிற்குப் புனிதமில்லாத செயல் ஆகும்; எனவே அத்தகைய செயல்களையெல்லாம் அரசர் செய்கிறார்.

அரசியல் அதிகாரமானது சில நல்ல நோக்கங்களுக்காகக் கையாளப்படுதல் வேண்டுமென்று அவர் கூறினாலும், அது அரசியலமைப்புச் சட்டத்தின்வாயிலாகக் கையாளப்பட வேண்டுமென அவர் கூறவில்லை. அரசாங்க அமைப்பு, அரசாங்கத்தின் கூறுகள், அவற்றிற்கிடையேயுள்ள தொடர்பு, அரசு, அரசாங்கங்களின் வகைகள் ஆகியவற்றைப்பற்றி அவர் கோட்பாடு எதையும் கூறவில்லை.

முடியாட்சி ஒன்றே சிறந்த ஆட்சிவகையாகும்; அதனுடைய அமைப்பும் பண்டைய ரோமானியப் பேரரசில் இருந்ததைப்போன்றும், யூத அரசர்களின் ஆட்சி அமைப்பைப்போன்றும் இருக்க வேண்டும்.

அரசர்கள் குருமார்களுக்கு ஆற்ற வேண்டிய கடமைகள் உண்டு.

அரசர் சட்டத்திற்குட்பட்டவரே யாவார்; அரசரைக் கட்டுப்படுத்தும் சட்டமானது, என்றும் நிலைத்திருக்கக் கூடிய தெய்விகத் தீர்ப்பு என்ற சட்டமாகும்.

சட்டத்தினுடைய விதி தரும நியாயம் (equity) அதாவது ஒவ்வொருவரும் தத்தமக்கு உரியவற்றைப் பெறுமாறு செய்யும் ஒரு விதியாகும். இக் கோட்பாட்டிற்கு ஆதாரம், பண்டைய ரோமானியச் சட்டமேயாகும். இந்தக் கோட்பாட்டை இன்னும் விளக்கினால்,

அதிலிருந்து, 'அரசர் தெய்விகத் தீர்ப்பின் காவலர்களாய் இருக்கின்ற குருமார்களுக்குக் கட்டுப்பட்டிருத்தல் வேண்டும்' என்ற முடிவு வருவிக்கப்படுகின்றது.

ஜான் சமய அதிகாரிகளுக்கு எதிரிகளான அரசர்களை எல்லாம் கொடுங்கோலர்கள் என்று கண்டனம் செய்யாமல், பண்டைய ரோமானிய அரசரைப்போலச் சட்டத்திற்கு ஒத்து ஆளுபவரை நல்ல அரசர் என்றும், மாறுபட்டு நடப்பவரைக் கொடுங்கோலர் என்றும் கூறினர். அதிகாரத்தைத் தவருகக் கையாளுபவர், அரசர் ஆயினும் குருமாராயினும் அவர் கொடுங் கோலரேயாவார். கொடுங்கோலர்களை நீக்குதற்காகக் கையாளப் படும்வழி சமயக் கோட்பாடுகளுக்கும் நன்னெறிக்கும் மாறு பட்டிருக்கக் கூடாது. நஞ்சூட்டுதல் கிறிஸ்தவ வேதத்தில் தடை செய்யப்பட்டுள்ளது. கொடுங்கோலரை நீக்குதற்குப் பாதுகாப்பான வழி இறைவனிடத்தில் வேண்டிக்கொள்ளுதலும், கடவுளின் சினத் திற்கு ஆளாகாமல் இருப்பதுமேயாகும். இவ்வாறு கிறிஸ்தவ சமயத்திற்கு முற்பட்ட பழைய சமயவாதிகளை ஜான் ஒப்புக் கொண்டு, கிறிஸ்தவ சமயநிலையத்தின் தலைமை அதிகாரக் கோட் பாட்டை எழுதினர்.

இயல் பன்னிரண்டு

செயின்ட் தாமஸ் அக்வினஸ்

(Saint Thomas Aquinas)

(1227–1274)

பிரிவு 1: தோற்றுவாய்

இடைக்காலத்தில் போப்பின் தலைமை அதிகாரக் கோட்பாட்டையும், அவருடைய தவறுசெய்யாச் சிறப்பையும்பற்றி (Infallibility) அறிவியல்நோக்கில் ஆய்வுசெய்து ஆதரித்து எழுதியவர் செயின்ட் தாமஸ் அக்வினஸ் என்பவராவார். இவர் போப்பின் உயர் அதிகாரத்தை ஆதரித்துக் கோட்பாடுகளை வகுத்தாலும், இவருக்கும் இவரைப்போலவே போப்பின் தலைமையை ஆதரித்த, இவருக்கு முற்பட்ட இடைக்காலச் சிந்தனையாளர்களுக்குமுள்ள பெரும் வேறுபாடு என்னவென்றால், மற்றச் சிந்தனையாளர்கள் கிறிஸ்தவ நெறிக்கு முன்பிருந்த பேகன் (Pagan) நெறியைச் சேர்ந்த பிளேட்டோ, அரிஸ்ட்டாட்டில், எப்பிக்யூரஸ், சீனோ, சிசரோ முதலிய சிந்தனையாளர்களின் கோட்பாடுகளை ஒதுக்கிவிட்டு, செயின்ட் அகஸ்டின் போன்ற கிறிஸ்தவநெறியாளருடைய கோட்பாடுகளைமட்டுமே ஒப்புக்கொண்டு, தம் கருத்துகளைக் கூறியிருக்கவும், செயின்ட் தாமஸ் அக்வினஸ் பண்டையப் பேகன் சிந்தனையாளர்களுடைய —சிறப்பாக அரிஸ்ட்டாட்டிலினுடைய— அறிவியல் கோட்பாடுகளையும், விதிகளையும் ஒப்புக்கொண்டு பின்பற்றி, செயின்ட் அகஸ்டினின் முடிபுகளையும் இணைத்து, அவற்றின் உதவியினாலேயே, திருச்சபையின் அல்லது போப்பின் தலைமை அதிகாரத்துக்கு ஆதாரமாகக் கோட்பாடுகளை வகுத்தார். இவ்வாறு இவர் பேகன் தத்துவத்தோடு (philosophy) கிறிஸ்தவநெறியின் இறைமைக் கோட்பாட்டை (theology) இணைத்ததனால், இவர் 'ஒரு

கிறிஸ்டியன் அரிஸ்ட்டாட்டில்' (a Christian Aristotle) என்று புகழப்படுவார்.

செயின்ட் தாமஸ் அக்வினுஸ் சிந்தித்த சூழ்நிலை 'அறிவா ராய்ச்சி இயக்கம்' (Scholasticism) எனப்படும். இந்த இயக்கம் பன்னிரண்டாம் நூற்றுண்டில் வளர்ந்தது. இடைக்காலத்தில் அறிஞர் தம் கோட்பாடுகளுக்கு ஆதாரங்களைக்காட்ட முனைந் தனர்: ஆகையால் தத்துவ ஆராய்ச்சிக்குப் பண்டையக் கிரேக்க ஆசிரியர்களையும், இறையியலுக்குத் திருச்சபையை வளர்த்த அம்ப் ரோஸ், அகஸ்டின், கிரிகரி ஆகியோருடைய கருத்துகளையும் ஆதா ரங்களாகக்காட்டி ஆராயலாயினர். இதில் பண்டையக் கிரேக்க ஆசிரியர்களின் கருத்துகளை ஆராய்ந்தவர்தாம் செயின்ட் தாமஸ் அக்வினுஸ். பிளேட்டோவின் சில கருத்துகளின்மீதும், அரிஸ்ட் டாட்டிலின் சில நூல்களின்மீதும் அராபியர் எழுதிவைத்திருந்த விளக்கங்களை யூதர் இலத்தீனில் மொழிபெயர்த்தனர்; இவற்றையே மேற்கு ஐரோப்பியர் முதலில் அறிந்திருந்தனர்; சிலுவைப்போர் களில் கலந்துகொண்டவர்கள் கிழக்கத்திய நாடுகளிலிருந்து கிரேக்க நூல்களைக் கொண்டுவந்தனர். 12ஆம் நூற்றுண்டின் பிற்பகுதியில், ஸ்பெயினில் இருந்த மூர்களின் பல்கலைக் கழகங் களில், இலத்தீனில் மொழிபெயர்க்கப்பட்ட, அரிஸ்ட்டாட்டிலின் முழுநூல்களெல்லாம் கற்கப்பட்டு மற்ற ஐரோப்பிய நாடுகளுக்கும் பரவின.

பண்டையக் கிரேக்கச் சிந்தனையாளருடைய அறிவியல் முறைக்கு ஒப்ப, கிறிஸ்தவ சமயக் கோட்பாடுகளுக்கு விளக்கம் அல்லது வடிவம் கொடுக்க, செயின்ட் தாமஸ் அக்வினுஸ் முனைந்த தனுல், அவருடைய விளக்கத்தில் அரசியல் நூலானது அரிஸ்ட் டாட்டில் வகுத்ததைப்போல, ஓர் அறிவியல் (science) நூலாக ஆயிற்று. அரிஸ்ட்டாட்டிலையும், அகஸ்டினையும் இவ்வாறு மாறு பாடின்றி இணைத்த செயின்ட் தாமஸ் அக்வினுஸ் எழுதிய மூன்று நூல்கள் பின்வருமாறு :

(1) அரிஸ்ட்டாட்டிலின் அரசியல் நூலுக்கு விளக்கங்கள் (Commentaries on the Politics of Aristotle);

(2) அரசர்களின் ஆட்சி (Rule of Princes);

(3) இறையியலின் சாரம் (Summa Theologica, சம்மா தியோ லோஜிக்கா). இந்த நூலில்தான் அவர் சட்டம், நீதி, ஒழுக்கம் முதலிய கருத்துகளுக்கு அறிவியல்வாயிலாகக் கொடுத்த கோட்பாடுகள் காணப்படுகின்றன.

பிரிவு 2 : சட்டம்பற்றிய கோட்பாடு

'சட்டம் என்பது சமுதாயத்தின் நலனைக் கருத்தில் கொண்டவர் எவரோ, அவரால் சமுதாய நலனுக்காக வெளிப்படுத்தப்பட்ட அறிவின் ஓர் ஆணையாகும்.'

(Law is, 'an ordinance of reason for the commongood, promulgated by him who has the care of the community').

சட்டம் என்பதைப்பற்றியும், நீதி என்பதைப்பற்றியும் பண்டையக் காலத்தில் அரிஸ்ட்டாட்டில், ஸ்டாயிக்குகள், சிசரோ, ரோமானியப் பேரரசின் சட்ட அறிஞர்கள் ஆகியோர் வகுத்த கோட்பாடுகளை எல்லாம் மாறுபாடு இன்றி இணைத்து, செயின்ட் தாமஸ் தம் கோட்பாடுகளை வகுத்தார்.

சட்டம் நான்கு வகைப்படும்: (1) என்றுமுள்ள சட்டம் (External law); (2) இயற்கையின்சட்டம் (Natural law); (3) மனிதரின் சட்டம் (Human law); (4) தெய்விகச்சட்டம் (Divine law) என்பவையே அவையாகும்.

என்றுமுள்ள அல்லது நிலையான சட்டம் என்பது அண்டங்களையெல்லாம் கட்டுப்படுத்துவதும், கடவுளினுடைய மனத்தில் இருப்பதுமாகிய ஒரு விதி அல்லது திட்டம் ஆகும். பகுத்தறிவுடைய உயிர் என்ற முறையில் மனிதர், இந்த நிலையான சட்டத்தின் உதவியைக் கொண்டு, தீமைகளைப் பகுத்தறிந்துகொண்டு, தமது உண்மையான குறிக்கோளை அடைவதற்கு எந்த விதியைக் கையாளுகிறார்களோ அந்த விதிகளே **இயற்கையின் சட்டங்கள்** ஆகும். மனித அறிவின் உதவியைக்கொண்டு உலகியலின் நிலைகளுக்கு ஏற்ப, இயற்கையின் சட்டவிதிகளை அவர்கள் கையாளும்போது, அவ்விதிகளே அல்லது அவ்வாறு அவர்கள் கையாளுவதே, **மனிதச் சட்டம்** ஆகும். மனித அறிவின் வரம்புகளையும், குறைபாடுகளையும் நீக்கிச் சரிசெய்து மனிதர் தமக்குரிய மறுமைவாழ்வின் நோக்கமாகிய, நிலையான இன்பத்தைத் தவறாது அடைவதற்கு வழிகாட்டுவது எதுவோ, அதுவே **தெய்விகச் சட்டம்** ஆகும்.

கிரேக்கர்கள், சட்டம் என்பது அறிவின் வெளிப்பாடு என்றும், மனித விருப்பத்தின் வெளிப்பாடு அன்று என்றும் கருதினர். ரோமானியர், சட்டத்தை அறிவு அல்லது விருப்பம் என்பதன் வெளிப்பாடு என்று கருதினர்.

செயின்ட் தாமஸ் சட்டத்தை அறிவின் வெளிப்பாடாகவும், உணர்வின் வெளிப்பாடாகவும் கருதினர். சட்டத்தைச் செய்பவர் சமுதாயத்தில் உயர்தர அதிகாரத்தை உடையவராகத்தான் இருத்தல் வேண்டும்; இது அவருடைய கோட்பாடுகளில் இருந்து உய்த்துணரப்படுகிறது. மேலும் இது ரோமானியச் சட்ட அறிஞருடைய கருத்துக்கும், தற்காலக் கருத்துக்கும் உடன்பாடான ஒரு கருத்து ஆகும். மேலும் சட்டம் என்பது குறிக்கோள் ஏதும் இல்லாமல், அறிவின் திறத்தால்மட்டுமே தோன்றுவதாகாது என்றும், பொதுநலன் (Commongood) சட்டத்தினுடைய நோக்கமாக இருத்தல் வேண்டும் என்றும், சட்டத்திற்குத் தோற்றுவாய் அல்லது ஆதாரம், சமுதாயம் முழுவதுமோ சமுதாயத்தை ஆளும் அதிகாரியோ ஆகும் என்றும் அவர் கூறியிருப்பது சிறப்பான இயல்புகளாகும்.

என்றும் உள்ள அல்லது நிலையான சட்டமும், தெய்விகச் சட்டமும், கிறிஸ்தவ இறையியல் நூலினின்றும் அவர் எடுத்துக் கொண்ட முடிவுகளாகும். இவற்றை அவர் விளக்கியிருப்பதே தத்துவ நூலுக்கும் இறையியலுக்கும் அவர் செய்துள்ள ஒரு பெரும் தொண்டாகும். இதேபோல இயற்கையின் சட்டத்திற்கும் மனிதரின் சட்டத்திற்கும், அவர் கொடுத்துள்ள விளக்கங்கள் அரசியல் நூலுக்கு அவர் செய்துள்ள ஒரு பெரும்தொண்டாகும்.

இயற்கையின் சட்டமானது, எல்லா மக்களிடையேயும் ஒரே தன்மையாகக் காணப்படுகிறது. பகுத்தறிவுடைய எல்லா மக்களும், இயற்கையின் சட்டத்தின்படியே ஒரே தன்மையுடையவர் ஆவர்; அதாவது அவர்கள் துன்பத்தைவிடுத்து இன்பத்தை நாடுவது என்ற இயல்பையுடையவராக இருக்கின்றனர். இவ்வாறு செய்யுமாறு கூறுவதே இயற்கையின் சட்டமும் ஆகும். இந்த விதியே மனிதரில் எல்லாருக்கும் பாகுபாடின்றிப் பொருந்துவதாகவும், அவருடைய முதல் விதியாகவும் இருக்கிறது. இந்த விதியிலிருந்து வருவிக்கப்படுகிற சில முடிவுகள் சமுதாயத்திற்குச் சமுதாயம் வேறுபட்டுக் காணப்படுகின்றன. என்றாலும் இயற்கையின் சட்டமானது எல்லாச் சமுதாயங்களுக்கும் செல்லுபடியாகும் ஒரு சட்டமாகவும் எல்லாச் சமுதாயங்களிலும் ஒரே தன்மையாக இயங்கும் சட்டமாகவும் (Uniform) இருக்கிறது. இந்த இயற்கையின் சட்டமும் மாறுபாட்டிற்கு அப்பாற்பட்டதன்று; மனித வாழ்க்கையின் வசதிகள் பல்வேறுதுறைகளிலும் பெருகும்போது இந்த இயற்கையின் சட்டத்தின் அளவும் விரிவடைந்துவருகிறது. தண்டனைகளின் மூலமாகத்தான் மனிதச் சட்டம் நடைமுறைப்

படுத்தப்படுகிறது; இந்தச் சட்டம் சமுதாய வாழ்க்கையில் அமைதி ஏற்படுவதற்கு இன்றியமையாதது. மனிதச் சட்டமும் இயற்கையின் சட்டத்திலிருந்துதான் வருவிக்கப்படுகிறது. இரண்டுக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதனால் இயற்கையின் சட்டத்திற்கு மாறுபாடான மனிதச் சட்டத்தை ஒரு சட்டமாகவே ஒப்புக்கொள்ள இயலாது.

பிரிவு 3: நீதி (Justice)

'ஒவ்வொருவருக்கும் உரிய உரிமைகளை வழங்கும்பொருட்டு, உறுதியாக நிலைபெற்று இருக்கின்ற தீர்ப்புத்தான் நீதி என்பதாகும்.'

இந்தக் கோட்பாட்டை ரோமானியச் சட்ட அறிஞரின் கருத்திலிருந்து ஆதாரமாகக்கொண்டு செயின்ட் தாமஸ் வகுக்கிறார். மேலும், அரிஸ்ட்டாட்டில், 'நீதியின் அடிப்படைக்கொள்கை சமத்துவம் ஆகும்' என்றும் கூறியிருப்பதைச் செயின்ட் தாமஸ் ஒப்புக்கொள்கிறார். ஒருவர் மற்றவரிடமிருந்து எவ்வளவு பெறுகிறாரோ, அவர் அதற்கு ஒப்பத் திரும்பக்கொடுப்பதே இயற்கைமுறையில் அமைந்த சமத்துவம் ஆகும். மனிதன் வகுக்கின்ற சில கொள்கைகளின் மூலமாகவும் சமத்துவம் (Equality) ஏற்படலாம். எவ்வாறாயினும் எழுதப்பட்ட மனிதச் சட்டங்களே, உரிமைகளுக்கும், நீதிக்கும் ஆதாரம் ஆகும்; இதனைச் செயின்ட் தாமஸ் வலியுறுத்திக் கூறியிருப்பது, தற்காலக் கோட்பாட்டை நோக்கியதாகும். அவருடைய சட்டக் கோட்பாடும், நீதிக் கோட்பாடும் அவருடைய தத்துவங்களை வெளிக்காட்டுகின்றன. இயற்கையையும் மனித அறிவையும் கிறிஸ்தவ இறைவனுக்கு உட்படுத்தி அவர் தம் கோட்பாடுகளை வகுத்திருப்பது, அவரது தத்துவத்தின் இயல்பைக் காட்டுகிறது.

பிரிவு 4: அரசியல் அதிகாரத்தின் தன்மைகள்-வடிவங்கள்பற்றிய கோட்பாடு

அரசியல் நிறுவனங்களையும் சமய நிறுவனங்களையும் செயின்ட் தாமஸ் அரிஸ்ட்டாட்டிலைப்போலப் பிரித்துக்கூறுவதோடு, செயின்ட் அகஸ்ட்டின் கூறியிருப்பதைப்போல ரோமானிய வரலாற்றின் தத்துவத்தையும் விளக்குகிறார்.

மனிதர் சமுதாயமாக வாழும் இயல்புடையவர்; சமுதாய வாழ்வில் பொதுநலனைப் பெறும்பொருட்டு அரசாங்கம் தேவைப்படுகிறது. ஒரு நகரத்தைவிடப் பல நகரங்கள் அடங்கிய பெரும்

மாநிலம் அல்லது நாடுதான், தன்னிறைவு உடையதாகவும் முழு வளர்ச்சிபெற்றதாகவும் இருக்கின்றது.

> அரசியல் அதிகாரமும், மற்றெல்லா அதிகாரங்களையும் போலக் கடவுளிடத்தில்தான் பெறப்படுகிறது. செயின்ட் பால் 'கடவுளைத்தவிர வேறெந்த அதிகாரமும் இல்லை' என்று கூறியதும், செயின்ட் அகஸ்ட்டின், 'ரோமானிய மக்கள் தகுதியுடையவர் ஆகையால், அவர்களுக்குப் பேரரசு அதிகாரத்தை இறைவன் வழங்கினுர்' என்று கூறியிருப்பதும் உண்மைகள்தாம். மனிதர்மீது மனிதர் அதிகாரம் செலுத்துவது என்ற அடிமைமுறையானது உலகத்தில் தீவினையின்காரணமாகத் தோன்றியது. ஒருவர் ஆலோசனைகூறி, மற்றவர் அந்த ஆலோசனையை நிறைவேற்றிவைத்தல் என்ற அளவுக்கு ஆலோசனை அல்லது ஆணைவிடுக்கும் அதிகாரமும், மனிதனுடைய அறியாமை என்ற காரணத்தினுலும், கடவுளால் மனிதனிடத்தே அமைக்கப்பட்டுள்ள சமுதாய வாழ்க்கைப் பண்பினுலும் தோன்றியதாகும்.

அரசியல் அதிகாரமும் பலருடைய நன்மைக்காகக் கையாளப் படும்போதுதான் நியாயமானதாக ஆகிவிடுகிறது. ஆளுபவருடைய நலனுக்காகமட்டும் கையாளப்படும் அதிகாரம் தீயது. அரிஸ்ட்டாட்டில் குடியாட்சியைச் சிறந்த ஆட்சிவகையாகப் போற்றியிருக்க, செயின்ட் தாமஸ் முடியாட்சியைப் (Monarchy) பெரிதும் போற்றியுள்ளார். சமுதாயத்தின் முக்கியநலன் ஒற்றுமையை அல்லது அமைதியைக் காப்பதும் ஆகும்; இவ்வொற்றுமையையும் ஒரேகூறு (unit) அல்லது ஆள் ஆக இருக்கின்ற அதிகாரியால்தான் நிலைநிறுத்தமுடியுமே தவிர, பலராக இருக்கின்ற அதிகாரியால் முடியாது. மனித உடம்பில் உள்ள எல்லா உறுப்புகளையும் எவ்வாறு ஒரே இருதயம் கட்டுப்படுத்துகிறதோ, அதேபோல நாட்டிலுள்ள எல்லா மக்களையும் தனது ஆணையின்மூலம் கட்டுப்படுத்தி, இணைப்பதற்கு ஒரே ஆளாக இருக்கும் அதிகாரியால்தான் முடியும். குடியாட்சி நாடுகள் ஒற்றுமையின்றிச் சீர்குலைந்ததையும், முடியாட்சி நாடுகள் அமைதியும் செழிப்பும் கொண்டு விளங்கியதையும் வரலாறு காட்டுகிறது. முடியாட்சியில் கொடுங்கோலாட்சி தோன்றக்கூடுமாயின், அத்தகைய இடர்ப்பாடு குடியாட்சி நாட்டில்தான் மிகுதியும் தோன்றுவதற்கு இடம் இருக்கின்றது.

அரசியல் அதிகாரத்தை நான்குவகைகளாகச் செயின்ட் தாமஸ் பாகுபடுத்திக் கூறுகிறுர்: (1) குருமார் அதிகாரமும்

அரசர் அதிகாரமும் இணைந்த கலவை (Sacerdotal and Royal authority); (2) அரசர் அதிகாரம் (Royal authority); (3) அரசியல் அதிகாரம் (Political authority); (4) பொருளாதார அதிகாரம் (Economic authority).

முதலாவது வகையான கலவை அதிகாரத்திற்கு எடுத்துக் காட்டு, போப்பினுடைய அதிகாரம் ஆகும். இரண்டாவது வகைக்குச் சட்டத்திற்கு உட்படாத அரசனின் ஆட்சியைக் கூறலாம். மூன்ருவது வகையான அரசியல் அதிகாரத்திற்கு, சட்டத்திற்கு உட்பட்ட அரசாங்கம் எதையும் உவமையாகக் கூறலாம். நன்காவதாகப் பேரரசு அதிகாரம் (Imperial authority) என்பதைக் கூறலாம். இது உலக முடியாட்சி அதிகாரமாக (World Monarchy) இருக்கிறது. வரலாற்றில் அடுத்தடுத்துக் கால அடிப்படையில் நான்கு உலக முடியாட்சி அதிகாரங்கள் இருந்திருக்கின்றன; அவையே **அசீரியர் பேரரசு ஆட்சி** (Assyrian Imperial authority), **மீடியர் - பாரசீகர் பேரரசு ஆட்சி** (The empire of the Medes and the Persians), **கிரேக்கர்கள் பேரரசு ஆட்சி** (The empire of the Greeks), **ரோமானியரின் பேரரசு ஆட்சி** (The Roman Imperialism) முதலியவை ஆகும். ஐந்தாவதாக உலக முடியாட்சி அதிகாரம் கிறிஸ்துவின் பேரரசு அதிகாரமாகத் தான் இருக்கும். செயின்ட் அகஸ்ட்டின் கூறிய இந்தக் கோட்பாட்டைச் செயின்ட் தாமஸ் வலியுறுத்துகிருர்.

பிரிவு 5 : அரசாங்கத்தின் கடமைகள்பற்றிய கோட்பாடு

உலகியல் விஷயங்கள் எல்லாவற்றின்மீதும் உயர்தர அதிகாரத்தை ஆட்சியாளர் கையாண்டு, தம் குடிகள் எல்லாரிடையேயும் சரியான வாழ்க்கையை ஏற்படுத்திப் பாதுகாத்தல் வேண்டும். ஒற்றுமையை நிறுவுவதும், நாடு நிலைத்துநிற்கும்படி செய்வதும் அரசாங்கத்தின் முக்கிய கடமைகளாகும். இவையெல்லாம் பண்டையக் கிரேக்க அரசியல் கோட்பாட்டிலும் வற்புறுத்தப் பட்டன. இடைக்காலத்தில் இவற்றை வற்புறுத்தியதற்குக் காரணம், நாடுகள் பலவற்றிலும் குழப்பங்களும் உட்பகையும் இருந்து, அந் நாடுகள் மறைந்துவிடக்கூடிய நிலையில் இருந்ததே ஆகும். நாட்டில் ஒற்றுமையும் நிலைபெறும் ஆற்றலும் மிக இன்றியமையாதது என்று அரசியல்தத்துவ ஆசிரியர்கள் வலியுறுத்தி இருக்கின்றனர். சட்டங்களுக்குக் கீழ்ப்படிந்து, கடமைகளைச் செய்யும் குடிமக்களுக்குப் பரிசு வழங்கியும், சட்டங்களை மீறிக் குழப்பம் விளைவிப்போருக்குத் தண்டனை வழங்கியும், வெளிப் பகைவரிடமிருந்து நாட்டைக் காப்பாற்றியும் அரசர்கள் கடமை

களைச் செய்யவேண்டும். நாட்டிலுள்ள போக்குவரவு வசதிகளை எல்லாம் பாதுகாப்பாகவும், சுதந்திரமாக அவற்றை யாவரும் பயன்படுத்தும்படியாகவும் அவர் செய்தல் வேண்டும்.

பைபிளில் கூறியிருப்பதைப்போன்று அரசாங்கமானது, நாட்டில் எடை அல்லது நிறைவகைகளையும் (Weights), நீட்டல், முகத்தல் அளவைகளையும் (Measures) ஒரேசீராக நிறுவி, வழக்குகளும் சச்சரவுகளும் நடைபெறாமல் காக்கவேண்டும்.

அரசர் தாம் அவ்வப்போது செய்யும் தீவினைகளுக்குக் கழுவாயாகக் கிறிஸ்தவக் கோட்பாடுகள் விதித்துள்ளபடி வறியோர்களுக்கு உணவளித்துக் காப்பாற்றுதல் வேண்டும். அரசியல் கோட்பாட்டில் இவ்வாறு அரசாங்கம் கொடைகளின்மூலமாக வறியோரைக் காப்பாற்றுதல் வேண்டுமென்று முதல்தடவையாக வகுத்தவர் செயின்ட் தாமஸ்தாம்.

பிரிவு 6 : உலகியல் அதிகாரத்துக்கும், ஆன்மிக அதிகாரத்துக்கும் இடையே உள்ள தொடர்பு

இடைக்காலத்தில் முக்கியமான பிரச்சினையாக இருந்த இந்தக் கேள்விக்கும் செயின்ட் தாமஸ் அக்வினஸ் விடையளித்துள்ளார். இவர் அளித்த விடை திருச்சபை நிறுவனத்தின் மிகப்பெரிய அறிஞர்கள்—அதாவது செயின்ட் அகஸ்டின் — கூறிய கோட்பாட்டை ஒட்டியமைந்தது.

> மனிதன் செய்த தீவினை (Original sin), கடவுளின் அவதாரம் (Incarnation), சமயச் சடங்குகள் (Sacraments) ஆகியவெல்லாம் மனிதனுடைய மிக முக்கியமான, உண்மையான வாழ்க்கையைப்பற்றிய மிக முக்கியமான உண்மைகளாகும். இவற்றை அறிவின் ஆராய்ச்சியின் மூலமாக எடுத்துக்காட்ட முடியாது; இவற்றில் நம்பிக்கை கொள்ளுதலின்மூலமாகவும், இவற்றை இறைவனே வெளிப்படுத்தலின் மூலமாகவும்தான், இவற்றை மனிதன் விளங்கிக்கொள்ளமுடியும். இந்த விஷயங்களைப் பொறுத்த வரையில் இறுதியான தீர்மானம் செய்யக்கூடிய அதிகாரம் திருச்சபைக்குத்தான் ஒதுக்கிவைக்கப்பட்டுள்ளது; இவற்றில் அதனுடைய தீர்ப்பே முடிவானது. அதனுடைய தீர்ப்புக் கடவுளின் தீர்ப்பேயாகும்.

மேறபடி கோட்பாட்டைச் செயின்ட் தாமஸ், அரிஸ்ட்டாட்டிலின் தருக்கமுறையை ஒட்டியே நிறுவுகின்றார். ஆட்சிசெய்தல் என்பது

ஆளப்படுபவருடைய சிறந்த குறிக்கோளுக்கு அவரை நடத்திச் செல்வதாகும்; மனிதனுடைய உண்மையான குறிக்கோள், பண்டையத் தத்துவ ஆசிரியர்கள் குறிப்பிட்டுள்ளபடி ஒவ்வொரு வரும் தத்தமக்குரிய பண்புகளுக்கேற்ப வாழ்தல் அன்று; கடவுளை எப்போதும் அறிந்து, எப்போதும் இன்புற்றிருக்கக்கூடிய நிலையை (Eternal Bliss) அடைவதுதான் மனித வாழ்க்கையின் உண்மையான குறிக்கோளாகும். இந்த நோக்கமானது மனித னுடைய பண்புகளால்மட்டுமே அடையக்கூடுமானால், அரச னுடைய அதிகாரம் ஒன்றே அதற்குப் போதும். ஆனால் இந்த நோக்கமானது உலகியல் வாழ்க்கையையும் கடந்த நோக்கமாய் இருப்பதால் இந்த நோக்கத்தை அடைய உதவும் அரசாங்க மானது - அரசனுடைய அதிகாரத்தைவிட உயர்ந்த தரத்தில் உள்ளதாக — குருமார்களின் அரசாங்கமாக இருத்தல் வேண்டும். ஆகையால், உலகியல் விஷயங்களில் அரசர் உயர்தர அதிகாரத் துடனிருந்தபோதிலும், உலகியல் விஷயங்கள் எல்லாம் மேற் கூறிய உயர்ந்த நோக்கத்திற்காகவே கையாளப்படவேண்டு மாகை யால், அரசரும் கிறிஸ்துவின் சட்டப்படியாகக் குருவுக்குக் கட்டுப் பட்டவரே யாவார்.

கிறிஸ்தவ சமயத்தை ஒத்துக்கொள்ளாமல் வேறு சமயங்களைப் பின்பற்றுபவர்கள் கிறிஸ்தவ அரசாங்கத்தின்கீழ் வாழும்போது, அவர்களுக்குச் சமய சுதந்திரம் இருத்தல் வேண்டும்; ஆயினும் கிறிஸ்தவ சமயத்திலிருந்து மாறுபட்டு அதை எதிர்ப்பவர்களுக்கு (Heretics) இத்தகைய சுதந்திரம் இல்லை. கிறிஸ்தவநெறியைச் சேராத அரசர் கிறிஸ்வத மக்களை ஆட்சிசெய்வது தவறாகாது; ஆனால் இவ்வாறு கிறிஸ்தவர் அல்லாத அரசர் கிறிஸ்தவ மக்களை ஆளுதல் கூடாது என்று கிறிஸ்வதத் திருச்சபை கூறுமானால், இத் தகைய தீர்மானமே முடிவானது. கிறிஸ்தவ சமயத்தினின்றும் மாறுபட்ட அரசரைத் திருச்சபை சமயநீக்கம் செய்யுமானால், அவருடைய குடிமக்கள் எல்லாரும், அவருக்குக் கீழ்ப்படியவேண்டிய கடமையினின்றும் விடுதலைபெறுகின்றனர்.

செயின்ட் தாமஸ் எழுதிய **'அரசர்களின் ஆட்சி'** என்ற நூல் அவர் இறக்கும்தறுவாயில் முழுமையாக எழுதப்படாமையினால், அவர்தம் நம்பிக்கைக்குரிய மாணாக்கர் ஏஜிடியஸ் ரோமானேஸ் என்பவர் அதனை முற்றுப்பெற எழுதினர்; செயின்ட் தாமஸின் சில கோட்பாடுகளுக்கு அவர் விளக்கங்கள் எழுதி, மேலும் சில கருத்து களை எழுதினர். அரசர் ஒழுக்க உயர்விலும், பொருளியல் நிலை யிலும், ஆட்சித்துறையிலும் சிறந்துவிளங்குதல் வேண்டும். அவர் செனட்டின் ஆலோசனையுடன் நல்ல சட்டங்களை இயற்றித் தீயு

வற்றை விடுத்தல் வேண்டும்; நீதிமன்றங்கள் சட்டங்களைக் குறிப்பிட்ட வழக்குகளுக்குப் பொருந்துமாறு கையாண்டு, நீதியை நிறுவி, அநீதியை நீக்கவேண்டும்; மக்கள் சட்டத்திற்குக் கீழ்ப்படிந்து புகழுக்குரியவற்றைச் செய்து, இகழ்ச்சிக்குரியவற்றை நீக்கவேண்டும். முடியாட்சியே சிறந்த அரசாங்கவகையாகும்; அது மூத்த மகன் ஆட்சி என்ற தாயமுறை விதியைப் பின்பற்றுதல் வேண்டும்.

சட்டங்களும் உரிமைகளும் ஒன்றுடன் ஒன்று இணைந்தவை. நம் செயல்களில் எவை நியாயமானவை, எவை நியாயம் இல்லாதவை என்று நாம் தீர்மானிப்பதற்குதவும் உரிமை விதிகளே (Rules of right) சட்டங்களாகும். இந்தக் கோட்பாடானது சிசரோவின் காலத்திலிருந்து வந்துள்ள இயற்கையின் சட்டம் என்பதை ஒட்டி வளர்ந்த கோட்பாடாகும். இந்தக் கோட்பாட்டின் சாரம் 'எல்லா உரிமைகளும் சட்டத்திலேயே தோன்றுகின்றன' (All rights have the sourse in Law) என்பதாகும்.

முடிவாகக் கூறினால், செயின்ட் தாமஸின் ஆராய்ச்சியானது உணர்ச்சியின் அடிப்படையில் அமையாமல், காரண அல்லது அறிவின் அடிப்படையில் அமைந்து இருந்தது என்று கூறலாம். அவர் இவ்வகையில் சமயம், அரசியல் உயர்தர அதிகாரம் ஆகிய வற்றைப்பற்றியெல்லாம் ஆய்ந்து வகுத்த கோட்பாடுகள், புதிய ஆராய்ச்சிமுறை தோன்றியதைக் காட்டுகின்றது. அவருடைய காலத்தை அடுத்து, போப் எட்டாம் போனிபேஸுக்கும் பிரெஞ்சு அரசர் பிலிப்புக்கும் தலைமை அதிகாரத்தைப்பற்றிப் போராட்டம் ஏற்பட்ட போதிலும், எல்லாப் பிரச்சினைகளையும் அறிவியல் நோக்கிலேயே ஆய்வுசெய்தல் வேண்டும் என்று செயின்ட் தாமஸ் காட்டிய ஆராய்ச்சிமுறை வளர்ந்து நிலைபெற்றது. இந்த ஆராய்ச்சிமுறை வளர்ந்ததன்விளைவாகப் பதினாறும் நூற்றாண்டில், போப்பின் தலைமையை எதிர்த்துப் பிராட்டஸ்டன்ட் கிறிஸ்தவச் சீர்திருத்த இயக்கம் தோன்றிற்று.

இயல் பதின்மூன்று

டான்ட்டே அலிகியரி

(Dante Alighieri)

(கி.பி. (c) 1265-கி.பி, 1321)

பிரிவு 1: டான்ட்டேயின் காலத்தில் போப்பின் தலைமை அதிகாரச் சார்பாகவும், எதிராகவும் இருந்த கோட்பாடுகள்

சிறந்த இத்தாலியக் கவிஞராகவும், அரசியல் சிந்தனையாளராகவும் பதின்மூன்றும் நூற்றுண்டின் பிற்பாதியிலும், அதனையடுத்த நூற்றுண்டின் முற்பாதியிலும் இருந்த டான்ட்டே அலிகியரியின் வாழ்க்கை பல இன்ப துன்பங்கள் நிறைந்த ஒன்று ஆகும். 'இக்கால இத்தாலிய இலக்கியத்தின் தந்தை' எனப்புகழப்பட்ட இவர் பிளாரன்ஸ் நகரத்தில் பிறந்தார். 'புதிய வாழ்வு' (New life), தெய்விக இன்பியல் நாடகம் (Divine Comedy) முதலிய அழியாப் புகழ்பெற்ற இலக்கியங்களை இவர் படைத்தார். இலத்தீன் மொழியில் 'முடியாட்சியைப்பற்றி' (De Monerch:a or On Monarchy) என்ற நூலை இவர் எழுதினர்; இதில்தான் இவருடைய அரசியல் கோட்பாடுகள் காணப்படுகின்றன; இதில் இவர் திருச்சபையையும், அரசையும் பிரித்தல் வேண்டுமென்று கூறுகிறுர். இளமைக் காலத்தில் கல்விப்பயிற்சி பெற்றபிறகு படையில் சிறிதுகாலம் பணியாற்றியபின்னரே, இவருடைய இலக்கியப்பணி நடைபெற்றது. கடைசியில் அரசியலில் ஈடுபட்டுப் பேரரசருடைய கட்சியினராகிய **கிபல்லின்** (Ghibelline) கட்சிக்கு எதிராகப் போப்பின் ஆதரவாளராகிய **கெல்ப்** (Guelphs) கட்சியில் சேர்ந்தார். ஆனல் கிபல்லின் கட்சி மக்களுடைய ஆதரவுடன் ஆட்சிக்குவரவே, டான்ட்டே 1302ஆம் ஆண்டில் நாடுகடத்தப்பட்டார்.

கி.பி. பதின்மூன்றும் நூற்றுண்டில் போப் எட்டாம் போனி பேசுக்கும், பிரெஞ்சு அரசர் பிலிப்புக்கும் இடையே நடைபெற்ற அதிகாரப் போராட்டத்தில், போப்பின் தலைமை அதிகாரத்திற்கு ஆதரவாகவும், எதிராகவும் கோட்பாடுகள் தோன்றின. போப்பினுடைய அதிகாரம்தான் திருச்சபையினுடைய அதிகாரம் என்று யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்டது. போனிபேசுக்கும் பிலிப்புக்கும் இடையே நடந்த போரில் இரண்டு முக்கியமான பிரச்சினைகள் இருந்தன.

ஒன்று, ஆன்மிக அதிகாரத்திற்கும் உலகியல் அதிகாரத்திற்கும் உள்ள தொடர்பு என்ன என்பது. இந்தப் பிரச்சினை இது வரையில் தீர்க்கப்படாததற்குக் காரணம், புனித ரோமானியப் பேரரசின் தோற்றமும், சில வழக்கங்களும் சாதாரண அரசுகளைப் போல் அல்லாமல், சில தனித்தன்மைபோடிருந்தமையே ஆகும். அதாவது அது புனித ரோமானியத் திருச்சபையினோடு நெருங்கிய தொடர்புகொண்டு இருந்ததேயாகும். இரண்டாவது பிரச்சினை சொத்துரிமைகளைப் பற்றியதாகும். பிரெஞ்சு அரசர் தமது நாட்டிலுள்ள திருச்சபையின் சொத்துகளின்மீது வரிவிதிக்க முற்பட்ட போது, அரசர் அவ்வாறு செய்வதற்கு முன் தமது ஒப்புதலைப் பெற வேண்டுமென்று போனிபேஸ் கூறவும், இதிலிருந்து உலகியல் விஷயங்களில் தாம் எவருக்கும் கட்டுப்பட்டவர் அல்லர் என்று பிரெஞ்சு அரசர் கூறினர். இதனைத் தொடர்ந்து போப்பிற்குப் பல இடையூறுகள் ஏற்பட்டதையும், போப்புகளின் பாபிலோனியச் சிறைவாசம் ஏற்பட்டதையும் முன்னர்க் குறிப்பிட்டோம்.

போப்பிற்கே ஆன்மிகத்துறையில் மட்டுமல்லாமல், உலகியல் துறையிலும் அதிகாரம் உண்டு என்று உறுதியாகக் கூறப்பட்டது. போனிபேஸ், பிலிப்புக்கு எழுதிய ஒரு கடிதத்தில், அரசர் தாம் செய்யும் தீவினைகளுக்காகப் போப்பிற்கே கட்டுப்பட்டவர் என்றும், ஆன்மிகத்துறைகளிலும், உலகியல்துறைகளிலும் அரசர் போப்புக்கே கட்டுப்பட்டவர் என்றும் கூறினர். 1302ஆம் ஆண்டில் போப் விடுத்த ஊனும் சாங்க்டம் (Unam Sanctum) என்ற ஆணையில், கிறிஸ்து கூறிய இரு அதிகாரங்களின் பாகுபாட்டையும், இரு தனித்த அதிகாரங்களின் கோட்பாட்டையும் வலியுறுத்தி, ஒவ்வொரு மனிதனும் துறக்க இன்பம் அடைவதற்கு, அவர் ரோமானியப் போப்பிற்குக் கட்டுப்பட்டிருத்தல் மிக இன்றியமையாதது என்று கூறினர்.

ஏஜிடியஸ் ரோமானுஸ் தாம் எழுதிய ஒரு கட்டுரையில் போப்பின் தலைமையதிகாரக் கோட்பாட்டைப் பின்வருமாறு எடுத்துரைத்தார் :

'உலகியல் சார்பான எல்லாப் பொருள்களின் நோக்கமும் உடம்பைப் பாதுகாத்தலேயாகும்; உடம்பு ஆன்மாவுக்குக் கடடுப்பட்டது; ஆன்மாவும் போப்பினுடைய வழிகாட்டும் அதிகாரத்திற்குக் கட்டுப்பட்டது; ஆகையால் மக்களை ஆளுதல் என்ற செயல் திருச்சபையின் சட்டங்களோடு மாறுபாடு இல்லாதவகையில், சரியான அல்லது ஒத்த தொடர்புகளை நிறுவுதல் என்பதில்தான் அடங்கியுள்ளது.'

இவ்வகையாகப் பார்க்கும்போது உலகியல் பொருள்களின் எல்லா வற்றிற்கும் முடிவான உரிமையாளர் திருச்சபைதான் என்ற கருத்து வருவிக்கப்படுகின்றது. சொத்தைப் பெற்றிருப்பவர் எவரும் திருச்சபையினுடைய அனுமதியின்பேரில்தான் அதனை நியாய மாகப் பெற்றிருக்கிறார் எனக் கருதவேண்டும்; ஆகையால் திருச் சபையினுடைய தொடர்பு இல்லாதவர்; அதாவது கிறிஸ்தவர் அல்லாதவர் எவருக்கும் நியாயமான சொத்துரிமை கிடையாது.

போனிபேசுக்குப் பிற்பட்ட காலத்தில் போப்புகளாகிய ஐந்தாம் கிளமென்ட், இருபத்திரண்டாம் ஜான் ஆகியோர் பிரெஞ்சு அரசர்களுடன் அமைதி உடன்படிக்கை செய்துகொண்டு, தென் பிரான்சில் அவிக்நோன் (Avignon) என்னும் இடத்தில் பிரெஞ்சு அரசர்களுடைய ஆதிக்கத்தின்கீழும், அவர்களின் பாதுகாப்பிலும் இருந்து வந்தனர். புனித ரோமானியப் பேரரசர்களாகிய ஏழாம் ஹென்றி, பவேரியாவின் லூயிஸ் ஆகியவர்களோடு போப்புகள் 'போப்புக்கும் பேரரசருக்கும் உள்ள தொடர்பு என்ன?' என்ற பிரச்சினையின்மீது சண்டையிட்டுக்கொண்டனர். போப்பின் சார் பாக, ஏழாம் கிரிகரி, மூன்றும் இன்னசென்ட் ஆகியோரின் கோட் பாடுகள் எடுத்துக் கூறப்பட்டன. இதனையும் மிஞ்சி ஒருபடி மேலே போய் அகஸ்டினஸ் டிரயம்பஸ் (Augustinus Triumphus) என்ற துறவி தாம் எழுதிய ஒருநூலில், போப்பைக் கடவுளின் சமயக் குரு வாகவும் (vicar), அவருக்குப் பல தெய்விகப்பண்புகளை ஏற்றியும் சில கோட்பாடுகளைக் கூறினர். அவர் கூறிய சில கோட்பாடுகள் வருமாறு :

'அவருடைய அதிகாரமானது எந்தத் தேவதூதரின் அதி காரத்தைவிடவும் அளவில் பெரியது. உலகநெறியில் வாழும் மக்கள் அரசர்களுக்குக் கீழ்ப்படிவதைவிடப் போப்புக்குக் கீழ்ப்படிதல் வேண்டும். கிறிஸ்தவர்கள் அல்லாத பேகன் மக்களும்கூட, போப்பிற்குக் கட்டுப் பட்டவர்கள். பேரரசைவிடப் போப்பிற்கு முழுமையான அதிகாரம் இருப்பதால், சரியான ஒரு காரணம் இருக்கும்

பொழுது எந்த அரசரையும் பதவியிலிருந்து நீக்கவோ, புதிய அரசரை அமர்த்தவோ அவரால் (போப்பினுல்) இயலும்; இத்தகைய போப்பின் அதிகாரத்திற்கு ஆதார மாகிய கோட்பாடு, மக்களோ, அரசரோ தவறுசெய்யும் போது போப் அவர்களைத் தண்டிப்பதற்கும், (பதவி நீக்குதல், புதியவரை அமர்த்துதல் முதலியவற்றின்மூல மாக) நடவடிக்கை எடுப்பதற்கும் காரணம் இருக்கின்றது' என்பதேயாகும். மேலும் அகஸ்டினஸ் கூறுவதாவது: 'தமது அதிகாரத்தை உலகியல் விவரங்களைப்பொறுத்த வரையில் போப் கையாளுவதில், எவருக்கும் விதிவிலக்கு அளிக்க அவரால் முடியாது; ஏனெனில் இவ்வாறு விதி விலக்கு அளித்தால், போப் கடவுளுக்காகப் பணிசெய்யும் குருவாக மாட்டார்.'

தனியார் உடைமை என்பது, தேவைப்படும்போது இயற்கை யின் சட்டத்தின்படி தனியார் உடைமை ஆகாமல் போகிறது; அறவழிப்பட்ட செயல்களுக்காக, அது தெய்விகச் சட்டத்தின்படி பயன்படும்போது, தனி உடைமையாகாமல் போய்விடுகிறது; அதேபோல் தனி உடைமை அரசாங்கத்தினுடைய நன்மைக்காகச் சிவில் சட்டத்தின்படி கையாளப்படும்போது, அது தனி உடைமை என்ற தன்மை நீங்கிவிடுகின்றது. போப் கடவுளினுடைய குரு என்ற நிலையில் இந்த மூவகைச் சட்டங்களையும் விளக்கக்கூடியவர்; ஆகையால், தனியாருடைய சொத்துகளையும், அரசர்களுடைய சொத்துகளையும்கூடத் தமது சமயோசிதத்தின்பேரில் அவர் எடுத்துக்கொண்டு பயன்படுத்தலாம்.

இத்தகைய கோட்பாடுகளையெல்லாம் அகஸ்டினஸ் தாம் எழுதிய ('Summa de Potestate Ecclesiastica') என்ற நூலில் எழுதினர். இந்தக் கோட்பாடு எல்லாம் போப்பின் அதிகாரத்தை மிகைப்படுத்திக் கூறியவையாகும்; ஆயினும் போப்பினுடைய புகழ் மறைந்துகொண்டுவந்த காலத்திலேயே இவை எழுதப்பட்டன. போப்பினுடைய கோட்பாடுகள் எல்லாம் பிரெஞ்சு அரசரால்தாம் தீர்மானிக்கப்பட்டன என்ற ஒரு கருத்து நிலவிற்று. ஆகையால் பிரெஞ்சு அரசர்களுக்குப் பகைவரான ஜெர்மானிய அரசர்கள், போப்பிற்கு எதிராகப் பேரரசர் பவேரிய லூயிசை ஆதரிக்கத் தொடங்கினர். இத்தாலியிலும் ஆன்மிக உலகியல்துறைகளில் போப் பெற்றிருந்த அதிகாரத்திற்கு மதிப்புக் குறைந்தது. மேலும் ஆராய்ச்சியின் விளைவாகவும், தத்துவமுறையிலும் போப்பின் தலைமைக் கோட்பாடு அதிகாரத்திற்கு எதிர்ப்புகள் உருவாயின.

பிரிவு 2 : போப்பின் அதிகாரத்துக்கு எதிரான புதிய கோட்பாடுகள்

மேலே கூறப்பட்ட சூழ்நிலைகளில் போப்பின் தலைமைக் கோட்பாட்டிற்கு எதிராகப் பல கோட்பாடுகள் உருவாயின. இதில் 14ஆம் நூற்றாண்டில் தோன்றிய புதிய அறிவியல் இயக்கம் பெரிதும் துணைசெய்தது. ஆய்வுக்காக எல்லாவகை இலக்கியங்களும் கையாளப்பட்டன. சட்ட அறிஞருடைய கருத்துகளும், திருச்சபைச் சட்டங்களும் (Conon-Law), அரசாங்கத்தின் சிவில் சட்டங்களும், (Civil Law) ஆய்வுசெய்யப்பட்டு விளக்கப்பட்டன. திருச்சபைச் சட்டங்களுக்கு ஆதாரம், போப்புகள் அவ்வப்போது விடுத்த ஆணைகளும் (Decretals) அவற்றின்மீது எழுதப்பட்ட விளக்கங்களுமாகும். இந்தத் திருச்சபைச் சட்டங்களைத் **திருச்சபை நீதிமன்றங்கள்** (Ecclesiastical Courts) செயல்படுத்தின. சிவில் சட்டத்தில் பேரரசர் ஜஸ்ட்டினியனுடைய சட்டத்தொகுப்பும் அதன்மீது பன்னிரண்டாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட விளக்கங்களும் அடங்கியிருந்தன. சிவில் சட்ட அறிஞர்களும், திருச்சபைச் சட்ட அறிஞர்களும் தத்தம் சட்டங்களைக் கையாளும் நீதிமன்றங்களுக்குரிய அதிகார வரம்பைத் தீர்மானிக்க வேண்டியதாயிற்று. சட்ட அறிஞர்கள் பிரெஞ்சு அரசருடைய நீதிமன்றங்களின் அதிகாரத்தை ஆதரித்தனர். அவர்களுடைய ஆதரவுகளைக்கொண்டு பிரெஞ்சு அரசர் பிலிப் தமது நாட்டிலுள்ள அரச நீதிமன்றங்களின் அதிகார எல்லையை விரிவாக்கி, அவற்றைப் பழைய நிலமானியப் பிரபுக்களுடைய நீதிமன்றங்களுக்கும், திருச்சபையின் நீதிமன்றங்களுக்கும் மேலான நீதிமன்றங்களாக ஆக்கினர். இவ்வாறு வழக்கறிஞர்களும், சட்ட அறிஞர்களும் அளித்த ஆதரவைக்கொண்டு, பிரெஞ்சு நாட்டில் அரசர் தமது நீதி நிர்வாகத்தை உறுதியாக நிலைநாட்டி, நிலமானியமுறையும், திருச்சபையின் நீதியதிகாரங்களும் மறைந்துபோகும்படி செய்து, தேசிய முடியாட்சியை (National Monarchy) நிறுவினர்.

பொதுவாகப் போப்பினுடைய அதிகாரக் கோட்பாட்டுக்கு எதிர்ப்புத் தோன்றியதற்குப் பிரெஞ்சு நாட்டில் 16ஆம் நூற்றாண்டில் பிலிப் அரசருடைய காலத்தில் வலுவான முடியாட்சி தோன்றியதும் ஒரு காரணமாகும். புனித ரோமானியப் பேரரசருக்கு இருந்த அதிகாரமானது குறைந்துகொண்டுவந்தது. போப் எட்டாம் போனிபேஸ், பிரெஞ்சு அரசர் பேரரசருக்கும் போப்புக்கும் கட்டுப்பட்டவரே தவிர, சுதந்திரமானவர் அல்லர் எனக் கூறினர். உண்மையில் பேரரசருக்கு அதிகாரம் ஒன்றுமில்லை. பேரரசருடைய ஆட்சியின்மூலமாக, உலகம் முழுவதிலும் ஓர்

அரசை நிறுவவேண்டும், என்ற கருத்தைப் பிரெஞ்சுச் சட்ட அறிஞர்கள் ஒப்புக்கொள்ள மறுத்தனர். பிரான்சில் அரசருக்கு எல்லாவித மக்களும் ஆதரவளித்து, நிலமானியப் பிரபுக்களின் ஆதிக்கமும், திருச்சபையின் ஆதிக்கமும் மறையும்படி செய்தனர். பிலிப் தம் அதிகாரத்திற்குக் கட்டுப்பட்டவர் என்று போப் அவருக்கு எழுதியபோது, பிலிப் கூறிய மறுமொழியில், பிரான்சில், சமயக் குருமார்கள் வருவதற்கு முன்னரேயே பிரான்சின் அரசர் தமது நாட்டைக் காப்பாற்றும் கடமையைப் பெற்றிருந்தார் என்றும், தமது நாட்டின் நலத்திற்காக அவரால் பல நல்ல சட்டங்களைச் செய்யமுடிந்தது என்றும் கூறினர். மேலும் ஃபிராங்குகள் (Franks) என்று சொல்லப்பட்ட மக்கள், பண்டைய ரோமானியப் பேரரசர் காலத்திலேயே சுதந்திரமாக வாழ்ந்த டிராய் (Troy) நகர மக்கள் என்றும், அவர்கள் பேரரசருக்கும் அல்லது வேறு எவருக்கும் கட்டுப்படாத சுதந்திரமான மக்கள் என்றும் ஒரு கருத்துக்கூறப் பட்டது. அப்படியே அவர்கள் பேரரசருக்கோ போப்புக்கோ கட்டுப்பட்டிருந்தாலும் அது ஒரு சிறிது காலத்திற்குத்தான் நீடித் திருக்குமேதவிர, வழக்கத்தின் அடிப்படையிலே பார்த்தால், பிரெஞ்சுமக்கள் போப்பினுடைய அதிகாரத்தினின்றும், திருச் சபையின் சட்டங்களினின்றும் விடுபட்ட சுதந்திர மக்களாவர். ஆகையால், அரசர் போப்பிற்குப் பொறுப்பானவரல்லர். அவ ருடைய ஆளும் உரிமை தெய்விக உரிமையாகும். அவர் தமது நாட்டை நேராகக் கடவுளிடமிருந்துதான் பெற்று ஆளுகின்றார் என்றும் தெரிவித்தார்.

பிரிவு 3: பாரிசைச் சேர்ந்த ஜான் என்பவரும் (John of Paris), பீட்டர் டுபாய் (Peter Dubois) என்பவரும் கூறிய கோட்பாடுகள்

அரசருடைய அதிகாரக் கோட்பாட்டை ஆதரித்து, பாரிசைச் சேர்ந்த ஜான் என்பவர் பல காரணங்களைக் கூறுகிறார்:

குருமார்களையெல்லாம் பலதரங்களில் அமைத்து, அவர்களை அரசரைப்போன்ற ஒரு தலைவரின்கீழே (அதாவது போப்புக்குக்) கட்டுப்பட்டிருக்குமாறு அமைத்துவைப்பது பொருத்தமேயாகும்; உலகியல் செயல்களை ஆளுவதற்கு இவ்வாறு அமைக்கப்படுதல் வேண்டுமென்ற கட்டாயம் இல்லை. துறக்க இன்பம் பெறுதல் என்ற குறிக்கோள் (salvation) எங்கும், எல்லா மக்களுக்கும் ஒன்றேதான்; ஆகையால் இந்தக் குறிக்கோளுக்காகக் கையாளப் படும் திருச்சபையின் அதிகாரமானது எல்லா இடத்திலும் ஒரே சீராக (uniform) இருத்தல் வேண்டும். ஆனால் கிறிஸ்தவ மக்க

ளிடையே ஆன்மிகம் அல்லாத உலகியல் துறைகளில் பலவேறுபாடு கள் காணப்படுகின்றன; ஆகையால் இத்தகைய வேறுபாடுகளுக்கு ஏற்பத் தலைமை அதிகாரமும் எங்கும் ஒரே சீராகக் கையாளப் படுதற்கு அமையாமல், வெவ்வேறு மக்களுக்கும் வெவ்வேறு வகை யாக அமைக்கப்படுதல் வேண்டும். ஆன்மிகத்துறையில் உலகம் முழுவதையும் ஒருவரால் ஆளுதல் இயலும்; ஆனால் உலகியல் துறையில் யாவரையும் ஒருவர் ஆளுதல் இயலாது.

ஆன்மிகத்துறைக்கேற்ற திருச்சபை அரசாங்கம் சொற்கள் மூலமாகச் செயல்படுகிறது. உலகியலுக்கேற்ற அரசரின் ஆட்சியோ, தன்னுடைய ஆற்றலைக் கையாண்டு, மக்களைச் சில செயல்களைச் செய்யுமாறு பணித்தும், சிலவற்றைச் செய்யாதவாறு தடுத்தும் ஆளுகிறது. சொற்களை எளிதில் எங்கும் செல்லுமாறு விடுத்தல் இயலும்; ஆனால் ஆற்றலை வெகு தொலைவிலுள்ள மக்கள்மீது செலுத்த இயலாது.

இல்லற வாழ்விலுள்ள சாமானிய மக்கள் (laymen) பெற்றி ருக்கும் உடைமை தனியார் உடைமைமுறை ஆகும் (individual property). சமயக் குரு பெற்றிருக்கும் உடைமையோ திருச்சபை முழுமைக்கும் உரிய உடைமையாகும். ஆகையால் திருச்சபைச் சொத்துகளைக் கண்காணிப்பதற்கு ஒரு வேலையாள் (steward) இருந்தால் போதும். இலௌகிகர் சொத்துகளைக் கண்காணிப் பதற்கு ஒரு வேலையாள் இருந்தால் போதா. ஆகையால் போப் திருச்சபையின் சொத்துக்கு மேற்பார்வையாளரேதவிர உரிமை யாளர் அல்லர்.

சொத்துரிமைபற்றி ஆராய்ந்தால், போப் இலௌகிகருடைய உடைமைகளின்மீது சொந்தம் அல்லது உரிமை கோரினாலும் கூட, அவற்றின்மீது அவருக்கு ஆட்சி அதிகாரம் கிடையாது. சொந்த உரிமை (ownership), என்பது ஆட்சி அதிகாரத்தி னின்றும் (jurisdiction) வேறுபட்டது. அதிகாரம் உடைமை என்பது அரசருக்குத்தான் உரியது.

ஆகையால், போப் தமது மேலாண்மை அதிகாரத்தைத் திருச் சபையின் உடைமைகளின்மீது கையாளும்போது, கிறிஸ்தவ மக்களின் நலனையே குறிக்கோளாகக்கொண்டு கையாளவேண்டும். இதற்கு மாறாகச் சென்றால், அவரைப் பதவிநீக்கம் (deposition) செய்தல் கூடும். போப்பைப் பதவிநீக்கம் செய்வதற்குத் தேசிய அதிகாரியாகிய அரசருக்கு அதிகாரம் இல்லை. எனவே, போப்பைப் பதவிநீக்கம் செய்வதற்குத் திருச்சபையின் பொதுக்குழுவுக்கே

(General Council of the Church) என்று பிலிப் அரசரின் வழக்கறிஞர்கள் வாதம் செய்தனர். ஆகையால் சமயத்துறையில் முடிவான தலைமை அதிகாரம், போப்பிடம் அமைந்திருக்கவில்லை என்றும், அதனுடைய பொதுக்குழுவில் அமைந்திருக்கிறது என்ற கோட்பாடு வருங்காலத்தில் வலுவாக வளர்ந்து வரலாயிற்று.

பீட்டர் டுபாய் கூறிய கோட்பாடுகள்

அரசருடைய அதிகாரக் கோட்பாட்டை ஆதரித்த இன்னொரு சிந்தனையாளராகிய பீட்டர் டுபாய் (Peter Dubois) என்பவர் பிலிப்பின் ஆலோசனைக்குழுவில் உறுப்பினராக இருந்த சட்ட அறிஞராவார்.

இவர் அரசருடைய அதிகாரக் கோட்பாட்டைப் பழங்காலத்தவரைப்போல் காரண, கருத்து எதன்மீதும் நிறுவாமல் அதை நடைமுறைச் சூழ்நிலை ஒன்றையே ஆதாரமாக வைத்து நிறுவுகிறார்; அரசருடைய அதிகாரத்தை நிறுவுவதற்குக் கருத்து ஆதாரம் தேவையில்லை.

பிரெஞ்சு அரசர்கள் ஈடுபட்டிருந்த சிலுவைப் போர்களை உடனடியாக முடிவுக்குக் கொண்டுவந்தும் புனிதக் கிறிஸ்தவ நாட்டை முஸ்லிம்களிடமிருந்து மீட்டும் பிரெஞ்சு அரசர் தமது நிலையை உறுதிசெய்தல் வேண்டும்.

பேரரசருக்கும், போப்புக்கும் மட்டுமே அரசியல் உயர்தர அதிகாரங்களைப் பண்டையக் கோட்பாடுகள் வழங்கியபோதிலும், கிறிஸ்தவ நாட்டின் மக்களுடைய சிறப்பான நலனுக்காக வேண்டிய அளவு அரசியல் அதிகாரத்தை நடைமுறையில் பெற்றிருப்பவர் பிரெஞ்சு அரசர்தாம்.

கொள்கையளவிலே பார்த்தால் அரசியல் ஆட்சியாளர் என்ற முறையில் போப் 'கான்ஸ்ட்டன்ட்டைன் அளித்த கொடை' என்ற கருத்தின்படி, பேரரசருக்கும் மேற்பட்டவர் ஆவார்; ஆயினும், இந்தப் போப் அதிகாரத்தைக் கையாளுவதற்கு ஆற்றல் (force) இருக்கவேண்டும்; போப்புக்குத் தம்மளவில் இத்தகைய வலிமை எதுவும் இல்லை; (இதே கருத்தைப் பிற்காலத்தில் மாக்கியவெல்லி வலியுறுத்தினர்). போப் படை வீரர் அல்லர்; அவ்வாறு அவர் இருக்கவும் இயலாது. அவருடைய வேலை மனித ஆன்மாக்களைத் தீவினையினின்றும், நரக தண்டனையினின்றும் காப்பாற்றுவதேயாகும். ஆனால் நடைமுறையிலோ போப் அரசியலில் தலையிட்டுப் பலரை நரகத்தி லாழ்த்திவிட்டார். மேலும் போப்பாகத் தேர்ந்

தெடுக்கப்பட்டவர்களெல்லாம், முதிர்ந்த, குடும்பப்பற்று எதுவு மில்லாதவராகையால், உலகியல் விவகாரங்களில் அவர்களால் எந்த ஆற்றலையும் கையாள இயலவில்லை. ஆகையால், போப்புகள் ஆன் மிக நலனுக்குரிய செயல்களில் ஈடுபட்டிருக்க வேண்டுமேதவிர, மற்றச் செயல்களில் ஈடுபடுதல் கூடாது. அவர்கள் இலௌகிகத் துறையில் ஆற்றவேண்டிய பணிகளையும், அரசியலில் கிடைக்கக் கூடிய வருமானங்களையும் அவற்றைக் கண்காணிப்பதற்கு ஏற்ற தகுதியுடையவரிடத்தில் ஒப்படைத்தல் வேண்டும். இத்தகைய தகுதியுடையவர் பிரெஞ்சு அரசர் ஒருவரேதாம். ஆகையால் போப்பின் நாடுகளையெல்லாம் பிரெஞ்சு அரசர் தமது நலனுக்கு எடுத்துக்கொள்ளுதலும், இவ்வாறு அவர் கிறிஸ்தவ நாட்டின்மீது தமக்கு ஒரு தலைமையை நிறுவுதலும் வேண்டும்.

போப் தங்குதடையின்றிக் கையாண்டுவந்த 'சமயநீக்கம்' என்ற தண்டனையானது பல அழிவுக்கான விளைவுகளைப் பலர்மீது தள்ளிவிட்டது; அரசியலார் வழங்கும் தண்டனைகள் நல்விளைவுகளை ஏற்படுத்துவதைப்போல், போப்பின் தண்டனை செய்யவில்லை.

பீட்டர் கூறும் திட்டங்கள் பல நடைமுறைக்கு ஒத்துவரக் கூடியவை அல்ல; ஆயினும் அவற்றைக் கூறும் மனப்போக்குக் குறிப்பிடத்தக்கது ; இத்தகைய போக்கே வருங்காலத்தில் பிராட்டஸ்ட்டன்ட் சமயச் சீர்திருத்தத்தைத் தோற்றுவித்தது.

பிரிவு 4 : டான்ட்டேயின் கோட்பாடுகள்

பலர் போப்புக்கு எதிரான கோட்பாடுகளைக் கூறியிருக்கும் போக்கில் அல்லாமல், டான்ட்டே, போப்புக்கு எதிரான கோட் பாடுகளைப் பேரரசரின் தலைமை அதிகாரம் என்ற நோக்கிலிருந்து கூறினர். அவருடைய போக்குப் பழைமையானதாகும். அவர் கூறியதாவது :

சமயச்சார்பில்லாத (Secular) உலகப் பேரரசு என்ற குறிக் கோள் ஜெர்மானிய ஹோஹன்ஸ்டாபன் குடும்ப அரசர் காலத்தில் நிலை பெற்றிருந்தது; ஆனால் பின்னர் அது பெயரளவில்தான் நிலை பெற்றிருந்தது. இவ்வாறிருந்தாலும், பேரரசுக் கோட்பாடுதான் சிறந்தது. அரிஸ்ட்டாட்டிலின் தத்துவமும், அரசியலும், ரோமானிய, யூத வரலாறுகள், அரசாங்க, திருச்சபைச் சட்டங்கள், பைபிளி லுள்ள கதைகள் முதலியனவெல்லாம் பேரரசுக்குச் சார்பான கோட்பாட்டையே ஆதரிக்கின்றன.

'முடியாட்சி' என்ற சொல்லுக்கு, உலகியலான எல்லாத் துறைகளிலுமே எங்கும் ஒரே அரசரின் ஆட்சி அதிகாரம் என்றுதான் பொருள். இப்பொருளில் முடியாட்சி என்ற கோட்பாட்டைப் பின்வருமாறு டான்ட்டே விளக்குகிறார்:

(1) மேற்கூறிய பொருளில் முடியாட்சி உலக மக்களுடைய நன்மைக்கு இன்றியமையாததுதானு என்பதை நாம் அரிஸ்ட்டாட்டிலின் கோட்பாடுகளை ஒட்டி ஆராய்ந்தால், சில உண்மைகள் தெரியவரும். மனிதன் முழுமையாக வாழ்வதற்குப், பெரும் அளவிலேனும் அமைதியான சூழ்நிலை இன்றியமையாதது; இத்தகைய நிலைமை ஒரே ஆட்சித் தலைவரின் கீழ் அமைந்த ஒருமைப்படுத்தப்பட்ட (unified) அரசாங்கத்தின் மூலமாகத்தான் ஏற்படும். இத்தகைய அமைப்பு ஒன்றின் வடிவத்தில்தான் மனித இயல்பின் ஒற்றுமைப்பட்ட தன்மையையும் (unity of mankind), மனிதவாழ்வுக் குறிக்கோளின் ஒரே தன்மையையும் (unity of ideal of human life) காணலாம்; மேலும் ஓர் அரசருடைய ஆட்சியின்கீழ் அமைந்துள்ள அரசாங்க அமைப்பு, இறைவனுடைய ஒருமைத் தன்மையையும் சரியாக எடுத்துக்காட்டுகின்றது. இத்தகைய அரசாங்கத்தில்தான் சிறிய அரசர்களுடைய தீர்ப்புக்கு எதிரான மேல்முறையீட்டு நீதி மன்றம் ஒன்று இருக்கமுடியும். அத்தகைய அரசாங்கத்தின் ஆட்சியில் மிகக்கூடுதலான அளவில் நீதி கிடைப்பதற்கு வாய்ப்பு இருக்கின்றது; நீதி என்பது அதிகாரத்தையும் விருப்பத்தையுமே சார்ந்திருக்கிறது; உலகம் முழுவதையும் ஆளுகின்ற அரசர், தமக்கு இருக்கின்ற நிலைமையின்காரணமாக நீதியை நிலை நிறுத்துவதற்கு வேண்டிய முழுமையான அல்லது வரம்பில்லா அதிகாரத்தையும் எவராலும் மாற்றப்படமுடியாத விருப்பத்தையும் உடையவராக இருக்கிறார்.

இதேபோல மக்களுக்கு உண்மையான சுதந்திரம் என்பதும் ஒரே அரசரின் ஆட்சியில்தான் இருக்கமுடியும்; பலருடைய விருப்பங்கள் எல்லாம் மாறுபாடின்றி ஒற்றுமைப்பட்டிருந்தால் தான், ஒரே பேரரசருடைய விருப்பத்தின் ஆட்சியில் அமைதியும், இன்பமும் அடையமுடியும். ஒரே அரசருடைய ஆட்சியின்கீழ் உலகம் இருந்தபோதிலும், உலகத்தின் பல்வேறு பகுதிகளிலும் உள்ளூர் அதிகாரிகளும் ஒரு பேரரசரின் ஆட்சியின்கீழ் இருந்து வரவேண்டும். வெவ்வேறு இனமக்களுடைய இயல்புகளுக்கேற்ப அவர்கள் வெவ்வேறுவகைப்பட்ட சட்டங்களால் ஆளப்படுதல் வேண்டும். ஆனால் தலைமையாக இருக்கின்ற பேரரசர், பல்வேறுபட்ட சமயங்கள் எல்லாவற்றையும் அவற்றிற்குரிய குறிக்கோளாகிய

அமைதி என்பதன்மூலம் மாறுபாடின்றி இணைத்தல் வேண்டும். ஆகையால் **உலகப்பேரரசு என்ற அமைப்பே இலட்சிய அரசாங் கத்தின் அமைப்பு ஆகும்.**

(2) ரோமானிய மக்கள் பேரரசு முடியாட்சி அதிகாரத்தை அடைந்தது சரிதானா என்ற கேள்வியை டான்ட்டே ஆராய் கிறார். பண்டைய ரோமானிய வரலாற்றை ஆசிரியர் வெர்ஜில் (Vergil) காட்டிய போக்கில் ஆராய்ந்தால், முடியாட்சிக் காலத் திலும், குடியாட்சிக் காலத்திலும் இருந்த ரோமானிய வீரர்கள் எல்லாரும் உயர்தரப் பண்பு, உண்மையான பெருந்தன்மை ஆகியவற்றின் திரு உருவமாகத் திகழ்ந்தார்கள்; ஆகையால், ரோமானியர் அடைந்த வெற்றிகள் எல்லாம் அவருடைய பொதுநன்மைக்காகவே பயன்படுத்தப்பட்டன. அவரடைந்த எல்லா வெற்றிகளிலும் இறைவனுடைய உடன்பாட்டுக்குச் சான்று இருப்பதைக் காணலாம். மற்ற மக்களின்மீது வெற்றியடைந்த வர்கள் எல்லாம் இறைவனுடைய தீர்ப்பின்படியே வெற்றியடைந்த வராவர். போரின்மூலமாக ஏற்படும் (ordeal) தேர்ச்சிதான், 'நீதி யார் பக்கம் இருக்கின்றது?' என்பதைக் காட்டும் இறுதியான தேர்ச்சியாகும். இருவர்போரில் (Duel), எவர் வெற்றிபெறுகிறாரோ, அவரே சரியான அல்லது நியாயமுடையவராகிறார். வாத முறையின்மூலமாகவோ, போரின்மூலமாகவோ இருசாரா ருக்கும் இடையே நிகழ்கின்ற ஓர் எதிர்ப்புத்தான் எவர்பக்கம் நியாயம் இருக்கின்றது என்பதைக் காட்டுகின்ற இறுதியான முறை ஆகும். பழங்காலத்திலிருந்த போர்த் தேர்வுமுறை மிகச் சிறந்தது. இறுதியாகக் கிறிஸ்தவ சமயவிதிகளின் படியாகவும், குற்றங்களுக்கு இரங்குதல் என்ற கோட்பாட்டின்படியாகவும், பார்க்கும்போது, ரோமானியருக்கு உலகப் பேரரசு அதிகாரம் கிடைத்தது சரியே என்ற முடிவு பெறப்படுகின்றது. உலக மக்களினத்தின் தீவினை எல்லாவற்றையும் தாங்குகின்ற கிறிஸ்து வானவர் மனித இனம் முழுவதிலும் அதிகாரம் செலுத்துகின்ற ஓர் அதிகாரியினால் கொடுக்கப்பட்ட தண்டனையின்மூலமாகத் தான் மேற்படி தீவினைகளுக்குக் கழுவாய் (expiation) தேடினார். ரோமானியப் பேரரசர் டைபீரியசினுடைய ஆளாகிய பைலேட் என்ற அதிகாரி அளித்த தண்டனையை அவர் ஏற்றுக்கொண்டார் என்பதிலிருந்தே ரோமானியப் பேரரசு உலகம் முழுவதிலும் சட்டப்படியாகப் பரந்திருந்தது என்று காட்டுகின்றது.

(3) அரசனுடைய அதிகாரம் நேரடியாகக் கடவுளிடமிருந்து பெறப்பட்டதா அல்லது கடவுளின் ஏவலாள் எவரிடத்திலிருந்தும் பெறப்பட்டதா என்றும் ஆராயலாம். போப்பினிடமிருந்தே

பேரரசு பட்டமும் அதிகாரமும் பெறப்பட்டன என்ற கோட்பாட்டை மிக வன்மையாக டான்ட்டே மறுத்துரைக்கின்றார். திருச்சபையினுடைய ஆணைகளெல்லாம் யாவராலும் மதிக்கப்படக்கூடியவை; ஆனால் அவைகளுக்குத் திருச்சபைக்கு ஆதாரங்களாக அமைந்துள்ள கிறிஸ்தவ வேத நூல்களைவிடக் கூடுதலான மதிப்போ முதலிடமோ கொடுக்கக்கூடாது. இவ்வாறு டான்ட்டே கூறுவது பிராட்டஸ்ட்டன்ட் சமயச்சீர்திருத்தம் தோன்றுவதற்கு அறிகுறியாகும். அரிஸ்ட்டாட்டிலின் தருக்க நூலிலும், கிறிஸ்தவ வேதப்புத்தகங்களிலும் காணப்படுகின்ற பழைய செய்திகளை எல்லாம் அவர் ஆராய்ந்து, சமயநிறுவனத்தின் தலைமை அதிகாரத்தை எதிர்க்கின்றார். எந்தப் பேரரசரும் தமது பேரரசின் ஒற்றுமையை நிலைநிறுத்தல் வேண்டுமேதவிர, அதனைச் சீர்குலைக்கக்கூடிய செயல் எதனையும் செய்வதற்கு உரிமையுடையவரல்லர். போப் கடவுளிடமிருந்தோ அல்லது மனித இனத்தின் பெரும்பாலானவரிடமிருந்தோ அரசியல் அதிகாரம் எதனையும் பெறவில்லை; ஆகையால் பேரரசுக்குரிய அதிகாரம் எதனையும் அவரால் பேரரசருக்கு வழங்க இயலாது. இதற்கு நேர்மாறாகக் கடவுளே மனிதனுடைய நலனுக்கு இன்றியமையாத இரண்டு வகை அதிகாரங்களையும் படைத்துள்ளார்; அவரே ஒருவகை அதிகாரத்தை உலகியல் சார்ந்த பேரரசர் ஒருவருக்கு நேரடியாக அளித்துள்ளார்.

டான்ட்டே இவ்வாறு எழுதிய கருத்துகள், அறிவியல் கோட்பாட்டிற்கு ஏற்ப அமைந்தவை; மேலும் அவை அப்போது இத்தாலியில் நிலவிய குழப்பமான அரசியல் சூழ்நிலைகளினாலும் தூண்டப்பட்டவை என்பதும் தெளிவாகத் தெரிகின்றது.

இயல் பதினான்கு

பாடுவா நகரத்தைச் சேர்ந்த மார்சிலியோ

(Marsiglio of Padua)

(c 1275 — c 1343)

பிரிவு 1: மார்சிலியோ சிந்தித்த சூழ்நிலைகள்

இடைக்காலத்தின் இறுதியில் வாழ்ந்த முக்கியமான அரசியல் சிந்தனையாளர் மார்சிலியோ என்பவர். இவர் இத்தாலிநாட்டில் பாடுவா (Padua) என்ற நகரத்தில் பிறந்தார். இவர் வாழ்ந்த காலம் ஏறக்குறைய கி.பி. 1275ஆம் ஆண்டுக்கும், கி.பி. 1343ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலம் ஆகும். இவர் புனித ரோமானியப் பேரரசின் அதிகாரத்தை ஆதரித்தும், போப்பும், குருமாரும் வறுமையில் வாழ்ந்து அரசியலில் தலையிடாமல் ஆன்மிக நலன் ஒன்றையே கவனித்தல் வேண்டுமென்று கூறியும் கோட்பாடுகளை வகுத்தார். இவர் மனிதருடைய விருப்பமே சட்டம் ஆகுமென்றும், அவருடைய அறிவு, சட்டம் ஆகாது என்றும் கூறினார். இவர் வகுத்த திருச்சபையின் மன்ற ஆட்சிக் கோட்பாடு பதினான்காம், பதினைந்தாம் நூற்றாண்டுகளில் பின்பற்றப்பட்டது.

டான்ட்டே முடியாட்சியை ஆதரித்துத் தமது அரசியல் கோட்பாட்டை வகுத்தகாலத்தில் இத்தாலியில் குழப்பமான அரசியல் சூழ்நிலைகள் நிலவின. சமய நிறுவனத்தின் அரசியல் செயல்களே இக் குழப்பத்துக்குக் காரணம் ஆகுமென்று அவர் கருதியே, பேரரசரின் ஆதரவாளர்களான கிபல்லின் கட்சியினருடைய சார்பாகத் தம் கோட்பாடுகளை வகுத்தார். இக்காலத்தில் ஜெர்மனியிலும் அமைதியான சூழ்நிலை இல்லை. பேரரசைத் தேர்ந்தெடுப்பதில், தேர்வாளர்களுக்குள் நல்லிணக்கம் ஏற்படவில்லை; இதில் ஓர் உள்நாட்டுப் போரே தோன்றிற்று. பேரரசர் பதவிக்கு அதிகாரம்

எதுவும் இல்லாமல் இருந்தும், அவரைத் தேர்ந்தெடுப்பதில் போர் தோன்றியதைத் தமக்குச் சாதகமாக வைத்துக்கொண்டு, போப் இருபத்திரண்டாம் ஜான், தாமே பேரரசருக்குரிய அதி காரங்களைக் கையாளுவதற்கு உரிமை உடையவரென்று கோரினர். ஜெர்மனியில் இப் பதவிக்குப் போட்டியிட்டவர்களில் எவரையும் இவர் ஒத்துக்கொள்ளாமல், இத்தாலியில் தம் கட்சியினராகிய கெல்ப்புகளைத் (Guelphs) துணையாக வைத்துக்கொண்டு, போப்பு மூன்றும் இன்னசென்ட்டைப்போல, ஜெர்மானிய அரசியலில் தமது ஆதிக்கத்தை நிலைநாட்ட முயன்றார். ஆனால் ஜெர்மானிய உள்நாட்டுப் போரில், பவேரிய அரசர் லூயிஸ், ஆஸ்திரிய அரசர் பிரடரிக்கைத் தோற்கடித்துப் பேரரசராக வந்து இத்தாலியிலும், தமது பேரரசு அதிகாரத்தை நிலைநாட்ட முயன்றார்.

இதனை எதிர்த்துப் போப்புகள் — (அப்போது, போப்புகள் பிரெஞ்சு அரசருடைய கட்டுப்பாட்டில் அவிக்னோனில் இருந்தனர்)– ஆணைகள் விடுத்து லூயிசையும், அவருடைய ஆதரவாளர்களையும் சமயநீக்கம் செய்யவே, பழையபடி உயர்தர உலக ஆன்மிக அதி காரக் கோட்பாட்டுக்கும், உயர்தர உலக அரசியலதிகாரக் கோட் பாட்டுக்கும் போராட்டம் தொடர்ந்தது. 1347-ல் லூயிஸ் இறந்து போகுமளவும் இது நடந்தது; இருவகை அதிகாரக் கோட்பாடு களுக்கிடையே இவ்வாறு போராட்டம் நடந்தபோதிலும், 'பேரரசு' என்ற அமைப்பு நடைமுறையில் இல்லாத ஒரு நிலைமையை யாவரும் உணர்ந்திருந்ததனால், அவருடைய கட்சி பலவீனமாக இருந்தது. பிரான்ஸ், இத்தாலி, ஜெர்மனி ஆகிய நாடுகளுக்கிடையே வலிமைப்போட்டி தோன்றிற்று. இத்தாலிய நகரங்கள் சுதந்திரமாக வருவதற்குக் குழப்பம் விளைவித்துக்கொண்டு இருந்தன. இந்தச் சூழ்நிலையில் பேரரசருடைய அதிகாரக் கோட்பாட்டின் நோக்கம், அவருக்கு (ஜெர்மனிக்கு) இத்தாலியில் தலைமை அதிகாரத்தை நிறுவுதலும், போப்பின் தலைமை அதிகாரத்தின் நோக்கம் ஜெர்மனிக்கு எதிராகப் பிரான்சின் தலைமை அதிகாரத்தை விரிவாக்குதலும் என்று ஆயின.

1322ஆம் ஆண்டில் திருச்சபையில் கோட்பாட்டின் அடிப் படையில் – ஒரு கோட்பாடு தொடர்பாக – பூசல் ஒன்று இருந்தது; இதன்விளைவாகப் போப்பினுடைய ஆதரவாளர் பலரே அவருக்கு எதிரிகளாகிப் பேரரசருடைய கோட்பாட்டை ஆதரிக்கத் தொடங் கினர். பிரான்சிஸ்க்கன் துறவிகள் நெடுங்காலமாக, போப்புகளுக்கு ஆதரவளித்து வந்தனர்; அவர்களுடைய அமைப்பின் ஒரு விதியின் படி, அவர்கள், சொந்தத்தில் உடைமை எதுவும் வைத்துக்கொள் ளாமல், வறுமையை மேற்கொண்டும், பிச்சை எடுத்துக்கொண்டு

வாழ்ந்தும், கிறிஸ்துவின் போதனைகளைச் சமுதாயத்தில் எளிய மக்களிடத்துப் பரப்புதல் வேண்டும். ஆயினும், நடைமுறையில் ஏற்பட்ட காலமாறுதலின் விளைவாக அவர்கள் உடைமைகளைச் சேர்த்துப் பெரும் செல்வர்களாயினர். போப் 22ஆம் ஜான், கிறிஸ்துவின் போதனையில் கூறப்பட்டுள்ளதும், பிரான்சிஸ்க்கன் துறவிகளால் பின்பற்றப்பட்டதுமான வறுமைக் கோட்பாட்டைச் சமயநிலைக்குப் புறம்பானது என்று மறுத்துரைத்து, பிரான்சிஸ்க்கன் துறவிகள் தங்களுடைய வறுமை உறுதிமொழிகளுக்கு மாறாகச் செல்வம் தேடிய வழிகளையெல்லாம் தடைசெய்துவிட்டார். இதனால் அவர் பல சமயத்துறைத் தலைவர்கள், பிரான்சிஸ்க்கன் துறவிகள், அவர்களுடைய ஆதரவாளர்களாகிய மார்சிலியோ, ஜான்டன், ஆக்காம் நகரத்தைச் சேர்ந்த வில்லியம் ஆகியோருடைய எதிர்ப்புக்குள்ளானார். அவரை எதிர்த்தவர்கள் இறையியல் நூலினின்றும் பல மேற்கோள்களை எடுத்துக்காட்டி, வாதமுறையை நன்கு பயன்படுத்தினர். போப் 22ஆம் ஜான், சமயநெறிக்கு மாறானவர் (heretical) என்று குற்றம் சாட்டப்பட்டார். போப்பை எதிர்த்தவர்கள் ஜெர்மனிக்குச் சென்று, அங்குப் பேரரசர் லூயிசுக்கு ஆதரவளித்தும், போப்பின் தலைமையை எதிர்த்தும் வரலாயினர்.

இவ்வளவு இருந்தபோதிலும், அவர்களுடைய நோக்கம் போப்புக்கு எதிரான கோட்பாட்டை ஆதரிக்கவேண்டும் என்பதேதவிர, ஜெர்மானியப் பேரரசருக்குச் சார்பாக இருத்தல்வேண்டும் என்பது அன்று. அவர்கள் போப்பினுடைய குறைபாடுகளையும் திருச்சபையில் உள்ள குறைபாடுகளையும் எடுத்துச் சொன்னார்களேதவிர, அரசின் சிறப்பையும், அதனோடு இணைந்துள்ள வலிமையையும், பண்பையும் வற்புறுத்திச் சொல்லவில்லை. திருச்சபையை, அதனுடைய குறைபாடுகளைக் களைந்து, மாறுபட்ட போப்பினின்றும், தீய ஆட்சியினின்றும், காப்பாற்றும்பொருட்டே அவர்கள் கோட்பாடுகளை வரையலாயினர். சமயத்துக்கு மாறாக இருக்கின்ற (Heretical) தீய போப்பினின்றும் திருச்சபையைக் காப்பாற்றுதல் வேண்டுமாயின், கிறிஸ்தவ சமயத்தைச் சேர்ந்த எல்லா மக்களும் அடங்கிய கூட்டத்தினால்தான் அவ்வாறு செய்யமுடியும். இவ்வாறு **திருச்சபையில் முடிவான தலைமையான அதிகாரம், அதனுடைய பொதுக்குழுவில் (அதாவது General Council) இருக்கிறது** என்ற கருத்து உருவாயிற்று. இந்தக் கருத்து, பிரான்சில் இருபது ஆண்டுகளுக்கு முன்பே உருவாயிற்று. இந்தக் கோட்பாடு வளர்ந்ததற்குப் புனித ரோமானியப் பேரரசே நல்ல சூழ்நிலையை உருவாக்கிற்று; குழுவின் தீர்மானங்களைச் செயல்படுத்துவது என்பதன் மூலமாகப் பேரரசரே அதிகாரம் உடையவர் என்ற நிலைமை தோன்றிற்று.

பிரிவு 2: மார்சிலேயோ கூறிய கோட்பாடுகள்

மார்சிலியோவும், ஜான்டன் நகரத்தைச் சேர்ந்த ஜான் என்பவரும் சேர்ந்து எழுதிய டிபன்ஸர் பேஸிஸ் (Defensor Pacis) என்ற நூலில் சில கோட்பாடுகள் காணப்படுகின்றன. ஆனால், இந்த நூல் முழுவதையும் மார்சிலியோதான் எழுதினர் என்றும் கூறப்படுகிறது. இதன் முதற்பகுதியில் அரசைப்பற்றிய கோட்பாடுகளும், இரண்டாம் பகுதியில் திருச்சபைபற்றிய சில கோட்பாடுகளும் காணப்படுகின்றன. இவர் கூறும் கோட்பாடுகள் எல்லாம் இடைக்காலத்தினுடைய போக்கைவிடுத்துத் தீவிரமான கருத்துகள் அடங்கிய பிராட்டஸ்ட்டன்ட் சமயச் சீர்த்திருத்த காலத்தையும், புரட்சிக் காலத்தையும் காட்டுகின்றன. இவர் எழுதிய நூலின் தலைப்பே அமைதியின் பாதுகாப்பாளர் (Defender of the Peace) என்று பொருள்படும்.

டான்ட்டே ஒழுங்கை நிலைநிறுத்துவதற்குவேண்டிய அதிகாரத்தை உடைய ஒருவர் வேண்டும் என்று கூறிப் பேரரசருடைய ஆட்சியை ஆதரித்ததுபோல, மார்சிலியோவும் பேரரசருடைய ஆட்சியும் இன்றியமையாதது என்று கூறுகிருர். அக்காலத்தில் நிலவிய குழப்பங்களும், கலகங்களும் பேரரசருடைய ஆட்சி இன்றியமையாதது என்பதை எடுத்துக்காட்டுகின்றன. பொருள் ஈட்டும் நோக்கம் வரம்புகடந்து போவதனல், ஆடம்பரமும், வீண்செலவும் திறமையின்மையும் வளருகின்றன; இந்தத் தீய விளைவுகளை நீக்குவதற்குப் பிரான்சிஸ்க்கன் துறவிகள் மேற்கொண்ட விதியை மேற்கொள்ளுதல் வேண்டும் (பிரான்சிஸ்க்கன் துறவிகள் கையாண்ட வறுமை விதியின்படி அத் துறவிகள் எப்பொருளையும் தங்களுக்குச் சொந்தமானவையாகக் கொள்ளாமல் அப் பொருள் ரோமன் கிறிஸ்தவத் திருச்சபையின் உடைமையாக வைத்து, அதன் பயனைமட்டும் தாங்கள் அடைந்துவந்தனர்).

மனிதர்கள் கூடிவாழ்வதென்பது அவர்களுடைய இயல்பு; இந்தச் சமுதாய வாழ்க்கையினுல்தான் அரசாங்கம் தோன்றுகிறது.

அறிவுள்ள மக்கள் வாழ்கின்ற நாட்டில் செயல்படுகின்ற ஆற்றல் எது என்ருல், அது சட்டமேயாகும். சட்டம் செய்பவர் தாம் அரசில் முக்கியமானவர் ஆவார். அரிஸ்ட்டாட்டில் கூறுகிறபடி ஒரு நாட்டின் மக்கள் அல்லது அவருள் பெரும்பாலானவர் சட்டம் செய்கின்றவர் ஆவர்; அவர்களே சமுதாயச் செயல்களில் எல்லாம் எவை செய்யப்படுதல் வேண்டும்; எவை செய்யப்படாமல் தடுக்கப்படுதல் வேண்டும் என்று தீர்மானிக்கின்றனர்.

இவ்வாறு சட்டமானது அதைச் செய்கின்ற மக்களுடைய விருப்பத்தை வெளிப்படுத்துகிறது; மக்கள் ஒரு மன்றமாகக் கூடி, நேரான முறையிலோ, தங்களுடைய பிரதிநிதிகள் அடங்கிய குழுவின்மூலமாகவோ சட்டம் செய்யலாம். பிரதிநிதிகள் மன்றம் சட்டத்தைச் செய்தாலும்கூட மக்களே உண்மையில் சட்டம் செய்பவராவர்.

சட்டம் இயற்றும் அலுவல்களுக்கும், நிர்வாக அலுவல்களுக்கும் வேறுபாடு இருக்கிறது. நிர்வாக உறுப்பினுள் அரசர்களும் இருக்கின்றனர்.

மேற்கூறிய கோட்பாடு **மக்கள் இறை உரிமைக் கோட்பாடு** **(Popular Sovereignty Theory)** ஆகும். இந்தக் கோட்பாடு முன்னரேயே ரோமானியச் சட்டத்தில் அமைக்கப்பட்டிருந்த ஒரு கருத்து ஆகும்; ரோமானியச் சட்டத்தின்படி பேரரசரே சட்டத்தைச் செய்தபோதிலும்கூட அவர் மக்களுடைய பிரதிநிதி என்றே கொள்ளப்பட்டார். பண்டையக் கிரேக்க நகரரசுகளில் இருந்ததைப் போல, மார்சிலியோ கூறும் சட்டமியற்றும் அதிகாரியும், சட்டத்தை மீறுபவர்களைத் தண்டிப்பதற்கு அதிகாரம் உடையவர் ஆவார்.

பேரரசர் உலகம் முழுவதையும் ஆளும் வரம்புகள் இல்லாத அதிகாரம் உடைய ஆட்சியாளர் ஆகமாட்டார். அவருடைய அதிகாரங்களுக்கு நடைமுறையில் பல வரம்புகள் இருக்கின்றன. இந்த வரம்புகளைமீறி அவர் தம்முடைய அதிகாரத்தைக் கையாளுதல் இயலாது. அவர் கூறும் அரசர் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சியாளர் ஆவார்; எனவே புனித ரோமானியப் பேரரசருக்கு, மரபு வழியாக உள்ள முக்கியத்துவமெல்லாம், மார்சிலியோ கூறுகின்ற பேரரசருக்கு இல்லை.

எனவே, பேரரசரின் அதிகாரக் கோட்பாட்டை மார்சிலியோ ஆதரித்தாலும், அவர் பேரரசருடைய அதிகாரத்திற்கும் சில தகுதிகளையும், வரம்புகளையும் வகுக்கின்றார்.

அவர் தமது நூலின் இரண்டாம் பகுதியில் திருச்சபையைப் பற்றி ஒரு கோட்பாட்டை வகுக்கிறார். இதிலும் மக்கள் இறைமை அதிகாரக் கோட்பாடு (Doctrine of Popular Sovereignty) என்பது வலியுறுத்தப்பட்டுச் சமயநெறியைச் சார்ந்த வாழ்க்கைத்துறையிலும் கொண்டுவரப்படுகின்றது. அவர் வகுத்த கோட்பாடு பின்வருமாறு:

கிறிஸ்தவத் திருச்சபை என்ற அமைப்பானது கடவுள் வகுத்த **மனித வாழ்க்கைத் திட்டத்தின் விளைவாகத் தோன்றியுள்ள ஒரு**

சமுதாயக் கூட்டு அமைப்பு (Social Aggegate) ஆகும். ஆகையால் திருச்சபையின் முக்கியமான பகுதியினர் அதிலுள்ள குருமார்கள் மட்டுமல்லர்; எல்லாக் கிறிஸ்தவ மக்களும் அடங்கிய தொகுதியே யாகும். பல தனிப்பட்ட ஆட்கள் சேர்ந்த மற்றெல்லாக் கூட்டு அமைப்புகளையும்போலவே, திருச்சபையிலும் **கடவுளுக்குக் கட்டுப் பட்ட உயர்தர அதிகாரம்** அதிலுள்ள எல்லாரிடமும்தான் இருக் கிறதே தவிர, அதில் உள்ள ஒரு பகுதியினரிடம்மட்டுமே இருக்க வில்லை. இத்தகைய உயர்தர அதிகாரத்தை வெளிப்படுத்துவதற்கு அல்லது கையாளுவதற்கு இருக்கும் உறுப்புத்தான் பொதுக்குழு (General Council) அல்லது மன்றமாகும். இந்தக் குழுவில் எல்லாக் கிறிஸ்தவர்களும் இருக்கின்றனர்; அல்லது உலகிலுள்ள ஒவ்வொரு மாநிலம் அல்லது சமுதாயத்திலும் வாழும் கிறிஸ்தவ மக்களுடைய எண்ணிக்கைக்கேற்ற விகிதத்தில் ஒரு பிரதிநிதியாவது தேர்ந் தெடுக்கப்பட்டு, இவ்வாறு பல பிரதிநிதிகளும் அடங்கிய ஒரு பொதுக்குழுவாகவும் அது இருக்கலாம். இந்தக் குழுவில் குரு மாரும், இல்வாழ்வாரும் பங்குபெறுதல் வேண்டும்; குருமாருக்குக் கிறிஸ்தவத் தெய்விகச் சட்டங்களில் நல்ல படிப்பும், பயிற்சியும் இருப்பதனால், அவர்களுக்குப் பங்கு இருத்தல் வேண்டும். இந்தப் பொதுக்குழுவின் அலுவல்கள் எல்லாம் பெரும்பான்மை வாக்கு என்ற முறையின்மூலம்தான் தீர்மானிக்கப்படுகின்றன. கிறிஸ்தவ வேதங்களை எல்லாம் திட்டவட்டமாக விளக்குதல், கிறிஸ்தவக் கோயில்களில் தொழுகை நடக்கும்போது பின்பற்றவேண்டிய சடங்குமுறைகளை ஒழுங்குபடுத்துதல், சமயநெறிக்கு மாறுகச் செயல்படுபவர்களைச் சமயநீக்கம் செய்ய ஆணை விடுத்தல், திருச் சபையின் அரசாங்க அமைப்பிலே உள்ள அலுவல்களில் தக்க ஆட்களை அமர்த்துதல் ஆகிய இவையெல்லாம் இப் பொதுக்குழுவின் அலுவல்கள் ஆகும். உலகியல் துறையில் உள்ளவற்றை ஒழுங்கு படுத்துவதற்கு அரசாங்கச் சட்டம் எவ்வாறு இயற்றப்படுகின்றதோ, அதேபோல ஆன்மிகத்துறையில் இந்த உயர்தர மன்றம் சட்டங்களை இயற்றுதற்குத் தகுதியுடையதாகும். திருச்சபையின் அலுவலர்கள் எல்லாரும் – போப்பிலிருந்து, கீழ்நிலையிலுள்ள சமயக் குரு வரையில் எல்லாரும் இதனுடைய தீர்மானங்களுக்குக் கட்டுப்பட்டிருத்தல் வேண்டும்.

சமய நிறுவனமும், சிவில் அரசாங்கமும் இருவேறு வகைப் பட்ட நிறுவனங்கள் ஆகும். திருச்சபைக்குத் தனது துறையில் தனக்குமட்டும் அதிகாரமோ, வேறு எந்த நிறுவனத்தோடும் சேர்ந்து செயல்படும் அதிகாரமோ இல்லை. அதனுடைய அலுவல் மக்கள் தங்கள் எதிர்கால வாழ்க்கையில் துறக்க இன்பத்தை அடை வதற்குரிய சமய நம்பிக்கையை வளர்த்தலேயாகும். இதற்காக

அது கையாளவேண்டிய வழி மக்களுக்கு நன்னெறியைப் புகட்டி அதில் அவர்கள் ஈடுபடுமாறு தூண்டுவதேயாகும்; ஆனல் இதற்காக அது மக்கள்மீது கட்டாயமானமுறை எதனையும் கையாளுதல் கூடாது. வன்முறை அல்லது கட்டாயம் என்பது அதனுடைய செயல்வட்டத்திற்குப் புறம்பானது என்ற ஒரே காரணத்தினல்தான், திருச்சபையின் பொதுக்குழுவும், அதன் எந்த அலுவலரும் தம் தீர்மானங்களைக் கட்டாயமானமுறையில் செயல்படுத்த முடியாது.

ஆகவே, கிறிஸ்தவ மக்களின் உலகியல் வாழ்க்கையில் தவறுகளும், ஒழுங்கீனங்களும் ஏற்படாவாறு தடுப்பதற்காகத்தான் இந்தப் பொதுக்குழு கூடுதல் வேண்டும் என்ற காரணம் தோன்றிற்று. ஆகையால் பொதுக்குழுவைக் கூட்டவும், அதன் உறுப்பினர்களைச் சேர்த்தலும் அல்லது நீக்கலும், அதனுடைய கருத்துகளைக் குருமார்மீதும் மற்றச் சாதாரண மக்கள்மீதும் செயல்படுத்துதலும் ஆகிய அதிகாரங்களெல்லாம் உயர்தரச் சட்டம் இயற்றும் அதிகாரியிடம் இருக்கின்றன. சமயநீக்கம் செய்தல் முதலிய தண்டனைகள் எல்லாம், இந்தச் சட்டம் இயற்றும் அதிகாரியின் அதிகாரத்தின் பேரில்தான் நிறைவேற்றப்படுதல் வேண்டும்; பொறுப்பில்லாத மற்ற அலுவலர்மூலம் இத்தகைய தண்டனை நிறைவேற்றப்படுமானல், மக்களுடைய அமைதியான வாழ்க்கை கெடும்.

இறைமை அதிகாரம், பிரதிநிதித்துவம் ஆகியவைபற்றி மார்சிலியோ கூறிய கோட்பாடுகள்

முழுமையான, வரம்பில்லாத அதிகாரம் (plenary power) ஒன்று உண்டு. இத்தகைய அதிகாரத்தை ஆன்மிகத் துறையிலும் உலகியல் துறையிலும் போப் முன்னொரு காலத்தில் பெற்றிருந்தார். ஆனல், இத்தகைய இறைமை அதிகாரக் கோட்பாட்டை மார்சிலியோ ஒதுக்கிவிடுகிறர். அவருடைய காலத்தில் இருந்த மற்ற எல்லாரையும்போலவே மார்சிலியோ இறைமை அதிகாரத்திற்கு வரம்பு உண்டு என்று எண்ணினர். அரசில் அதிகாரத்திற்கெல்லாம் வரம்பு எதையும், நூலளவில் காண இயலாது. இந்தக் கோட்பாடு 18ஆம் நூற்றாண்டில்தான் தோன்றிற்று. மார்சிலியோ நூலளவிலும் வரம்பு கூறுகிறர்.

அரசு என்பதற்கும் அரசாங்கம் என்பதற்கும் வேறுபாடு உண்டு (State and Government). இந்தக் கருத்து இடைக் காலத்தின் இறுதியில் மார்சிலியோவினல்தான் முதன்முதலாக வெளிப்படுத்தப்படுகின்றது.

சட்டம் இயற்றும் அதிகாரியும், நிர்வாக அதிகாரியும் வெவ்வேருனவர். சட்டம் இயற்றும் அதிகாரம் அரசரிடத்திலோ, வேறு எந்த அரசாங்க உறுப்பினரிடத்திலுமோ வைக்கப்படலாம்.

சட்டம் இயற்றும் உறுப்பு எதுவாக இருந்தாலும், அதற்கும் மேலான அதிகாரத்தையுடையதாக மக்கள் சமுதாயம் இருக்கின்றது; அதனுடைய கூட்டான அல்லது மொத்த விருப்பமே (Collective will) சட்டத்தின் சாரமாக அமைந்திருக்கின்றது. மக்களுடைய கூட்டான வாழ்வில்தான் அரசின் முக்கிய இயல்பே அடங்கியிருக்கின்றது. ஆகையால் எந்தச் சட்டத்தையும் தீர்மானிப்பதற்குப் பெரும்பான்மையான குடிமக்களுடைய ஒப்புதல் வேண்டும்.

திருச்சபையின் ஆட்சிக்குப் பிரதிநிதித்துவ அரசாங்க (Representative Government) அமைப்பு ஏற்றதாகும். பிரதிநிதித்துவமுறை என்ற கருத்தானது, 'பேரரசரே ரோமன் மக்களுடைய பிரதிநிதியாக இருக்கின்ருர். ஜெர்மனியிலுள்ள இளவரசர்கள் எல்லாரும் உலகமக்கள் அனைவருக்கும் பிரதிநிதிகளாகவும் இருக்கின்றனர்' என்ற கோட்பாட்டில் அமைந்துள்ளது.

கிறிஸ்தவ மக்கள் வாழ்கின்ற உலகத்திலே ஒவ்வொரு மாநிலத்திலுமுள்ள மக்களின் எண்ணிக்கைக்கும், இயல்புக்கும் ஏற்றவாறு அந்த மாநிலங்களின் மக்களுக்குப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் உரிமை இருக்கவேண்டும். கிறிஸ்தவத் திருச்சபையின் தொடக்க வரலாற்றில் செயல்பட்ட மன்றங்களைத் தம் (Councils) மனத்தில் வைத்துக்கொண்டே, மார்சிலியோ பிரதிநிதித்துவக் கோட்பாட்டைக் கூறினுர். ஆனல் புனித ரோமானியப் பேரரசில் அடங்கியுள்ள மாநிலங்களுக்கு விகிதாசாரப் பிரதிநிதித்துவம் (Proportional Representation) வழங்கப்பட வேண்டுமென்று அவர் கூறவில்லை. ஏறக்குறைய இவர் காலத்தில் வாழ்ந்த வில்லியம் என்பவர் (William of Occam) கூறியதைப் போல, மார்சிலியோ கூறியதும், பிராட்டஸ்ட்டன்ட் சமயச்சீர்திருத்தம் தோன்றுவதற்கு முன்பிருந்த காலச் சூழ்நிலையை நமக்கு எடுத்துக்காட்டுகின்றன.

மார்சிலியோ எழுதிய கோட்பாடுகளின் விளைவாக ஆன்மிகத் துறை அல்லது சமய அதிகாரிகளின் நிலைமையானது உலகியல் துறையதிகாரிகளின் நிலைமைக்கொப்பக் கொண்டுவரப்பட்டது. முன்பு போப்பின் ஆதரவாளர்கள் அரசியலில் அரசரின் அதிகாரி

களைத் தாழ்ந்த நிலையிலுள்ளவர்கள் என்று கருதினர்; இப்போது மார்சிலியோ எழுதிய கோட்பாடுகளின் விளைவாகச் சமயநிலைய அதிகாரிகளும் தாழ்ந்த நிலைக்குக் கொண்டுவரப்பட்டனர். 'துறக்க வாழ்வை அளிப்பதற்குரிய அதிகாரமும், கிறிஸ்தவ மக்களை இணைக்கவும் பிரிக்கவும்கூடிய அதிகாரமும், கிறிஸ்தவக் குருமார்களிடமே உள்ளது' என்ற கோட்பாட்டை மார்சிலியோ வன்மையாக மறுத்துரைத்தார். பாவியை மன்னிப்பதும், பாவிக்குத் தண்டனை வழங்காமல் விடுவதும் குருவினால் செய்யமுடியாது; கடவுளால்தான் செய்ய இயலும்; குருவினுடைய வேலையெல்லாம், நடைபெறும் நிகழ்ச்சியை, 'தெய்வச் செயல் இது' என்று உறுதி கூறுவது ஒன்றேதான். குருவினிடம் துறக்கவாழ்விற்குரிய திறவுகோல்கள் கொடுக்கப்பட்டிருந்தபோதிலும், 'எவருக்குத் துறக்க வாழ்வு உரியது?' என்று தீர்மானிக்கக்கூடிய அதிகாரம் அவரிடம் இல்லை. மார்சிலியோ கூறிய கோட்பாடுகள் எல்லாம், போப்பின் தலைமையதிகாரக் கோட்பாட்டை மறுத்து அவரை, அதிகாரத்தைப் பொறுத்தவரையில், மற்றப் பிஷப்புகளுக்கு ஒத்தநிலையிலே வைத்தன. சமயநிறுவன அமைப்புமுறையிலே போப்பிற்கு மிக உயர்ந்த மதிப்பிற்குரிய இடம்மட்டுமே உண்டு. பொதுவாகப் பார்க்கும்போது போப்பின் தலைமையதிகாரத்திற்கு ஓர் எதிர்ப்பாகவே மார்சிலியோவின் கோட்பாடு அமைந்துள்ளது என்று தெளிவாகத் தெரிகின்றது.

இயல் பதினைந்து

ஆக்காம் நகரத்தைச் சேர்ந்த வில்லியம்

(William of Ockam)

(c 1300 — c 1349)

பிரிவு 1: தோற்றுவாய்

இடைக்காலத்தின் இறுதியிலே வாழ்ந்த அரசியல் சிந்தனையாளருள் இங்கிலாந்து நாட்டின் ஆக்காம் (Occam அல்லது Ockam) நகரத்தைச் சேர்ந்த வில்லியம் என்பவரும் ஒருவராவார். இவர் ஆங்கில அறிவு இயக்கத்தைச் சேர்ந்த (Scholasticism) ஒரு தத்துவ ஆசிரியரும் ஆவார். இவர் வாழ்ந்தகாலம் ஏறக்குறைய 1300ஆம் ஆண்டுக்கும், 1349ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலம் என்று ஊகிக்கப்படுகிறது. இவர் ஆக்காம் நகரத்தில் பிறந்தார்; கல்விப்பயிற்சி பெற்றபின்னர் இவர் பிரான்சிஸ்க்கன் துறவிகளுடைய குழுவில் சேர்ந்தார். போப் இருபத்திரண்டாம் ஜான், 'பிரான்சிஸ்க்கன் துறவிகள் கிறிஸ்தவ வேதநெறிப்படி வறுமைவாழ்வை மேற்கொள்ளுவதற்கான உறுதிமொழியைக் கடைப்பிடிக்க வேண்டுவதில்லை' என்று ஆணை வெளியிட்டபோது, வில்லியம் அவரை மறுத்து, வேதநெறிப்படி பிரான்சிஸ்க்கன் துறவிகளுக்கு வறுமைவாழ்வுக்குரிய உறுதிமொழி உண்டு என்று கூறினர். இவர் சிறையில் தள்ளப்பட்டார்; இவர் சிறையிலிருந்து தப்பிச்சென்று, தமது வாழ்வின் எஞ்சிய பகுதியை ஜெர்மனியில் மியூனிச் (Munich) நகரத்தில் கழித்தார். இவர் பிரான்சிஸ்க்கன் குழுவின் தலைவருடன் சேர்ந்துகொண்டு, புனித ரோமானியப் பேரரசர் பவேரியாவின் லூயிஸ் என்பவரை ஆதரித்துப் போப்பின் உலகியலதிகாரத்தை மறுத்தார். தாம் எழுதிய 'உரையாடல்' (Dialogue) என்ற நூலில், இவர் 'சிவில் ஆட்சி சுதந்திரமான இயல்புடையது' என்ற கோட்பாட்டை உரைத்தார்; இக்

கோட்பாடு இக்காலக் கோட்பாடு ஆகும்.[1] இவர் வகுத்த இயற்கை நிலைக் கோட்பாட்டில் (Natural philosophy) 'தனியாருடைய நிலைமையே உண்மையானது' என்ற கருத்துக் காணப்படுகிறது; இதை மையமாக வைத்தே பதினாறும் நூற்றாண்டில் வாழ்ந்த சர் ஃபிரான்சிஸ் பேக்கன் தமது இயற்கைத் தத்துவக் கோட்பாட்டை வகுத்தார்.

இவர் தமது சொந்தக் கருத்து எதனையும் வெளியிடாமல், போப்பின் ஆதரவாளர், பேரரசரின் ஆதரவாளர் ஆகிய இரு சாராரின் கோட்பாடுகளையும் மிக நுட்பமாக ஆராய்ந்து விளக்கிக் கூறினார். ஆனால், இவற்றிலிருந்து ஒருவிதமான முடிவும் எடுத்துக்கூறப்படவில்லையாகையால், அவர் போப்பினுடைய அதி காரக் கோட்பாடுகளுக்கு எதிர்ப்பான போக்கில் இருந்தார் என்று மட்டுமே ஊகிக்க இடம் இருக்கிறது. உலகியல் அல்லது பேரரச ருடைய அதிகாரங்களையும் அவர் வெகுவாக விளக்கிப் பல சான்று களையும் கூறுகின்றார். அவர் டான்ட்டே, மார்சிலியோ ஆகியோ ருடைய கோட்பாடுகளையும் அறிந்திருந்தார் என்று எண்ண இட மிருக்கின்றது. அவர் எழுதிய இரண்டு நூல்கள் 'போப்பின் அதி காரத்தையும், மதிப்பையும்பற்றிய எட்டுக் கேள்விகள்' (Eight Questions Considering the Power and Diginity of Pope) என்பதும், 'உரையாடல்' என்பதுமாம். முதலில் கூறப்பட்ட நூல் சிறியது; இரண்டாவது பெரியது.

பிரிவு 2: அவருடைய கோட்பாடுகள்

அரசாங்க அமைப்பைப்பொறுத்த அளவிலே, முடியாட்சியே மிகச் சிறந்தது. அரசருக்கு நிர்வாக அலுவல்களைத்தவிர, சிறிது சட்டம் செய்யும் அலுவல்களும் இருக்கலாம்.

முடியாட்சியும் சர்வாதிகாரம் (Despotism), கொடுங்கோல் ஆட்சி (Tyranny), அரசருடைய ஆட்சி (Royal Monarchy) என மூன்றுவகைப்படும். இம் மூன்றில் அரசருடைய ஆட்சியே சிறந்தது. அதில் அரசர் எந்த மனிதச் சட்டத்திற்கும் கட்டுப் படாமல் சுதந்திரமாகவே இருக்கின்றார்; அவ்வாறு இருந்தபோதி லும் அவர் இயற்கையின் சட்டத்திற்குக் கட்டுப்பட்டேயிருக்கிறார். செயின்ட் தாமஸ் அக்வினாஸ், எஜீவியஸ் ரோமானஸ் ஆகியோர் கூறியதைப்போன்று, வில்லியம் நகரரசுக்குரிய அடிப்படையான விதிகள் எல்லாம் அளவில் பெரிய அரசிலும் காணப்படுகின்றன

[1] Webster's. National Biographical Dictionary

என்று கூறுகிறார். நாட்டு அரசு, நகர் அரசினின்றும் அளவில் வேறுபட்டாலும், அவை அடிப்படை விதிகளைப்பொறுத்தவரையில் ஒன்றையொன்று ஒத்து இருக்கின்றன.

சட்டம் இயற்றுதலும், நீதியை நிலைநாட்டலும், நற்பண்பை வளர்த்தலும் ஆகிய இவையெல்லாம் அரசாங்கத்தின் செயல்கள் ஆகும். இவற்றுள் எல்லாம் குற்றவாளிகளைத் தண்டிப்பதே மிக முக்கியமான அலுவல் என்று அவர் வற்புறுத்திக் கூறுகிறார். பிறரைக் கட்டுப்படுத்தக்கூடிய அதிகாரமானது (coercive authority) அரசரிடத்தில்தான் இருத்தல் வேண்டும்.

உலகமனைத்திலும் இருக்கக்கூடிய சமயத்துறையைச் சாராத பேரரசு (Universal Secular Empire) என்ற கருத்தை வில்லியம் ஆதரித்தார். இவ்வாறு இருப்பினும் 'பேரரசருக்கு உலகியல்துறை விஷயங்களில்கூட வரம்பில்லாத அதிகாரம் இருக்கக்கூடாது. அவரது அதிகாரம் எல்லாம், 'அவருடைய அரசாங்க மக்களுக்குப் பயனுள்ளதாகவும், நியாயமானதாகவும் இருக்கவேண்டும்' என்ற கட்டுப்பாட்டுக்குட்பட்டே கையாளப்படுதல் வேண்டும். அரசருடைய அதிகாரங்களுக்குள்ள வரம்புகள் எல்லாம் விரிவாக வில்லியத்தால் ஆராய்ச்சிசெய்யப்பட்டன. அரசருடைய அதிகாரங்களுக்குத் தெய்விகச் சட்டங்களும், இயற்கையின் சட்டமும், நாடுகளின் சட்டமும் வரம்புகளாக அமைந்துள்ளன.

தனியார் உடைமை பொதுமக்களுடைய நலனுக்காக எடுத்துக் கொள்ளப்படாதவரையில், அது அரசருடைய செயலினின்றும் பாதுகாப்பாக இருக்கின்றது. போர்செய்தல், போரில் சிறைபிடிக்கப் பட்டவர்களை நடத்துதல், தூதுவர்களைப் பரிமாறிக்கொள்ளுதல், போரில் கைப்பற்றப்பட்ட பொருள்களைத் திரும்ப ஒப்படைத்தல் முதலிய செயல்களில் எல்லாம், அரசர், எல்லா நாடுகளுக்கும் பொதுவாக இருக்கும் சட்டங்களுக்குக் கட்டுப்பட்டே நடத்தல் வேண்டும். பேரரசர் அல்லது அரசர் தாமே செய்கின்ற சட்டங்களுக்குத் தாமே கட்டுப்படுதல் வேண்டுமென்ற கட்டாயமில்லை. ஆயினும், நீதியின் அடிப்படையில் அவர் அவ்வாறு தம்முடைய சட்டங்களுக்கும் தாமே மதிப்புக்கொடுத்தல் வேண்டும் என்பது பெறப்படுகின்றது. சட்டம் இயற்றுகின்ற ஒவ்வோர் அதிகாரியினுடைய தலைமையதிகாரம், நாடுகளின் சட்டத்தினாலும், இயற்கையின் சட்டத்தினாலும் வரம்புக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றது. பிரதிநிதித்துவமுறையில் அமைந்த பொதுக்குழுவின் ஆட்சி என்ற ஒரு திட்டத்தைபற்றியும் வில்லியம் சில கோட்பாடுகளைக் கூறுகிறார். இறைமையதிகாரமென்பது போப்புக்கு ஒரு

காலத்தில் உரியதாகக் கூறப்பட்ட முழுமையான, வரம்பில்லாத, உலகியலிலும் ஆன்மிகத்துறையிலும் சார்ந்த அதிகாரம் ஆகும். வில்லியம் இத்தகைய இறைமையதிகாரம் போப்புக்கோ, திருச்சபைக்கோ இல்லை என்றும் கூறி, உலகியல் ஆட்சிமுறையில் இத்தகைய முழுமையான வரம்பில்லாத அதிகாரம் கிடையாது என்ற முடிவுக்கு வருகிறார்.

பிரிவு 3: இறைமையதிகாரம்

இறைமையதிகாரம் என்று இலக்கணம் வகுக்கும்போது, அவர் 'கடவுளின் சட்டத்திற்கும், இயற்கையின் சட்டத்திற்கும் மாறுபாடில்லாத எந்தச் செயலையும் செய்வதற்கு ஆட்சியாளர் பெற்றிருக்கும் அதிகாரமே முழுமை அதிகாரம் அல்லது இறைமையதிகாரம்' என்று அவர் கூறுகிறார். அரிஸ்டாட்டிலின் கருத்துகளை ஒட்டியே அவர் ஆய்ந்து இத்தகைய முழுமையான அதிகாரம், அடிமைகளின்மீது செலுத்தப்படுகிற அதிகாரமேதவிர, சுதந்திர மக்கள் வாழ்கின்ற நல்ல அரசாங்கத்தில் காணப்பட இயலாது என்று கூறுகிறார். எனவே, இறைமை அல்லது முழுமை அதிகாரம் என்பது வரம்புகட்டப்பட்ட அதிகாரம் என்ற முடிவையே அவர் வலியுறுத்திக் கூறுகிறார்.

பிரிவு 4: பிரதிநிதித்துவ அரசாங்கக் கோட்பாடு

ஒவ்வொரு சமுதாயத்திலுள்ளவர்களும், ஒவ்வொரு கூட்டுக் கழகத்தில் உள்ளவர்களும் சில சூழ்நிலைகளில் தங்களுக்கான சட்டங்களைச் செய்வதற்கு உரிமை உடையவராவர்; எங்கும் பரந்துள்ள கிறிஸ்துவத் திருச்சபையும் செயின்ட் பால் கூறியபடி ஒரு கூட்டுக் கழகமேயாகும். இதற்கான சட்டங்களைச் செய்வதற்கு ஒவ்வொரு கீழ்நிலைச் சமயவட்டாரத்திலும் (parish) வாழ்கின்ற கிறிஸ்தவமக்கள் தங்களுடைய சார்பாளர்களைத் (delegates) தேர்ந்தெடுத்தல் வேண்டும். இந்தச் சார்பாளர்கள் ஒரு தேர்வாளர் மன்றமாக (Electoral Assembly) அமைந்து தலைமை நிறுவனத்திற்கு அல்லது நாட்டிற்கு உரிய சார்பாளர்களைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும். இவ்வாறு பல மன்றங்களின்மூலமாகச் சட்டமன்றத்திற்குரிய சார்பாளர்கள் அல்லது பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும். இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட மன்றமே திருச்சபைக்கு உண்மையான பிரதிநிதியாக இருக்கும். இத்தகைய மன்றத்தைக் கூட்டுதற்கோ, அதைத் தலைமைதாங்கி நடத்துதற்கோ போப்புக்கு அதிகாரம் இல்லை.

இவ்வாறு வில்லியம் வகுத்த திருச்சபையின் பிரதிநிதிகள் மன்றம் என்ற கோட்பாடு (**Theory of Representative Church Council**), அவருடைய காலத்திற்குப் பின்னர் ஏறக்குறைய ஒரு நூற்றாண்டுக் காலமாகக் கடைப்பிடிக்கப்பட்டது. சிவில் சட்ட அறிஞர்களும், திருச்சபைச் சட்ட அறிஞர்களும் இந்தக் கோட்பாட்டைச் செயல்படுத்த முயன்றனர்; இதன் விளைவாகப் பல திருச்சபை மன்றங்கள் தோன்றின.

பிரிவு 5: முடிவுரை

நாம் இதுவரையில், பிளேட்டோவின் காலத்திலிருந்து கி.பி. பதினைன்காம் நூற்றாண்டின் இறுதிவரையில் ஐரோப்பிய நாடுகளில் வாழ்ந்த முக்கியமான அரசியல் சிந்தனையாளர்களுடைய கோட்பாடுகளைச் சுருக்கமாக ஆராய்ந்தோம். இங்கு கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டில் மாக்கியவெல்லி (**Machiavelli**) தோன்றுதற்குச் சிறிது முன்னர் இருந்த அரசியல் சூழ்நிலைகளையும், கோட்பாடுகளையும் குறிப்பிட்டு இவ் வரலாற்றை முடிப்போம்.

இடைக்காலத்தின் இறுதியில், அதாவது மாக்கியவெல்லி தோன்றுவதற்கு முன்னர், ஐரோப்பியச் சமுதாயத்திலும், பொருளாதாரத் துறையிலும் பல முக்கியமான சூழ்நிலைகள் தோன்றின. **பேரரசு முறை** (**Imperial Organisation**) என்ற அமைப்பு முக்கியமானதாக இல்லாமல், **தேசிய அரசு** (**National Monarchy**) என்ற அமைப்பே முக்கியமானதாக ஆயிற்று. இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாக ஸ்பெயின், ஃபிரான்ஸ், இங்கிலாந்து, போர்ச்சுக்கல் முதலிய நாடுகளாகும். இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு தனித் தனியான அரசரின் ஆட்சியின்கீழ் அமைந்தது. ஸ்பெயினில் இஸ்லாம் சமயத்தைச் சேர்ந்த மூர்களின் அரசுகளாகிய கிரனேடா (**Grenade**), கொர்டோவா (**Cordova**) முதலியவற்றை அவர்களிடமிருந்து வென்று, மூர்களை அகற்றி, ஸ்பானியக் கிறிஸ்தவ நாடுகளையெல்லாம் ஒரே கிறிஸ்தவ அரசருடைய அரசாங்கத்தில் இணைப்பதில் அரகன் (**Aragon**), காஸ்ட்டில் (**Castille**) ஆகிய இரு கிறிஸ்தவ அரசுகளும் இணைந்து, முயற்சிசெய்து வெற்றிபெற்றன. போர்ச்சுக்கலும் ஒரு சுதந்திர நாடாகக் கிறிஸ்தவ அரசருடைய ஆட்சியில் வந்தது. ஸ்பெயினும், போர்ச்சுக்கலும் புதிய கண்டமாகிய அமெரிக்காவைக் கண்டுபிடித்தும், இந்தியாவுக்குக் கடல் வழியைக் கண்டுபிடித்தும், புதிய நாடுகளில் தங்களுடைய குடியேற்ற நாடுகளை நிறுவியும், வாணிபத்தைப் பெருக்கியும், பின்னர் ஃபிரான்ஸ், இங்கிலாந்து, ஹாலந்து ஆகிய நாடுகளுக்கு இத் துறையில் வழிகாட்டிகளாக வளர்ந்தன. இச் செயல்களெல்லாம்

தேசிய அரசாங்கத்தினுல்தான் இயலுமே தவிர, பேரரசு முறையில் இயலாது.

தேசிய அரசாங்கமுறை வளர்வதற்கு இத்தாலியில் **13, 14 ஆம்** நூற்றுண்டுகளில் தோன்றிய கலை மறுமலர்ச்சி இயக்கம் பெரிதும் துணைசெய்தது. பண்டைய கிரேக்க, இலத்தீன் முதலிய உயர் தனிச் செம்மொழிகளிலுள்ள இலக்கியங்களைக் கற்றறிவதில் மக்கள் காட்டிய ஆர்வமானது, பண்டைய ரோமானியச் சட்டக் கோட்பாடு களைக் கற்றுணர்வதிலும் காணப்பட்டது; பண்டைய ரோமானியச் சட்டத்திலுள்ள, 'எல்லா அரசாங்க அதிகாரமும் நாட்டின் அர சரிடமே தங்கி இருக்கின்றன' என்ற கோட்பாடு ஒப்புக்கொள்ளப் பட்டது; இதன்விளைவாக எங்கும் பரவியுள்ள புனித ரோமானியப் பேரரசு என்ற கோட்பாட்டுக்கு மதிப்பு இல்லாமல், தேசிய அரசு என்ற அமைப்புக்கு மதிப்பு வளர்ந்தது.

தேசிய அரசு அமைப்பு வளர்வதற்கு (1) நிலமானியப் பிரபுக் களுக்கு இருந்த அரசியல் அதிகாரம் மறைந்ததும், (2) புதிய சுதந்திரத் தொழில், வாணிபப் பட்டணங்கள் தோன்றியதும் பெரும் உதவிசெய்தன. ஜெர்மனியைத் தவிர மற்றெல்லா நாடுகளிலும் நிலமானியப் பிரபுக்களுக்கு இருந்த அரசியல் அதிகாரம் மறைந்து விட்டது. இங்கிலாந்தில் முதலாம் வில்லியம், இரண்டாம் ஹென்றி, முதலாம் எட்வர்ட் முதலிய அரசியலறிவுமிக்க அரசர்கள், நில மானியப் பிரபுக்களுக்கு இருந்த பண்ணை அல்லது மானிய நீதி மன்றங்கள், நீதி வழங்கும் அதிகாரம், படைகளைத் திரட்டி வைத் திருக்கும் அதிகாரங்கள் ஆகியவற்றை நீக்கி, நீதிவழங்கும் அதி காரம், படைகளை வைத்திருக்கும் அதிகாரம் ஆகியவற்றைப் படிப் படியாக அரசருடைய ஆட்சியிலேயே குவித்துவைத்தனர். ஃபிரான்சில் ஃபிலிப் அகஸ்டஸ், ஒன்பதாம் லூயி முதலிய சூழ்ச்சி மிக்க அரசர்கள் வலிய நிலமானியப் பிரபுக்களிடமிருந்த பெரும் மானியங்களையும், சிறிய நாடுகளையும் எடுத்துத் தங்களுடைய ஆட்சிக்குள் கொண்டுவந்து இணைத்தனர். இதனுல் நிலமானியப் பிரபுக்களுக்குச் சமுதாயத்தில்மட்டும் 'பிரபு' என்ற நிலைமை இருந்ததே தவிர, அரசியலதிகாரம் எதுவும் இல்லை.

ஃபிரான்சிலுள்ள பாராளுமன்றமாகிய ஸ்டேட்ஸ் ஜெனரல், **1443**-லும், **1445**-லும் செய்த தீர்மானங்களின் விளைவாக ஃபிரெஞ்சு அரசர் ஃபிரெஞ்சுப் பாராளுமன்றத்தைக் கூட்டாமலே, அதன் ஒப்பு தலைப் பெருமலே நாட்டிற்குவேண்டிய படைகளைத் திரட்டி வைத்துக்கொள்ளவும், அதற்குவேண்டிய வரிப்பணத்தை மக்களி டமிருந்து திரட்டவும் அதிகாரங்களைப் பெற்றுர். ஆனுல், இங்கி

லாந்து நாட்டில், 'எல்லாருடைய நலனையும்பற்றிய ஏந்தப் பிரச்சினையும், எல்லாருடைய ஒப்புதலின்பேரில்தான் தீர்க்கப்படுதல் வேண்டும்' என்ற ஒரு நல்ல கோட்பாடு தோன்றியதன்விளைவாக, 'பாராளுமன்றத்தில் மக்களுடைய பிரதிநிதிகளில் பெரும்பான்மையான உறுப்பினர்களின் உடன்படிக்கையைப் பெற்றே அரசர் வரி விதிக்கவும், வரிப்பணத்தைச் செலவுசெய்யவும், இன்னும் மற்றக் காரியங்களையும் செய்தல் வேண்டும்' என்ற ஒரு நல்ல குடியாட்சிக் கோட்பாடு, பழக்கத்தின்மீது அமைந்து உருவாயிற்று.

இடைக்காலத்தில் தொழிலும் வாணிபமும் பெருகவே, பல புதிய பட்டணங்கள் நிலமானியங்களில் தோன்றி, அவை அரசருக்குப் பணம்கொடுத்துச் சுதந்திரப் பட்டயங்களைப் பெற்றன. இடைக்காலத்தில் தோன்றிய புதிய பட்டணங்கள் நகராட்சி மன்றங்களை அமைத்து, உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்து, உள்ளூர் சுய ஆட்சிமுறையை உருவாக்கின. மேலும், இவை அரசருடைய அரசாங்கத்திலும் அவருக்கு உதவியாகப் பங்கு எடுத்துக்கொண்டன. ரோமானியச் சட்டக் கோட்பாடும், புதிய நாடுகள் கண்டுபிடிப்பும் தேசிய அரசு என்ற அமைப்பு உருவாகி, வலுவடைவதற்கு உதவிசெய்ததைப்போல், தேசிய முடியாட்சி (**National Monarchy**) வரம்பிலா முடி ஆட்சியாக, அல்லது சர்வாதிகார முடியாட்சியாக வளர்வதற்கும் (**Absolute Monarchy**) பதினைந்தாம் நூற்றுண்டினிறுதியில் இரண்டு முக்கியச் சூழ்நிலைகள் தோன்றின. ஒன்று வெடிமருந்து கண்டுபிடிப்பு; இரண்டாவது பிராட்டஸ்டன்ட் சமயச் சீர்திருத்த இயக்கம். வெடிமருந்து கண்டுபிடிக்கப்பட்டதும், அரசர்களே இதனைப் பெற்றுப் பயன் படுத்தும் தனி உரிமை பெற்றிருந்ததனுல், நிலமானியப் பிரபுக்களை யெல்லாம் அவர்கள் வெகு எளிதில் அடக்கி, எல்லா அதிகாரங்களையும் தம்மிடம் குவித்துவைத்துக்கொண்டனர். இதேபோலப் போப்பின் தலைமையை மறுத்து, வட ஜெர்மனி, ஸ்வீடன், நார்வே, டென்மார்க், இங்கிலாந்து, வடநெதர்லாந்து, ஸ்விட்சர்லாந்தின் பகுதிகள் முதலியவை ரோமன் கத்தோலிக்கக் கிறிஸ்தவத் திருச்சபையினின்றும் பிரிந்து, தனித்தனியான நிலப்பகுதிகளில், சுதந்திரக் கிறிஸ்தவத் திருச்சபைகளை (பிராட்டஸ்டன்ட் திருச்சபை) நிறுவின. இவ்வாறு போப்பினிடமிருந்து சுதந்திரமான நாடுகள், தங்களுடைய அரசர்களுடைய வரம்பிலா ஆட்சியின்கீழ் வந்தன; பிராட்டஸ்டன்ட் சமயச் சீர்திருத்த இயக்கத்தின் விளைவாகப் புனித ரோமானியப் பேரரசு என்ற ஓரரசு கோட்பாட்டுக்கு மேலும் வலுக்குறைந்து, தேசிய அரசு அமைப்பு வளருவதற்கு வாய்ப்புத் தோன்றிற்று. பிராட்டஸ்டன்ட் சமயச் சீர்திருத்த இயக்கம் பதினுறும் நூற்றுண்டில் தோன்றிற்று; என்றுலும்

அதனுல் ஊக்கம்பெற்ற தேசிய அரசு என்ற கோட்பாடும், அமைப்பும், பதினுன்கு, பதினைந்தாம் நூற்றுண்டுகளிலேயே தோன்றிவிட்டனவாகையால், இவற்றின் பிற்கால வளர்ச்சிக்குக் காரணமாயிருந்த பிராட்டஸ்டன்ட் சமயச் சீர்திருத்தத்தின் விளைவு இங்குச் சுட்டிக்காட்டப்பட்டது.

இடைக்காலத்தின் இறுதியில், சமயத்துறையிலும் பல நிகழ்ச்சிகள் நடைபெற்றுச் சமயநிறுவனத்தின் தலைமை அதிகாரக் கோட்பாட்டுக்கும், போப்பின் தலைமை அதிகாரத்துக்கும் பல எதிர்ப்புக் கருத்துகள் தோன்றின. இவற்றுள் சில முன்னரே கூறப்பட்டன. சில சமயக் கோட்பாடுகளுக்கு மாறுபட்ட கருத்துகள் (Heresies) தோன்றின; தென்ஃபிரான்சில் தோன்றிய வால்டன், அல்பிஜென்சியன் (Waldensian and Albigensian Heresies) சமய மாறுபாடுகளும் இங்கிலாந்தில் **ஜான் விக்ளிப்** (John Wycliffe) என்பவர் வெளியிட்ட சமய மாறுபாட்டுக் கருத்துகளும், ஜெர்மனியில் பொகீமியாவில் **ஜான் ஹஸ்** (John Huss) என்பவர் வெளியிட்ட சமய மாறுபாட்டுக் கருத்துகளும் சமயநிறுவன அதிகாரக் கோட்பாட்டுக்கு முன்னர் இருந்த மதிப்பைக் குறைத்தன. ஜான் விக்ளிப், போப் சமயநீக்கம் போன்ற தண்டனை அதிகாரங்களைக் கையாண்டு வரிவிதித்தலையும், மறைவாகத் தாழ்ந்த வாழ்க்கைமுறையில் ஈடுபட்டுள்ள சமயக் குருமார் கோவிலில் வழிபாட்டுச் சடங்குகள் செய்வதையும் வன்மையாக எதிர்த்துக் கண்டித்தார்; மேலும் அவர், 'பைபிள் ஒன்றேதான் சமய நம்பிக்கைக்கும் ஒழுக்க வாழ்வுக்கும் உரிய விதியாகவும், வழிகாட்டியாகவும் இருக்கிறது' என்று போதித்தார். கி.பி. 1517ஆம் ஆண்டில் மார்ட்டின் லூதர் போதித்த கோட்பாட்டை நூருண்டுகளுக்கு முன்னதாக ஜான் விக்ளிப் கூறினுர்; இவருக்கு இங்கிலாந்தில் கடுமையான எதிர்ப்பு இருந்தது. விக்ளிப்பின் போதனைகளைப் பொகீமியாவில் ஜான்ஹஸ் ஆதரித்து, 'தனிமனிதரின் மனச்சான்றே (individual conscience), சமயவாழ்வில் நீதி வழங்கக்கூடிய அதிகாரி' என்று கூறிச் சில கத்தோலிக்க வழிபாட்டுச் சடங்குகளை, (பொருள் மாற்றம் அல்லது அப்பத்தையும் மதுவையும் கிறிஸ்துவின் உடலாகவும், குருதியாகவும் மாற்றுதல் என்ற கோட்பாட்டை—**Transubstantiation**—எடுத்துக்காட்டும் சடங்கைக்) கண்டித்துப் பிரசாரம் செய்தார். ரோம்நகரத்தில் ஹஸ் கண்டனம் செய்யப்பட்டுச் சமய நீக்கம் செய்யப்பட்டார்; பின்னர் கான்ஸ்டன்ஸ் நகரத்தில் கூடிய திருச்சபை மன்றம் (Council of Constance) ஹஸ்ஸைக் கண்டித்துத் தீர்மானம் செய்ய, ஹஸ் சுட்டெரிக்கப்பட்டார். பொகீமியாவில் போப்புக்கும், புனித ரோமானியப் பேரரசருக்கும் எதிராகப் புரட்சிகள் நடந்தன. **விக்ளிப், ஹஸ் ஆகியோரின்**

சமய மாறுபாட்டுக் கோட்பாடுகள் கிறிஸ்தவத் திருச்சபையின் அதிகாரத்தைக் குறைத்து, 16ஆம் நூற்றாண்டில் பிராட்டஸ்டன்ட் சீர்திருத்த இயக்கம் தோன்றுவதற்கு வழிவகுத்தன.

போப்பின் தலைமை அதிகாரக் கோட்பாட்டுக்கு இருந்த வலிமையை வெகுவாகக் குறைத்த இன்னொரு நிகழ்ச்சி, அவர்கள் **1307**ஆம் ஆண்டுமுதல் **1377**ஆம் ஆண்டுவரையில் ரோமை விட்டுநீங்கி ஃபிரெஞ்சு அரசருடைய ஆதிக்கத்தில் தென்ஃபிரான் சிலுள்ள அவிக்னோனில் தங்கி இருந்ததே ஆகும். பாபிலோனியச் சிறைவாசம் என்றழைக்கப்பட்ட இந்த நிகழ்ச்சியின் விளைவு முன்னரே எடுத்துக்கூறப்பட்டது.

இதேபோலக் கத்தோலிக்கக் கிறிஸ்தவத் திருச்சபையின் ஆதிக்கத்துக்கு ஏற்பட்ட மிகப்பெரிய இடையூறு, போட்டியாகப் பல போப்புகள் தேர்ந்தெடுக்கப்பட்ட **பெரும்பிளவு (The Great Schism)** என்ற குழப்பம் ஆகும். போப்புகளின் அவைக் களத்தில் ஃபிரெஞ்சு அரசர்களுக்குச் செல்வாக்கு இருந்தது; அதனால் அவிக்னோனில் இருந்த போப்புக்கு எதிராக **1378**ஆம் ஆண்டில் வேறு ஒரு போப் ரோம்நகரத்தில் தேர்ந்தெடுக்கப் பட்டார். புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட போப் ஏழாம் கிளமென்ட் என்பவரை ஃபிரான்ஸ், ஸ்பெயின் ஆகிய நாடுகளும் முன்பே தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த அர்பன் என்பவரை இங்கி லாந்தும், ஜெர்மனியும் ஒப்புக்கொண்டன. போட்டிகளின் விளைவாக நாடுகளுக்குள் நல்லுறவு இன்றிப் பொதுவாகப் போப்பின் தலைமை அதிகாரத்துக்கே மதிப்பின்றிக் குழப்பம் விளைந்தது. ஒவ்வொரு போப்பும், மற்றவரைச் சமயநீக்கம் செய்தும், பழிப் புரையும் கூறிவரவே, திருச்சபையின் ஒற்றுமை சீர்குலைந்தது.

பெரும்பிளவை ஒட்டிக் **குழுமுறை (Council system)** தோன்றிப் போப்பின் ஆதிக்கத்தை மேலும் குறைத்தது. இரண்டு போப்புகள் இருந்ததனால் தோன்றிய குழப்பத்தை நீக்குவதற்காகச் சிலர் முயற்சிசெய்து, ஒரு பொதுக்குழுவைக் கூட்ட முயற்சிசெய்தனர். **1409**ஆம் ஆண்டில் **பைசா** (Pisa) நகரத்தில் கூடிய திருச்சபைப் பொதுக்குழு இரு போப்புகளையும் நீங்கும்படி தீர்மானம் செய்து, மூன்றாவதாக வேறொருவரைத் தேர்ந்தெடுத்தது. ஆனால் மூவரும் பதவியில் இருக்கவே, குழப்பம் நீடித்தது. **1418**ஆம் ஆண்டில் **கான்ஸ்டன்ஸில்** கூடிய மன்றம் (Council of Constance) ஒரே ஒரு போப்பைமட்டுமே திருச்சபைமுழுவதும் ஒப்புக்கொள்ளவேண்டு மென்று முயற்சிசெய்து, வெற்றியும் பெற்றது. ஆனால் போப்பின் அதிகாரத்திற்கும், பொதுமன்றத்தின் அதிகாரத்திற்கும் இடையே மாறுபாடு தோன்றிற்று. தமது அதிகாரத்துக்கு வரம்பு ஏற்படுத்தப்

படுவதைப் போப்பும், அவருடைய ஆதரவாளர்களும் கடுமை யாக எதிர்த்தனர். **பேசல்** என்னுமிடத்தில் கூடிய **பேசல்குழு (Council of Basel)** இத்தகைய பூசலைத் தீர்க்கமுயன்றும் வெற்றி பெறவில்லை. இறுதியாக மன்ற ஆட்சிமுறை மறைந்தது. இதனால் போப்பினுடைய அதிகாரம் மீண்டும் நிறுவப்பட்ட போதிலும், அதற்கு முன்பிருந்த முழுமையான அதிகாரமும், மதிப்பும் மறைந்தன. ஓர் அரசியல் நிறுவனமாகப் போப் செயல் படும்போது, அப் பதவிக்கு இருந்த பலவீனங்கள் நன்கு வெளிப் படலாயின. இத்தாலியக் கலை மறுமலர்ச்சி இயக்கம் தோன்றி வளரவே, புதிய கோட்பாடுகள் தோன்றிப் பழைய சில கோட்பாடு களை அகற்றிவிட்டன. எடுத்துக்காட்டாக, கான்ஸ்டன்டைன் பேரரசருக்கு உரிய அதிகாரத்தைப் போப்பிற்குக் கொடை யாக அளித்தார் என்ற கோட்பாடு ஒரு கட்டுக்கதையாகும் என்று ஒதுக்கப்பட்டது.

மேற்படி திருச்சபை மன்றங்கள் கூடியபோதெல்லாம் ஐரோப் பியத் தேசிய இனங்கள், தத்தம் இன அடிப்படையிலேயே கலந்து கொண்டு வாக்களித்தன. அந்த மன்றங்கள் போப்பைச் சமய நீக்கம் செய்யுமளவிற்கு வலிமைபெற்றிருந்தன.

இடைக்காலத்தின் தொடக்கத்தில் கூட்டாக இணைந்து வாழும் வாழ்க்கையே (Corporate life) நிலவியிருந்தது. தனி யாளுக்கு முக்கியத்துவம் இல்லை. சமயவாழ்வில் ஈடுபட விரும் பியவர், தம்மையொத்த நோக்கமுடையவர்கள் வாழ்ந்துவந்த மடங் களில் (Abbeys, Monasteries) சேர்ந்து வாழ்ந்துவந்தார்; வேளாண்மையில் ஈடுபட விரும்பியவர் பண்ணையாள்கள் வாழ்ந்த மானியத்தில் (Manor) சேர்ந்தார்; வணிகராக விரும்பியவர் வணிகர்குழுவில் (Guild) சேர்ந்தார்; ஆசிரியராகப் பணிசெய்ய விரும்பியவர் பல்கலைக்கழகத்தில் சேர்ந்தார். ஆனால், பதினைந்தாம் நூற்றாண்டில் மாறுதல்கள் தோன்றிவிட்டன. தனியார் உரிமை உணர்வு வளர்ந்தது; திருச்சபையில் ஒற்றுமை உணர்வு மறைந்தது; புதிய தேசியநாடுகள் வலுவான அரசியல் கழகங் களாக உருவாகிவந்தன.

இச் சூழ்நிலையில்தான் அரசருடைய அதிகாரத்துக்கும், திருச் சபையின் அதிகாரத்துக்கும் வரம்புகள் உண்டு என்ற கோட்பாடும், மன்றமுறை ஆட்சிக்கோட்பாடும் தோன்றின. பொதுநலனை வளர்த்து, நீதியைப் பாதுகாத்துத் தீயோரைத் தண்டித்துப் பணி புரிவதே அரசருடைய நோக்கமாக இருக்கவேண்டுமென்ற கோட்பாடு தோன்றிற்று. இதை ஒட்டியே, ‘நீதியை வெளிப்

படுத்துகின்ற சட்டமே தலைமையாக இருக்கவேண்டும்; அரசர் கடவுளுக்கும், சட்டத்துக்கும் கட்டுப்பட்டவர்; சட்டமே இறைமை அதிகாரம் உடையது' என்ற கோட்பாடுகள் உருவாயின. மேலும், 'ஆளுவோருக்கும், ஆளப்படுவோருக்கும் தனித்தனியான சில கடமைகள் உண்டு. நீதியை நிலைநிறுத்துவது அரசருடைய கடமை; சட்டங்களுக்கு மதிப்புக்கொடுத்து நடப்பது மக்களுடைய கடமை' என்ற கோட்பாடு வலுவாக வளர்ந்தது. ஒரு புறம் அரசினுடைய உரிமைகளும், அதிகாரங்களும் வற்புறுத்தப் பட்டாலும், மறுபுறம் 'ஒழுக்க, ஆன்மிக வாழ்வுநலனுக்குரிய வற்றிலெல்லாம் திருச்சபைக்கே சுதந்திரமான உரிமைகளும், அதிகாரங்களும் உண்டு' என்ற கோட்பாடும் வற்புறுத்தப்பட்டது. மேலும் குழுமுறை வாழ்வு (Corporate life) என்பதும், நகராட்சி முறையும் (Municipal system of Government) பிற்காலத்தில் **பன்முக இறைமைக் கோட்பாடு** (Pluralistic Doctrine of Sovereignty) வளர்வதற்கு வழிவகுத்தன.

பொதுநலன் என்ற குறிக்கோளை மையமாக வைத்தே சமய, அரசியல் நிறுவனங்களெல்லாம் ஆராயப்பட்டன. மேலும், அவை இறைவனின் விருப்பத்தை வெளிப்படுத்தும் அமைப்புகளல்ல வென்றும், அவை மனித நலனுக்குகந்த கருவிகளே என்றும், எனவே மனிதனுடைய அறிவிற்கும், அனுபவத்திற்கும் ஏற்ப அவை மாறுதலுக்கு உட்பட்டவையே என்றும் கருத்துகள் தோன்றின. இவையே மாக்கியவெல்லியின் கோட்பாடுகளுக்குப் பின்னணியாக அமைந்த சூழ்நிலைகளில் சில ஆகும்.

இடைக்காலத்தின் இறுதியில் முக்கியமாக இருந்த அரசியல் கோட்பாடுகள் (1) இறைமை அதிகாரம் (Sovereignty), (2) பொது மக்களே அரசாங்கத்தின் ஆதாரம் (Popular basis of Government), (3) இயற்கையான சட்டம் (Natural Law), (4) இயற்கையான உரிமைகள் (Natural Rights), (5) சமுதாய ஒப்பந்தம் (Social Contract) முதலியவை ஆகும். இவை பதினாறும் நூற்றாண்டி லிருந்து புதிய போக்கில் அரசியல் கோட்பாடுகள் வளர்வதற்கு உதவியாக இருந்தன. பேரரசு கோட்பாடுகளையும், சமய நிறுவன அதிகாரக் கோட்பாடுகளையும் விடுத்துப் புதியபோக்கில், அதாவது சமயநோக்கம் எதனையும் சாராமல், அரசியல்நோக்கம் ஒன்றையே மனத்தில்வைத்து, அரசியல் கோட்பாடுகளை மாக்கிய-வெல்லி வரையலானார். அவர் காட்டிய புதிய வழியில் அல்லது இயல்பில், மேற்படி கருத்துகளுக்குத் தற்காலத்தில் வளர்ச்சி ஏற்படலாயிற்று.

மேற்கோள் நூற்பட்டியல்
(Bibliography)

J. B. Bury — A History of Greece.
Plato — The Republic, The Statesman and The Laws.
Aristotle — Politics.
W. N. Weech — History of the World.
H. A. Davies — An Outline History of the World.
H. A. L. Fisher — A History of Europe.
A J. Grant — A History of Europe (Mediaeval) Part II.
H. Sidgwick — The Development of European Polity.
T. M. Taylor — A Constitutional and Political History of Rome.
W. W. How and H. D. Leigh — A History of Rome.
W. W. Fowler — The City State of the Greeks and the Romans.
J. Bryce — The Holy Roman Empire.
G. H. Sabine — A History of Political Theory.
W. A. Dunning — A History of Political Theories (Vol. I)
E. Barker — The Political Thought of Plato and Aristotle.
F. J. C. Hearnshaw — The Social and Political Ideas of Some Great Mediaeval Thinkers.
C. L. Wayper — Political Thought.
Poole — Mediaeval Thought.
Gierke — Political Theories of the Middle Ages.
Moore — Studies in Dante.
E. Emerton — Mediaeval Europe.
E. Jenks — A History of Politics.
P. V. N. Myers — Mediaeval and Modern History.

கலைச்சொற்கள்

A

Agency — நிறுவனம்
Authority — அதிகாரம்
Aristocracy — உயர்குடியினராட்சி
Absolute — வரம்பற்ற
Arbitrary — தன்விருப்பமாக (சட்டத்தை மீறிய)
Arbitration — நடுவர் தீர்ப்புமுறை
Anathema — பழிப்புரை

B

Barbarians — நாகரிகமற்றவர், காட்டு மிராண்டிகள் (கிரேக்கர், கிரேக்கரல்லாத இனத்தவரை இவ்வாறு குறிப்பிட்டனர்)
Bishop — கிறிஸ்தவ மத வட்டத்தலைவர், மேற்பார்வையாளர், கண் காணிப்பாளர், பிஷப்

C

Constitution — அரசியலமைப்பு
Constitutional Government — அரசியலமைப்புக்குட்பட்ட அரசாங்கம்
Commonwealth — நாடு, அரசு
Cosmopolitanism — உலகக்குடிமை உணர்வு
City State — நகரரசு
Country State — நாட்டு அரசு

C

Citizen — குடி ஆள்
Clan — குடும்பத் தொகுதி, இனம்
Courage — வீரப்பண்பு
Corrupt — (தூய்மை) சிதைந்த
Communism — பொதுவுடைமை
Coercive authority — பிறரைக் கட்டுப்படுத்தும் அதிகாரம்
Concord — நல்லிணக்கம்
Checks and Balances, Theory of — தடைச்சமன் கோட்பாடு
Church Government by Council, Theory of — குழுமுறைமூலமாகத் திருச் சபையின் ஆட்சி என்ற கோட்பாடு
Church — (கிறிஸ்தவ) திருச்சபை
Client — சார்வாளர்

D

Democracy — மக்களாட்சி
Discretion — சமயோசித அதிகாரம்
Dialectics — தருக்கவாத இயல்
Despotism — சர்வாதிகாரம்
Divine Law — தெய்விகச் சட்டம்
Divine Right of Kings, Theory of — தெய்விக அரசுரிமைக் கோட்பாடு

E

Empire — பேரரசு
Emperor — பேரரசர் (புனித ரோமானிய)
Ecclesiastical — சமயத்துறை சார்ந்த
Executive — நிர்வாகத்துறை
Ethics — ஒழுக்க இயல்
Expedience — சூழ்நிலை காரணமாக
Equality — சமத்துவம்
Equity — தரும நியாயம்
Expiation — தீவினைக்குக் கழுவாய்
Eternal — என்றும் நிலையான
Excommunication — சமயநீக்கம்

F

Family — குடும்பம்
Force — வன்செயல், படை, ஆற்றல்
Feudalism — நிலமானிய முறை
Fief — மானியம்

G

Gregarious — கூடிவாழும் இயல்புடைய, சமுதாய இயல்புள்ள
Guardians — காவலர்கள்
Gymnastics — உடற்பயிற்சிக் கல்வி
Government — அரசாங்கம்

H

Humanity — மனித இனம்
Human — மனித இரக்கப்பண்பு
Hierarchy — பல அடுக்குகளில் அல்லது தரங்களில் அமைக்கப்பட்ட அலுவலர் வரிசை
Harmony — ஒருமைப்பாடு
Heretical — சமயக்கோட்பாட்டுக்கு எதிரான
Heresy — மாறுபாடு
Heaven — துறக்கம், மோட்சம்

I

Investiture — பதவிச் சின்னங்களை வழங்கும் அதிகாரம்
Infallible — குற்றம் செய்யாத
Imperial — பேரரசுக்கு உரிய
Intellectual — (ஏகாதிபத்திய) அறிவு சார்ந்த
Individualism — தனியார் உரிமைக் கோட்பாடு
Imperial authority — பேரரசுக்குரிய அதிகாரம்
Ideal — இலட்சிய

J

Justice — முறைமை, நீதி
Jurisdiction — அதிகார எல்லை
Jury — தீர்ப்புச் சான்றுளர் குழு

K

Knowledge — அறிவு

L

Law — சட்டம்
Legislation — சட்டம் செய்தல்
Legislator — சட்டம் இயற்றும் அதிகாரி
Liberty — உரிமை, சுதந்திரம்
Layman — உலகவாழ்வி லீடுபட்டவர்
Lot — திருவுளச் சீட்டுத் தேர்வுமுறை
Loyalty (fidelity) — பற்றுறுதி, விசுவாசம்
Lawyer — சட்ட அறிஞர், வழக்கறிஞர்
Law of Nations — நாடுகளின் சட்டம்
Law of Nature — இயற்கையின் சட்டம்

M

Metaphysics — தத்துவம்
Machinery — இயந்திரம், கருவி
Morality — ஒழுக்கம்
Music — இசை
Mixed Constitution, Theory of — கலவை அரசியலமைப்புக் கோட்பாடு
Mystic Spirit — அனுபூதி இயல்பு
Monarchy — முடியாட்சி
Monarch — அரசர்

N

Nature — இயற்கை
Natural Rights — இயற்கை உரிமைகள்

O

Organ — உறுப்பு
Organic Theory of the State — உடலுவமை அரசு கோட்பாடு
Organisation — அமைப்பு
Oligarchy — செல்வச் சிறுகுடியாட்சி
Opinion — எண்ணம்
Ostracism — நாடுகடத்தல்
Ordeal — தேர்ச்சிமுறை (போரின்மூலம்)
Oath of Allegiance — கீழ்ப்படிதலுக்கான வாக்குறுதி
Order — ஒழுங்கு

P

Polis (City State)	— நகரரசு
Politics	— அரசியல்
Power	— அதிகாரம்
Private Rights	— தனிவாழ்வு உரிமைகள்
Public Rights	— பொதுவாழ்வு உரிமைகள்
Pure	— தூய
Procedure	— நடைமுறை, செயல்வகை
Postulates	— அனுமானங்கள்
Postliminy	— போரில் கைப்பற்றிய பொருள்களைத் திரும்ப ஒப்படைத்தல்
Parish	— சமய வட்டாரம்
Patron	— ஆதரவாளர்
Peace	— அமைதி
Phratry	— சகோதரக் குழு
Popular Sovereignty	— மக்களுடைய இறைமை அதிகாரம்

R

Rights	— உரிமைகள்
Right	— சரியான, நியாயமான
Republic	— குடியரசு
Reason	— (காரணத்தை ஆயும்) அறிவு
Rank	— தரம்
Revolution	— புரட்சி
Representation	— சார்பாளர், பிரதிநிதி
Representative Government, Theory of	— பிரதிநிதித்துவ அரசாங்கக் கோட்பாடு
Royal Monarchy	— அரசருடைய ஆட்சி
Rule of Law	— சட்டத்தின் தலைமை அல்லது இறைமை

S

State	— அரசு, நாடு
Science	— அறிவியல்
Society	— சமுதாயம்
Sovereignty	— இறைமை
Social Contract	— சமுதாய ஒப்பந்தம்
Soul	— ஆன்மா
Spiritual	— ஆன்மிக

S

Secular	— மதச்சார்பற்ற, உலகியலான, இலௌகிக
Speculation	— ஆராய்தல், ஊகம்
Slavery	— அடிமைமுறை
Sensual	— புலன்சார்ந்த
Self-sufficiency	— தன்னிறைவான
Self-interest	— தன்னலம்
Separation of Powers, Theory of	— அதிகாரங்களின் பிரிப்புக் கோட்பாடு
Sacerdotal	— குருமாருக்குரிய
Scholasticism	— அறிவாராய்ச்சி இயக்கம்

T

Totalitarianism	— சர்வாதிகாரம்
Tyranny	— கொடுங்கோலாட்சி
Tribe	— உறவுக்குழு
Temperance	— நிறைவுபெறுதல்
Theology	— இறை இயல்
Temporal	— உலகியல் சார்ந்த (அரசியலான)
Toleration	— சமயப் பொறை, சமயச் சுதந்திரம்

U

Utilitarianism	— பயன்வழிக் கோட்பாடு
Unity	— ஒற்றுமை
Uniformity	— ஒரே சீரான
Universal	— எங்கும் செல்லுபடியாகிற
Unit	— ஒருகூறு
Universal Secular Empire, Theory of	— உலகமனைத்தும் பரந்த சமயத் துறை சாராத பேரரசு கோட்பாடு

V

Virtue	— பண்பு
Veto	— தடை ஆணை
Vassal	— கீழாள்

W

Wealth	— சொத்து, உடைமை
Will	— விருப்பம், ஆணை

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

சென்னை—600031

★

தமிழில் பயில்பவர்க்குக் கல்லூரிப் பாடநூல்கள்
(Tamil Medium Books for Colleges)

1976 ஜனவரிவரை 700 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன

★

மேலும் விரைவில் வெளிவருபவை

பொறியியல்	—	39	நூல்கள்
மருத்துவம்	—	18	,,
இயற்பியல்	—	23	,,
வேதியியல்	—	20	,,
தாவரவியல்	—	13	,,
விலங்கியல்	—	14	,,
கணிதம்	—	17	,,
வணிகவியல்	—	37	,,
பொருளாதாரம்	—	21	,,
புவியியல்	—	11	,,
வரலாறு	—	29	,,
மனையியல்	—	1	,,
தத்துவம்	—	4	,,
உளவியல்	—	8	,,
புள்ளியியல்	—	8	,,
கல்வி	—	15	,,
நிலப்பொதியியல்	—	6	,,
அரசியல்	—	19	,,

கிடைக்குமிடம்:

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனக் கிடங்கு
(கல்லூரிக் கல்வி இயக்குநர் அலுவலகச் சுற்றுக்குள்)
கல்லூரிச் சாலை, நுங்கம்பாக்கம்,
சென்னை-600006

கல்லூரிப் பாடநூல்களுக்கு 20% கழிவு வழங்கப்படும்